BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

புதிய ஏற்பாடு விளக்கவுரை

THE NEW TESTAMENT COMMENTARY

அப்போஸ்தலருடைய நடபடிகள்

அப்போஸ்தலருடைய நடபடிகள்

சுவிசேஷம் எவ்விதம் ஜெயம் பெற்று, யூதர் உலகின் மார்க்கத் தலைநகரான எருசலேமிலிருந்து, ரோமர் உலகின் அரசியல் தலைநகரான ரோமாபுரிக்குப் பரவியது என்பதை அப்போஸ்தலர் நடபடிகள் கூறுகிறது. “நான் உங்களிடத்திற்கு அனுப்புவேன்” (யோவான் 16:7) என்று இயேசுவால் சொல்லப்பட்டவராகிய பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தம்முடைய அப்போஸ்தலர் மற்றும் சபையின் மூலம் கிறிஸ்து எவ்வாறு மிகுந்த வல்லமையுடன் கிரியை செய்தார் என்பதை இப்புத்தகம் காண்பிப்பதால், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே இதன் நடுநாயகமாக இருப்பதை இதைக் கற்கும்பொழுது நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

ஆக்கியோன், நோக்கம், முக்கியத்துவம்

நீங்கள் ஏற்கனவே கற்றுக்கொண்டது போல, லூக்கா சுவிசேஷத்தின் தொடர்ச்சியாக அப்போஸ்தலர் நடபடிகள் வடிவமைக்கப் பட்டுள்ளது. இது, அப்போஸ்தலனாகிய பவுலுக்கு நெருக்கமாயிருந்தவரும், அவரோடு கூட பயணஞ் செய்தவருமாகிய லூக்காவினால் எழுதப்பட்ட கிறிஸ்துவத்தின் ஆரம்ப வரலாற்றின் இரண்டாம் பாகம் ஆகும். இந்த நடபடிகளில் விவரிக்கப்பட்டுள்ள அநேகம் சம்பவங்களை லூக்கா நேரில் கண்டிருக்கிறார். இச்சம்பவங்களில் தான் இருந்ததைப் பற்றி அவர் குறிப்பிடும் பொழுது, “நாங்கள்” (அப்போஸ்தலர் 16:10; 20:6; 27:3) என்னும் பன்மைச் சொல்லையே பயன்படுத்துகிறார். சபையின் ஆரம்ப ஆண்டுகளின் சம்பவங்களை தெள்ளந்தெளிவுற நமக்குப் படம் பிடித்துக் காட்டும்படி, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் மற்றும் ஏவுதலின்படியே தனது இலக்கியத் திறனையும், அறிவையும் பயன்படுத்தியிருக்கிறார்.

பொழிந்தருளப்படவிருக்கும் பரிசுத்த ஆவிக்காகக் காத்திருப்பது பற்றி சீஷர்களுக்கு இயேசு கொடுத்த கட்டளை, அவர் பரமேறிய விவரம் ஆகியவற்றுடன் லூக்கா சுவிசேஷம் முடிவுற்று (லூக்கா 24:49,51), இதே இரண்டு சம்பவங்களுடன் இப்போஸ்தலர் நடபடிகள் தொடங்குகிறது (அப்போஸ்தலர் 1:4,9). அதன்பின், இயேசு பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டப் பிறகு, சீஷர்களால் நடப்பிக்கப்பட்டவைகள் விவரிக்கப்படுகின்றன. லூக்காவில் விவரிக்கப்பட்டவைகளைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் நடபடிகளில் விரித்துரைக்கப்படுகின்றன. தெயோப்பிலுவுக்கு, அப்போஸ்தலர் நடபடிகள் மூலம், கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் ஏற்கெனவே நிச்சயமாய் உபதேசிக்கப்பட்டவைகளுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களை லூக்கா விரித்துரைக்கிறார் (லூக்கா 1:4, அப்போஸ்தலர்1:1).

சபை ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் ஆதி சபைத் தலைவர்களின் நடவடிக்கைகள் பற்றிய அதிகாரபூர்வமான விவரங்களை நமக்களிப்பதால், அப்போஸ்தலநடபடிகள் முக்கியமானப் புத்தகமாகும். இது சுவிசேஷங்களுக்கும், நிருபங்களுக்கும் இடையிலான இணைப்பு. சுவிசேஷங்கள் சபை ஸ்தாபிக்கப்படுவதை எதிர்நோக்குவதாகவும், நிருபங்கள் ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்ட சபை பற்றி கூறுவதாகவும் உள்ளன. அப்போஸ்தல நடபடிகள் இல்லையெனில் சபை எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது என்பது அறியப்படாமலிருக்கும்.

பிரதான அம்சங்கள்

சபையின் ஆரம்ப நாட்களில் சம்பவித்தவைகள் எல்லாவற்றையும் விவரிப்பதற்கு லூக்கா முயற்சிக்கவில்லை. திறமை மிக்க சரித்திர ஆசிரியனாக அவர் முக்கியமான, குறிப்பிடத்தக்க சம்பவங்களைத் தேர்ந்தெடுத்து, அவைகள் அனைத்தும் எவ்விதம் செயல்பட்டன என்பதைக் காட்டுகிறார். இவ்விவரங்களின் பிரதான அம்சங்களை நாம் கற்றுக் கொள்வோம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

1. சபையின் சுவிசேஷ ஊழியத்தை அப்போஸ்தலர் நடபடிகள் வலியுறுத்துகிறது முழுப் புத்தகத்தின் அடிப்படை கோட்பாடாக அப்போஸ்தலர் 1:8 கருதப்படக் கூடும். இது, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர் வந்த 30 ஆண்டுகளில் சுவிசேஷம் விருந்தியடைந்ததைச் சுருக்கிக் கூறுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் முதலாவது எருசலேமிலும் (அதிகாரங்கள் 1:7), பின் யூதேயா, சமாரியாவிலும் (ஆதியாகமம் 8:12), அதன்பின் கிழக்கு மத்திய தரைப் பகுதிகளிலும், கடைசியாக ரோமாபுரியிலும் பிரசங்கிக்கப்பட்டது (ஆதியாகமம் 13:28).

வரலாற்று சம்பவங்களை விரிந்துரைக்கும் பொழுது, அவர் விவரித்த சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட ரோம உத்தியோகஸ்தர்கள் பலரின் பெயர்களை லூக்கா எடுத்தெழுதியிருக்கிறார் (ஆதியாகமம் 24:26; பேலிக்ஸ், லீசியா, பெஸ்து, அகிரிப்பா ராஜா ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன). 1-12 அதிகாரங்களில் பேதுருவும், 13-28 அதிகாரங்களில் பவுலும் முக்கியத்துவம் பெற்றவர் ஆவர்.

பூலோகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்ற கிறிஸ்துவின் கட்டளைக்கு ஆதி விசுவாசிகள் எவ்விதம் அடிபணிந்தனர் என்பதை அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் காண்கிறோம். அவர்கள் சந்தித்தப் பிரச்சினைகளையும், அடைந்த வெற்றியையும் இது நமக்குக் காட்டுகிறது. இன்றைய சுவிசேஷப் பணியில் பயன்படுத்தப்படக்கூடிய ஊழிய முறைகளின் செயல்முறை எடுத்துக் காட்டுகளையும் இது நமக்களிக்கிறது.

2. பரிசுத்த ஆவியானவரின் கிரியையை அப்போஸ்தலர் நடபடிகள் சித்தரிக்கிறது. சபை ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் விரிவாக்கப்படுதலின் ஒவ்வொரு படியிலும் பரிசுத்த ஆவியானவர் செயலாற்றினார்.

2:1-4 விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அந்நிய பாஷைகளில் பேசினார்கள்.

4:23-31 பரிசுத்த ஆவியினால் புதிதாய் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.

8:14-17 சமாரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப் பட்டார்கள்.

8:29 மந்திரியுடன் பேசும்படி பிலிப்புவுக்குப் பரிசுத்த ஆவியானவரால் சொல்லப்பட்டது.

10:44-48 கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பல பாஷைகளில் பேசினார்கள்.

13:1-4 பர்னபாவும், சவுலும் பரிசுத்த ஆவியானவரால் சுவிசேஷ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார்கள்.

15:28 புறஜாதி விசுவாசிகளைப் பற்றியதோர் தீர்மானத்தை எடுப்பதில் சபைத் தலைவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டார்கள்.

16:6,7 பவுல் சுவிசேஷ ஊழியங்களில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்.

19:1-6 எபேசுவிலுள்ள சீஷர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, அந்நிய பாஷைகளில் பேசினார்கள்.

20:22,23 பவுலுக்கு நேரிடப் போகிறவைகளைப் பரிசுத்த ஆவியானவர் முன்கூட்டித் தெரிவித்தார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

20:28 சபைகளில் கண்காணிகளாக இருக்கும்படி குறிப்பிட்ட சிலரைப் பரிசுத்த ஆவியானவர் தேர்ந்தெடுத்தார்.

அனனியாவும், சப்பீராளும் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னபடியால், அப்போஸ்தலனாகிய பேதுருவின் மூலம் பரிசுத்த ஆவியானவர் அவர்களை நியாயந்தீர்த்தார் (அப்போஸ்தல நடபடிகள் 5:1-11). பரிசுத்த ஆவியின் வரத்தைப் பணத்தினால் வாங்கும்படி கேட்டதற்காகப் பேதுரு சீமோனைக் கடிந்து கொண்டார் (8:18-23).

அப்போஸ்தலர் நடபடிகளில் பரிசுத்த ஆவியானவரின் தத்ரூபம், பிரசன்னம் ஆகியவற்றின் நிரூபணத்தைக் காண்கிறோம். சபையானது தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியை என்பதையும், இது பரிசுத்த ஆவியானவரால் தோற்றுவிக்கப்பட்டு பெலப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்பட்டு, அவராலே தாங்கப்பட்டு வருகிறது என்பதையும் நடபடிகள் காட்டுகிறது. எப்போதும் சபைக்குண்டான உபத்திரவங்கள், எதிர்ப்புகள் மத்தியிலும் அவற்றைச் சரித்து சபை ஜெயம் பெற்றதற்கான விளக்கம் இதைத் தவிர வேறொன்றுமில்லை.

3. கிறிஸ்தவ மார்க்கத்தின் உண்மையான குணாசிலத்தை அப்போஸ்தலர் நடபடிகள் படம் பிடித்துக் காட்டுகிறது. முதலாவது சபை ஸ்தாபிக்கப்பட்டபொழுது, யூதமார்க்கத்துக்குள் ஓர் தனிக்குழுவைப் போலவே கிறிஸ்தவம் தோன்றிற்று. யூதரின் வேதங்களில் முன்னுரைக்கப்பட்ட மேசியாவே இயேசு. சபையின் துவக்கத்தில் யூத விசுவாசிகளே பெரும்பான்மையாயிருந்தனர்.

ஆனால், கிறிஸ்துவின் செய்தியோ முழு உலகுக்கும் உரியதாயிருந்தது (லூக்கா 24:47; அப்போஸ்தலர் நடபடிகள் 1:8). யூத சமுதாயத்துக்கு உட்படாதோரையும் சுவிசேஷம் சென்றடையத் துவங்கியது எவ்வாறு என்பதையும் நடபடிகள் விவரிக்கிறது.

பேதுரு பெரும்பாலும் யூதர்களுக்கே சாட்சி பகர்ந்தார். ஆனால், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் புறஜாதிகளையும் தாம் ஏற்றுக் கொண்டதாகத் தேவன் அவருக்குக் காண்பித்தார். பேதுரு (அப்போஸ்தலர். 10 புறஜாதிகளைப் பற்றித் தப்பெண்ணங் கொண்டிருந்த போதிலும்) அவர்களுக்கு ஊழியஞ் செய்யும்படி தேவன் அவரைப் பயன்படுத்தினார். பவுல் யூதர்களுக்கே பிரசங்கித்தார், ஆனால் அவர்கள் அவருடைய பிரசங்கத்தைப் புறக்கணிக்க ஆரம்பித்தவுடன் அவரும் அதிகமாகப் புறஜாதிகளிடத்திற்கே சென்றார் (அப்போஸ்தலர். 19:9,10; 26:16-18; 28:28). கிறிஸ்தவ மார்க்கம் யூதர்களின் ஓர் பிரிவு அல்ல என்பதும்; அது, தேவகுமாரனும் முழு மனுக்குல இரட்சகருமான இயேசுவின் பேரிலுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட முற்றிலும் புதிய ஜீவ வழி என்பதும் எவ்விதம் தெளிவாயிற்று என்பதை நடபடிகள் காட்டுகிறது.

கிறிஸ்தவ மார்க்கத்தின் உலகளாவிய முக்கியத்துவத்தைக் காட்டுவதுடன், இதற்கு விரோதமாகக் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கும் நடபடிகள் பதில் அளிக்கிறது. ஒரு சிலரால் கூறப்பட்டபடி, கிறிஸ்தவ மார்க்கமானது, ரோம அரசை எதிர்க்கும்படி நாட்டங் கொண்ட அரசியல் இயக்கம் அல்ல என்பதையும் நடபடிகள் நிரூபிக்கிறது. அதிபதியாகிய கல்லியோனின் நியாயாசனத்துக்கு முன்பாக யூதர்கள் பவுலைக் கொண்டு சென்றபொழுது, நாட்டின் பிரமாணங்களுக்குக் கீழ்படியக் கூடாது என்று அவர் ஜனங்களுக்குப் போதித்ததாக அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

ஆனால், அவர்களுடைய குற்றச்சாட்டு அரசியல் சம்பந்தமாயிராமல் மார்க்க சம்பந்தமாயிருப்பதாகக் கல்லியோன் கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்தான் (அப்போஸ்தலர் நடபடிகள் 18:12-16). இச்சம்பவம் மிக முக்கியமானது, ஏனெனில், கிறிஸ்தவ மார்க்கம் அதிகாரத்துக்கு அடிபணிய விரும்பாத இயக்கம் அல்ல என்பதையும், ஆதலால் ரோம அரசியல் அதிகாரத்துக்கு இது அச்சுறுத்தலாக இருக்கவில்லை என்பதையும் இது காட்டுகிறது.

4. சபையை ஸ்தாபிப்பதற்கு தேவன் பயன்படுத்திய முதற்கண் சிறந்த தலைவர்களில் சிலரின் ஊழியம் அப்போஸ்தலர் நடபடிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆதி சபை வளர்ந்த போது, சபையைப் பற்றிய தமது நோக்கத்தை செயல்படுத்துவதற்கானத் தலைவர்களைத் தேவன் எழுப்பினார். இவர்களில் அநேகரைப் பற்றி முக்கியமாக, பேதுரு, பவுலின் ஊழியங்களைப் பற்றி லூக்கா எடுத்தெழுதியிருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகள் எழுதப்பட்ட சமயத்தில், பேதுருவின் ஊழியத்தில் உண்டான அதே அடையாளங்களினால் பவுலின் அப்போஸ்தல ஊழியம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதைக் காட்டுவது முக்கியமாயிருந்தது. பேதுருவைப் போல பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுள் பவுல் உட்பட்டிராதபடியால் இச்சம்பவம் முக்கியம் வாய்ந்தது. உண்மையில், பவுல் சபையின் கசப்பான எதிரியாயிருந்தார். (அப்போஸ்தலர். 8:1-3; 9:1-3).

பவுலின் ஊழியம் தெய்வீக ஒப்புதலைப் பெற்றதாயிருந்தது என்பதைப் பற்றிய தகவல்களை லூக்கா கொடுத்திருக்கிறார்.

இவ்விரண்டு பேருக்குமிடையே நிலவிய ஒற்றுமைகளை லூக்கா வெளிப்படுத்திக் காட்டுகிறார். இவ்விரண்டு பேருக்கிடையே இருந்த ஒற்றுமைகள், இருவரும்:

அ. பரிசுத்த ஆவியானவரின் கிரியையை வலியுறுத்தினார்கள் (அப்போஸ்தலர் 2:38; 19:2-6).

ஆ. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை அறுதியிட்டுக் கூறினார்கள் (2:24-36; 13:30-37).

இ. தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்தவர்களைக் குணமாக்கினார்கள் (3:1-10; 14:8-10).

ஈ. பரிசுத்த ஆவியானவரின் நடத்தியின் படியே நியாயத்தீர்ப்பை செலுத்தினார்கள் (5:1-11; 13:6-11).

உ. சிறைச்சாலையிலிருந்து அற்புதமாக விடுதலையாக்கப்பட்டார்கள் (12:1-11; 16:19-30).

பேதுரு மற்றும் பவுலோடு கூட, இதரத் தலைவர்களான யோவான், யாக்கோபு, ஸ்தேவான், பிலிப்பு, பர்னபா, யாக்கோபு, அப்பொல்லோ அகியோருடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களையும் லூக்கா எடுத்து எழுதியிருக்கிறார். சபையின் முன்னேற்றத்திற்கான சம்பவங்களில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பங்குண்டு. இவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் கீழ் அமைந்த ஒரே புதிய ஆவிக்குரிய சமுதாயத்துக்குள் யூதர்கள், புறஜாதிகள், சமாரியர்கள், மதம் மாறியவர்கள், மேலும் யோவான் ஸ்நானனின் முந்தைய சீஷர்கள் (19:1-3) ஆகியோரைக் கொண்டு வருவதற்கு பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்டனர்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

பொருளடக்கம்

1. சபை ஸ்தாபிக்கப்படுதல் (1:1-3:3)

தங்களுடைய ஊழியத்திற்காக சீஷர்கள் பெற்ற கட்டளை (1:1-11), அவர்களைப் பெலப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டது (1:12-2:47), எருசலேம் சபை, அங்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது ஆகியவற்றுடன் இணைந்த சம்பவங்கள் (3:1-6:7), உபத்திரங்களின் விளைவாக ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரித்தது, அவரது பிரசங்கம், விசுவாசிகள் சிதறுண்டது (6:8, 8:3) போன்றவைகள் இக்காலத்தில் அடங்கும்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க சம்பவமாகும். பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிக்கும்படி சகல தேசத்திலுமிருந்து தேவபக்தியுள்ளவர்கள் எருசலேமுக்கு வந்திருந்தார்கள் (2:5-12). பெந்தெகொஸ்தே நாளில் என்ன சம்பவித்தது என்பதைக் கூடி வந்தவர்களுக்கு பேதுரு பிரசங்கித்த போது மற்ற இடங்களிலிருந்து வந்திருந்த தேவபக்தியுள்ளவர்களும் இக்கூட்டத்தில் இருந்தார்கள். இவர்களில் சிலரும், அந்நாளில் பேதுருவின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்த 3000 பேர்களில் அடங்குவர் என்பதில் ஐயமில்லை.

2. சபையில் உண்டான மாற்றங்கள் (8:4-11:18)

இக்கால கட்டத்தில் புறஜாதிகளின் நாடுகளில்சுவிசேஷம் வெகுவாகப் பரவியிருந்தது. புறஜாதிகளில்ஏராளமானோர் மனந்திரும்பியிருந்தபடியால், முழுக் கவனமும் எருசலேமிலிருந்துஅந்தியோகியாவுக்குத் திருப்பப்பட்டது. சமாரியா, யூதேயா நாடுகளில் பிலிப்பு, பேதுரு, யோவான் ஆகியோர் ஆற்றிய ஊழியம் (8:4-40), சவுலின் குணப்படுதல் (9:1-31), லித்தா, யோப்பா, செசரியா போன்ற இடங்களில் சுவிசேஷம் பிரசங்கித்தது போன்றவை இக்காலத்தில் அடங்கும் (9:32-11:18).

புறஜாதிகள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதற்கு விரோதமாயிருந்த தப்பெண்ணம் படிப்படியாகக் குறைந்தது. யூத மற்றும் புறஜாதி பின்னணியிலிருந்து வந்த கலப்பு ஜனமாகிய சமாரியர்களுக்கு பேதுரு ஊழியஞ் செய்தார் (8:14-17,25). தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடன் இவர் தங்கியிருந்தார் (9:43). கண்டிப்புள்ள யூதனாகிய பேதுரு இவ்விதத் தொழிலின்மூலம் வாழ்க்கை நடத்திய ஒருவருடன் முன்னர் தொடர்பு கொண்டிருக்கவே மாட்டார். இதன் பின்பு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தேவனால் கொர்நேலியுவின் வீட்டிற்கு அவர் அனுப்பப்பட்டார் (அதிகாரம் 10) இச்சம்பவங்கள் அனைத்தும் குறிப்பிடத் தக்கவைகள். ஏனெனில், புறஜாதிகள் சபையின் அங்கமாக அங்கீகரிக்கப்பட்டதை இவை காண்பிக்கின்றன.

3. புறஜாதிகளின் சபை நிறுவப்படுதல் (11:19-15:35)

அந்தியோகியாவில் பர்னபாவும், பவுலும் ஆற்றிய போதிக்கும் ஊழியம் (11:19-30), எருசலேமில் சிறைச்சாலையிலிருந்து பேதுரு தப்பித்தது (12:1-25), பவுலின் முதலாம் சுவிசேஷப் பிரயாணம் (13:1-14:28), புறஜாதிகள் பற்றி எருசலேம் ஆலோசனைச் சங்கம் எடுத்த தீர்மானம் (15:1-35) ஆகியவை, புறஜாதிகளின் சபை நிறுவப்பட்ட சமயத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் கீழ் அடங்கும்.

அநேகம் வழிகளில் புறஜாதிகள் (சமாரியா உட்பட) மத்தியில் நடைபெற்ற தேவனுடைய கிரியைகளுக்கு எருசலேம் சபை ஆதரவளித்து.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

அ. பிலிப்புவின் பிரசங்கத்தின் மூலம் சமாரியர்கள் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் (அதிகாரம் 8).

ஆ. கொர்நேலியுவும், அவருடைய வீட்டாரும் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர் (அதிகாரம் 11).

இ. அந்தியோகியாவிலுள்ள கிரேக்கர்களில் அநேகர் கர்த்தரிடம் திரும்பினார்கள் (அதிகாரம் 11).

ஈ. புறஜாதிகள் விருத்தசேதனம் பண்ணப்பட்டு மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வது அவசியமா என்பது பற்றி அந்தியோகியாவில் கருத்து வேற்றுமை உண்டாயிற்று. ஆதலால், இவ்விஷயத்தைக் குறித்து எருசலேமிலுள்ள சபையினருடன் கலந்தாலோசிப்பதற்காக பவுலும், பர்னபாவும் சென்றார்கள். (அதிகாரம் 15).

4. பவுல் தனது சுவிசேஷ ஊழியத்தை மேற்கொள்ளுகிறார்

இக்காலக் கட்டத்தில் பவுல் தனது இரண்டாம் (15:36-18:22), மூன்றாம் (18:23-21:16). சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டார். தனது முதலாம் பிரயாணத்தில் நிறுவப்பட்ட சபைகளைச் சந்தித்து, அவர் தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தைத் துவக்கினார். பவுல் சுவிசேஷப் பணியை ஆசியாவில் தொடரும்படி விரும்பினார், ஆனால் அதற்கு மாறாக அவர் ஐரோப்பாவிற்குச் (மக்கெதோனியா) செல்லும்படி பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார் (18:6-10).

இதன் விளைவாக, மக்கெதோனியா, அகாயா பகுதிகளில் அநேகம் சபைகள் துவங்கப்பட்டன. முடிவாக, பவுல் தனது மூன்றாம் பிரயாணத்தில் எபேசுவுக்குச் சென்று, அங்கு மூன்று வருடங்கள் ஊழியஞ் செய்தார் (19:10, 20:31).

பவுலின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலிலுள்ள நோக்கத்தை நீங்கள் காணக் கூடுமா? கலாத்தியா, மக்கெதோனியா, அகாயா போன்ற இடங்களில் சபைகளை ஸ்தாபித்த பின்னர், மத்திய பகுதியான எபேசுவில் பவுல் தங்கினார். அவர் எபேசுவில் ஊழியஞ் செய்தபொழுது அவர் இங்கிருந்து கொண்டு சுற்றுவட்டாரங்களிலுள்ள சபைகளுடன் தொடர்பு கொள்வது அவருக்கு எளிதாயிருந்தது. எபேசுவிலுள்ள மூப்பர்கள் தொடர்ந்து இச்சபைகளைக் கண்காணிக்கும்படி பவுல் பெரிதும் விரும்பினார். ஆதலால், அவர் கடைசியாக எருசலேமுக்குத் திரும்பியபொழுது, அவர்களுக்குத் தமது கடைசி அறிவுரைகளை வழங்கினார். (20:22-31).

5. பவுலின் ரோமாபுரி சிறைவாசத்துக்கு வழிகோலிய சம்பவங்கள்

எருசலேமில் பவுல் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுதல் (21:17-23:30), செசரியாவில் அவர் காவலில் வைக்கப்படுதல் (23:31-26:32), ரோமாபுரிக்கு அவர் பயணஞ் செய்தல் (27:1-28:15), அங்கே காவலில் வைக்கப்படுதல் (28:16-31) போன்றவைகள் இப்பிரிவின் கீழ் அடங்கும்.

அப்போஸ்தல நடபடிகள் சுவிசேஷ ஊழியத்திற்கான மாதிரியை நமக்குத் தருகிறது (1:8). இம்மாதிரியில் தெள்ளத்தெளிவுறக் குறிக்கப்பட்டுள்ள மூன்று விஷயங்கள் உள்ளன. அவை.

அ. வல்லமை-பரிசுத்த ஆவியானவர்.

ஆ. ஊழியர்கள்-கிறிஸ்தவர்கள்

இ. இடங்கள்- உள்ளூர், தேசம், உலகம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

அப்போஸ்தல நடபடிகள், ஊழியத்தின் திட்டங்களை மேற்கொள்ளுவதில் ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதையும் நமக்குக் காண்பிக்கிறது. பரிசுத்த ஆவிக்காகக் காத்திருக்க வேண்டுமென்ற இயேசுவின் கட்டளைக்கிணங்க சீஷர்கள் ஒன்று கூடி, ஜெபத்தில் தரித்திருந்தார்கள் *(1:14)*, ஆவியானவரும் வந்திறங்கினார் *(2:1-4)*. சீஷர்கள் சாட்சி பகிர்ந்ததற்காக உபத்திரவப் படுத்தப்பட்டபொழுது, அவர்கள் தைரியத்திற்காக ஜெபித்தார்கள், அவர்கள் ஜெபித்த போது கூடியிருந்த இடம் முழுவதும் அசைந்தது. அவர்கள் தைரியமாய்ப் பிரசங்கித்தார்கள் *(4:23-31)*. பேதுருவும், யோவானும் ஜெபிக்கையில் சமாரியர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் *(8:14-17)*. ஆதிச் சபையார் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் *(2:42)*.

தனிப்பட்டவர்கள் அல்லது விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபிக்கும்போதெல்லாம், தேவன் தமது ஆவியினால் அசைவாடுகிறார். விசுவாசிகள் ஒரு சிலர் கூடி ஜெபித்தபொழுது, கடந்த காலங்களில் பெரும் எழுப்புதல்கள் உண்டாயின. அப்போஸ்தல நடபடிகளில் உள்ள சம்பவங்களை மட்டுமல்லாத, அது எடுத்துரைக்கும் ஆவிக்குரிய கோட்பாடுகளையும் நாம் கற்றக்கொள்வோமாக. அது வெளிப்படுத்தும் மாதிரியை நாம் பின்பற்றுவோமானால், எழுப்புதல் உண்டாவது நிச்சயம், கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவுக்கு நேரே அநேகர் இழுத்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆதித்திருச் சபையின் தனித்தன்மைகள்

1. விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப் படுதல் *(2:4; 8:14-17; 10:44-46; 19:1-7)*.
2. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் *(2:29-36; 13:26-41)*.
3. அனுதின அந்நியோந்நியம் மற்றும் வேதவாக்கியத்தைக் கற்றுக்கொள்ளுதல் *(2:42-47)*.
4. பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிதல் *(13:1-3; 16:7)*.
5. விஷயங்களைத் தீர்மானிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவரின் ஞானம் விளங்குதல் *(6:1-7; 15:6-9)*.
6. ஊழியத் தரிசனமும், சுவிசேஷத்தை அறியாதவரை அணுகுதலும் *(8:4; 16:9,10)*.
7. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஜெபித்தல் *(4:23-31; 12:5)*.
8. அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் சுவிசேஷச் செய்தியை உறுதிப்படுத்துதல். *(3:6-8; 13:6-12; 14:8-10)*.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. இயேசுவானவர் பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால், தமது சீஷர்கள் மற்றும் சபையின் மூலம் கிறிஸ்து எவ்விதம் கிரியை செய்தார் என்பதின் பதிப்பு அப்போஸ்தலர் நடபடிகள் ஆகும்.
2. லூக்கா சுவிசேஷத்தின் ஆக்கியோனாகிய லூக்கா நடபடிகளையும் எழுதியிருக்கிறார். இயேசுவானவர். "செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து" (அப்போஸ்தலர் 1:1) எழுதப்பட்ட அவரது சுவிசேஷத்தின் தொடர்ச்சிதான் நடபடிகள் ஆகும்.

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

முன்னுரை

அ. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும்பொழுது சாட்சியாயிருப்பதற்கான வல்லமையைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆ. வைத்தியனாகிய லூக்கா, லூக்கா சுவிசேஷம், அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகிய இரண்டையும் எழுதினார். இயேசுவானவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் அவர் செய்ததும், உபதேசித்துமான எல்லாவற்றையும் குறித்த விவரத்தை லூக்காவில் அவர் எழுதியிருக்கிறார். இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின்பு அவர் தரிசனமானதைப் பற்றிக் கூறி, தன்னுடைய இரண்டாம் பிரபந்தமான அப்போஸ்தலருடைய நடபடிகளை ஆரம்பிக்கிறார். அதன் பின்பு, இயேசுவானவர் பரலோகத்திற்குத் திரும்புவதற்கு முன் அவருடைய சீஷர்களுக்கு அருளிய இயேசுவின் ஓர் கட்டளையை மீண்டும் எழுதுகிறார். இயேசுவின் மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் அவர்கள் வல்லமையுள்ள சாட்சிகளாக மாறும்படி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் காத்திருக்கும்படிக்கு இயேசுவானவர் சீஷர்களிடம் கூறினார். இதற்குப் பின்பு அவர்கள் இந்தத் தூதுடன் எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் முழு உலகத்துக்கும் செல்ல வேண்டியதாயிருந்தது.

1. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் காத்திருக்க வேண்டியதிருந்தது (1:4-5).

அ. வசனம் 5. "காத்திருங்கள்" என்பதின் அர்த்தம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளும் வரைக்கும் காத்திருங்கள், தரித்திருங்கள், நீங்கள் இருக்குமிடத்திலேயே தங்கியிருங்கள்" என்பனவாகும். "காத்திருத்தல்" என்பதில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறும்படிக்கு, தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்துவதைப் பற்றி ஒன்றுமில்லை. பத்துநாட்களுக்குப் பிறகு வந்த பெந்தெகொஸ்தின் நாளுக்காக அவர்கள் காத்திருக்க வேண்டியதிருந்தது. இப்பண்டிகை நாள் பஸ்கா பண்டிகைக்கு 50நாட்களுக்குப் பின்னர் வருவதாகும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த நாளாயிருந்தது.

ஆ. வசனம் 5. (நான் உங்களோடு இருந்தபொழுது) நீங்கள் என்னிடத்தில் கேள்விப்பட்ட "பிதாவின் வாக்குத்தத்தமாகிய" வரம் இதுவே. இங்கே, "வரம்" என்பதின் அர்த்தம், பரிசு, இலவச ஈவு ஆவிக்குரிய ஈவு, கிறிஸ்துவால் அருளப்பட்ட ஈவு, வல்லமையின் ஞானஸ்நானத்தின் ஈவு என்பனவாகும்.

அப்போஸ்தலர் 2:38. பெந்தெகொஸ்தே நாளில் கூடி வந்தவர்களுக்கு மாறுத்தரமாகப் பேதுரு இவ்விதம் கூறுகிறார்: "மனந்திரும்பி.... ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."

அப்போஸ்தலர் 10:45. பேதுருவோடே கூட கொர்நேலியுவின் வீட்டிற்கு வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள், பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

அப்போஸ்தலர் 11:17. எருசலேமிலிருந்த ஆலோசனைச் சங்கத்தில் பேதுரு காரியத்தை விவரித்தபோது இவ்விதம் கூறுகிறார்: பெந்தெகொஸ்தே நாளில் நமக்கு அநுக்கிரம் பண்ணின அதே பரிசுத்த ஆவியின் வரத்தை கொர்நேலியுவின் வீட்டில், புறஜாதிகளுக்கும் தேவன் அநுக்கிரகம் பண்ணியிருக்கிறார்.

இ. வசனம் 4. ஞானஸ்நானமும் ஓர் "வாக்குத்தத்தமே",நன்மையான ஏதோவொன்றின் தெய்வீக உறுதிப்பாடு;

ஓர் அடகு ஓர் அறிவிப்பு "நம்முடைய பரம பிதாவானவர் மீறமுடியாத அடகை நம்மோடு ஏற்படுத்தியிருக்கிறார். இயேசுவைப் பின்பற்றுகிற வர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவார்கள்."

ஈ. இந்த வாக்குத்தத்தத்தைக் குறித்து இயேசுதம்முடைய சீஷர்களுடன் பேசியிருக்கிறார்: லூக்கா 24:49. "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" இந்த வாக்குத்தத்தைப்பற்றி பேதுரு நமக்கு கூடுதலாகக் கூறுகிறார்:

அப்போஸ்தலர்2:33. பெந்தெகொஸ்தேக்குப் பிறகு பேதுரு கூறுவதாவது: "பிதா அருளிய வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியை பொழிந்தருளினார்."

அப்போஸ்தலர் 2:39. "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், ... கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது." ஒவ்வொரு விசுவாசிக்கும் இது உரியது.

உ. வசனம் 4: யோவான் ஜலத்தினாலே (முழுக்கு) ஞானஸ்நானம் கொடுத்தான். ஆனால் இது வித்தியாசமானதாய் இருக்கும். இந்த ஞானஸ்நானம் தண்ணீரில் அல்ல, பரிசுத்த ஆவியில் முழுகுதல். இங்கே, "ஞானஸ்நானம் பண்ணப்படுதல்" என்பதின் அர்த்தம் யாதெனில், முழுமையாக அல்லது முற்றிலுமாக மூடுதல், அமிழ்த்துதல், தோய்த்தல், மூழ்குதல் என்பனவாகும். நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது இது சம்பவிக்கிறது.

ஊ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு முன்பும் நீங்கள் இயேசுவுக்கு சாட்சியாக இருக்க முடியும்! ஆனால், நீங்கள் சாட்சியாகச் செல்வதற்கு முன்னர், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நாடி அதைப் பெற்றுக்கொண்டால் நீங்கள் அதிக ஆற்றலும், மிகுந்த தைரியமும், உறுதியான நம்பிக்கையும் உடையவர்களா யிருப்பீர்கள். ஆதலால், நீங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும், ஏன் காத்திருக்கக்கூடாது, ஏன் தரித்திருக்கக் கூடாது, நீங்கள் இருக்குமிடத்திலேயே ஏன் தங்கியிருக்கக்கூடாது? இது இயேசுவின் சீஷர்களுக்கான இலவச ஈவாகும். இதனை பரம பிதாவானவர் இவர்கள் ஒவ்வொருவருக்கும் வாக்குப் பண்ணியிருக்கிறார்!

2. இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும் பொழுது பெலனடைவார்கள் (1:8).

அ. எட்டாம் வசனத்தில் "நீங்கள்" என்பது, இயேசுவின் சீஷர்கள் அனைவரையும் குறிக்கிறது. பெலன் "அடைந்து" என்பதின் அர்த்தம், பெற்றுக்கொள்ளுதல், எடுத்துக்கொள்ளுதல், பற்றிக்கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், அடைந்துகொள்ளுதல் என்பனவாகும். விசுவாசி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, ஆற்றலுடன் செயல்படுவராக அவர் மாறுகிறார். இலவச ஈவை இயேசு அருளும் பொழுது விசுவாசி அதை "எடுத்துக்" கொள்ள வேண்டும்.

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

ஆ. விசுவாசி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை "எடுக்கும்" பொழுது அவர் "பெலன்" அடைகிறார்; இது, அற்புதமான பெலன், பலம், திறன், வல்லமை ஆகும். எனவே, விசுவாசி அற்புதங்களின் ஊழியராக மாறுகிறார்; தன்னைக் கிறிஸ்தவனாகப் பிரதிபலிக்கும் திறன் உடையவராகிறார். இயற்கைக்கு மேற்பட்ட, சக்தி வாய்ந்த தேவவல்லமையும் உடையவராகிறார். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட விசுவாசிகள் மூலமாக அற்புதமானதும், இயற்கைக்கு மேற்பட்டதுமான தேவவல்லமை பாய்ந்தோடும்.

இ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வாசகம், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது" என்பதாகும். பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பண்ணப்படுதல், "ஞானஸ்நானம்," "வாக்குத்தத்தம்," "ஈவு," "ஊற்றப்படுதல்," "நிரப்பப்படுதல்," "விழுதல்," "வருதல்" என்னும் பதங்களால் அறியப்படுகிறது. எந்தவொரு பதமும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை முழுமையாக விவரிக்க முடியாது என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஈ. "பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்" என்னும் பதம் முதன் முதலாக யோவான் ஸ்நானனால் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் யோவானிடம் "ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர்" என்று சொல்லியிருந்தார் (யோவான் 1:33)

இயேசுவே ஞானஸ்நானங்கொடுக்கிறவர். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக நீங்கள் அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும்.

உ. பரிசுத்த ஆவியின் ஸ்நானம் எவ்விதம் நிகழ்ந்தது என்பதை அப்போஸ்தலர் 2:1-4 வசனங்களில் துல்லியமாக விளங்கிக் கொள்ளக் கூடும். இருப்பினும், அப்போஸ்தலர் நடபடிகளில் தொடர்ந்து நிகழ்ந்தவைகளில், "பலத்த காற்று அடிக்கிறமுழக்கம் போலவும்", "அக்கினிமயமான பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததைப்" போலவும் இருக்கவில்லை. வேதாகமம் முழுவதிலும் இவைகளே பரிசுத்த ஆவியைப் பற்றிய அடையாளங்களாகும்.

ஊ. பரிசுத்த ஆவியால் நீங்கள் ஞானஸ்நானம் பெறும்பொழுது, நீங்கள் எதிர்பார்க்க வேண்டியவைகள்:

1. பரிசுத்த ஆவியில் இயேசு உங்களை அமிழ்த்த வேண்டும்.

2. பரிசுத்த ஆவியானவரின் செயலின்படியே, நீங்கள் கற்றறியாத பாஷையில் பேசவேண்டும்.

3. அற்புதமானதும், இயற்கைக்கு மேற்பட்டதுமான தேவபெலன் உங்கள் மூலம் ஊழியத்தில் பாய்ந்தோட ஆரம்பித்தல் வேண்டும்!

எ. ஆவியின் ஸ்நானத்தைப் பெறுவதில் ஏற்படும் பெரும் தடைகளில் சில:

1. பரிசுத்த ஆவியினால் ஒருவர் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது என்ன சம்பவிக்குமோ என்ற பயம் (தரையில் விழுந்து விடுதல், மெய்மறந்த நிலையில் இருத்தல், தன்னையே கட்டுப்படுத்தும் திறனை இழத்தல் போன்ற பயம்).

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

2. பெருமை, குடும்பத்தினர், நண்பர், சம அந்தஸ்துடையவர் ஆகியோருக்கு முன்பாக மதிப்பற்றவர்களைப்போலக் காணப்படுவோம் என்ற காரணத்தினால் அநேகர் தங்களைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி, கற்றறிந்திராத பாஷையில் பேசக்கூடாமலிருக்கின்றனர்.

3. தவறான ஏதோ ஒன்றைப் பெறுதல். பரிசுத்த ஆவியின் ஸ்நானத்திற்காக ஒருவர் ஜெபிக்கும் பொழுது சாத்தானிடமிருந்து ஏதாகிலும் தவறானதைப் பெறக்கூடும் எனச் சிலர் தவறாகப் போதிக்கின்றனர். சாத்தானின் மீது சகல வல்லமையும், அதிகாரமும் தேவனுக்குண்டு. தேவன் நல்ல ஈவுகளை மாத்திரமே தம் பிள்ளைகளுக்கு அளிக்கிறார்.

4. மாம்சத்தில் செயல்படுதல். கற்றறிந்திராத மொழியில் நீ வார்த்தைகளைப் பேசும்பொழுது, அதனைச் சுயமாகவே செய்கிறாய் என வேறு சிலர் போதிக்கின்றனர். உன்னுடைய உதடுகள், உன்னுடைய நாவு, உன்னுடைய பேச்சு உறுப்புகள் ஆகியவைதான் செயல்படுகின்றன. கர்த்தரோ பேசச் செய்கிறார், நீ பேசுகிறாய்.

5. விசுவாசக் குறைவு. பரிசுத்த ஆவியின் ஸ்நானம் அவசியமற்றது, இது இக்காலத்துக்கு உரியதல்ல, ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியதுமல்ல எனப் பலர் போதிக்கின்றனர். இன்னும் மற்றவர்கள் வேதாகமத்தை விசுவாசிக்க மறுக்கின்றனர். ஆதலால், பெற்றுக் கொள்வதற்கேற்ற விசுவாசமில்லை. ஆவியின் ஸ்நானத்தைப் பெறுவதில் உள்ள பெருந்தடைகள் இவைகளே.

3. பரிசுத்த ஆவியின் ஸ்நானத்திற்குப் பிறகு இயேசுவின் சீஷர்கள் அவருக்கு சாட்சிகளாயிருப்பார்கள் (1:8).

அ. "சாட்சி" அர்த்தப்படுத்தும் இரண்டு காரியங்கள்:

1. அனைவராலும் பெரிதும் பேசப்படும் ஒருவரோடு தனிப்பட்ட உறவு வைத்துள்ள ஒருவர்; இவருடன் மிகுந்த அனுபவங்கள் உடைய மற்றொருவர். "ஒருவர்" என்பவர் இயேசு "மற்றொருவர்" என்பவர் நாம். நம்மெல்லாருக்கும் இயேசுவோடு கூட தனிப்பட்ட உறவும், ஏராளமான அனுபவங்களும் உண்டு. இதனை நாம் மற்றவர்களுக்கு சாட்சியாகக் கூறக்கூடும்.

2. மேலும், சாட்சி என்பதின் அர்த்தம் இரத்தசாட்சி; அதாவது, இயேசுவை மற்றவர்கள் அறியச் செய்வதற்காக தன்னுடைய ஜீவனையும் பலியாக்க அவசியமாயிருக்குமானால் அதற்கும் மனப்பூர்வமாய் இருக்கும் சீஷன். பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தில்தான் "இரத்தசாட்சியின் மனோபாங்கு" உண்டாகிறது.

ஆ. இயேசு தமது சீஷர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபொழுது இதைப்பற்றி கூறினதாவது: உன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வா. சிலுவை என்பது மரண சாதனம். இயேசு இவ்விதம் சொல்லிக் கொண்டேயிருந்தார்: என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்த மாகவும் ஜீவனை இழந்து போக வேண்டியதிருந்தாலும் அதற்கு உங்களை முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டும் (மத்தேயு 10:38,39).

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

உன் ஜீவனை இரட்சித்தால் நீ அதை இழந்து போவாய். என்னையும், சுவிசேஷத்தையும் காட்டிலும் மற்ற காரியங்களுக்கு, அல்லது இதர மனுஷருக்கு உன் வாழ்க்கையில் கூடுதல் முன்னுரிமை கொடுப்பாயானால் நீ உன் ஜீவனை இழந்து போவாய்.

என்னிமித்தமாக உன்னுடைய ஜீவனை நீ இழந்து போவாயானால், நீ அதைக் கண்டடைவாய். கிறிஸ்துவினிமித்தமாகவும், சுவிசேஷத்திநிமித்த மாகவும் நீ ஓர் இரத்தசாட்சியாக மாறினால், நீ உன் ஜீவனைக் கண்டடைவாய். நீ ஓர் கிறிஸ்தவ னாக மாறியிருப்பதால் உன் வாழ்க்கையின் முடிவான நோக்கம் இதுவாகவேயிருக்க வேண்டும்.

இ. இரத்தசாட்சியின் மனப்பான்மை உடையவர்களா யிருப்பதைக் கீழ்க்கண்டவர்களில் காணலாம்:

1. அப்போஸ்தலர் நடபடிகள் 4, ஆலோசனைச் சங்கத்துக்கு முன் நின்ற பேதுரு, யோவான்.

2. அப்போஸ்தலர் நடபடிகள் 7, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்நின்ற ஸ்தேவான்.

3. அப்போஸ்தலர் நடபடிகள் 21, தனக்குக் காவலும், மரணமும் நேரிடும் என அறிந்திருந்தும் எருசலேமுக்குச் சென்ற பவுல்.

அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும் இயேசுவின் சீஷர்களுக்கான முக்கிய மையப்பொருள், இரத்தசாட்சியின் மனோபாங்குடன் சாட்சியாக இருப்பதேயாம். சீஷர்களுக்கு இயேசுவோடு இருந்த தனிப்பட்ட உறவின் நிமித்தமாகவே அவர்கள் சாட்சிகளாகத் திகழ்ந்தார்கள். இதன் பொருட்டு இரத்தசாட்சிகளாவதற்கு அவசியமிருப்பின் அதற்கும் மனப்பூர்வமுள்ளவர்களாக இருந்தார்கள்.

ஈ. சபையின் காலத்தில் வாழும் விசுவாசிகளுக்கும் இரத்தசாட்சியின் மனோபாங்கு இன்றியமையாததாகும். இயேசுவை உலகம் பகைத்தது. அவரைப் பின்பற்றுகிறவர்களையும் அவர்கள் பகைப்பார்கள். கிறிஸ்தவர்கள் காட்டிக் கொடுக்கப்படுவார்கள், சிறைச்சாலையில் போடப்படுவார்கள், கொல்லப்படவும் செய்வார்கள். சுவிசேஷத்திநிமித்தமாக, அவர்களுடைய குடும்பத்தாரும், நண்பர்களுங்கூட அவர்களுக்கு விரோதமாக எழும்புவார்கள் (லூக்கா 21:16,17).

உ. சமீபத்தில் சீனாவில் அநேகர் கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளானார்கள். தென் அமெரிக்காவிலும் அநேகர் கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளானார்கள். மத்தியகிழக்கிலும் அநேகர் சுவிசேஷத்திற்காக ஜீவனைத் தத்தம் செய்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகளில் நடைபெறும் காரியங்கள் இவ்விதமே தொடருமானால், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக அமெரிக்கர்கள் அநேகர் இரத்தசாட்சிகளாவார்கள்! இருப்பினும், கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருப்பவர்களின் பங்கு இதுவே.

முடிவுரை

அ. பரிசுத்த ஆவியின் ஸ்நானத்திற்காக இயேசுவின் சீஷர்கள் காத்திருக்க வேண்டும். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு அற்புதமானதும்,

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

இயற்கைக்குமேற்பட்டதுமான தேவவல்லமை அவர்கள் மூலம் பாயும். பரிசுத்த ஆவியால் அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு இரத்தசாட்சியின் மனோபாங்குடன் சாட்சியாக விளங்குவார்கள்.

ஆ. இயற்கைக்கு மேற்பட்ட நம்முடைய சத்துருவாகிய பிசாசோடும், அவனுடைய ஆவிகளின் சேனைகளோடும் ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் பிரவேசிக்கையில், இயற்கைக்கு மேற்பட்ட தேவவல்லமை நம்முடைய ஜீவியத்தில் அத்யாவசியமாயிருக்கிறது.

மேலும், ஆவியில் ஜெபிக்கும்படியான திறன் நமக்குத் தேவையாயிருக்கிறது. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் நாம் பெறும் பலாபலன்களில் ஒன்று ஆவியில் ஜெபிப்பதாகும். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறோம், அல்லது, பிசாசு எதைச் செய்து கொண்டிருக்கிறதென்று முழுமையாக அறியாமலிருக்கிறோம். ஆதலால், நாம் ஆவியில் ஜெபிக்கக் கூடியவர்களாயிருக்க வேண்டும்.

நாம் ஆவிக்குரிய மாவீரர்களாகத் திகழ வேண்டுமானால், பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தைப் பெற்றேயாக வேண்டும். ஆவிக்குரிய யுத்தத்திற்குத் தங்களைத் தயாராக்குவதற்கு ஒவ்வொரு விசுவாசியும் கடந்து செல்ல வேண்டிய அத்யாவசியப் படிகளில் இதுவும் ஒன்றாகும்!

இ. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் கூடுதலான நிரூபங்களைக் கவனிப்போம். நீங்கள்:

1. இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையோடு சாட்சிகளாக இருப்பீர்கள்.

2. ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்துவீர்கள்.

3. உங்களுடைய சாட்சியிலும், ஊழியத்திலும் அடையாளங்களும், அற்புதங்களும் பின்தொடரும்.

4. நீங்கள் ஆவியில் ஜெபிக்கவும், பாடவும் கூடியவர்களாயிருப்பீர்கள்.

ஈ. இயேசுவானவரே அபிஷேகிக்கிறவர். இன்றைக்கு அவர் உங்களுக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் அருளுவார். நமக்கு இந்த வாக்குத்தத்தத்தை நமது பரம பிதா வானவர் அளித்திருக்கிறார். தம்முடைய வாக்குத்தத்தங்களை அவர் உடைத்துப்போட மாட்டார். தேவையான ஒன்று யாதெனில், நீங்கள் மறுபடியும் பிறந்து, முழுக்கு ஞானஸ்நானம் பெற்ற விசுவாசியாக இருக்க வேண்டுமென்பதே.

1. முதலாவது, அப்போஸ்தலர் நடபடிகள் 2:1-4இல் உள்ளபடி பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசுவானவரிடம் கேளுங்கள்.

2. அதன்பின், உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளும் நீங்கள் அறிந்திராத வார்த்தைகளையும், சத்தத்தையும், கற்றறியாத மொழியையும் பேச ஆரம்பியுங்கள். துவக்கத்தில் மெல்லிய குரலில் பேசுங்கள், பின்னர் நீங்கள் கேட்கக்கூடிய அளவில் மென்மேலும் சத்தமாகப் பேசிக்கொண்டேயிருங்கள். ஒரே வாக்கியத்துடன் நிறுத்தி விடாதீர்கள். வாக்கியங்கள் சரளமாக வெளிவரட்டும்.

3. உள்ளத்தின் ஆழத்திலிருந்து அல்லது மனதின் மூலம் பாஷை வரும், உங்களுடைய உதடுகளும், வாயின் கீழ்ப்பகுதியும் நடுங்க ஆரம்பிக்கும்.

சாட்சியாயிருப்பதற்காக வல்லமையைப் பெறுதல்

(அப்போஸ்தலர் 1:4-8)

4. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் ஆவியின் ஸ்நானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களின் மீது கரங்களை வைத்து, அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்கள் ஜெபிக்கும் மொழியிலேயே ஜெபிக்கும்படிச் செய்து, அவர்களை ஊக்குவியுங்கள்.

இயேசுவானவர் பரமேறுதல்

(அப்போஸ்தலர் 1:9-12)

முன்னுரை

அ. இயேசுவானவர் உலகத்திலிருந்த தமது இறுதி நாட்களில் செய்ததும், சொன்னதும் எதுவோ, அதன் சுருக்கத்தை அப்போஸ்தலர் முதல் அதிகாரத்தில் லூக்கா நமக்கு எழுதுகிறார். இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, அப்போஸ்தலர்களுக்கும், ஐந்நூறு பேருக்கு அதிகமான இதர சாட்சிகளுக்கும் தரிசனமானார். அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக அவர்கள் எருசலேமில் காத்திருப்பது பற்றிய அறிவுரையையும் வழங்கினார். சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியின் பலத்தினாலே இயேசுவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் குறித்து சாட்சி பகர வேண்டியதிருந்தது. இவைகளை அவர் சொன்ன பின்பு, அவர்கள் கண்களுக்கு முன்பாகப்பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

1. இயேசுவின் பரமேறுதல் (1:9,12).

அ. இயேசுவானவர் பரமேறிய நாளில் தமது சீஷர்களை, ஒலிவ மலையின் கிழக்குச் சரிவிலுள் உள்ள ஓர் கிராமமான பெத்தானியா வரைக்கும் அழைத்துக்கொண்டு போனார் (லூக்கா 24:50). இது எருசலேமிலிருந்து சுமார் $^{3}/_{4}$மைல் தொலைவிலிருந்தது (பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் ரபீமாரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரம்) (வசனம் 12).

ஆ. வசனம் 9. அவர்கள் கண்களுக்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டார். இயேசுவானவர் அப்படியே மெல்ல மெல்ல பரலோகம் ஏறிச் சென்றார். சீஷர்கள் தங்கள் புறக்கண்களால் இக்காட்சியைக் கண்டனர். அவர்கள் கனவும் காணவில்லை, தரிசனமும் காணவில்லை. மகிமையடைந்த சரீரத்தோடு மெல்ல மெல்ல உயர எடுத்துக் கொள்ளப்பட்ட இயேசுவையே அவர்கள் காணும் பேறு பெற்றனர்.

இ. வசனம் 9. "அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது." இது ஒருவேளை பழைய ஏற்பாட்டின் மகிமைக்கு ஒத்ததோர் மகிமையின் மேகமாயிருந்திருக்கக் கூடும். இயேசுவானவர் மெல்ல மெல்ல பரலோகத்துக்குப் பரமேறியபொழுது மேகம் அவரைச் சூழ்ந்து, எடுத்துச் சென்றது என்பது சாத்தியமானதே.

ஈ. சாலொமோன் கட்டிய தேவாலயத்தில் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவந்து வைத்தபொழுது, "மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று... கர்த்தருடைய மகிமை, கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று." (1இராஜாக்கள் 8:10,11). இந்த மகிமையின் மேகம் ஒருவேளை, இயேசுவானவர் பரமேறிய பொழுது சீஷர்களால் பார்க்கப்பட்ட மேகத்தைப் போன்றதே.

இயேசுவானவர் மறுரூபமானபொழுது சீஷர்களைச் சூழ்ந்து கொண்ட மகிமை, இயேசுவானவர் பரத்துக்கு எழுந்தருளிப் போனபோது சீஷர்களால் பார்க்கப்பட்ட ஷெக்கைனா மகிமையின் பிறிதொரு மாதிரியாகும். (மாற்கு 9:7).

உ. இப்பார்தலத்தின் அண்டைவெளியை மட்டும் இயேசுவானவர் விட்டுச் செல்லவில்லை, பிதாவின் வலதுபாரிசத்துக்கே அவர் எழுந்தருளிப் போனார். தமது மகிமை வாய்ந்த சரீரத்தோடு இயேசுவானவர் இன்னமும் பரலோகத்தில் பிரசன்னமாயிருக்கிறார். ஸ்தேவான் அங்கே அவரைக் கண்டாரே. (அப்போஸ்தலர் நடபடிகள் 7:55).

இயேசுவானவர் பரமேறுதல்

(அப்போஸ்தலர் 1:9-12)

ஊ. இயேசுவானவர் பரமேறியதை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது, விண்வெளிக் கலமொன்று விண்ணில் செலுத்தப்படுவதை உற்று நோக்குவதற்கு ஒத்திருந்திருக்கும் என நான் ஊகிக்கிறேன். விண்வெளிக்கலம் வானில் சிறு புள்ளியாகத் தென்படும் வரைக்கும் நீங்கள் அதை உற்று நோக்குகிறீர்கள். அதன்பின்னர் உங்களுடைய முழு வல்லமையுடன் நீங்கள் முயற்சித்தாலும் அதனை ஒருக்காலும் காணமுடியாது அன்றோ!

2. இயேசுவானவர் பரமேறுகையில் தூதர்கள் தோன்றுகின்றனர் (1:10,11).

அ. வசனம் 10. வானில் இயேசுவானவர் மறைந்த இடத்திலேயே தங்களுடைய கண்களைப் பதிந்திருந்த சீஷர்களுக்கருகே வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் வந்து நின்றார்கள். அவர்கள் இன்னாரென்று குறிக்கப்படாவிடினும், அவர்கள் தேவதூதர்கள்தான் என நாம் நிச்சயப்படுத்தக் கூடும்.

தேவதூதர்கள் பணிவிடை ஆவிகள்தான். ஆனால், பொதுவாக அவர்கள் வேதாகமத்தில் மனுஷராகவே தோன்றுகிறார்கள். வெண்மையான வஸ்திரம் அவர்கள் தேவதூதர்கள்தான் எனச் சாட்சியிடுகிறது. இயேசுவானவர் உயிர்த்தெழுந்த தினத்தில் அவருடைய கல்லறையில் உட்கார்ந்திருந்த இரண்டு தூதர்கள் வெள்ளை உடை தரித்திருந்தார்கள். (யோவான் 20:12). எவ்வித அறிவிப்புமின்றி திடீரெனத் தோன்றிய இருவரின் திறமையும் அவர்கள் தூதர்கள் தான் என்பதற்கோர் அடையாளமாகும்.

ஆ. வசனம் 11. "கலிலேயராகிய மனுஷரே" எனத் தூதர்கள் சீஷர்களை விளித்தனர். யூதாஸ்காரியோத்து தவிர மற்ற சீஷர்கள் அனைவரும் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள், அவ்வேளையில், யூதாஸ் அங்கேயிருக்கவில்லை.

இ. வசனம் 11. "நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்?" சீஷர்களுக்கு அவசியமான அறிவுரைகளை இயேசு வழங்கியிருக்கிறார் என்பதை தூதர்கள் அறிந்திருந்தனர். அப்படியிருக்க, எருசலேம் நோக்கி ஏன் அவர்களுடைய பயணத்தைத் துவக்கவில்லை? இயேசுவானவர் இவ்விதம் உரைத்திருக்கிறாரே:

1. வசனம் 5. பெந்தெகொஸ்தின் நாளுக்காக எருசலேமுக்குச் சென்று "காத்திருங்கள்."

2. வசனம் 4. உங்களுக்காக அருளப்படும் "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப்" பெற்றுக் கொள்ளுங்கள்.

3. வசனம் 8. இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையினால் "நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."

ஈ. தூதர்களின் கேள்வி இன்று நமக்கும் பொருந்தும். "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்?" உங்களுக்கான அறிவுரைகள் உள்ளனவே. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இயற்கைக்கு மேற்பட்ட பெலனால் தரிப்பிக்கப்படுங்கள். நீங்கள் செல்லுமிடமெங்கும் ஆவியின் பெலத்தினாலே, இயேசுவின் மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாயிருங்கள்.

இயேசுவானவர் பரமேறுதல்

(அப்போஸ்தலர் 1:9-12)

3. இயேசுவானவர் பரமேறியதைத் தொடர்ந்து பூமிக்குத் திரும்புவார் (1:11).

அ. வசனம் 11. "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" எனத் தூதர்கள் சீஷர்களிடம் அறிவித்தனர். இதே இயேசுவானவர், இதே மகிமைபடைந்த சரீரத்தில்:

1. மகிமையின் மேகங்களில்

2. கண்கள் யாவும் அவரைக் காணும் விதத்தில்

3. பூமியின் மேல் இறங்கி வருவார்.

ஆ. சகரியா 14:4. "அந்நாளிலே அவருடைய பாதங்கள் (மறுபடியும்)... ஒலிவ மலையின் மேல் நிற்கும்." (மாற்கு 13:26) "அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள்"

இ. விசாரணையின் வேளையில் பிரதான ஆசாரியனுடைய கேள்விக்கு மாறுத்தரமாக இயேசு, "மனுஷகுமாரன் வானத்தின் மேகங்கள் மேல் வருவதைக் காண்பீர்கள்" என்றார் (மத்தேயு 26:64). நித்திய ராஜரீகத்தையும், கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தையும் பற்றி தானியேல் கண்ட தரிசனத்தில், "மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்" என அவர் கூறுகிறார் (தானியேல் 7:13).

வெளிப்படுத்தலில் யோவான், "இதோ, மேகங்களுடனே வருகிறார்" எனக் கூறுகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:7).

ஈ. எப்போது இயேசுவின் பாதங்கள் மறுபடியும் ஒலிவ மலையின் மேல் நிற்கும்? இந்த யுகத்தின் இறுதியில் அடுத்தடுத்து நிற்கும் சம்பவங்கள் உண்டு:

1. சபை எடுத்துக் கொள்ளப்படுதல் (1தெசலோனிக்கேயர் 4:17,18; 1கொரிந்தியர் 15:51,52).

2. சபை இயேசுவோடு கூட பரலோகத்திலிருக்கும்பொழுது, பூமியெங்கும் ஏழு வருட மகா உபத்திரவம் உண்டாகும்.

3. மகாபெரிய நியாயத்தீர்ப்பும், அர்மகெதோனில் துன்மார்க்க ஜாதிகளின் அழிவும் உண்டாகும் (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-21).

4. இப்பொழுது அப்போஸ்தலர் நடபடிகள் 1:11-இல் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறும்: "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்"

5. இதன் பிறகு, விசுவாசிகள் 1000 வருஷம் கிறிஸ்துவோடு கூட பூமியில் அரசாளுவார்கள்.

உ. கிறிஸ்து மேகங்களில் மீண்டும் வருவார் என்ற உண்மை, பரிசுத்தமான கிறிஸ்தவ ஜீவியஞ் செய்யப்பெரும் தூண்டுதலாக இருந்து வருகிறது. இயேசுவானவர் திரும்பி வரும்பொழுது அவருடைய மகிமைபடைந்த ஜென்ம சரீரத்துடன் தோன்றுவார். நம்முடைய அற்பமான சரீரம் அவருடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாகும்.

இயேசுவானவர் பரமேறுதல்

(அப்போஸ்தலர் 1:9-12)

அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான் (தொடர்ந்து பாவத்திலிருந்து திரும்புகிறான்) (1 யோவான் 3:2,3).

ஊ. கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற உண்மை, கிறிஸ்தவன் சாட்சியாயிருப்பதற்கும் உந்துதலாயிருக்கிறது. இயேசுவானவர் பரமேறுவதற்கு முன் அருளிய கடைசி அறிவுரைகள் இவைகளே: "எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரிந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." இந்த அறிவுரைகள் சபையின் யுகத்தில் வாழும் ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியது.

முடிவுரை

அ. இயேசுவானவர் அதிசீக்கிரமாய் வருகிறார். அவர் வரும் நாழிகையை ஒருவரும் அறிந்திலர், பிதாவானவர் மாத்திரமே அறிந்திருக்கிறார். அவர் சபையை எடுத்துக் கொள்வார். அவ்வேளையில் நிச்சயமாகவே நம் ஒவ்வொருவரையும் பார்த்து இவ்விதம் வினவுவார்:

"என்னுடைய கடைசி கட்டளையாகிய,

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் (எடுங்கள்),

2. எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருங்கள், என்பதின்படி நீ என்ன செய்திருக்கிறாய்?"

பெந்தெகொஸ்தே நாள்

(அப்போஸ்தலர் 2:1-13)

முன்னுரை

அ.அப்போஸ்தலர்1-ஆம் அதிகாரத்தில், இயேசுவானவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் அவருடைய சீஷர்களுக்கு அவர் கடைசி அறிவுரைகளை அருளிச் செய்கிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் ஈவுக்காக எருசலேமில் காத்திருக்கும்படி கூறுகிறார். இன்னும் சில நாட்களில் இது நிறைவேறும். எனவே, அவர் பரமேறியவுடன் அனைவரும் எருசலேமிற்குத் திரும்பினார்கள். மேல் வீட்டொன்றில் ஜெபத்திற்காக அவர்கள் தொடர்ந்து ஒருமித்துத் தரித்திருந்தார்கள். இச்சமயத்தில்தான் ஆண்டவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக மற்றொரு சீஷனைத் தெரிந்தெடுத்தார்கள். இதன்பின் பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தது.

1. பெந்தெகொஸ்தே நாளில் அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள் (2:1,5-13).

அ. வசனம் 1. "பெந்தெகொஸ்தே நாள்."இதுபஸ்கா வாரத்தின் ஓய்வுநாளுக்குப் பிறகு50-வது நாளாயிருந்தது (லேவியராகமம் 23:15,16)பழையஏற்பாட்டில், பெந்தெகொஸ்தே நாள்இவ்விதம்அழைக்கப்பட்டது: வாரங்களின் பண்டிகை (உபாகமம் 16:10), அறுப்புகாலப் பண்டிகை(யாத்திராகமம்23:16), முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை நாள் (எண்ணாகமம் 28:26).

பழைய ஏற்பாட்டில் பெந்தெகொஸ்தே முதற்கனிகளைச் செலுத்தும் கொண்டாட்டமாக இருப்பது போல, ஓர் கிறிஸ்தவனின் ஜீவியத்தில் பரிசுத்த ஆவியின் "முதற்பலன்களில்" ஒன்று பெந்தெகொஸ்தே ஆக இருக்க வேண்டும்.

ஆ. வசனம் 1. "பெந்தெகொஸ்தே" என்னும் நாள் வந்தபோது பஸ்கா வார ஓய்வு நாளுக்குப் பிறகு வரும் 50-வது நாள், தம்முடைய சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவியின் வல்லமையை ஊற்ற ஆரம்பிப்பதற்காக இயேசு தெரிந்தெடுத்த நாளாயிருந்தது. இது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலம் பிதாவானவர் அருளிய வாக்குத்தத்தமாயிருக்கிறது. "உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படும்" (ஏசாயா 32:15). "உன் சந்ததியின் மேல் என் ஆவியை ஊற்றுவேன்" (ஏசாயா 44:3). "நான் இஸ்ரவேல் வம்சத்தார் மேல் ஆவியை ஊற்றுவேன்" (எசேக்கியேல் 39:29). "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2:28). "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும்... ஆவியை ஊற்றுவேன்" (சகரியா 12:10).

இ. வசனம் 1. "அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்" எந்தவொரு சீஷனும் நழுவிச் செல்லவில்லை. இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதிலிருந்து, பரிசுத்த ஆவியின் வல்லமை அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரியது என்பதை அறிந்திருந்தனர். "நீங்கள் (எல்லாரும்) சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ் நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்"

பெந்தெகொஸ்தே நாள்

(அப்போஸ்தலர் 2:1-13)

(அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:4,5). பேதுருவின் வார்த்தைகள் இதை உறுதிப்படுத்துகின்றன: "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:39).

ஈ. வசனம் 5-8,11. ஒருவேளை மேல்வீட்டிலிருந்த 120 சீஷர்களும் உடனே வெளியே தெருக்களிலும், சந்துகளிலும் சென்று கற்றறிந்திராத மொழியில் தொடர்ந்து பேசியிருப்பார்கள். சீஷர்களைச் சுற்றிலும் எப்படி இவ்வளவு திரளான ஜனங்கள் கூடி வந்திருப்பார்கள் என்பதை விளக்க இது உதவும்.

உ. உலகின் பதினைந்து வித்தியாசமான இடங்களிலிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அவர்களில் அநேகர் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வருகை தந்த பார்வையாளர்கள் ஆவர். தங்கள் தங்கள் பாஷையிலே சீஷர்கள் பேசும் "சத்தத்தைக்" கேட்டப் பார்வையாளர்கள் "பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்" அவர்களின் செய்கை காண்பதற்கு விபரீதமாகவும், சத்தம் பெருங்கூச்சலாகவும் இருந்தபடியால், அவர்கள் மதிமிழுந்திருக்கிறார்கள் என எண்ணினார்கள்.

ஊ. வசனம் 13. "மற்றவர்களோ: இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்." சீஷர்களோ ஆவியில் நிறைந்திருந்தார்கள். சிலர் கூடி வருகையில் பரிசுத்த ஆவி வரும்பொழுது, தங்கள் மீது வந்தமரும் தேவவல்லமையின் பிரசன்னத்தினிமித்தம் அநேகர் நிற்கக்கூடாதவர்களாக உள்ளனர்.

எ. விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபொழுது, அவர்கள் "ஆவியினால் வெறிகொண்டிருந்தார்கள்" என்று சீனாவின் கிராமங்களிலிருந்து அறிக்கைகள் எங்களுக்குக் கிடைத்துள்ளன. ஹாங்காங்கிலும், ஐக்கிய நாடுகளிலும் நடைபெற்ற எங்களுடைய கூட்டங்களில் விசுவாசிகளின் மத்தியில் நாங்கள் இவ்விதம் கண்டிருக்கிறோம்.

2. பெந்தெகொஸ்தே நாளில் தோன்றிய தெய்வீக பிரசன்னத்தின் அடையாளங்கள் (2:2,3).

அ. வசனம் 2. "பலத்த காற்று அடிக்கிற முழக்கம்." சடிதியாய் உண்டான "முழக்கம்" வீடு முழுவதையும் நிரப்பிற்று. இது நிஜமான காற்று அல்ல. பழைய ஏற்பாட்டில் தெய்வீகம் வெளிப்பட்டதை சீஷர்களுக்குக் காற்று நினைவூட்டியிருக்கும்.

1. கர்த்தர் பெருங்காற்றில் இருந்து யோபுக்கு உத்தரவு அருளினார் (யோபு 38:1; 40:6).

2. இஸ்ரவேலர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடக்கும்படி பலத்த காற்று பாதை உண்டாக்கிற்று (யாத்திராகமம் 14:21).

3. எசேக்கியேலில், காற்று (சுவாசம்) உலர்ந்த எலும்புகள் உயிரடையும்படிச் செய்தது (எசேக்கியேல் 37:9,10,14).

ஆவியைப் பற்றி பேசுவதற்கு இயேசு "காற்று" என்னும் பதத்தைப் பயன்படுத்தினார் (யோவான் 3:8). தேவன் விசேஷித்த விதத்தில் ஆவியை வெளிப்படச் செய்வதற்கு காற்றின் முழக்கம் சீஷர்களுக்கு அடையாளமாயிருந்தது.

ஆ. வசனம் 3. "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டது." அவர்கள் அனைவருக்கும் மேல் பெரும் ஜுவாலைகள் போன்ற ஏதோ ஒன்று தோன்றிற்று.

பெந்தெகொஸ்தே நாள்

(அப்போஸ்தலர் 2:1-13)

அதன்பின் அது கலைந்து, அக்கினி ஜுவாலை போன்ற தனித்தனி நாவு சீஷர்கள் ஒவ்வொருவனின் தலையின் மேலும் வந்து அமர்ந்தது. சந்தேகமின்றி, நிஜமான அக்கினி அங்கில்லை. பழைய ஏற்பாட்டில் காற்றைப் போன்று அக்கினியும் தெய்வீக பிரசன்னத்தின் ஓர் அடையாளமா யிருந்தது:

1. ஓரேப் பர்வதத்தில் தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்குத் தரிசனமானார் (யாத்திராகமம் 3:2).

2. இஸ்ரவேலர் எல்லாரும் ஏகமாய் கர்த்தரின் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டபோது, கர்த்தர் சீனாய் மலையின் மேல் அக்கினியில் இறங்கினார் (யாத்திராகமம் 19:18).

3. வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜாதியாரை இரவில் வழிநடத்த கர்த்தர் அக்கினி ஸ்தம்பத்தில் அவர்களுக்கு முன் சென்றார் (யாத்திராகமம் 13:21).

இ. இயேசுவானவர்வாக்குப்பண்ணியிருந்த துபோல (அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:5), இப்பொழுது அவர்களைப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதை சீஷர்கள் உணர்ந்தனர். பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தைக் காற்றும், அக்கினியும் உருவகப்படுத்திற்று என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இதர சந்தர்ப்பங்களில், இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபொழுது, பலத்த காற்று அடிக்கிற முழக்கமும், "அக்கினி மயமான நாவுகளும் மீண்டும் தென்படவேயில்லை"

ஈ. பேதுரு காரியத்தை ஆலோசனைச் சங்கத்தாருக்கு விவரித்தபோது, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கினது போலவே, கொர்நேலியு வீட்டார் மேலும் இறங்கினார் என்றார். அவர்களும் கற்றறிந்திராத பல மொழிகளைப் பேசினார்கள், ஆனால் காற்றும் அக்கினியும் அங்கு காணப்படவில்லை (அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:44,45; 11:17).

உ. நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படும் பொழுது, பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பெற்றதைப் போன்று ஸ்நானம் பண்ணப்படுவீர்கள். ஆனால், அவர்களைப் போன்று காற்றையும், அக்கினியையும் பார்க்காமலிருக்கலாம், என்றாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பெற்று, நீங்கள் கற்றிராத பாஷையில் பேசுவீர்கள். வேதத்தின் அடுத்த வசனத்தை நாம் பார்ப்போமாக.

3. பெந்தெகொஸ்தே நாளில் அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (2:4).

அ. வசனம் 4. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்" என வேதம் கூறுவது, அங்கு குழுமியிருந்த 120 பேரையும் குறிப்பிடுகிறது. "நிரப்பப்படுவது" என்பதற்கு முழுமையாகத் தோய்த்தல், முற்றிலும் ஆட்கொள்ளுதல், வேண்டியதை நிரப்புதல் என்று அர்த்தமாகும். சீஷர் ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் தோய்த்து எடுக்கப்பட்டார்கள் (ஒரு துண்டு துணிக்கு வர்ணமேற்றுவதைப் போன்றது. ஒவ்வொரு நூலிழையும் வர்ணத்தினால் முழுவதுமாகத் தோய்க்கப்படுகிறது); அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டார்கள்; பரிசுத்த ஆவியினால் இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையினால் நிரப்பப்பட்டார்கள்.

பெந்தெகொஸ்தே நாள்

(அப்போஸ்தலர் 2:1-13)

ஆ. அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவுடன் 120 பேரும் வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். இதன் அர்த்தம், அவர்கள் வேறு பாஷைகளில் பேசுவதைத் தொடர்ந்தார்கள் என்பதாகும். ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே அவர்கள் பேசினார்கள். அவர்கள் நாவையும், தசையையும் உபயோகித்தார்கள், பேசியதை அவர்கள் செய்தார்கள். இருப்பினும், கற்றறிந்திராத வார்த்தையும், ஒலியும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வந்தது.

இ. அந்நிய பாஷையின் உந்துதல், சொல், ஒலி ஆகியவை உள்ளிலிருந்து வருகிறது. சில வேளைகளில் மனதிலிருந்து வருகிறது. சிலவேளைகளில், நாவு, கீழ் முகவாய்க்கட்டை, உதடுகள் நடுங்க ஆரம்பிக்கிறது. அந்நிய பாஷையின் சொல்லிலும், ஒலியிலும், ஆவியின் ஞானஸ்நானம் பெறுகிறவர் கவனம் செலுத்தக்கூடாது. அவர்கள் ஒலியை அப்படியே வேகமாகப் பேசவேண்டும், அவற்றை வாக்கியத்தில் அமைக்கவேண்டும், வாக்கியங்கள் சரளமாகப் பேசக்கூடிய அளவில் நீளமாயிருக்க வேண்டும்.

ஈ. அந்நிய பாஷைகளில் பேசுவது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்குக் கர்த்தரால் கொடுக்கப்படும் அடையாளம் என புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களால் கருதப்பட்டது (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:4; 10:45-47; 19:6). இந்த வேதாகம மாதிரி இன்றைக்கும் நமக்குப் பொருந்தும். தேவன் நமக்கு இந்த அடையாளத்தைக் கொடுத்திருப்பதால், பரிசுத்த ஆவியின்ஞானஸ்நானத்தோடு அருளப்பட்டிருக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவவல்லமையை நாம் பெற்றிருக்கிறோம் என்ற உறுதிப்பாடு நமக்குண்டு.

உ. கொர்நேலியுவின் வீட்டார் பல பாஷைகளைப் பேசியதைக் கேட்ட பேதுரு, “நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும்” எனக் குறிப்பிடுகிறார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:46,47). பரிசுத்த ஆவியானவர் அருளியபடி, அவர்கள் கற்றறிந்திராத பாஷைகளில் பேசினார்கள் எனும் பொருள்படி அவர் எழுதுகிறார். பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தை உறுதிப்படுத்துவது அந்நிய பாஷைகளே!

ஊ. நான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கு முன்னரே, தேவனுடைய அன்பால் மேற்கொள்ளப்படுவது, தொடர்ந்து அவர் என்னை ஆசீர்வதித்தால் அதைத் தாங்கிக்கொள்ளக்கூடாததைப் போல உணர்வது போன்ற பரிசுத்த ஆவியானவரோடுள்ள ஆவிக்குரிய மற்றும் அர்த்தம் நிறைந்த அநேக அனுபவங்கள் எனக்கிருந்தன. நான் பரிசுத்த ஆவியால் ஸ்நானம் பண்ணப்பட்ட பின்னரும் இத்தகைய வேறுபல அனுபவங்களும் எனக்கிருந்தன. இருப்பினும், நான் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டேன் என அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்த ஒரே வழி, நான் பேசும்படி பரிசுத்த ஆவியால் அருளப்பட்ட பாஷையின்படி பேசியதேயாகும்.

முடிவுரை

அ. இயேசுவின் சீஷர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக எருசலேமில் காத்திருந்தார்கள். அவர்கள் செய்யும்படி இயேசுவானவர் கூறியிருந்தது இதுவே. பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவி வெளிப்பட்டதின் அடையாளங்கள் தோன்றின. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து, பரிசுத்த ஆவி அருளிச் செய்தபடி கற்றறிந்திராத பாஷைகளில் அனைவரும் பேசத் துவக்கினார்கள்.

ஆ. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் உங்கள் சொந்த சாட்சியைக் கொடுங்கள். இதைப் பெற்றுக்கொள்ளும்படி மற்றவர்களையும் அழையுங்கள்.

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

முன்னுரை

அ. பெந்தெகொஸ்தேக்கு முன்னர், பேதுரு விசுவாசத்தை மறுதலித்தார், பின்வாங்கினார், உறுதியற்றவராகவும், வன்முறையாளராகவும் இருந்தார், முற்றிலும் குழம்பினவராகவும், தோல்வியடைந்தவராகவும் இருந்தார்.

1. அவர் ஜலத்தின் மேல் நடந்தார், ஆனால் பயந்ததினால் அமிழ்ந்து போக ஆரம்பித்தார். அப்பொழுது, "ஆண்டவரே, என்னை இரட்சியும்" எனக் கதறினார். மிக அத்யாவசியத் தேவையாக இருந்த வேளையில் விசுவாசத்தை இழந்தார் (மத்தேயு 14:29,30).

2. கல்வாரிப் பாடுகளை இயேசுவானவர் கைவிடப்பண்ணும்படி அவர் முயற்சித்தார் (மத்தேயு 16:21-23).

3. சத்துருக்கள் இயேசுவைக் கைது செய்யும்படி வந்தபொழுது, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை அவர் வெட்டினார். அவர் உணர்ச்சி வசப்பட்டார், கோபத்தினாலும், குழப்பத்தினாலும் தூக்கப்பட்டார் (மத்தேயு 26:51,52).

4. காவலிலும், சாவிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக உரிமை பாராட்டினார் இருப்பினும், கிறிஸ்துவை தூரத்திலே பின்பற்றினார், மும்முறை அவரை மறுதலித்தார், பின்னர் வெளியே சென்று மனங்கசந்து அழுதார் (லூக்கா 22:33,34,54-62).

ஆ. பெந்தெகொஸ்தே பேதுருவின் தனிப்பட்ட அனுபவமாயிருந்தது. இப்பொழுது அவர் மாற்றப்பட்ட மனிதராயிருந்தார். குழுமியிருந்த மற்ற விசுவாசிகளோடுங் கூட, வெவ்வேறு 15 நாடுகளிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்த ஜனங்களுக்கு முன்பாக அவர் தைரியமாக நின்றார். பெந்தெகொஸ்தின் தூதை அவர் தைரியமாகப் பிரகடனப் படுத்தினார். தன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல், இரட்சிக்குங் கிருபை ஆகியவற்றைக் குறித்து தைரியமாக சாட்சி பகர்ந்தார். இயற்கைக்கு மேற்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தினார்.

1. பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்ட, இதர பதினொருவருங் கூட, பெந்தெகொஸ்தேக்குப் பிறகு பேதுரு எழுந்து நின்றார் (2:14).

அ. அவர் தூரத்திலே நின்றுகொண்டு, மற்ற சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதைக் குறித்து எனக்குத் தெரியாது எனக் கூறவில்லை. தன்னுடைய சொந்த பெந்தெகொஸ்தின் அனுபவங்களை அவர் மறுக்கவுமில்லை. தான் இயேசுவின் சீஷன் என மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி தன்னை முழுமையாகத் தாரையாக்கினார். தான் கற்றறிந்திராத மொழிகளில் பேசவும், ஜெபிக்கவும் அவர் சங்கடப்படவில்லை. அதற்கு மாறாக, அவர் பெந்தெகொஸ்தே கூட்டத்தாரின் தலைவனும், பேச்சாளருமானார்.

ஆ. ஆதிநாட்களில் பெந்தெகொஸ்தேகாரர்கள் ஒதுக்கப் பட்டிருந்தனர். விநோதமான ஜனங்களைப் போல மற்றவர்களால் பார்க்கப்பட்டார்கள். அவர்கள் தவிர்க்கப்பட்டார்கள், நகைப்புக்குள்ளானார்கள்.

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

"பரிசுத்த உருளைகள்" "பாஷை பேசுகிறவர்கள்" எனவும் அழைக்கப்பட்டார்கள். 1910 முதல் 1960 வரை பெரும்பான்மையான கிறிஸ்தவர்களால் பெந்தெகொஸ்தே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இந்த அவல நிலை "தெய்வீக சக்தியின் இயக்கம்" (Charismatic Movement) மூலம் நீக்கப்பட்டு விட்டது. முக்கிய வரிசைக்குட்பட்ட சபை பிரிவுகளிலும், பெந்தெகொஸ்தே நாளைப் போன்று ஆவியின் பெருமாரியைப் பெறுகின்றனர்.

இ. சமீபகாலத்தில் உறுமல்களும் கேட்கப்படுகின்றன. "விசுவாசி ஒருவர் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்படும்பொழுது கற்றறிந்திராத மொழியில் பேச வேண்டிய அவசியமில்லை" என அநேகர் கூற ஆரம்பித்திருக்கின்றனர். பெந்தெகொஸ்தே, அந்நிய பாஷைகள், இயற்கைக்கு மேற்பட்டவைகள், உலக வழிகளிலிருந்து வேறுபிரித்தல், கற்றறிந்திராத மொழியில் ஜெபித்தல், ஆராதனை வேளைகளில் ஆவிக்குரிய வரங்களை அப்பியாசப்படுத்துதல் போன்றவற்றிலிருந்து நாம் குன்றிப்போய்க் கொண்டிருக்கிறோம்.

ஈ. வேறுசிலரோ, "சில காரியங்களைச் செய்வதாலோ, அல்லது அதில் பங்கு பெறுவதாலோ ஒன்றுமில்லை. உலகத்திலுள்ள மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் ஒன்றுமில்லை. நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், உலகத்துக்கு ஏற்காத காரியங்களை நாம் விட்டுவிட வேண்டும். நாம் எண்ணிக்கையில் வளர வேண்டுமானால், எவனையும் சங்கடத்திற்குள்ளாக்கும் எதையும் செய்யக்கூடாது. இவ்வுலகின் அந்தஸ்து, செல்வாக்கு, அதிகாரம் மிக்க ஒருவருக்கு இடமளிக்கும்படி வேதாகமத்தை சற்று திருத்தி அமைப்பதால் ஆபத்தான பிரச்சினை ஒன்றுமில்லை" எனக் கூறுகிறார்கள்.

உ. வசனம் 14. "பேதுரு பதினொருவரோடுங் கூட நின்றான்." இந்த பதினொருவர், மற்ற பதினொரு அப்போஸ்தலர்கள் ஆவர், அவர்களின் சொற்பொழிவாளராக பேதுரு நின்றான். பெந்தெகொஸ்தே அனுபவங்களைப் பெற்றிருந்த மற்ற 108 பேரோடுங் கூட அவர் நின்றார். நாமும் அவர்களோடு கூட நிற்கும்படி அடியெடுத்து வைக்கவேண்டிய நேரம் இதுவே என நான் எண்ணுகிறேன். பெந்தெகொஸ்தே காரர்களுடன் நிற்பது இது உங்களுக்கு முதல் தடவையாக இருக்கலாம். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியால் ஸ்நானம் பண்ணப்பட்ட பேதுருவோடும், பதினொருவரோடும், 120 பேரோடும், நிற்கும்படியாக நீங்கள் மீளவும் உறுதிகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. சந்தேகமின்றி, நாம் அடியெடுத்து வைக்க வேண்டிய நேரம் இதுவேயாம்!

ஊ. பேதுரு தைரியமாக பெந்தெகொஸ்தே அனுபவத்தை பிரஸ்தாபித்தார். இந்த அனுபவம் இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் உரியது என அறைகூவினார். மேலும் அவர் கூறினதாவது: "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்" *(2:16-18)*.

"அவர் (இயேசு) தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின் படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" *(2:33)*. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் பகுதியான சத்தம், துதி, ஆராதனை, பாஷைகள் அனைத்தும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மூலமாகப் பிதாவானவர் வாக்குத்தத்தம் பண்ணியதேயாகும். ஆதலால், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" *(2:38,39)*.

எ. பெந்தெகொஸ்தே நாளில் 3,000 பேரைக் கர்த்தர் சபையில் சேர்த்தார். தேவ வசனத்தை வசதிக்கேற்ப மாற்றுவதால் சபை வளர்ச்சியடையாது. பெந்தெகொஸ்தே அனுபவத்தை மாற்றியமைப்பதாலும் வளராது. ஆண்களும், பெண்களும் தேவனோடு கூட சரியான இடத்தில் காணப்பட்டு, பரிசுத்த ஆவியின் நடத்துதலின்படி முழு சுவிசேஷத்தையும் பிரசங்கிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் கிரியையினாலும், வல்லமையினாலுமே சபை வளரும். பரிசுத்த ஆவியின் கிரியையும், வல்லமையும் வெளிப்படுவதற்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் தேவையாகும்.

2. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிற்பாடு பேதுரு, கிறிஸ்துவே ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிறார் என்று தைரியமாகவும், வெளியரங்கமாகவும் பிரகடனப்படுத்தினார் (2:14).

அ. அப்போஸ்தலர் *2:22-37*. பேதுருவின் பகிரங்கமான முதல் சுவிசேஷப் பிரசங்கம் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் நடத்தியின் கீழும், வல்லமையானாலும் ஆற்றப்பட்டது. அவர் ஆற்றியது தீர்க்கதரிசன உரையே! அவர் பேசியதாவது:

1.தேவனுடைய அற்புதங்களை நடப்பிக்கும்படி அவனால் இயேசுவானவர் நிர்ணயிக்கப்பட்டிருந்தார். (வசனம் 22) "நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும்,அற்புதங்களையும் அடையாளங்களையும்நடப்பித்து, அவைகளினாலே, அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். தேவன் இயேசுவோடிருந்தார். இவர் தேவனால் நிர்ணயிக்கப்பட்டிருந்தார், அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தார். அவர் மூலம் தேவன் நடப்பித்த அந்த அற்புதங்களின் வாயிலாக இதனை காணக்கூடும். இந்தப் பலத்த செய்கைகள் நடப்பிக்கப்பட்டது. நீங்கள் இவற்றை அறிந்திருக்கிறீர்களே"

2. இயேசுவின் மரணம் தேவனின் முன் அறிவின்படியேயிருந்தது (வசனம் 23). "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து,

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்." உங்களில் அநேகர் அவர் சிலுவையிலறையப்படுவதற்கு உடந்தையாயிருந்தீர்கள். நீங்கள் அவரை சிலுவையில் அறைந்தீர்கள். நீங்கள் அவரைக் கொலை செய்தீர்கள். ஆனால், இவையெல்லாம் தேவனுடைய முன் ஆலோசனையாயிருந்தது. உண்மையில் எல்லா மனுஷரின் பாவங்களுக்காகவும் இயேசுவானவர் மரித்தார். மனுக்குலத்தை மீண்டும் தம்மிடமாகச் சேர்ப்பதற்கு இதுவே தேவனுடைய வழியாயிருந்தது.

3. தேவன் அவரை மரணத்திலிருந்து விடுவித்து, உயிரோடே எழுப்பினார் (வசனம் 24). "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" இது சங்கீதம் 16:8-11-இல் தாவீது ராஜா மூலம் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதாகும். "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்.... என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்...." தாவீது மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார். அவர் இன்னமும் அவருடைய கல்லறையிலேயே இருக்கிறார். தனக்கு முன்பாக இருந்ததை அவர் கண்டு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பேசினார். ஆம், தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பியிருக்கிறார், இந்த உண்மைக்கு நாமனைவரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

4. இயேசுவானவர் பரலோகத்தில், பிதாவின் வலதுபாரிசத்துக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார் (வசனம் 33). "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டார்." பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்றார். நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய பரிசுத்த ஆவியை பிதாவின் வாக்குத்தத்தத்தின்படி பொழிந்தருளினார். இதைப்பற்றி தாவீது சங்கீதம் 110:1-இல் தீர்க்கதரிசனமாக முன்னுரைத் திருக்கிறார். ("கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி.... நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்றார்). ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்பதற்கு இது அத்தாட்சியாயிருக்கிறது.

ஆ. வசனம் 37. வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் "இருதயத்திலே குத்தப்பட்டவர்கள்" ஆனார்கள். இதன் அர்த்தம், அவர்கள் இயேசுவை, மேசியா, கிறிஸ்து, அபிஷேகம் பண்ணப்பட்டவர், உலக இரட்சகர் என விசுவாசித்தார்கள் என்பதாகும். அவர் ஒரே பேரான தேவனுடைய குமாரன் என விசுவாசித்தார்கள். முன்பு கிறிஸ்துவைப் புறக்கணித்ததைப் பற்றிய ஆழ்ந்த வருத்தம் அவர்களுக்கிருந்தது. கிறிஸ்துவுக்கு விரோதமான அவர்களுடைய பாவங்களைக் குறித்த துக்கம் அவர்களுக்கிருந்தது. அந்நாளில் 3000 பேர் இயேசுவை விசுவாசித்தார்கள்!

இ. தன்னுடைய ஆண்டவரும், இரட்சகருமானவரைப் பற்றிய இந்தப் பிரசங்கத்தைப் பறை சாற்றுவதை பேதுரு முடித்திருக்கவே மாட்டார். இதே தூதுடன் அவர் அநேக பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்றார். இந்த தூதைப் பிரசங்கித்ததின் நிமித்தமாக அவர் தலைகீழாகச் சிலுவையிலறையப்பட்டார் என்று சரித்திரம் கூறுகிறது. தன்னுடைய சொந்த பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குப் பின் பேதுரு மாற்றமடைந்த மனிதராயிருந்தார்.

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

பரிசுத்த ஆவியின் ஸ்நானம் இந்த வித்தியாசத்தை அவருக்குள் உண்டுபண்ணிற்று. பரிசுத்த ஆவியின் ஸ்நானம் உங்களுடைய வாழ்க்கையிலும், கிறிஸ்துவுக்காகச் சாட்சியாக இருப்பதிலும் வித்தியாசத்தை உண்டுபண்ணும்.

3. பேதுரு பெந்தெகொஸ்தேக்குப் பிறகு இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையை வெளிப்படுத்தினார் (3:2-6).

அ. பரிசுத்த ஆவியானவர் பேதுருவின் மூலம் நடப்பித்த முதல் அற்புதம் தேவாலய வாசலில் பிச்சை எடுத்த சப்பாணியைக் குணமாக்கியதாகும். "பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து" இருந்தான் என வேதம் கூறுகிறது *(4:8)*. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், விசுவாசிகளின் மூலம் பரிசுத்த ஆவியின் அசாதாரணமான கிரியைகளுக்காக வாசலைத் திறக்கிறது. இந்த ஸ்நானமின்றி அசாதாரணமான வல்லமை இல்லை. உங்கள் மூலம் தேவன் அற்புதங்களைச் செய்வார் என்று விசுவாசிப்பதற்கான நம்பிக்கையும், விசுவாசமும் இல்லை. இந்த ஸ்நானமின்றி, உங்களுடைய ஜீவியத்தின் மூலம் அவருடைய வல்லமையை வெளிப்படுத்துவதற்கான பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும் இருப்பதில்லை.

ஆ. அப்போஸ்தலர் 5:15,16 "பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள். சுற்றுப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள்பிணியாளிகளையும்அசுத்த ஆவிகளால்வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக்கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்"

இ. அப்போஸ்தலர் *9:33-35.* "அங்கே ("லித்தா" ஊரிலே) எட்டு வருஷமாய்க் கட்டிலின் மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்த ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான். பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார், உன் படுக்கையை நீயே போட்டுக் கொள் என்றார். உடனே அவன் எழுந்திருந்தான். லித்தாவிலும், சாரோனிலும்குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக்கண்டு,கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்"

ஈ. அப்போஸ்தலர் *9:36-42.* யோப்பாவில் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி வியாதிப்பட்டு மரணமடைந்தாள். சீமோன் பேதுரு தங்களிடத்தில் வர வேண்டுமென்று சீஷர்கள் அழைத்தார்கள். அவர் வந்து, முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினார். பின்பு பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றார். அவள் உயிருள்ளவளாக எழுந்தாள். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரிய வந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

உ. தம்முடைய சீஷர்கள் ஒவ்வொருவரின் கரத்தினாலும் இத்தகைய குணமாக்குதல்களும், அற்புதங்களும் நடைபெற வேண்டும் என்று கர்த்தர் வாஞ்சிக்கிறார். இவர்களின் மூலம் ஒவ்வொருநகரத்திலும்,பட்டணத்திலும், கிராமத்திலும்உள்ளஜனங்கள் இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டுமென்று தேவன் ஆசிக்கிறார்.அற்புதங்கள்,குணமாக்குதல்களின் முகாந்தரம்உங்களுடையநண்பர்கள்,அயலகத்தார்கள், உறவினர்கள் இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தோடு கூட ஆவியின் நிறைவு உண்டாகிறது.ஆவியின் நிறைவோடு கூட ஆவியின் அசாதாரணமான கிரியைகள் வெளிப்படுகின்றன.

பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சீமோன் பேதுருவின் ஜீவியத்தின் மாற்றங்கள்

(அப்போஸ்தலர் 2:14; 3:2-6)

முடிவுரை

அ. தன்னுடைய சொந்த ஜீவியத்தில் பெந்தெகொஸ்தேக்கு முன்னர் பேதுரு செய்ததைப் போன்று இவ்விதம் நீங்கள் உணரக்கூடும்: "ஆண்டவரே என்னை இரட்சியும், என்னுடைய விசுவாசம் மூழ்கிக் கொண்டிருக்கிறது." உங்களையே தற்காத்துக் கொள்ள கோபத்தில் துடிக்கிறீர்கள். இவ்வுலக ஆயுதங்களினாலும், பலத்தினாலும் உங்களுடைய சத்துருக்களுடன் போரிட எத்தனிக்கிறீர்கள். கிறிஸ்தவர்கள் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்படுவதைப் பற்றி உங்கள் இருதயத்தில் கோபமிருக்கலாம், நீங்கள் குழப்பமடைந்திருக்கலாம். கிறிஸ்துவை நீங்கள் மறுதலித்து, அவரை நான் ஒருக்காலும் அறியேன் என மொழிந்திருக்கலாம். கிறிஸ்துவுக்காக உபத்திரவத்தையும், மரணத்தையும் ஏற்க விருப்பமற்றிருக்கலாம். அல்லது உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய அசாதரண வல்லமையின் தேவையை உணர்ந்து கொண்டிருக்கலாம்.

ஆ. பெந்தெகொஸ்தேயை அனுபவித்தவர்களோடு தைரியமாக நிற்கவும், பெந்தெகொஸ்தே அனுபவத்தைத் தைரியமாகப் பிரஸ்தாபிக்கவும், இயேசுவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் தைரியமான சாட்சியாயிருக்கவும்; பரிசுத்த ஆவியின் அசாதாரணமான சக்தியை வெளிப்படுத்தவும் வேண்டுமென நீங்கள் விரும்பினால், பேதுரு எதைச் செய்தாரோ அதை நீங்களும் செய்தேயாக வேண்டும். பெந்தெகொஸ்தேயை சொந்த ஜீவியத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்; பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படுங்கள்

இ. பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெறுவதற்கான விளக்கத்துடன் அழைப்பு கொடுத்தல், பெந்தெகொஸ்தே வல்லமையின் புதிய நிறைவு தேவையானவர்களுக்கு அழைப்பு கொடுத்தல் (அப்போஸ்தலர் 4:29-31).

கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்தவர்கள் (அப்போஸ்தலர் 2:37-41)

முன்னுரை

அ. சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமிலே தங்கியிருந்தார்கள். தங்கள் தங்கள் சொந்த பாஷையிலே சீஷர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே, எல்லாரும் பிரமித்து, ஆச்சரியப்பட்டார்கள். இருப்பினும், அவர்களில் சிலர், சீஷர்கள் "மதுபானத்தினால் நிறைந்து" உளறுகிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள். அப்பொழுது பேதுரு கூட்டத்தாரை அழைத்து, யோவேல் தீர்க்கதரிசியின் மூலம் தேவன் வாக்குத்தத்தம் செய்தபடி பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதே இது என விவரித்துக் கூறுகிறார். பின்னும் அவர் தொடர்ந்து இவ்விதம் கூறுகிறார்: தமது அற்புதங்களை நடப்பிக்கும்படி இயேசுவானவர் தேவனால் நிர்ணயிக்கப்பட்டவர். ஆனால் அந்த இயேசுவை நீங்கள் சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். இருப்பினும் தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பினார், ஏனெனில் அவர் மரணத்தினால் கட்டப்பட கூடாதிருந்தார். இதே இயேசுவானவர் தேவனுடைய வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டார். பிதா அவருடைய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதை பொழிந்தருளினார். நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார்.

ஆ. யூதர்கள் இதைக் கேட்டபொழுது, "இருதயத்திலேகுத்தப்பட்டவர்களாகி", "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டார்கள்.

பேதுரு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இப்பொழுது அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை விவரித்தார்.

1. கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபொழுது இருதயத்திலே குத்தப்பட்டார்கள் (2:37).

அ. "இருதயத்திலே குத்தப்பட்டார்கள்." இதன் அர்த்தம், யூதர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்து, உபத்திரவப்படுத்தியதைக் குறித்து அவர்களுக்கும் ஆழ்ந்த துக்கம் உண்டாயிற்று என்பதே. அவர்கள் இருதயம் உடைந்தது. இயேசுவே தேவனுடைய கிறிஸ்து என்று விசுவாசிக்காமற்போனதைக் குறித்து உணர்த்தப்பட்டனர்.

ஆ. "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்." தேவனுடைய ஒரே பேறான குமாரனை அவர்கள் கொலை செய்ததாகவும், நீண்டகாலம் காத்திருந்தும் தங்களுடைய மேசியாவை அவர்கள் புறக்கணித்து விட்டதாகவும் யூதர்கள் இப்பொழுது உணர்ந்தனர். மேலும், இயேசுவானவர் பிதாவோடிருப்பதையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை சீஷர்கள் மேல் ஊற்றிக்கொண்டிருப்பதையும் உணர்ந்துகொண்டார்கள். இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழும்பினார் என்பதையும், அவர் கூறியிருந்தபடியே அவரே ஆண்டவரும், கிறிஸ்துவுமாயிருக்கிறார் என்பதையும் அவர்கள் உளமார அறிந்து கொண்டார்கள். நிச்சயமாகவே அவர்கள், "கிறிஸ்துவைப் பற்றிய என்னுடைய தவறான சிந்தையை மாற்றிக்கொண்டேன் என்பதை தேவன் அறியும்படி நான் என்ன செய்யக்கூடும்? இதனைச் சரிப்படுத்திக்கொள்ள நான் என்ன செய்யக்கூடும்?" எனச் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

இ. தாவீது ராஜா பத்சேபாளோடு பாவஞ்செய்ததையும், அவளுடைய கணவன் (உரியா) கொல்லப்பட்டதையும் கர்த்தர் அறிந்திருக்கிறார் என்று தீர்க்கதரிசியாகிய நாத்தான் கூறியபொழுது, அவனுடைய

கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்தவர்கள் (அப்போஸ்தலர் 2:37-41)

இருதயமும் குத்துண்டது (2சாமுவேல் 11). 51ஆம் சங்கீதத்தில் அவன், "தேவன், உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும், என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்" (வசனம் 1,2). "என்னை சுத்திகரியும்..... என்னைக் கழுவியருளும்... சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்... நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" (வசனம் 7-10) என ஜெபிக்கிறான்.

ஈ. பாவத்தையும், நீதியையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து உலகத்தை (மனுக்குலத்தை) உணர்த்துபவர் பரிசுத்த ஆவியானவரே. அவிசுவாசியொருவர் கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தைக் கேட்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அவருடன் பேச ஆரம்பிக்கிறார்.

1. "தேவனுடைய பார்வையில் நீ ஒரு பாவியாயிருக்கிறாய். இயேசுவே கிறிஸ்து, அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன், உலக இரட்சகர் என்று நீ விசுவாசியாதபடியினால் நீ பாவியாயிருக்கிறாய்."

2. "உனக்கு எந்த விதமான சொந்த நீதியும் இல்லை. உன்னுடைய நீதியின் முயற்சிகள் அனைத்தும் பயனற்றவைகளே. இயேசுவை ஆண்டவரும், இரட்சகருமாக விசுவாசிப்பதால் மாத்திரமே நீ ஆண்டவருடைய பார்வையில் நீதிமானாகக் கூடும்".

3. "இயேசுவை விசுவாசியாதவர்கள் அனைவரும் சாத்தானுடன் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள். இயேசுவை விசுவாசிப்பவர்கள் மாத்திரம் முழு உலகின் மேலும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்புக்கும், ஆக்கினைக்கும் தப்புவார்கள்."

உ. இந்தத் தூதைக் கவனித்துக் கொண்டிருப்பவர்களில் சிலர் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். இயேசுவை உங்களுடைய ஆண்டவரும், இரட்சகருமாக நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பீர்களேயாகில், அவர் இவ்விதம் பேசுவதை நீங்கள் கேட்பீர்கள்: "நீ இயேசுவை விசுவாசியாமலும், இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்பதின் தேவையை நீ உணராமலும் இருக்கிறபடியால் நீ குற்றவாளியாய் இருக்கிறாய். உன்னுடைய நீதியின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. நீ ஆண்டவருடைய பார்வையில் நீதியற்றவனாய் இருக்கிறாய். நீ இயேசுவில் விசுவாசம் வைக்காதபடியால், நீ நியாயந்தீர்க்கப்பட்டு, மரணத் தீர்ப்புக்குட்பட்டிருக்கிறாய்." உன்னுடைய இந்த பிரதியுத்தரவை அவர் கேட்கும்படி விரும்புகிறார். "நான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்? தேவனோடு நான் சரியாக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும்?"

2. கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள் மனந்திரும்பி, தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றார்கள் (2:38,41).

அ. வசனம் 38. தேவனுடைய நியாயத் தீர்ப்பிலிருந்தும், ஆக்கினையிலிருந்தும் இரட்சிக்கப்படும்படி அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று கூடியிருந்தவர்களுக்குப் பேதுரு விவரிக்கத் தொடங்குகிறார். அவர் அவர்களுக்குக் கூறுகிறதாவது: "மனந்திரும்புங்கள்" இதன் பொருள், வித்தியாசமாகச் சிந்தியுங்கள், மறுபரிசீலனை செய்யுங்கள் என்பதே. இயேசுவானவர் உண்மையில் யார் என்பதைப் பற்றி யூதர்கள் வித்தியாசமாகச் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்தவர்கள் (அப்போஸ்தலர் 2:37-41)

இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டியதின் அவசியத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

ஆ. ஒருவர் மனந்திரும்பி, இயேசுவை விசுவாசிக்க ஆரம்பிக்கும்பொழுது உடனடியாக அநேக காரியங்கள் நிகழ்கின்றன. மனந்திரும்புகிறவர்:

1. இயேசுவானவரே கிறிஸ்துவாகிய தேவன் என்பது குறித்தும், அவருடைய பாடுகளையும், பாவத்தைப் போக்கும் பலியாகக் கல்வாரி சிலுவையில் மரித்ததைக் குறித்தும் அவருடைய மனதை மாற்றிக் கொள்கிறார். மேலும், பாவத்தைப்பற்றிய குற்ற உணர்வுள்ள அவருடைய மனதையும் மாற்றிக் கொள்கிறார். அவர் செய்த பாவங்களுக்காகத் துக்கப்படுகிறார். பாவமன்னிப்பையும், சுத்திகரிப்பையும் இயேசுவிடமிருந்து பெறும்படியான அவசியத்தையும் உணருகிறார்.

2. இயேசுவே இரட்சகரும், ஆண்டவருமாயிருக்கிறார் என நம்பும்படியான விசுவாசத்தைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்.

3. மனந்திரும்புகிறவருக்குள் பிரவேசித்து, ஆவியின் மறுபிறப்பை உண்டாக்குகிறதான பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் ஸ்தலமாக அவர் மாறுகிறார். ஆதாமிலிருந்து சுதந்தரித்த பாவ சுபாவத்தின் வல்லமையிலிருந்து, பரிசுத்த ஆவியானவர் விடுவித்து, நீதியின் ஜீவியம் செய்ய உதவி செய்கிறார். பழைய மனுஷன் மறைந்து, புதிய மனுஷன் தோன்றுகிறார்.

4. தான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார். "குற்றமற்றவன்" என அறிவிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்புக்கு நீங்கலாக்கு கிறார். இனிமேல் அவர் குற்றப்படுத்தப்படுவது மில்லை, சாத்தோனோடு ஆக்கினைத் தீர்ப்படைவதுமில்லை.

5. தேவனுடைய குடும்பத்திற்குள் சுவீகரிக்கப் படுகிறார். இதுவரை அவர் வேறொருவருடைய மகனாக இருந்தபோதிலும், இப்பொழுது பிதாவாகிய தேவனால் அவருடைய குடும்பத்திற்குள் சுவீகரிக்கப்படுகிறார். இனிமேல், பிறப்பினால் ஒரு மகனுக்குரிய ஸ்தானமும், அனைத்து சலுகைகளும் இவருக்குண்டு.

இ. வசனம் 38. பேதுரு, கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்களை நோக்கி ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி கூறுகிறார். ஞானஸ்நானம் என்பதின் பொருள், "முழுக்குதல் அல்லது அமிழ்த்துதல்" என்பதாகும். ஆகையால், ஞானஸ்நானம் எடுத்தவர்கள் தண்ணீருக்குள் இறங்கினார்கள். (அப்போஸ்தலர் 8:38). விசுவாசி திருத்துவ தேவனோடு (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி) ஐக்கியப்படுவதற்கு தண்ணீர் ஞானஸ்நானம் அடையாளமாயிருக்கிறது. ஆதலால் விசுவாசி, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார். (மத்தேயு 28:19,20).

ஈ. விசுவாசி தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு ஒப்புக் கொடுக்கும் பொழுது, அவர் இவ்விதமாக இருந்தார் என சாட்சியிடுகிறார்:

1. அவருடைய பாவம் நியாயந்தீர்க்கப்பட்ட பொழுது அவர் கிறிஸ்துவுக்குள்ளிருந்தார். அவருடைய பாவ சரீரம் கிறிஸ்துவோடு கூட சிலுவையிலறையப்பட்டு பலமற்றதாயிற்று.

2.கிறிஸ்துவோடுஅடக்கம் பண்ணப்பட்டார். பாவத்துக்குமரித்தவனாகத்தன்னைஎண்ணுகிறார்.

கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்தவர்கள் (அப்போஸ்தலர் 2:37-41)

இனிமேல் அவர் பாவத்துக்கு அடிமையல்ல. பாவம் இனிமேல் அவரின் எஜமான் அல்ல.

3. மரணத்திலிருந்து எழுந்த பொழுது கிறிஸ்துவோடிருந்தார். இப்பொழுது அவர் கிறிஸ்து இயேசுவின் மூலம் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். தன் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். (கொலோசெயர் 2:12; ரோமர் 6:3-13).

உ. வசனம் 41. "அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் (உடனே) ஞானஸ்நானம் (தண்ணீரில்) பெற்றார்கள்." இதே மாதிரியைத்தான் அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும் நாம் காண்கிறோம். கீழ்க்கண்டவற்றில் இதே காரியம் சம்பவித்தது:

1. சமாரியாவில் பிலிப்பு பிரசங்கித்த போது அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். (அப்போஸ்தலர் 8:12).

2. பிலிப்புவின் போதனையை எத்தியோப்பியா அண்ணகன் விசுவாசித்தான். (அப்போஸ்தலர் 8:36).

3. தமஸ்குவின் சாலையில் பவுல் இயேசுவை விசுவாசித்தார். (அப்போஸ்தலர் 9:18).

4. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு கொர்நேலியுவின் வீட்டார் விசுவாசித்தார்கள். (அப்போஸ்தலர் 10:47,48).

5. எபேசுவிலுள்ள விசுவாசிகள் பவுலினால் போதிக்கப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 19:5).

ஊ. தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்காத விசுவாசிகள் இப்பொழுதே தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். இயேசுவில் விசுவாசம் வைப்பதற்கு முன் ஞானஸ்நானம் எடுத்தவர்கள், மறுபடியுமாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை இப்பொழுது அறிந்து கொண்டவர்கள், கிறிஸ்துவிலுள்ள தங்களுடைய விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

3. கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றார்கள் (2:38,39).

அ. வசனம் 38. பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவை விசுவாசித்த 3000 பேரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றார்கள் என்பதில் சந்தேகமில்லை. கூடியிருந்தவர்களுக்குப் பேதுரு அளித்த போதனையில் இது இடம் பெற்றுள்ளது.

ஆ. வசனம் 38. "பெற்றுக்கொள்." இதன் உண்மைப் பொருள், "எடுத்துக் கொள், பிடித்துக் கொள், பற்றிக் கொள், ஏற்றுக் கொள், அடைந்து கொள்" என்பதாகும். விசுவாசியொருவர் பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெறும்பொழுது, அவர் ஆற்றலுடன் ஈடுபடுபவராக மாறுகிறார். பரிசுத்த ஆவி அருளப்படும்போது, அதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இ. வசனம் 38. "பரிசுத்த ஆவியின் வரம்". வரம் என்பது பரிசு, இலவச ஈவு, ஆவிக்குரிய ஈவு, நம்மைப் பின்பற்றுகிறவர்களுக்குக் கிறிஸ்து அருளும் ஈவு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் ஞானஸ்நானத்தின் ஈவு என்பனவாகும்.

கிறிஸ்துவைப் புறக்கணித்திருந்தவர்கள் (அப்போஸ்தலர் 2:37-41)

ஈ. வசனம் 39. இந்த ஈவு பிதாவாகிய தேவனால் "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது." தேவனுடைய வாக்குத்தத்தம் என்பது ஏதோ ஒரு நன்மை அருளப்படப்போகிறது என்பதற்கான தெய்வீக உறுதிப்பாடு ஆகும். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படுவார்கள் என நமது பரம தந்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் தேவனைத் தொழுது கொள்ளும் ஒவ்வொருவருக்கும் உரியது. இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இது விரைவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

உ. இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய இலவச ஈவை நமது பரலோகப் பிதா வாக்குப்பண்ணியிருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசித்த 3000 பேர் பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இப்பொழுது இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் இந்த ஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதுவரை இந்த ஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி, அவர்களுக்காக அருளப்படும் ஆவியின்ஸ்நானத்தைஎடுத்துக்கொள்ளவேண்டும்.

முடிவுரை

அ. இங்குள்ளவர்களில் அநேகர் கிறிஸ்துவைப் புறக்கணித்திருக்கலாம்; அநேகர் அவரை விசுவாசிக்க மறுத்திருக்கலாம். கிறிஸ்து உங்களுக்குச் சொல்லுகிறதாவது:

1. "நீ தேவனுடைய பார்வையில் பாவியாய் இருக்கிறாய். இயேசுவே கிறிஸ்து, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன், உலக இரட்சகர் என்று நீ விசுவாசியாமலிருப்பதால் நீ பாவியாயிருக்கிறாய்"

2. "உனக்குச் சொந்தமான நீதி ஏதுமில்லை. உன்னுடைய நீதியின் முயற்சிகள் அனைத்தும் பயனற்றவைகளே. இயேசுவே ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிறார் என விசுவாசிப்பதால் மாத்திரமே நீ தேவனுடைய பார்வையில் நீதிமானாகக் கூடும்"

3. "நீ இயேசுவை விசுவாசிக்க மறுத்தால் சாத்தானுடன் ஆக்கினைக்குட்படுவாய். இயேசுவில் விசுவாசம் வைப்பவர்கள் மாத்திரமே, முழு உலகத்தின் மேலும் வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கும், ஆக்கினைக்கும் தப்புவார்கள்"

ஆ. நீ "இருதயத்தில் குத்தப்பட்டிருப்பாயானால், நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?" "தேவனோடு கூட சரியாக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வி உனக்குள் எழும்பும். அப்பொழுது நீ உன்னை இயேசுவுக்கு முன்பாகத் தாழ்த்தி, அவர் உன்னுடைய இரட்சகரும், ஆண்டவருமாயிருக்கும்படி கேட்பாயாக.

இ. நீ இயேசுவில் விசுவாசம் வைத்த பிற்பாடு, உடனடியாகத் தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு விசேஷித்த ஆயத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கலாம், ஆனால் இயேசுவில் விசுவாசம் வைப்பவர்கள் யாரானாலும், இப்பொழுதே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறக்கூடும்!

சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகளின் பற்றுதல்

(அப்போஸ்தலர் 2:42-47)

முன்னுரை

அ. இந்த வேதபகுதி பெந்தெகொஸ்தேக்குப் பிறகு சபையில் நடைபெற்றவைகளின் சுருக்கமாகும். பேதுரு பிரசங்கித்த பொழுது, இரட்சிப்பின் தூதை ஏற்றுக்கொண்ட 3000 பேரும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார்கள். சந்தேகமின்றி அவர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள், ஏனெனில் இது பேதுருவின் பிரசங்கத்தின் ஒரு பகுதியாயிருந்தது. (2:38,39). இதன் பின்பு சீஷர்கள், ஆராதனையில் பங்கு கொள்வதிலும், ஒருவருக்கொருவர் இடைபடுவதிலும், சுவிசேஷ ஊழியத்திலும் பயபக்தி உள்ளவர்களானார்கள்.

1. சபையின் ஆரம்பத்தில், விசுவாசிகள் ஆராதனைகளில் பங்கு பெறுவதில் பற்றுதல் உள்ளவர்களாயிருந்தனர் (2:42,46அ).

அ. வசனம் 42. இயேசுவையும், தேவ வசனத்தின் முழு ஆலோசனையையும் குறித்து உபதேசிப்பதில் புதிய விசுவாசிகளுக்குத் தாகமிருந்தது. ஜனங்களை இரட்சித்து, அப்படியே அவர்களை அலைய விடுவது ஒருக்காலும் தேவனுடைய வாஞ்சையல்ல. இந்தக் காரணத்தினால்தான் உலகளாவிய சபையில் இயேசுவானவர் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகியோரை நியமித்திருக்கிறார். அவர்கள்:

1. ஊழியப் பணிகளுக்காகத் தேவ ஜனங்களை ஆயத்தப்படுத்துகிறார்கள்.

2. இயேசுவிலுள்ள அவர்களுடைய விசுவாசத்தைக் கட்டியெழுப்புகிறார்கள்.

3. இயேசுவைப் பற்றிய அவர்களுடைய அறிவை அதிகரிக்கச் செய்கிறார்கள் (எபேசியர் 4:11-13).

ஆ. இயேசுவானவர் பரமேறுவதற்கு முன்னர் இதைப்பற்றி அப்போஸ்தலர்களுக்கு அறிவுரைகள் வழங்கியிருந்தார்: "சகல ஜாதிகளையும் சீஷராக்கி... நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத்தேயு 28:19,20). "சீஷன்" என்பதின் உண்மைப் பொருள் "மாணவன்" என்பதே. அப்போஸ்தலர்கள் இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்ட யாவையும் புதிய மாணவர்களுக்கு உபதேசிக்க வேண்டியதிருந்தது.

இ. வசனம் 42. "அந்நியோந்நியத்தில் பற்றுதல்." இதன் அர்த்தம், அவர்கள் மற்ற விசுவாசிகளோடு கொண்டிருந்த அந்நியோந்நியத்தில் பற்றுதலுடன் இருந்தார்கள் என்பதாகும். அவர்களுடைய வீடுகளிலும், ஆலயத்திலும் இவ்விதமிருந்தார்கள். கூட்டங்களில் பங்கு பெறுவதில் புதிய விசுவாசிகள் பயபக்தியுடனிருந்தார்கள். விசுவாசிகளின் அந்நியோந்நியம் அவர்களுடைய புதிய குடும்பமாயிற்று. கூட்டங்கள் நடைபெற்ற இடங்கள் அவர்களுடைய புதிய வீடாயிற்று. அந்நியோந்நியத்தின் பணியே அவர்கள் வாழ்க்கையின் புதிய முன்னுரிமையாயிருந்தது.

ஈ. வசனம் 42. "அப்பம் பிட்குதலில் பற்றுதல்." இது கர்த்தருடைய பந்தியைக் குறிப்பதாக இருக்கலாம். ஆரம்பத்தில், பொதுவாக இது சாதாரண உணவுக்குப் பின் கொடுக்கப்பட்டது. இதினிமித்தமாக, வெவ்வேறு வீடுகளில் நடைபெற்ற "வீட்டுக் கூட்டங்களில்" இது கொடுக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகளின் பற்றுதல்

(அப்போஸ்தலர் 2:42-47)

உ. வசனம் 42, 46அ. "ஜெபத்தில் பற்றுதல்." யூதர்களின் வழக்கத்தின்படி ஆதி கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்படி காலை 9 மணிக்கும், மாலை 3 மணிக்கும், சூரிய அஸ்தமன வேளையிலும் ஆலயத்துக்குச் செல்வதுண்டு. அவர்கள் ஜெபிக்கும்படி அனுதினமும் தேவாலயத்துக்குச் சென்றதாக வேதம் கூறுகிறது. மேலும், அவர்கள் வீடுகள் தோறும் கூடி ஜெபித்தார்கள். நிச்சயமாகவே அவர்கள் தனிப்பட்ட ஜெபஜீவியத்தை மேம்படுத்தும்படி ஊக்குவிக்கப்பட்டார்கள்.

ஊ. இயேசுவானவர் ஜெபிப்பதில் பற்றுதலுடையவரா யிருந்தார் (மத்தேயு 11:25,26; லூக்கா 3:21; 11:1). அவர்,

1. அந்தரங்கத்தில் (மத்தேயு 14:23; மாற்கு 1:35).

2. லாசருவின் கல்லறை அருகில் (யோவான் 11:4).

3. விசுவாசிகளுக்காக (லூக்கா 22:32; யோவான் 17:1-26).

4. கெத்செமனேயில் (மத்தேயு 26:36-39).

5. சிலுவையின் மீது (மத்தேயு 27:46) ஜெபித்தார்.

மேலும், அவர் தமது சீஷர்களுக்கு எவ்விதம் ஜெபிக்க வேண்டுமென்று போதித்தார் (மத்தேயு 6:6-13).

ஜெபத்தைப் பற்றிய இயேசுவின் மாதிரியும் போதனைகளும் புதிய விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர்கள் போதித்தவைகளில் ஓர் பகுதியாயிருந்தது.

எ. ஒருவர் இரட்சிக்கப்படும் பொழுது பரிசுத்த ஆவியானவர் அவருக்குள் வாசம்பண்ணுகிறார். அதன்பின் பரிசுத்த ஆவியானவர், இயேசுவையும், வேதாகமத்தின் உபதேசங்களையும் அவர் அறிய வேண்டுமென்ற வாஞ்சையை அவருக்குள் உருவாக்குகிறார். ஞானமுள்ள சபைத் தலைவர்கள் புதிய விசுவாசிகளுக்கான சீஷத்துவப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். ஞானமுள்ள புதிய விசுவாசிகள் இந்தப் போதனையிலும், பயிற்சியிலும் பக்தி வினயத்துடன் பங்கு கொள்கின்றனர். வீடுகளிலானாலும், அல்லது ஆராதனை ஸ்தலங்களிலானாலும் நடைபெறும் ஆராதனைக் கூட்டங்களில் இவர்கள் பயபக்தியோடு கலந்து கொள்ளுகின்றனர். இவர்கள் இயேசுவைப்பற்றிய விசுவாசத்திலும், அறிவிலும் கட்டியெழுப்பப்பட்டு சபை வேலைகளிலும், கலைப்பணிகளிலும் ஈடுபட வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

2. சபையின்துவக்கத்தில், விசுவாசிகள் ஒருவருக்கொருவர்பற்றுதலோடிருந்தார்கள் (2:44,45,46ஆ).

அ. வசனம் 44,45. "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்." அப்போஸ்தலர்களின் உபதேசங்களில்ஸ்தாபிக்கப்படுவதின் முக்கியத்துவத்தைஅவர்கள்உணர்ந்து கொண்டார்கள். எருசலேமுக்கு வெளியே இருந்து வந்தவர்களில் சிலருடைய பணம் சீக்கிரத்தில் செலவழிந்து போயிற்று. ஆதலால், மற்ற விசுவாசிகள்தங்களுக்குச்சொந்தமாயிருந்தவைகளை (காணியாட்சிகள், ஆஸ்திகள்) விற்று, தேவையானவர்களுக்குப்பகிர்ந்து கொடுத்தார்கள்.

சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகளின் பற்றுதல் (அப்போஸ்தலர் 2:42-47)

ஆ. "ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்." அவர்கள் கொடுக்கும்படிக்கு சபையால் கட்டாயப்படுத்தப்படவில்லை. அவர்கள் எதையும் விற்பதற்கோ, அல்லது எதையும் கொடுப்பதற்கோ ஒன்றுமிருக்கவில்லை. பேதுரு அனனியாவுடன் பேசும் பொழுது இதைத் தெளிவுபடுத்துகிறார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:4). இருப்பினும், ஒருவருக்கொருவர் அன்புடனும், தேவபக்தியுடனும் இருப்பதே ஆவியின் கனியாகும் (கலாத்தியர் 5:22).

இ. தங்களுடைய சகோதர, சகோதரிகள் அனுதின தேவையில் இருப்பதைக் கண்டபோது, விசுவாசிகள் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். (யாக்கோபு 2:15,16). அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டபடியே பகிர்ந்து கொடுத்தார்கள். பணம் அப்போஸ்தலர்களிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை அந்நியோந்நியத்திற்கு உட்பட்டவர்களுக்கு விநியோகித்தார்கள்.

ஈ. வசனம். 46ஆ. "அவர்கள் வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள்." எருசலேமிலுள்ள விசுவாசிகள் அநேகரின் வீடுகள் கிறிஸ்தவர்கள் கூடிவருவதற்கும், ஆராதிப்பதற்குமான மையங்களாயின. இந்த வீடுகளில் அவர்கள் "அப்பம் பிட்டு" வந்தனர். இவர்கள் தங்கள் ஆகாரத்தை பகிர்ந்து கொடுத்து, மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் ஒருமித்துப் போஜனம் பண்ணி வந்தனர்.

உ. "மகிழ்ச்சியாக இருந்தார்கள்" என்பதின் அர்த்தம், அவர்கள் மிகுந்த "குதூகலத்தோடும், மிகுந்த களிப்போடும் இருந்தார்கள்" என்பதே. "கபடமில்லாத இருதயத்தோடு" என்பதின் அர்த்தம், மென்மையான இருதயம், எளிமையான இருதயம், பொறாமை மற்றும் குற்றங்காணுதல் போன்றவை அற்ற இருதயம் என்பதாகும். விசுவாசிகள் ஒருமித்து போஜனம் பண்ணிய பொழுது, அது குதூகலமும், களிப்புமாயிருந்தது. மற்ற விசுவாசியை இடறப்பண்ணும் அல்லது அசௌரியப்படுத்தும் யாதொன்றும் அவர்களுடைய இருதயத்தில் இருக்கவில்லை.

ஊ. சபையின் ஆரம்ப காலத்தில் எருசலேமிலிருந்த விசுவாசிகளின் மனோபாங்கு எவ்விதமிருந்ததோ அவ்விதமே, இரட்சிக்கப்பட்டு ஆவியால் நிரப்பப்படும் விசுவாசிகளின் துவக்க கால மனோபாங்கும் இருக்கிறது என்பதை நான் கண்கூடாகக் காண்பதுண்டு. இருப்பினும், இருதயத்தின் இந்த உண்மையினைப் பாதுகாக்கக் கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவர்கள் கவனமாக இராவிடில், பொறாமை மற்றும் குற்றங்காணும் ஆவி அவர்களை மேற்கொண்டு, கடினமான கற்களின் மேல் நடந்து, இடறுகிறவர்களைப் போன்ற மற்ற விசுவாசிகளோடு அவர்கள் அந்நியோந்நியம் கொள்ளச்செய்யும்.

3. சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகள் ஊழியத்தில் பற்றுதல் உடையவர்களாக இருந்தனர் (2:43,47).

அ. வசனம் 43. "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று." இயேசுவின் நாமத்தினால் அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டதினால், எருசலேமிலுள்ள ஜனங்கள் பயமும், திகிலும் அடைந்தார்கள். அவர்களுடைய இருதயங்களில் பீதி உண்டாயிற்று. இவைகள் அனைத்தும் இயேசுவின் நாமத்தினாலும், அவருடைய வல்லமையினாலும் உண்டானபடியால், இயேசுவின் நாமத்திற்கு மரியாதையும், மதிப்பும் செலுத்தப்பட்டது.

சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகளின் பற்றுதல்

(அப்போஸ்தலர் 2:42-47)

ஆ. விசுவாசிகள் அனைவரையும் பயிற்சிவிப்பதற்கு அப்போஸ்தலர்களை இயேசுவானவர் உபயோகித்துக் கொண்டிருந்தார். இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு இவர்களும் ஊழியஞ் செய்ததினால், விரைவில் இவர்களும் அற்புதங்களை நடப்பிப்பதால் ஈடுபடுவார்கள். இயேசு இவ்விதம் கூறியிருக்கிறார்: விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாங்களாவன:

"அவர்கள் என் நாமத்தினாலே

1. பிசாசுகளைத் துரத்துவார்கள்.

2. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" (மாற்கு 16:17,18).

"அவர்கள் (சீஷர்கள்) புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்" (மாற்கு 16:20).

இ. இயேசு கூறினதாவது: "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் (சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், அசுத்த ஆவிகளைத் துரத்துதல், வியாதியஸ்தரையும் சப்பாணியையும் சொஸ்தமாக்குதல்) தானும் செய்வான்" (யோவான் 14:11-13).

ஈ.வசனம்47. "இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்."

சீஷத்துவத்துக்கென்று (போதிக்கும்படி) தங்களை அர்ப்பணித்து, பின்னர் பரிசுத்த ஆவியின் பலத்தினால் தங்களுடைய நண்பர்கள், அயலகத்தார், உறவினர்கள் மத்தியில் நற்செய்திப் பணிக்கெனச் செல்லும் எந்தவொரு விசுவாசக் கூட்டத்தாரும் பெறும் பலாபலன் இதுவே.

உ. சீஷர்கள் சமுதாயத்திற்குள் சென்றபொழுது, பிரசங்கிக்கப்பட்ட தூதை மற்றவர்கள் விசுவாசித்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன:

1. கிறிஸ்தவர்களின் சந்தோஷத்தையும், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த தடை செய்ய முடியாத அன்பையும் மற்றவர்கள் கண்டார்கள்.

2. விசுவாசிகள் சுவிசேஷச் செய்தியை அறிவித்த பொழுது அவர்கள் அனைவரின் மூலமாகத் தேவன் வெளிப்படையாய் நடப்பித்த அற்புதங்களையும், குணமாக்குதல்களையும் நேரில் பார்த்தார்கள். கர்த்தர் அனுதினமும் நம்முடைய எண்ணிக்கையைப் பெருகப்பண்ணுவாரானால், மற்றவர்கள் நம்மிடத்திலும் காணப்போகும் இரண்டு காரியங்கள் இவைகளே!

முடிவுரை

அ. சபையின் துவக்கக் காலத்தில் விசுவாசிகள் கூடிவந்த விதம் நாம் பின்பற்றுவதற்கானதோர் மாதிரியாகும்.

1. ஆராதனைகளில் பங்குபெறுவதில் அவர்கள் பற்றுதலுடனிருந்தார்கள்.

2. அவர்கள் ஒருவருக்கொருவர் பற்றுதலுடன் இருந்தார்கள்.

3. சுவிசேஷ ஊழியத்தில் அவர்கள் பற்றுதல் உள்ளவர்களாயிருந்தார்கள்.

சபையின் ஆரம்பத்தில் விசுவாசிகளின் பற்றுதல்

(அப்போஸ்தலர் 2:42-47)

ஆ. தேவன் எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறாரோ அதை நம் மூலமாகச் செய்யவேண்டுமானால் நம்முடைய சபைகளில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும்;

1. போதிப்பதற்காக நாம் அனைவரும் சமயம் ஒதுக்கவேண்டும். இது சபை ஆராதனைப் பணிகளுக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்.

2. நம்மில் அநேகர் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பொறாமை மற்றும் குற்றங்காணும் ஆவிக்காக மனஸ்தாபப்பட வேண்டும்.

3. நற்கிரியைகளினால் வெளிப்படுத்தும் அன்பும், பகிர்ந்து கொடுத்தலும் வாழ்க்கை நடைமுறையாக அமைய வேண்டும்.

4. இயேசுவின் நாமத்தோடு இணைந்திருக்கும் வல்லமையையும், அதிகாரத்தையும் மற்றவர்கள் நேரில் காணும் விதத்தில், நம் மூலம் அசாதாரணமாக வல்லமை வெளிப்படும்படியாக நாம் பெரிதும் வாஞ்சிக்க வேண்டும்.

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியானப் பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

முன்னுரை

அ. இயேசுவின் சீஷர்கள் இவ்வுலகின் நம்பிக்கையற்ற நோயாளிகளையும் "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" குணமாக்கினார்கள். ஜனங்களுடைய ஜீவியத்தில் பிசாசின் கிரியையை அழிப்பதற்கு கிறிஸ்துவின் வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

ஆ. பேதுருவும், யோவானும் ஜெபிக்கும்படியாகத் தேவாலயத்துக்குப் போனார்கள். யூதர்களுக்குக் காலை 9மணி, மாலை 3மணி, சூரிய அஸ்தமன நேரம் ஆகியவை ஜெபவேளையாயிருந்தது. இப்பொழுது அவர்கள் சென்ற ஒன்பதாம் மணிநேரம், நமது கணக்கின்படி மாலை 3மணியாயிருந்தது (நமக்குக் காலை 6மணி என்பது, யூதர்களுக்குக் காலை 1மணி எனக் கணக்கிடப்பட்டது). சப்பாணியான ஒருவன் பிச்சை கேட்கும்படி நாடோறும் தேவாலயத்தின் அலங்கார வாசலில் வைக்கப்பட்டான். வெண்கலத்தினாலான இந்த வாசல் தேவாலயத்தின் இடப்பக்க சுவரிலிருந்தது. இங்கிருந்து புறஜாதிகளின் பிரகாரத்திற்கும், பெண்களின் பிரகாரத்திற்கும் செல்லலாம். இவர்கள் இருவரும் அநேகந்தரம் இந்தச் சப்பாணி பிச்சைக்காரனைக் கடந்து சென்றிருக்கின்றனர். இருப்பினும், இந்தக் குறிப்பிட்ட நாளில், ஏதோ ஒரு காரணத்தினால் நின்று, அவனோடு அவர்கள் பேசினார்கள். "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்" அவனுக்குள் தெய்வீக சுகத்தை நடப்பித்து, தங்கள் சம்பாஷணையை முடித்தனர்.

1. நம்பிக்கையற்ற நிலையிலும், பொருளாதார வறுமையிலும் இருப்பவர்களைத் தேவன் குணமாக்குகிறார் (3:2,3).

அ. இஃது ஓர் நம்பிக்கையற்ற நிலவரமாயிருந்தது. இந்தப் பிச்சைக்காரன் தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்தவன். வைத்தியர்கள், அறுவை மருத்துவர்களின் உதவியை நாடப் பணம் இல்லாதவன். சீஷர்களுக்கும் எந்தப் பணமும் இருக்கவில்லை. நிச்சயமாக இவர்கள் வைத்தியர்களும், அறுவை மருத்துவர்களும் அல்லர். தேவனுடைய அசாதாரண வல்லமையையும், கிருபையையும் குறித்து யாதொன்றும் அறியாதவர்கள்தான், "இஃது ஓர் நம்பிக்கையற்ற நிலவரம்" என்பார்கள்.

ஆ. எரிகோவுக்குப் போகும் வழியருகே இருந்த பார்வையற்றோர் இருவரும் நம்பிக்கையற்ற நிலவரத்தில் இருந்தனர் (மத்தேயு 20:29-34). அவர்கள், "ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்" என்று அதிக சத்தமாய்க் கூப்பிட்டார்கள். இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டுக் குணமாக்கினார். நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்த அவர்களை இயேசு சொஸ்தப்படுத்தினார்.

இ. பன்னிரண்டுவருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ஸ்திரீ நம்பிக்கையற்ற நிலவரத்தின் மத்தியிலிருந்தாள் (லூக்கா 8:43-48). தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்தாள். இந்த ஸ்திரீயை இயேசு சொஸ்தமாக்கினார். அவருக்குள்ளேயிருந்து வல்லமை புறப்பட்டுச் சென்று, அவளைக் குணமாக்கிற்று!

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியானப் பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

ஈ. இவ்வுலகின் கடையாந்தரப் பகுதிகளில் வாழ்பவர்கள், அநேக நேரங்களில், தாங்கள் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் இருப்பதாக உணருகிறார்கள். அவர்களுடைய நோய்கள், பெலவீனங்களில் மருத்துவரின் கண்காணிப்பும், மருந்துகளும் கிடைக்கக் கூடாதவர்களாயிருக்கின்றனர். தேவனால் சுவிசேஷ நற்செய்தியுடன் அனுப்பப்படுகிறவர்கள் மூலம் தம்முடைய அற்புதமான குணமாக்கும் வல்லமையை வெளிப்படுத்துவதற்கு இஃது ஓர் நல்ல வாய்ப்பாக உள்ளது. இவர்கள், நாகரிகமற்ற மலைவாழ் மக்கள், கிராமப்புற விவசாயிகள், குடியானவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், வியாபாரிகள், அரசியல் தலைவர்கள், அல்லது தொழில் செய்பவர்கள் போன்றவர்களாயிருக்கலாம்.

உ. இந்தோனேசியாவிலுள்ள குக்கிராமங்களில் அற்புத சுகங்களும், அடையாளங்களும், பலத்த செய்கைகளும் நடைபெற்று வருகின்றன என எங்களுக்கு இப்போது அறிக்கைகள் வந்துள்ளன. இதேவிதமான அறிக்கைகளுடன் சீனாவின் மிகத் தொலைவான பகுதிகளில் உள்ளவர்களில் பலர் திரும்பியிருக்கின்றனர். ஹாங்காங், பங்களாதேஷ், மற்றும் தூரக் கிழக்கு நாடுகளின் இதர நகரங்களிலுள்ள ஆலயங்களில் அற்புத சுகங்கள் நடைபெறுவதைப் பற்றிய ஏராளமான அறிக்கைகள் வந்துள்ளன.

இதே காரியத்தை நம் மத்தியிலும் நடப்பிக்கும்படி தேவன் விருப்பமுள்ளவராயிருக்கிறார் என்பதை நான் அறிவேன்!

ஊ. உங்களில் அநேகர் நம்பிக்கையற்ற நிலைமையில் இருக்கின்றீர்கள். உங்களைச் சுற்றியிருக்கும் மற்றவர்கள் நம்பிக்கையற்ற நிலவரத்தில் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். உங்களிடத்தில் பணம் இல்லாததினால் நீங்கள் நம்பிக்கை யற்றவர்களாய் இருக்கலாம். உங்களுக்குத் தீராத வியாதி இருக்கிறது அல்லது உறுப்பு செயல் இழந்திருக்கிறது என மருத்துவர் சொன்னதினால் நீங்கள் நம்பிக்கை இழந்த நிலையிலிருக்கலாம். இது நம்பிக்கையற்ற நிலவரமே அல்ல, தேவனுடைய குணமாக்கும் அற்புத வல்லமை வெளிப்படும்படியான பரிபூரணமான நிலவரம் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஜீவியத்திலிருந்து பிசாசின் கிரியையை நிர்மூலமாக்குவதற்கு இயேசுவுக்கு இஃது ஓர் ஒப்பற்ற வழியாகும்!

2. இயேசுவின் நாமத்தினால் ஜனங்களைக் குணமாக்கும்படிக்கு அவருடைய சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது (3:4-7).

அ. வசனம் 4. பேதுருவும், யோவானும் சப்பாணியான பிச்சைக்காரனை உற்றுப் பார்த்தார்கள். அவர்கள் அவனிடம், எங்களை நோக்கிப் பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் பணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களைப் பார்த்தான். அவனுடைய எதிர்ப்பார்ப்புக்கு மாறாக, இயேசுவின் நாமத்தில் அவன் குணமாக்கப்பட்டான்! அவன் குதித்து, எழுந்து, தேவனை மகிமைப்படுத்திக் கொண்டு தேவாலயத்தின் பிரகாரங்களைச் சுற்றி நடந்தான்!

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியானப் பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

ஆ. பேதுருவின் மூலமாகவும், "குணமாக்கும் வரங்களின்" மூலமாகவும் பரிசுத்த ஆவியினாலே இந்த அற்புதம் நிகழ்ந்தது (1கொரிந்தியர் 12:9). பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்படும் விசுவாசிகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் பரிசுத்த ஆவியின் வரங்களில் இதுவும் ஒன்றாகும். பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு பேசி, அவர் எப்பொழுது, யாரைக் குணமாக்க விரும்புகிறார் என்பதைச் சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை அவர்கள் அறிந்து, அதற்கேற்ப செயல்படுகிறார்கள். சிலவேளைகளில், குணமாகுதல் நடைபெறப் போவதை அவர்கள் அறிவார்கள், ஆனால் சுகமாகப் போகிறவர் யார் என்பதை அறியார்கள். இருப்பினும், இப்படிப்பட்ட சமயத்தில் அவர்கள் சுகமாக்கப்படப்போகிறவருக்கு முன்பாகத்தான் நிற்கின்றனர்.

இ. சப்பாணி குணமாக்கப்பட்டது சுயசக்தியினாலும், சுயபக்தியினாலும் அல்ல எனப் பேதுரு நமக்குச் சொல்லுகிறார் (அப்போஸ்தலர் 3:12,16). இயேசுவின் நாமத்தில் உண்டான வல்லமையே இதைச் செய்தது. குணமாக்கும்படியாக பேதுருவுக்கிருந்த விசுவாசம் பரிசுத்த ஆவியின் மூலமாக இயேசுவிடமிருந்து பெறும் வரம் ஆகும். "விசுவாசத்தின் வரம்" எப்போதும் "குணமாக்கும் வரங்களுடன்" இசைந்தவையாக உள்ளது.

பரிசுத்த ஆவியினால் சுகமாக்குதல் வெளிப்படையாக நடைபெறும் என்பது இயற்கைக்கு மேம்பட்ட உறுதிப்பாடாக இருக்கிறது.

ஈ. கல்வாரியில் கிறிஸ்து பட்ட பாடுகளினால் சபையில் தெய்வீக சுகமாக்கப்படுதல் சாத்தியமாக உள்ளது. ஏசாயா தீர்க்கதரிசி கூறினதாவது: "அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு," "நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.... அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (மத்தேயு 8:17; ஏசாயா 53:4,5). "பெலவீனங்கள்" என்பது நோய்கள், வியாதிகள், சரீரத்தின் பெலவீனங்கள், பெலனற்றிருப்பது, சரீரம் செயலிற்றிருப்பது போன்றவையாகும். கல்வாரியில் கிறிஸ்து பட்ட பாடுகளினாலே அவருடைய மக்கள் இத்தகைய சரீரத்தின் இடர்களிலிருந்து குணமாக்கப்படுவது சாத்தியமே!

உ. மத்தேயு நமக்குச் சொல்லுகிறதாவது: "அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி,பிணியாளிகளெல்லாரையும்சொஸ்தமாக்கினார். அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது"

(மத்தேயு8:16,17). இப்பொழுது இயேசுவின் சீஷர்கள்அவருடைய நாமத்தினால் ஜனங்களைக் குணமாக்கமுடியும்,ஏனெனில், அவர் தேவனுடைய வலதுபாரிசத்துக்கு(வல்லமை)உயர்த்தப்பட்டிருக்கிறார்; வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும், வல்லமையும்அவருக்குக்கொடுக்கப் பட்டிருக்கிறது (மத்தேயு28:18).சபையின்யுகத்திலும் குணமாக்கும் ஊழியத்தைத் தொடரும்படிக்கு அவர் தம்முடைய சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் (மத்தேயு 16:16; லூக்கா 10:19).

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியானப் பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

ஊ. இயேசு கூறினதாவது, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே (நான் அவர்களுக்கு அருளியிருக்கிற அதிகாரத்தைப் பிரயோகித்து)... வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றார் (மாற்கு 16:17,18). இது ஒவ்வொரு விசுவாசிக்கும் உரித்தானது.

எ. யாக்கோபு நமக்குச் சொல்லுகிறதாவது: "உங்களில் ஒருவர் வியாதிப்பட்டால் (நீங்கள் வியாதிப்பட்டால்) அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள், அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார்... நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்" (யாக்கோபு 5:14-16).

ஏ. தமஸ்குவைச் சார்ந்த அனனியா என்றும் சீஷன் சவுலின் பார்வையற்றக் கண்களைக் குணமாக்கும்படி இயேசுவால் தெரிந்தெடுக்கப்பட்டவனாய் இருந்தான் (அப்போஸ்தலர் 9:10-18). அவர் ஒரு போதகரும், சுவிஷேகரும், தீர்க்கதரிசியும், அல்லது அப்போஸ்தலரும் அல்லர்.

அவர் ஒரு விசுவாசி, ஆவிக்குரிய தலைவனாகவோ அல்லது சாதாரண ஊழியனாக இருந்தாலும் சரி, குணமாக்குதலின் ஊழியத்தில் ஈடுபடுவதற்குஇயேசுவின்சீஷன்ஒவ்வொருவனுக்கும் இயேசுவிடமிருந்து அதிகாரம் உண்டு!

ஐ. யோப்பாவில் தபீத்தாள் (தொற்காள்) மரித்தபொழுது, சீமோன் பேதுரு பக்கத்துப் பட்டணத்தில் இருக்கிறாரென்று சீஷர்கள் கேள்விப்பட்டார்கள். "தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று" சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள் (அப்போஸ்தலர் 9:36-38). என்னுடைய கேள்வி இது: "ஏன் அவர்கள் சீமோன் பேதுருவை அழைத்தார்கள்? ஏன் அவர்கள் தாங்களே அவளை மரித்தோரிலிருந்து எழும்பும்படி ஜெபித்து, கர்த்தரிடமிருந்து நடத்தி பெற்றிருக்கக் கூடாது? ஏன் இயேசுவின் ஒவ்வொரு சீஷனும் குணமாக்குதலின் ஊழியத்தில் ஈடுபடும்படி இயேசுவிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதை உணரக் கூடாது?"

ஒ. உன்னைப் பற்றி என்ன? ஜனங்கள் குணமாக்கப்படும்படி உன் மூலம் வெளிப்படையாகும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பற்றி என்ன? உன் மூலம் இயேசு குணமாக்குவார் என்றும், ஜனங்கள் குணமாக்கப்படுவது இயேசுவின் பாடுகளினால் சாத்தியமாயுள்ளது என்றும் நீ விசுவாசித்தால், உன்னுடைய இருதயத்தில் விசுவாசத்தோடு மற்றவர்கள் குணமாக்கப்படும்படியாக ஜெபிக்கக் கூடும். வேதத்தையும் விசுவாசி.

3. இயேசுவின் நாமத்தில் அவருடைய சீஷர்கள் குணமாக்கியதை ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள் (3:9,10).

அ. வசனம் 10. "ஆச்சரியம்", "பிரமிப்பு" என்பவைகளின் அர்த்தம், அவர்கள் வியப்படைந்தார்கள், ஓர் ஊமையனைப்போல் ஆனார்கள், மிகுதியானதிகைப்பினால் பேச்சாற்றல் அற்றவரானார்கள், தடுமாற்றமடைந்தார்கள்,

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியானப் பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

அவர்களுடைய கண்களினால் கண்டு கொண்டிருந்ததை அவர்களுடைய மனதில் விசுவாசிக்கக் கூடாமற்போனார்கள் எனப் பலவாறாகும். சப்பாணியான பிச்சைக்காரன் குணமாக்கப்பட்ட பொழுது தேவாலயத்தில் சுமார் 10,000 பேர் இருந்திருப்பார்கள் என்பது சாத்தியக்கூறு.

ஆ. சப்பாணியான மனுஷனை ஜனங்கள் அறிந்திருந்தபடியால் அவர்கள் ஆச்சரியத்தாலும் பிரமிப்பாலும் நிறைந்தார்கள். அவன் பிறப்பு முதல் இவ்விதமாகவே இருந்திருக்கிறான். அவர்கள் அவனுடைய பெற்றோரை அறிந்திருந்தார்கள். சமுதாயத்தில் அவன் சப்பாணியாக வளர்ந்து வந்ததை ஒருவேளை அவர்கள் கண்டிருக்கலாம். ஒவ்வொரு நாளும் அவர்கள் அலங்கார வாசல் வழியாகத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தபொழுது, அவன் பணத்திற்காக அவர்களிடம் இரந்து கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள் (3:2,3). இப்பொழுதோ அதே மனிதன் பேதுரு, யோவான் ஆகியவரோடு கூட நடந்து, குதித்து, தேவனை மகிமைப்படுத்திக் கொண்டு தேவாலயத்தின் பிரகாரங்களுக்குள் பிரவேசித்ததை அவர்கள் கண்ணுற்றார்கள். (3:8).

இ. பாலஸ்தீனாவிலுள்ள யூதர்கள் இயேசுவின் குணமாக்கும் ஊழியத்தை நன்கறிந்திருந்தார்கள்.

அவர்கள் அவரைப் பின்தொடர்ந்து போய், அவருடைய அற்புதங்களையும் கண்டிருந்தார்கள். அவருடைய குணமாக்கும் ஊழியத்தின் நேரடியான சாட்சிகளையும் அவர்கள் கேட்டிருந்தார்கள். இயேசுவானவர் சிலுவையிலறையப்பட்டார், பரமேறிச் சென்றார், அவர் இவ்வுலகில் இல்லை. ஆனால் இப்பொழுது அதே அற்புத வல்லமை அவருடைய பின்னடியார்கள் மூலம் வெளிப்பட்டது!! இயேசுவானவர் எதைச் செய்தாரோ அதே கிரியைகளை அவர்களும் செய்தார்கள் (யோவான் 14:12-14). ஜனங்கள் ஆச்சரியத்தினாலும், பிரமிப்பினாலும் நிரப்பப்படுவதற்கு இது பிறிதொரு காரணமாயிருக்கிறது!!

ஈ. இயேசுவின் சீஷனாகிய உன்னைப் பற்றி என்ன? "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே யாராவது ஒருவரை நீவிர் குணமாக்கினால் ஆச்சரியப்பட்டு பிரமிப்பீரா? உமது குடும்பத்தினர், நண்பர்கள், அயலகத்தார் ஆச்சரியப்பட்டு, பிரமிப்பார்களா? தெய்வீக சுகத்தின் மூலமாக அவர்கள் இயேசுவை விசுவாசிப்பார்களா? குறுகிய காலத்தில் சமுதாயம் முழுவதிலும் இது அறியப்படுமா?"

உ. ஒரு சந்தர்ப்பத்தில் இயேசுவானவர் தம்முடைய சீஷர்களிடம் இவ்விதம் கூறினார்: "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்கமாட்டீர்கள்... நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" (யோவான் 16:23). நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்களோ அவர்களுடைய தெய்வீக சுகமும் இதில் உள்ளடங்கும் அன்றோ?

முடிவுரை

அ. நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேஇவ்வுலகத்திலுள்ள நம்பிக்கையற்ற ஜனங்களை இயேசுவின் சீஷர்கள் குணமாக்குகிறார்கள்.

பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியான பிச்சைக்காரனைக் குணமாக்குதல்

(அப்போஸ்தலர் 3:1-10)

விசுவாசிக்கிறவர் அப்போஸ்தலராக, சுவிசேஷகராக, போதகராக, அல்லது ஏதோவது ஓர் விசுவாசியாக இருக்கக்கூடும். ஆவிக்குரிய போரில் சாத்தானுடன் நேரிடையாக ஈடுபடவும், ஜனங்களுடைய ஜீவியத்தில் அவனுடைய கிரியையை நிர்மூலமாக்கவும் இஃது ஓர் வலிமையான வழியாகும்.

ஆ. இவ்வுலகில் நம்பிக்கையற்ற மக்களுக்கு, குறிப்பாக, உங்களுடைய நண்பர்கள், அயலகத்தார், வினைஞர்கள், மற்றும் அறிமுகமானவர்களுக்கு குணமாக்கும் ஊழியம் செய்வதில் கிறிஸ்துவின் பங்காளிகளாயிருக்கும்படிக்கு உங்கள் ஒவ்வொருவரையும் நான் ஊக்குவிக்கிறேன், கர்த்தரின் நாமம் பெரிதும் கனப்படுத்தப்படும்படிக்கும், அநேகர் அவரில் விசுவாசம் வைக்கும்படிக்கும் நீங்கள் இதைச் செய்யுங்கள்.

இ. சரீர சுகம் தேவையானவர்களுக்கும், நம்பிக்கையற்ற நிலவரத்தில் இருப்பதைப்போல் உணருகிறவர்களுக்கும் முன்வரும்படியான அழைப்பு கொடுங்கள். மற்ற சீஷர்களை அழைத்து, இவர்களுக்காக விசுவாசத்தின் ஜெபத்தை ஏறெடுக்கும்படிச் செய்யுங்கள். இந்தக் கூட்டத்தில் யாராகிலும் "குணமாக்கும் வரங்களில்" பயன்படுத்தப்படுகிறார்களா எனக் கேளுங்கள்.

சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்காகப் பயமுறுத்தப்படுதல்

அப்போஸ்தலர் 4:23-31

முன்னுரை

அ. இயேசுவின் சீஷர்கள் சுவிசேஷத்தை அறிவித்ததற்காக அச்சுறுத்தப்பட்ட பொழுது தெய்வீக அநுக்கிரகத்திற்காக அவர்கள் ஜெபித்தார்கள்.

ஆ. பேதுருவும், யோவானும் அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியான பிச்சைக்காரனைக் குணமாக்கியிருந்தனர். இதனிமித்தம் திரளானோர் ஆச்சரியத்தில் கூடி வந்தனர். பேதுரு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தார். இவருடைய தூதை 5000-க்கும் அதிகமானோர் விசுவாசித்தார்கள். இதன் விளைவாக, பேதுருவும் யோவானும் கேள்வி கேட்கப்படும்படியாக அதிபதிகள், மூப்பர்கள், பிரமாணத்தைப் போதிக்கிறவர்கள் ஆகியோரின் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்கள். பின்னர் இவர்கள் காவலில் வைக்கப்பட்டு, இனிமேல் இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளையிடப்பட்டார்கள். பின்னும் அவர்களைப் பயமுறுத்தி விடுதலையாக்கினார்கள். பேதுருவும், யோவானும் சபைக்குத் திரும்பிவந்து, அவர்கள் எவ்விதம் பயமுறுத்தப்பட்டார்கள் என்று சகோதரருக்கு அறிவித்தார்கள். உடனே விசுவாசிகள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

1. சுவிசேஷத் தூதை அறிவிப்பதால் உண்டாகும் பிரச்சினைகள் (4:23).

அ. பிரச்சினைகள் (அச்சுறுத்தல்கள்) ஆசாரியர்கள், தேவாலயத்துச் சேனைத்தலைவன், சதுசேயர்கள், அதிபதிகள், மூப்பர்கள், பிரமாணத்தைப்போதிக்கிறவர்கள் ஆகியோரிடமிருந்து உண்டாயிற்று. இவர்கள் மதம் மற்றும் அரசாங்க அதிகாரங்களின் பிரதிநிதித்துவமாயிருக்கிறார்கள் *(4:1,5,6)*.

ஆ. மதம் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இயேசுவுக்கு விரோதமாகக் கொந்தளித்து, சூழ்ச்சி செய்து, சதி ஆலோசனை பண்ணினார்கள். இப்பொழுது அதே மனிதர்கள், பேதுருவையும், யோவானையும் சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதிலிருந்து நிறுத்தும்படிக்கு அச்சுறுத்தலுடன் முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். *(4:17)*.

இ. இந்தத் தலைவர்கள் பேதுருவுக்கும், யோவானுக்கும் என்ன செய்யலாம் என்பதைத் தீர்மானிக்கும்படி ஓர் இரவுவரைக்கும் அவர்களைக் காவலில் வைத்தார்கள். பின்னர் இவர்களை விடுதலையாக்கி, இயேசுவின் நாமத்திலும் அதிகாரத்திலும்பேசுவதைநிறுத்தும்படி கட்டளையிட்டார்கள்.இரண்டாந்தரமும் அவர்களைப்பயமுறுத்தி விடுதலையாக்கினார்கள். *(4:3,7,17,18,21)*.

ஈ. பேதுருவும், யோவானும் தங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் திரும்பிவந்து, பிரதான ஆசாரியர்கள்,மூப்பர்கள் ஆகியோரின் பயமுறுத்தல்களை அறிவித்தார்கள் *(4:23)*. வசனம் 21"பயமுறுத்துவது"என்பதின் அர்த்தம், தடைசெய்தல்,பிரச்சினையாயிருத்தல், நேரிடையாக எதிர்த்தல், அறவோடு ஒழித்தல் என்பனவாகும்மார்க்க மற்றும் அரசு அதிகாரிகள் ஆதிச் சபையிலுள்ள சீஷர்களால் சுவிசேஷச் செய்திபரப்புவதைவேரறுக்கும்படி தடைவிதித்தனர், எதிர்த்தனர், எத்தனித்தனர்.

உ. "ஏன்" மார்க்க மற்றும் அரசுத் தலைவர்கள் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதிலிருந்து சீஷர்களை நிறுத்தும்படி அவர்களை அச்சுறுத்தி, முயற்சிகளை மேற்கொண்டார்கள்? அப்போஸ்தலர் 4:16,17 வசனங்களில், கிறிஸ்தவம் பரம்பாதபடிக்குத்தடுக்கும்படி அவர்கள் முயற்சித்தார்கள் எனக் காண்கிறோம்.

சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்காகப் பயமுறுத்தப்படுதல்

அப்போஸ்தலர் 4:23-31

அவர்கள் பொறாமையும், ஜனங்களின் மத்தியில் அவர்களுடைய செல்வாக்கை இழக்கக் கூடும் என்ற பீதியும் உடையவர்களானார்கள். இது தங்களுடைய சொந்த ஆதாயத்துக்காக மக்களின் மேல் அதிகாரமும், ஆதிக்கமும் செலுத்த விழையும் அமைப்புகளுக்கும், அரசாங்கத்துக்கும் ஒப்பானதாகும். சர்வாதிகாரிகள், அடக்குமுறை அரசுகள், தவறான மத ஒழுங்கு முறைகள் ஆகியவற்றால் பரிபாலனம் செய்யப்படுமிடங்களில் சுவிசேஷத்தைப் பறைசாற்றுவதில் உள்ள பிரச்சினைகளில் சில இவைகளாகும்.

ஊ. அமெரிக்காவிலுள்ள விசுவாசிகள் மதம் மற்றும் அரசு அதிகாரங்களால் வெளிப்படையாகப் பயமுறுத்தப் படுவதில்லை. இருப்பினும், இந்நிலை நீண்ட காலம் நீடிக்காது. எருசலேமில் பேதுருவுக்கும், யோவானுக்கும் நேரிட்டதைப் போன்று அமெரிக்கர்களும் சுவிசேஷத்தின் சத்தியத்தைப்பிரகடனப்படுத்துவதில் கஷ்டப்படும் விதத்தில் நீதிமன்ற வழக்குகளும், முன்னோடி நிகழ்ச்சிகளும் உருவாக்கப்பட்டு, மாநில மற்றும் கூட்டரசு கோட்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக! அந்நாள் வந்து கொண்டிருக்கிறது.

2. சுவிசேஷச்செய்தியை அறிவிக்கையில் ஜெபித்தல் (4:24,29,30).

அ. வசனம் 24. பேதுருவும், யோவானும் சொன்னவற்றைக் கேட்டவுடனே, விசுவாசக் கூட்டத்தார் ஒருமனப்பட்டு ஜெபிக்க ஆரம்பித்தார்கள். சர்வ வல்லவரும், சர்வத்தையும் சிருஷ்டித்தவருமாகிய தேவனுக்குத் தங்களுடைய ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற நம்முடைய ஜனத்திற்காகக் கிரியை செய்யும் தேவனுக்கு அவர்கள் ஊழியக்காராய் இருந்தார்கள். தமது ஜனங்கள் எதைச் செய்யும்படி அவர் கட்டளையிட்டாரோ அதை அவர்கள் செய்யும் பொழுது அவர் அவர்களுக்குச் சகாயம் செய்கிறார். அவர் அவர்களோடுகூட இருக்கிறார். (மாற்கு 16:15; மத்தேயு 28:20).

ஆ. வசனம் 29. இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனியும். பேதுருவுக்கும் யோவானுக்கும் என்ன சம்பவித்தது, அவர்கள் எவ்விதம் பயமுறுத்தப்பட்டார்கள் என்ற விவரங்களை ஒருவேளை அவர்கள் ஆராய்ந்திருக்கக் கூடும் (4:17,18,21).

இ. வசனம் 30. "உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும்." அவர்களைப் பட்டணத்திற்கு வெளியே அல்லது இந்தக் கடின சூழ்நிலைகளுக்கு அப்பால் எடுத்துச் செல்ல வேண்டுமென்று அவர்கள் ஜெபிக்கவில்லை! அவர்களுக்கு "இரத்தசாட்சிகளின்" மனோபாங்கு - இருந்தது. இம்மனோபாங்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் உண்டாகிறது. ஆதிசபையில் "சாட்சி" என்பதற்கு உண்மையில் "இரத்தசாட்சி" என அர்த்தமாகும், ஏனெனில் தங்களுடைய சாட்சியினிமித்தம் எண்ணிறந்தோர் மரணத்திற்குட்பட்டார்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் 1:8).

ஈ. பவுல் தன்னுடைய சொந்த நலத்தையும், பாதுகாப்பையும் கருதாமல், "தைரியமாய் சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு" தனக்காக ஜெபிக்கும்படி எபேசியருக்கு எழுதுகிறார். இவருக்குள்ளும் இதே மனோபாங்கிருந்தது (எபேசியர் 6:19,20).

சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்காகப் பயமுறுத்தப்படுதல்

அப்போஸ்தலர் 4:23-31

உ. வசனம் 30. "கர்த்தாவே, அடையாளங்களும், அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டும்." நோயுற்றோரைக் குணமாக்கவும், அற்புத அடையாளங்களை நடப்பிக்கவும் கர்த்தர் ஏற்கெனவே தமது கரத்தை நீட்டியிருக்கிறார். அலங்கார வாசலண்டையிலிருந்த சப்பாணியை குணமாக்கியிருக்கிறாரே (அப்போஸ்தலர் நடபடிகள் 3:1-10). இந்தக் காரணத்தினால்தான் அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். அப்பட்டணத்திலுள்ள மார்க்கத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் பின்பற்றாமல், பேதுருவையும், யோவானையும் ஜனத்திரள் பின்பற்றுவதற்கு அற்புதங்கள், அசுத்த ஆவிகளைத் துரத்துதல் போன்றவை எப்போதும் சுவிசேஷச் செய்தியுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

ஊ. சீஷர்கள் சுவிசேஷத் தூதை அறிவிக்கும் பொழுது மிகுதியான குணமாக்குதல்களும், அற்புதங்களும் நடக்கும்படி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். சுவிசேஷ நற்செய்தியின் வலிமையையும், ஆற்றலையும் அற்புத சுகங்களும், அடையாளங்களும் அதிகரிக்கப்பண்ணும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். குணமாக்குதல்களினாலும், அற்புத அடையாளங்களினாலும் அநேகர் விசுவாசிக்கின்றனர். இயேசுவின் ஊழியத்தில் இது உண்மையாயிருந்தது, சபையின் யுகத்தில் அவருடைய சீஷர்களின் ஊழியத்திலும் இது உண்மையாக உள்ளது.

எ. சீஷர்கள் இந்தக் குறிப்பிட்ட ஜெபத்தை ஏறெடுப்பதற்கு இயேசுவின் எந்தப் போதனை காரணமாயிற்று? அப்போஸ்தலர் நடபடிகள் 1:8; மாற்கு 16:15-20 நல்ல உதாரணங்களாகும். இயேசுவானவர் எந்த சுகமாக்குதல்களையும், அற்புதங்களையும் செய்தாரோ அவற்றை அவருடைய சீஷர்களும் செய்வார்கள் என்று இயேசு கூறினார் (யோவா 14:12).

ஏ. சர்வாதிகார ஆட்சி, அடக்குமுறை அரசுகள் அல்லது அந்திகிறிஸ்து தலைவர்கள் ஆகியோரின் ஆளுகையின் கீழ் வாழும் விசுவாசிகள் சுவிசேஷத்தை அறிவிப்பதின் நிமித்தம் உபத்திரவப்படுத்தப்படும் பொழுது, அவர்கள் ஒன்று கூடி ஜெபிக்க வேண்டும். ஆதிச் சபையில் உள்ளவர்கள் இதையே செய்தார்கள். இன்று நாம் செய்ய வேண்டியதும் இதுவே! உங்களுடைய எதிரிகளின் அச்சுறுத்தல்களைக் கர்த்தர் தாமே உற்று கவனிக்கும்படியாகவும், முழு தைரியத்தோடும் சுவிசேஷத்தைத் தொடர்ந்து பிரசங்கிக்க அனுக்கிரகம் செய்யும்படியாகவும், உங்களுடைய ஊழியங்களை அற்புத அடையாளங்களும், பலத்த செய்கைகளும் பின் தொடரும்படியாகவும் ஜெபியுங்கள்!

3. சுவிசேஷ நற்செய்தியை அறிவிப்பதற்கான வல்லமை (4:31).

அ. "அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது." இது அவர்களுடைய ஜெபத்திற்கு கர்த்தர் பதிலளித்துக் கொண்டிருந்தார் என்பதற்கான உடனடி அடையாளமாயிருந்தது. பவுலும், சீலாவும் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது சிறைச்சாலையிலும் இவ்விதமே நிகழ்ந்தது. (அப்போஸ்தலர் 16:25-26).

சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்காகப் பயமுறுத்தப்படுதல்

அப்போஸ்தலர் 4:23-31

ஆ. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்." பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் எல்லாரும் அனுபவித்திருந்ததைப் போன்ற புதிய அபிஷேகமாயிருந்தது (நிரப்புதல்) (அப்போஸ்தலர் 2:1-4).

இ. "தேவ வசனத்தை முழு தைரியத்தோடும்" சொல்லும்படி இயேசுவானவரால் நாம் தெய்வீக அனுக்கிரகம் பெற்றிருக்கிறோம். மார்க்கத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரால் பயமுறுத்தப்பட்ட வேளையிலும் கூட பேதுரு ஜனங்களோடு பேசினார். பேதுருவும் யோவானும் இயேசுவோடு கூட இருக்கிறதையும், அவர்கள் இயேசுவுக்காகப் பேசும்படி தெய்வீக அனுக்கிரகம் பெற்றிருக்கிறதையும் மார்க்கத் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் உணர்ந்து கொள்ளலானார்கள் (அப்போஸ்தலர் 4:8,9,13).

ஈ. "வசனம்" (வார்த்தை) என்பதின் அர்த்தம், பற்றிய இயேசுவின் அவதாரம், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் பற்றிய இயேசுவின் சுவிசேஷச் செய்தி என்பதாகும். "தைரியம்" என்பதின் அர்த்தம், மூடி மறைக்காமல், வெளிப்படையாக, அஞ்சாமற்பேசுதல், நம்பிக்கையோடும் உறுதியோடும் பேசுதல், சுதந்தரமாய் ஒளிவுமறைவின்றி பேசுதல் என்பனவாகும்.

உ. ஆதலால், பொறாமை நிறைந்த மார்க்க மற்றும் அரசாங்கத் தலைவர்களால் சீஷர்கள்பயமுறுத்தப்பட்ட வேளையிலுங் கூட ஜெபக்கூட்டத்தில் தைரியமாகவும், பகிரங்கமாகவும் சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதற்கு தேவ அனுக்கிரகம் பெற்றிருந்தார்.

ஊ. பரிசுத்த ஆவியின் புதிய நிறைவு நமக்குத் தேவையா? பிரச்சினைகள், உபத்திரவங்களின் மத்தியில் நாம் தைரியமாகத் தேவவசனத்தை அறிவிக்கக் கூடியவர்களாயிருக்கிறோமா? ஆதிச் சபையிலுள்ள விசுவாசிகளுக்காக தேவன் எதைச் செய்தாரோ அதை நமக்காகவும் செய்வார்.

முடிவுரை

அ. இன்றைக்குரிய இந்தத் தூதில் நமக்காக ஓர் தெளிவான பாடம் உண்டு. சுவிசேஷத்தை அறிவிப்பதற்காக சபையின் அங்கத்தினர்கள் பயமுறுத்தப்படும் பொழுது, உடனடியாக சபையார் ஒன்று கூடி ஜெபிக்க வேண்டும்.

ஆ. சுவிசேஷத்தின் தூதை அறிவிப்பது ஜெபத்துடன் இணைந்திருக்கும்பொழுது, இதன் விளைவாக, பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தை விசுவாசிகள் பெற்றுக்கொள்வார்கள், இயேசுவின் நாமத்தில் அசாதரணமான அடையாளங்களும், அற்புதங்களும் நடைபெறும். இவைகள், ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்யும்படியாக விசுவாசிகளின் கரங்களில் வல்லமை வாய்ந்த ஆயுதங்களாக இருக்கும்.

அனனியாவும் சப்பீராளும் சரிதத்தில் வாழ்க்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட பிரச்சினை

(அப்போஸ்தலர் 4:32-5:13)

முன்னுரை

அ. சபையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தேவன் சரிசெய்கிறார்.

ஆ. ஆதிச் சபையில் விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய உடைமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொடுத்தார்கள். அப்போஸ்தலர்கள் தொடர்ந்து இயேசுவின் உயிர்தெழுதலைக் குறித்து மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அவ்வப்போது, நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. பர்னபா என்பவன் தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். அனனியா, சப்பீராள் என்னும் தம்பதியரும் இவ்விதம் செய்தார்கள். சபையின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட முதல் பிரச்சினையின் காரணம் இந்தச் சம்பவமேயாகும்.

1. சபையில் பிரச்சினைகள் உண்டாகும் (5:1,2).

அ. ஆதிச்சபையில் முதல் பிரச்சினையைத் தோற்றுவித்த இருவரும் முதிர்ச்சியுற்ற கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொண்டிருந்த விசுவாசிகள். பரிசுத்த ஆவியினால் ஸ்நானம்பண்ணப்படுவது என்றால் என்ன என்பதை அறிந்திருந்தார்கள். எல்லாக் கூட்டங்களிலும் பங்கெடுத்து, அப்போஸ்தலர்களுடைய எல்லாப் போதனைகளையும் கவனித்தார்கள். அவர்கள் அற்புதங்களைக் கண்டார்கள், இதர விசுவாசிகளுடன் அந்நியோந்நியமாய் இருந்தார்கள்.

ஆ. வசனம் 2. இவையெல்லாம் இருந்த போதிலும், அனனியா, "கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்தான்?" தன்னுடைய காணியாட்சியை விற்ற கிரயத்தையெல்லாம் கர்த்தருக்கென்று ஒதுக்கிவைத்திருந்தான். அவன் எதைச் செய்யவிருந்தானோ, அதைச் சந்தேகமின்றி முழுசபைக்கும் சொல்லியிருந்திருக்கலாம். ஆதலால், அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்தபோது உண்மையில் சபையிலுள்ள ஒவ்வொருவரிடமும் பொய் சொன்னான். பின்னால் நாம் பார்க்கும்பொழுது, பரிசுத்த ஆவியாகிய தேவனிடத்தில் பொய் சொன்னான்.

இ. "ஒரு பங்கை வஞ்சித்து வைப்பது" என்பதின் உண்மையான அர்த்தம், வேறொருவருக்காக மனமாரத் திட்டமிடப்பட்டதை, சொந்த உபயோகத்திற்காகத் திருடுவது, அல்லது வைத்துக் கொள்வது என்பதாகும். இதைத்தான் அனனியாவும், சப்பீராளும் செய்தனர். கர்த்தருடைய உபயோகத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்ததை, அவர்கள் தங்களுக்காக வைத்துக்கொண்டார்கள்.

அனனியாவும் சப்பீராளும் சரித்திரத்தில் வாழ்க்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட பிரச்சினை

(அப்போஸ்தலர் 4:32-5:13)

ஈ. இதைத்தான் ஆகானும் செய்தான். எரிகோவின் யுத்தத்தில் கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்த நேர்த்தியான சால்வை வெள்ளி, பொன் ஆகியவற்றை அவன் களவாடினான் (யோசுவா 6:24; 7:1). கர்த்தருக்காக ஒதுக்கப்பட்டிருந்த செல்வத்தின் ஒரு பகுதியைத் தனக்காக எடுத்துக்கொண்டான்.

உ. "ஏன்?" அனனியா காணியாட்சியின் கிரயத்திலிருந்து உண்மையில் அவன் ஆலயத்துக்குக் கொடுத்த தொகையைப் பற்றி பொய் சொல்லியிருந்திருப்பான்? அவனும், அவனுடைய மனைவியும் இரண்டு விதத்தில் பாவஞ்செய்தார்கள் என்பது புலனாகிறது:

1. அவர்கள் மனுஷப் புகழ்ச்சியைப் பெரிதும் விரும்பினார்கள்.

2. அவர்களுக்கு மிகுந்த பண ஆசை (பேராசை) இருந்தது.

ஊ. பண ஆசை எல்லா விதமான தீங்குகளுக்கும் வேராயிருக்கிறது. பண ஆசை ஒருவனை ஆட்கொள்ளுமானால், அவர் செய்யக்கூடாததும், செய்யாததுமான தீமை யாதொன்றும் இருக்க முடியாது (1தீமோத்தேயு 6:10).

ஓர் கிறிஸ்தவன் தேவனுக்கும், பணத்துக்கும் ஒருங்கே ஊழியம் செய்ய முடியாது. அவன் ஒன்றைப் பகைத்து, மற்றொன்றை சிநேகிப்பான். அவன் ஒன்றைப் பற்றிக்கொண்டு மற்றொன்றை அசட்டை பண்ணுவான். அனனியாவும், சப்பீராளும் பணத்தைச் சிநேகித்தார்கள். அவர்கள் பணத்தில் பற்றுதல் உள்ளவர்களாயிருந்தார்கள். ஆதலால், அவர்கள் சில காலத்திற்குப் பின்னர் தேவனையும், அவருடைய ஜனத்தையும், அசட்டைபண்ணி, பகைக்க ஆரம்பித்தனர் (மத்தேயு 6:24).

எ. கிறிஸ்தவர்கள் பிசாசின் திட்டங்களுக்கு விரோதமாக விழிப்புடனிருக்க வேண்டும். அவன் நம்முடைய மனதில் வீண் கற்பனைகளைக் கட்டியெழுப்பும்படி தொடர்ந்து முயற்சிக்கிறான். ஹாங்காங்கில் இவ்விதம் கூறப்படுகிறது: நல்லவனாகத் தோன்று, முக்கிய செயலாற்று, பணம் பெற்றுக் கொள். இக்கொள்கை, ஆலயப்பணி, சுவிசேஷப்பணி, பரிசுத்தம், ஜெபம், உபத்திரவப்படும் கிறிஸ்தவர்களுக்கான கரிசனை, தேவனை ஆராதித்தல் போன்றவற்றைச் சூறையாடுகிறது.

2. தேவன் சபையிலுள்ள பிரச்சினைகளைச் சரிசெய்கிறார் (5:3-10).

அ. அனனியாவும், சப்பீராளும் ஆலயத்திற்குக் கொடுத்த பணத்தைப் பற்றி பொய் சொன்னதை பேதுரு எவ்விதம் அறிந்து கொண்டார்? ஆவியின் வரங்களில் ஒன்றான அறிவை உணர்த்தும் வசனத்தின் மூலம் ஒருவேளை வெளிப்படுத்தப் பட்டிருக்கும். சிலவேளைகளில், உள்ளூர் சபைகள் அல்லது பெருமளவில் சபைகளைப் பாதிக்கக்கூடிய பாதகமான காரியங்களில் ஆவிக்குரிய தலைவர்கள் தலையிட்டு சரிசெய்யும் பொருட்டு, தேவன்தாமே அப்படிப்பட்டக் காரியங்களை வெளிப்படுத்துவது அத்தியாவசியமாயிருக்கிறது.

அனனியாவும் சப்பீராளும் சரிதத்தில் வாழ்க்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட பிரச்சினை

(அப்போஸ்தலர் 4:32-5:13)

ஆ. வசனம் 3. பேதுரு அனனியாவிடம் "சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என வினவுகிறார். அனனியாவின் உள்மனம் முழுமையும் மனுஷப் புகழ்ச்சியின் விருப்பத்தினாலும், பண ஆசையினாலும் நிரப்பப்பட்டிருந்தது. இவ்வித உலக ஆசைகளினால் தேவஜனங்கள் நிரப்பப்படும் பொழுது பரிசுத்த ஆவியானவருக்கு இடமில்லாமற்போகும். ஆதலால், அப்படிப்பட்டவன் தேவபிள்ளைகளை விட்டு விலகிப் போகிறான்.

இ. பேதுரு அனனியாவிடமும், அவன் பரிசுத்த ஆவியாகிய தேவனிடமும், சபையிலுள்ள ஜனங்களிடமும் பொய் சொன்னதாகக் கூறினான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, "விழுந்து ஜீவனை விட்டான்" அவன் தன்னுடைய கடைசி மூச்சை விட்டான். இது கொடிய தண்டனையைப் போலக் காணப்படலாம். மனுஷப் புகழ்ச்சியின் மேல் நாட்டமும், பண ஆசையும் உடைய தம்முடைய ஜனங்களைப் பற்றித் தேவன் என்ன நினைக்கிறார் என்பதை சபை அறிந்து கொள்ளும்படியாக, சபை சரித்திரத்தின் துவக்கத்திலேயே தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தார். இந்த மாதிரியானது இதே விதமான பாவங்களைச் செய்வதிலிருந்து மற்றவர்களைக் காக்கும் என்பது நிச்சயம்.

ஈ. ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, சப்பீராள் தன் கணவனுக்குச் சம்பவித்ததை அறியாமல் உள்ளே வந்தாள். ஒருவேளை அவள் மற்றவர்களின் கவனிப்புக்கும், புகழுக்கும் எதிர்நோக்கியிருக்கலாம். அவள் உண்மையை அறிக்கை பண்ணும்படி பேதுரு அவளுக்கோர் வாய்ப்பைக் கொடுத்தார், இதற்கு மாறாக அவளும் பொய் சொன்னாள். அவளுடைய கணவனைப் போல அவளும் குற்ற உணர்வு உடையவளாயிருந்தாள். அவர்கள் பொய் சொல்வதற்கு ஒருமனப்பட்டு சதிசெய்து மோசமான இக்காரியத்தைச் செய்தனர்.

உ. வசனம் 9. "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?" என்று பேதுரு வினவினார். தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு உள்ளாகாமல், எவ்வளவு தூரம் அவர்கள் கீழ்ப்படியாமலிருக்கக் கூடும் என்பதற்கான முயற்சிகளை இருவரும் மேற்கொண்டனர். அவளும் கீழே விழுந்து ஜீவனை விட்டாள்.

ஊ. அனனியா, சப்பீராளின் பாவங்களினால் (மனுஷப் புகழ்ச்சியை நாடுதல், பண ஆசை) நீங்கள் சோதிக்கப் படுவீர்களானால், நீங்கள் தேவனைத் தேடி, உங்களுடைய சோதனையிலிருந்து தப்பும்படியான வழிக்காக ஜெபிக்கும்படி இக்கூட்டத்தின் முடிவில் உங்களுக்கோர் தருணம் அளிக்கப்படும். இதைச் செய்யும்படி உங்களை நான் ஊக்குவிக்கிறேன்! நமது சமுதாயத்தின் மக்களிடையே இப்பாவங்கள் சாதாரணமானவைகளாக உள்ளன. அனனியாவும், சப்பீராளும் அடைந்த அதே விளைவுகளை நீங்களும் அடைய நாங்கள் விரும்பவில்லை.

எ. பண ஆசையும், மனுஷப் புகழ்ச்சியை நாடுவதும் ஒருவரை ஆட்கொள்ளும்போது, அவர் செய்யக்கூடாததும், செய்யாததுமான தீமை ஒன்றுமேயிருப்பதில்லை.

அனனியாவும் சப்பீராளும் சரித்தில் வாழ்க்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட பிரச்சினை

(அப்போஸ்தலர் 4:32-5:13)

இவ்விரண்டு வல்லமைகளின் கட்டுப்பாட்டில் இருப்பவர், மனுஷர் ஒருவரும் செய்யக்கூடாத கொலை போன்ற பயங்கரப் பாவங்களையும் கூடச் செய்வார்கள்.

ஏ. இதற்கு எடுத்துக்காட்டாக வாகனத்தைச் சுத்தம் செய்யும் ஓர் பெண்ணைக் குறிப்பிடுகிறேன். ஆங்கிலத்திலும், கண்டோனிஸ் மொழியிலும் பேசிய எனது சம்பாஷணையை அவள் செவிமடுக்கவில்லை. அவளுடைய காதுகளில் கேட்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. நான் பேசியபொழுது, அவள் பணச் சந்தை செய்தியை கவனித்துக் கொண்டிருந்தாள்.

3. தேவனுடைய சீர்படுத்தும் கிரியைகளின் விளைவுகள் (5:5ஆ, 11-13).

அ. வசனம் 5ஆ, 11. அனனியாவுக்கும், சப்பீராளுக்கும் இவ்விதம் சம்பவித்த பொழுது, சபையாரெல்லாருக்கும், சபைக்கு வெளியே உள்ள மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று. பயம் என்பதின் அர்த்தம், கிலிபிடித்தல், நடுக்கம் பிடித்தல், அச்சுறுத்தப்படுதல் என்பனவாகும். கால தாமதமாகும் முன்பே இங்கிருந்து வெளியேறி விடு. சபையிலுள்ளவர்களையும், சபைக்கு வெளியே உள்ளவர்களையும் அந்த இடத்திலிருந்து துரிதமாக ஓடப்பண்ணக் கூடிய ஏதோவொன்று சம்பவித்துள்ளது.

ஆ. இருப்பினும், சமுதாயத்தில் சபைக்குக் கூடுதல் மேன்மை உண்டாயிற்று. இன்றைய சமுதாயத்தில் வளம்பெற வேண்டுமானால், சபையில் கர்த்தருடைய உன்னத நிலவரங்களை மட்டுப்படுத்த வேண்டுமென சிலர் எண்ணுகின்றனர். இதற்கு மாறாக, இந்தச் சம்பவத்தை நாம் கவனிப்போமானால், தேவஜனங்களிடையே பரிசுத்த ஜீவியத்திற்கான கர்த்தருடைய வாஞ்சையைப் பற்றிய தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளும்போது சபை பலப்படுத்தப்படுகிறது.

இ. வசனம். 12,13. தேவன் பேரில் கொண்டிருந்த நம்பிக்கைப் புதுப்பிக்கப்பட்டதின் நிமித்தமாக, சமுதாயத்திலுள்ள ஜனங்கள் பிணியாளிகளையும், சப்பாணிகளையும் குணமாக்கப்படும்படி கொண்டு வந்தார்கள். முற்றிலுமாகத் தங்களை இயேசுவுக்கென்று ஒப்புக் கொடுக்கும்படி வாஞ்சித்தவர்கள் சபையில் சேர்ந்தார்கள். இந்த அனுபவத்தின் மூலமாக 10,000 பேர் சேர்க்கப்பட்டு சபை வளர்ந்தது எனச் சிலர் கூறுகின்றனர்.

ஈ. இன்று சபைகளில் சன்மார்க்க ஆபத்துகள் உள்ளன: தேவஜனங்கள்

1. உலகத்தோடு பிணைக்கப்பட்டவர்களாக மாறுகின்றனர்.

2. முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவும், அங்கீகரிக்கப்பட்டவர்களாகவுமிருக்க விரும்பு கின்றனர்.

3. உடைமைகளையும், ஐசுவரியங்களையும், உலக இன்பங்களையும் நாடுகின்றனர்.

4. சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இயேசு கொடுத்த கட்டளையை மறக்கின்றனர்.

ஆதிச்சபையில் அனனியா, சப்பீராளின் பாவங்களைப் போன்று இந்நாட்களில் இவை மோசமானவைகளாக உள்ளன.

அனனியாவும் சப்பீராளும் சரித்திரத்தில் வாழ்க்கையில் முதலாவது பதிவு செய்யப்பட்ட பிரச்சினை

(அப்போஸ்தலர் 4:32-5:13)

முடிவுரை

அ. பொய் சொல்லுதல், மனுஷப் புகழ்ச்சியை நாடுதல், பண ஆசை போன்றவைகள் சபையின் முதன்முதல் மோசமான பிரச்சினைகளாயிருந்தன. ஒவ்வொரு பட்டணத்திலும், தேசத்திலுமுள்ள சபைகளிலுள்ள பிரச்சினைகளும் இவைகளே.

ஆ. இது மெதுவாகப் பரவும் புற்று நோயைப் போல விசுவாசிகள் அநேகரின் இருதயங்களில் மறைந்திருக்கிறது. உடைமைகள், ஐசுவரியங்கள், உலக இன்பங்கள், சுயமேன்மைகள் ஆகியவற்றின் மூலம் உலகத்தோடு இணைக்கப்பட்டவர்களாக அவர்கள் மாறுகின்றனர். இயேசுவின் கட்டளையை அவர்கள் அசட்டை பண்ணுகின்றனர்.

இ. யார் என்னோடு கூட ஜெபிப்பீர்கள்? பரலோகப் பிதாவே, இந்தச் சபையில், இந்தப் பட்டணத்தில், என்னுடைய வாழ்க்கையில் உள்ள இத்தகைய பிரச்சினைகளைச் சீர்படுத்தும். நாங்கள் மீண்டும் ஒருவிசை,

1. இந்தப் பட்டணத்திலுள்ள அழிந்து போகும் ஆத்துமாக்களைப் பற்றிக் கரிசனை உடையவர்களாயிருக்கும்படி,

2. இந்தச் சபையிலிருந்து தூர இடங்களுக்குச் சென்று சுவிசேஷப் பணி செய்யும்படி,

3. எங்களுடைய ஊழியத்தின் நோக்கத்தைச் சரியாகக் காணும்படி,

4. கிறிஸ்துவுக்குள் உபத்திரவப்படுத்தப்படும் சகோதர, சகோதரிகளுக்காக ஜெபிக்கிறவர்களாயிருக்கும்படி,

5. மற்ற விசுவாசிகளைத் தாங்கி, உற்சாகப்படுத்தும்படி,

6. தேவனுடைய பார்வையில் நீதியும், பரிசுத்தமும் உள்ளவர்களாய் மாறும்படி விரும்புகிறோம்.

சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தல் (அப்போஸ்தலர் 6:1-6)

முன்னுரை

அ. சபையில் தொடர்ந்து பெரும் எழுப்புதல் உண்டாயிற்று. இருப்பினும், சபை வளர்ச்சியோடு கூட தவிர்க்க முடியாத சபை பிரச்சினைகளும் எழுந்தன. இவ்விதம் முன்னேற்றமடைந்த வேளையில் சபையில் ஏறக்குறைய எல்லாரும் யூதர்களாயிருந்தார்கள். அவர்களுடைய ஐக்கியத்துக்குள்ளே இருந்த யூதர்களில் இரண்டு பிரிவினர்கள் இருந்தார்கள்.

1. பலஸ்தீனாவுக்கு வெளியே பிறந்து, கிரேக்கமொழி பேசிய யூதர்கள். இவர்களுடைய கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள் எபிரெயரைப் போலிராமல், பெரிதும் கிரேக்கரைப் போலிருந்தன.

2. பலஸ்தீனாவிலுள்ள அரேமிக் அல்லது எபிரெய பாஷைகள் பேசிய யூதர்கள். இவர்கள் யூதர்களுடைய கலாச்சாரத்தையும், பழக்கவழக்கங் களையும் பாதுகாத்தனர்.

ஆ. சபையில் இந்த இரண்டு கூட்டத்தாரைச் சேர்ந்த விதவைகளும் இருந்தனர். இவர்கள் மீது தனிக்கவனம் செலுத்த ஒருவருமில்லாதிருந்தது. ஆகையால் சபை இவர்களை உத்தரவாதமெடுக்க வேண்டியதாயிருந்தது. கிரேக்க மொழி பேசும் விதவைகள், அன்றாடம் உணவும், பணமும் விநியோகிப்படும்பொழுது தாங்கள் சரியாக விசாரிக்கப்பட வில்லையென்று முறையீடு செய்தனர் (முறுமுறுத்தார்கள்). முதலாவது சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தது இந்தக் காரணத்தினாலேயாகும்.

1. ''பந்திவிசாரணைசெய்யும்'' உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தது (வ.2,4).

அ. உதவிக்காரர் என்பதின் அர்த்தம்: ஓர் துணையாள், உணவு பரிமாறுபவர், அல்லது இத்தகைய சாதாரண வேலைகளைச் செய்பவர், செய்தி எடுத்துச் செல்பவர், உபசரிப்பவர், பிறருக்கு உதவுபவர் எனப் பலவாறாகும்.

ஆ. "அன்றாட விசாரணை" என்பதின் அர்த்தம், ஜனங்களின் பொருளாதார, சரீரத் தேவைகளுக்காக அக்கறை கொள்ளுதல் என்பதாகும். இந்த குறிப்பிட்ட விசயத்தில், சபையிலுள்ள விதவைகளின் பொருளாதார சரீரத் தேவைகளுக்காக அக்கறை கொள்ளுதல் அவசியமாயிருந்தது. பணம் சேகரிக்கப்பட்டு, விதவைகளுக்கு விநியோகிக்கப்பட்ட இடங்களில் அப்போஸ்தலர்கள் கவனித்தனர்.

இ. விதவைகளுக்காகவும், யாருடைய உதவியும் அற்ற மற்றவர்களுக்காகவும் தேவன் எப்போதும்விசேஷித்த அக்கறையுடையவராயிருந்தார் (யாத்திராகமம் 22:22-24; உபாகமம் 10:18; தீமோத்தேயு 5:3-16). ஆகையால், இது சபையின் சட்டப்படியான வேலை.இப்பணிக்குத்தேவையானது தகுந்த தலைமையாகும்.

ஈ. போதகர்கள் ஜெபம்பண்ணுவதிலும், தேவவசனத்தைப்போதிக்கிறதிலும், பிரசங்கிக்கிறதிலும்இடைவிடாமல் தரித்திருக்கும்படி,ஆதிச்சபையில் உதவியாளர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். தாங்கள் தேவவசனத்தைப் போதியாமல்,பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல எனப் போதகர்கள் உணர்ந்தனர். ஜெபிப்பதற்கும், பிரசங்கிக்கவும்,போதிக்கவும்,ஆயத்தப்படுத்துவதற்கும்,அதிகநேரம் அவசியம் என்பதையும் அவர்கள் உணர ஆரம்பித்தனர்.மேலும்,கிறிஸ்துவின் சரீரமாகியசபையில்ஜெபிப்பதும்,தேவ வசனத்தைப் பிரசங்கிப்பதும்,போதிப்பதுமே,அவர்களுடைய குறிப்பிட்ட ஊழியம்என்பதையும்,அவர்கள் உணர்ந்தனர்.அவர்கள்மற்றஊழியத்தின் உத்தரவாதங்களை நிறைவேற்றிக்கொண்டு, உதவியாளர்ஊழியத்தையும் நிறைவேற்றவுமில்லை, நிறைவேற்ற முடியவுமில்லை.

சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தல்
(அப்போஸ்தலர் 6:1-6)

உ. போதகரின் வேலைப் பளுவை இலகுவாக்கும் பொருட்டு, மற்றவர்களால் சபைக்குள்ளே செய்யக்கூடிய நடைமுறைப் பணிகள் பலவுண்டு. சபை சிறியதாக இருக்கும்பொழுது, பெரும்பான்மையானப் பணிகளைப் போதகரே செய்யுமளவுக்கு நேரம் இருக்கும். இருப்பினும், சபை வளரும்பொழுது கீழ்க்கண்டுள்ள வேலைகளை மற்றொருவர் செய்ய வேண்டியது அத்யாவசியமாகிறது. செய்தி அறிக்கைகள் வெளியிடுதல், நிதிநிலை பதிவேடுகள் நிர்வகித்தல், கடிதப் போக்குவரத்து கவனித்தல், தொலைபேசியில் பதில் அளித்தல், கட்டடத்தை சுத்தம் செய்தல், திருமண மற்றும் அடக்க ஆராதனைகளை ஒழுங்கு செய்தல், வரவேற்பாளரை நியமித்தல், கர்த்தருடைய பந்திக்கும், ஞானஸ்நானத்திற்கும் ஆயத்தஞ் செய்தல், பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுதல், இளஞ்சிறார் வகுப்பு நடத்துதல், சிறிய மருந்தகம் பராமரித்தல், இன்னிசை தயாரித்து இசைக்குழுவை மேம்படுத்துதல், ஞாயிறு பள்ளி பராமரித்தல், பள்ளிக்கூடங்களை நிர்வகித்தல், எளியவருக்கு உதவுதல், வாலிபர் கூட்டங்களை ஒழுங்கு செய்தல், களப்பணிகளை ஒழுங்கு செய்தல் போன்றவைகளாகும். இவைகளும், இவைபோன்ற இதர உத்தரவாதங்களும், போதகரின் நடப்பின் கீழ் ஆண்/பெண் உதவியாளவர்களின் ஊழியத்தின் மூலம் செய்யப்படலாம்.

ஊ. ரோமர் 16:12-இல் பெபேயாள், சபையின் "ஊழியக்காரி" என அழைக்கப்படுகிறாள். இந்த வேதப்பகுதியில் ஊழியக்காரி என்று சொல்லப்பட்டிருப்பது, இதரப்பகுதிகளில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் உதவியாளர் என்ற பதத்திற்கு ஒப்பானதாகும். உதவியாளர்கள் வகித்த பணிகளைப் போன்ற விஷயங்களில் அவள் உதவியாக இருந்தாள். தேவ பக்தியான பெண்களால் நேர்த்தியாக நிர்வகிக்கப்படக்கூடிய இன்றும் அநேக உத்தரவாதங்களும் சபையில் உண்டு. ஆதலால், ஆண்/பெண் உதவியாளர்களுக்கு சபையில் எப்போதும் தேவை உண்டு.

எ. ஆண் உதவியாளராக அல்லது பெண் உதவியாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஊழியக்காரனின் மனோபாங்கு இருக்கவேண்டும். போதகரின் நடப்பின் கீழ் "பந்தி விசாரணை" செய்யவும் மனப்பூர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லையெனில், அவர்கள் உதவியாளராக இராதபடிக்குத் தவிர்க்கப்படலாம்.

2. பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்த உதவியாளர்களைத் தெரிந்தெடுத்தனர் (வ.3,5).

அ. ஏழு பேரைத் தெரிந்தெடுப்பது ஒவ்வொரு சபைக்கும் வகுக்கப்பட்ட வரையறையல்ல. சபையின் தேவைக்கேற்றபடி உதவியாளர்களின் எண்ணிக்கை இருக்கும். சிறிய சபைக்கு ஒருவர் அல்லது இருவர் மாத்திரம் போதுமானதாக இருக்கலாம். இருப்பினும், பெரிய சபைக்கு ஆண்/பெண் உதவியாளர்கள் 5 அல்லது 7 பேர், ஏன், அதற்கு மேற்பட்டவர்கள் கூட தேவையாயிருக்கலாம்.

ஆ. உதவியாளர்கள் ஒரே சமயத்தில் சபையால் தெரிந்தெடுக்கப்படாமல், குறிப்பிட்டக் காலவரையறைப்படி தெரிந்தெடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, உதவியாளர்கள் இரண்டு வருட காலத்திற்காக நியமிக்கப்பட்டால், அதில் பாதிபேர் மட்டும் ஓராண்டு, ஓராண்டு இடைவெளியில் மாற்றப்படவேண்டும். மிகச் சிறப்பாகப் பணியாற்றுபவர்களில் சிலர் தொடர்ந்து உதவியாளராக இருக்கும்படி சபையில் நியமிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தல் (அப்போஸ்தலர் 6:1-6)

இ. உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்தவர்களாக இருக்க வேண்டியதிருந்தது. அதன் அர்த்தம் யாதெனில், பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்ததைப்போல, இவர்களும் ஆவியினால் நிரப்பப்பட வேண்டியதிருந்தது (அப்போஸ்தலர் 2:4). ஆதலால், நியமிக்கப்பட்ட ஏழு உதவியாளர்களும் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டவர்ளாயிருந்தனர். மேலும், அவர்கள் ஞானத்தினால், அதாவது, சரீரப் பிரகாரமானத் தேவைகளைத் தீர்மானிக்கக் கூடிய ஆவிக்குரிய ஞானத்தினால் நிறைந்திருக்க வேண்டியதிருந்தது.

ஈ. ஏழு உதவியாளர்களின் பெயர்களும் கிரேக்கப் பெயர்களாகும். இதிலிருந்து, அவர்கள் கிரேக்க மொழி பேசும் விசுவாசிகள் என்பது புலனாகிறது. கிரேக்கம் பேசும் விதவைகள்தான் முறுமுறுத்து, முறையிட்டவர்கள். அவர்கள் சிறுபான்மை கூட்டத்தாராயிருந்தார்கள். இரண்டு கூட்டத்தாருக்கும் உட்பட்ட விதவைகளுக்கான நிதியினை நிர்வகிக்க, இந்த ஏழுவரும் பொறுப்பாளர்களாக இருந்திருப்பார்கள். இவ்விதமாக, அரேமிக் - எபிரெய மொழி பேசும் விதவைகளுக்கு எதிராக ஒருபோதும் கிரேக்கம் பேசுகிறவர்கள் புகார் சொல்லாத விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது.

உ. ஆவியில் நிறைந்திருந்த இரண்டு உதவியாளர்களுக்கு இதர ஊழியங்களும் இருந்தன. இந்த ஊழியங்கள் போதகரின் ஸ்தானத்தைப் பரிமாற்றம் செய்யாமல், உள்ளூர் சபைக்கு வெளியே சுவிசேஷப் பணியாற்றும் ஊழியங்களாயிருந்தன:

1. ஸ்தேவான் சுவிசேஷங்களின் வேலையைச் செய்தான் (அப்போஸ்தலர் 6:8-8:2; 22:20).

2. பிலிப்பு சுவிசேஷகன் என அங்கீகரிக்கப் பட்டிருந்தான் (அப்போஸ்தலர் 8:4-13; 21:8).

ஊ. பரிசுத்தஆவியினாலும், ஞானத்தினாலும்நிரம்பியிருக்கும் உதவிக்காரர்கள்அழிந்துபோகும் ஆத்துமாக்களுக்காகப்பெரும்பாரம்உடையவர்களாயிருப்பார்கள், சுவிசேஷத்திற்கென்று முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். சபையின் அங்கத்தினர்களுக்குதங்களுடைய உத்தரவாதத்தை அசாதாரணமான விதத்தில் நிறைவேற்றும் பொருட்டு ஆவியின் வரங்கள் அவர்கள் மூலம் வெளிப்படும். இந்த உண்மைக்கு ஸ்தேவானும்பிலிப்புவும்சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்!

3. சபையாரெல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உதவியாளர்களைத் தெரிந்தெடுத்தனர் (6:3,5,6).

அ. வசனம் 3. "சகோதரரே, ... ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்." அப்போஸ்தலர்கள், விசுவாசிகளின் கூட்டத்தை ஒருங்கே அழைத்தனர். உதவியாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முழுச் சபையும் பொறுப்புடையதாயிருந்தது. விசுவாசிகள் அனைவரும் பங்கு பெறும் வகையில் தெரிந்தெடுக்கும் முறையும், ஓட்டளிப்பும் ஏற்படுத்தப்பட வேண்டியதிருந்தது. இது சபையின் விசுவாசிகள் அனைவருக்கும் பிரியமாயிருந்தது.

ஆ. விசுவாசக் கூட்டத்தார் ஏழுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள்.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தல் (அப்போஸ்தலர் 6:1-6)

இவர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். சபையில் குறிப்பிட்ட ஊழியத்திற்காக உதவியாளர்களை பகிரங்கமாக அங்கீகரிப்பதின் ஓர் வழி அவர்கள் மேல் கைகளை வைப்பதாகும். மேலும், விசுவாசிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அப்போஸ்தலர்கள் தங்களுடைய ஒப்புதலை அளிப்பதற்கும் இது ஓர் வழியாகும். போதகரை போதகர்களைக் கலந்து ஆலோசிக்காமலோ, அவரோடு ஒத்துழைக்காமலோ எந்தவொரு காரியமும் சபையில் செய்யப்படக் கூடாது. ஏழு பேரைத் தெரிந்தெடுப்பதற்கு தேவனுடைய ஞானத்திற்காகவும், விதவைகளுக்குச் செய்யப்படும் ஊழியத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்திருப்பார்கள்.

இ. ஆதலால், தெரிந்தெடுக்கப்பட்ட உதவியாளர்கள் சபையில் அங்கத்தினராயிருப்பதற்கும், தலைமைப் பொறுப்பு வகிக்கவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். நோக்கத்திலும், ஊழியத்திலும் முழு சபையையும் ஒருமுகப்படுத்துவதற்கு இது பெரிதும் உதவும். மேலும், சுவிசேஷத் தரிசனத்தையும், பணியையும், அடிக்கடி தடை செய்யும் பிரிவினைக்களுக்கான சந்தர்ப்பங்களையும் இது மட்டுப்படுத்தும்.

ஈ. ஆண்/பெண் உதவியாளர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முன், வேதாகமத்தில் வகுக்கப்பட்டுள்ள தகுதிகளைச் சபையார் நிச்சயமாகப் பரிசீலித்திருப்பார்கள். 1தீமோத்தேயு 3;8-12இல், அப்போஸ்தலனாகிய பவுல் இத்தகுதிகளில் சிலவற்றை நமக்காக வரையறுத்திருக்கிறார்.

பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டு, ஆவிக்குரிய ஞானத்தைப் பெற்றிருப்பதோடு கூட ஆண்/பெண் உதவிக்காரர் இவ்விதமிருக்க வேண்டும்: மரியாதைக்குரியவராக, மதுபானப்பிரியராயிராமல், உண்மையுள்ளவராக, இருநாக்குள்ளவராயிராமல், விசுவாசத்தின் இரகசியத்தைக் காத்துக்கொள்ளுகிறவராக, இழிவான ஆதாயத்தை இச்சிக்காதவராக, ஒரே மனைவியை உடைய புருஷனாக, இச்சையடக்கமுள்ளவராக, நம்பிக்கைக்குரியவராக, தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

உ. விவாகமே ஆகாத விசுவாசிகள், விதவைகளான புருஷன், மனைவி ஆகியோரை உதவியாளராகத் தெரிந்தெடுப்பதைத் தவிர்க்காதபடிக்கு அக்கறை செலுத்தப்படுதல் அவசியம். பவுல் விவாகமாகாதவர், ஆனால் அவர் போதகர்களுக்குப் போதகராயிருந்தார் (ரோமர் 7:2,3; 1கொரிந்தியர் 7:7,39).

முடிவுரை

அ. ஞானமுள்ள சபையார் இப்படிப்பட்ட உதவியாளர்களைத் தெரிந்தெடுப்பார்கள்:

1. "பந்தி விசாரணை" செய்ய மனப்பூர்வமுள்ளவர்கள்.

2. பரிசுத்த ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்தவர்கள்.

3. முழு சபையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள்.

சபையில் உதவிக்காரரைத் தெரிந்தெடுத்தல் (அப்போஸ்தலர் 6:1-6)

ஆ. உள்ளூர் சபைகளில் பணியாற்றும்படி ஞானமுள்ள சபையார் ஆண்/பெண் உதவிக்காரரைத் தெரிந்தெடுப்பார்கள். முறைப்படித் தெரிந்தெடுக்கும் பொழுது, விவாகமாகாத விசுவாசிகளையும், விதவைகளான ஆண்களையும், பெண்களையும் உதவியாளராகப் பரிசீலனை செய்ய மறக்கக்கூடாது.

இ. சபையில் பணியாற்ற ஆண்/பெண் உதவியாளர்கள் தெரிந்தெடுக்கப்படுவதால் போதகர்(கள்) ஜெபத்திலும், தேவவசனத்தைப் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும் தரித்திருக்க நேரங் கிடைக்கும்.

பரிமாற்றம் முடிவுரை

அ. மேலே உள்ளபடி

ஆ. மேலே உள்ளபடி

இ. இவ்விதம் செய்யும்படி சபையாரை நான் ஊக்குவிக்கிறேன்:

1. உதவியாளர் முழு அங்கத்தினர்களால் சபைக்குள் ஆற்றப்பட வேண்டிய பணிகளைத் தீர்மானிக்கும்படி அல்லது மறுபரிசீலனை செய்யும்படி.

2. ஆண்/பெண் உதவிக்காரரைத் தெரிந்தெடுக்க விதிமுறைகளைத் தீர்மானிக்கும்படி அல்லது மறுபரிசீலனை செய்யும்படி.

3. வேதத்தைப் படித்து, உதவியாளர் குழுவுக்கும், போதகருக்கும் இடையே நிலவ வேண்டிய உறவைப் பற்றித் தீர்மானிக்கும்படி.

ஸ்தேவானைக் கல்லெறிதல்
(அப்போஸ்தலர் 7:54-8:1)

முன்னுரை

அ. ஸ்தேவான் தைரியமாகவும், பகிரங்கமாகவும் இயேசுவுக்காகச் சாட்சியாயிருந்ததின் நிமித்தம், சபை யுகத்தில் முதல் இரத்த சாட்சியானார். இவர் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து வந்தார். இருப்பினும், வடக்கு ஆப்பிரிக்கா, எகிப்து, சின்ன ஆசியா போன்ற இடங்களிலிருந்து வந்த ஒரு கூட்டம் யூதர்கள் இவரை எதிர்க்க ஆரம்பித்தனர். ஸ்தேவான் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று. அப்பொழுது அவர்கள்: மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசினான் என்று தவறாகச் சொல்லி, ஜனங்களுக்குள்ளே கலவரத்தைத் தூண்டினார்கள். பின்பு ஸ்தேவான் மேல் விழுந்து, அவரைப் பிடித்து, யூதர்களின் ஆலோசனைச் சங்கத்தாருக்கு (Sanhdrin) முன்பாக இழுத்துக் கொண்டு போனார்கள்.

ஆ. பிரதான ஆசாரியன் ஸ்தேவானை நோக்கி: அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் உண்மையானவையா என வினவிய பொழுது, அவர் ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர்களை வெளியரங்கமாய்க் கடிந்து கொண்டு, நீங்கள் இவ்விதம் இருக்கிறீர்கள் எனச் சுட்டிக் காட்டிப் பதிலுரைத்தார். "நீங்கள்:

1. இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாத வணங்காக் கழுத்துள்ளவர்கள்.

2. பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நின்று, தேவனுடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தி, அவர்களைக் கொலை செய்த உங்களுடைய பிதாக்களைப் போலிருக்கிறீர்கள்.

3. தேவனுடைய நீதிபரரைக் கொலை செய்ததற்குப் பொறுப்பாளிகளாயிருக்கிறீர்கள்.

4. மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாத குற்றவாளிகளாயிருக்கிறீர்கள்."

இவைகளைக் கேட்டதன் விளைவாக, அவர்கள் ஸ்தேவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, கல்லெறிந்து கொன்றார்கள்.

1. ஸ்தேவானுக்குப் பரலோக சிங்காசனத்தின் காட்சி கொடுக்கப் பட்டது.

அ. வசனம் 55. "அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்" பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்ட பொழுது ஸ்தேவான் தேவனுடைய பலத்த வல்லமையினால் நிரப்பப்பட்டான். (அப்போஸ்தலர் 2:1-4). இதன் நிமித்தமாக, அவன் ஜனங்களுக்குள்ளே தொடர்ந்து பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ்தலர் 6:8).

ஆ. வசனம் 55. "தேவனுடைய மகிமையைக் கண்டான்" பரலோகத்தில் தேவனுடைய சிங்காசனத்தைப் பற்றிய சிறிய காட்சி ஸ்தேவானுக்கு அருளப்பட்டது. பரலோகப் பிதாவை சுற்றியிருந்த ஷெக்கைனா மகிமையின் அழகையும்; எப்போதும் அவருக்கு செலுத்தப்படும் மதிப்பு, கனம், துதி, ஆராதனை ஆகியவற்றையும் கணப்பொழுதில் கண்டான்.

ஸ்தேவானைக் கல்லெறிதல் (அப்போஸ்தலர் 7:54-8:1)

இ. வசனம் 55,56. மேலும் அவன், "தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும்" கண்டான். "தேவனுடைய வலது பாரிசம்" என்பதின் அர்த்தம், சகல கனமும், வல்லமையும், அதிகாரமும் உள்ள இடம் என்பதாகும். இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்குக் கடைசி கட்டளையைக் கொடுத்தபொழுது, "வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார். (மத்தேயு 28:18). அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதம் கூறுகிறார்; தம்முடைய வல்லமையினாலே தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படிச் செய்தார்" (எபேசியர் 1:20,21).

ஈ. வசனம் 56. இயேசுவானவரை விவரிப்பதற்கு "மனுஷகுமாரன்" என்னும் அடைப்பெயரை ஸ்தேவான் பயன்படுத்துகிறார். தாம் மீட்கும்படி வந்த மனுக்குலத்தோடு தம்மை அடையாளங்காட்டும் படிக்கும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட மேசியா தாம் என்பதை உறுதிப்படுத்தும்படிக்கும் இயேசுவானவர் இந்தப் பதத்தைப் பயன்படுத்தினர். ஆலோசனைச் சங்கத்தில் அவர் இவ்விதம் உரைத்தார்: "அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள்"

தானியேல் கண்ட கடைசிகாலத் தரிசனத்தில் இவ்விதம் கூறுகிறார்; "இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்" (தானியேல் 7:13).

உ. ஸ்தேவான் சரீரத்தில் மரிப்பதற்கு சற்று முன்னர், இன்னும் சற்று நேரத்தில் அவருடைய ஆவி எங்கு செல்லுமோ, அந்த இடத்தைக் காணும்படி அவருக்கு அருளப்பட்டது. பரலோகத்தில் "பலிபீடத்தின் கீழே" உள்ள ஆத்துமாக்களுடன் இனிமேல் அவர் சேர்ந்து விடுவார். அங்குள்ளவர்கள் ஒத்திசைவுடன் இவ்விதம் மகாசத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்: "பரிசுத்தமும், சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கும் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர்?" (வெளிப்படுத்தின விசேஷம் 6:9-11; மேலும் காண்க யாத்திராகமம் 29:12; லேவியராகமம் 4:7).

2. ஜனத்திரள் மூர்க்கமடைந்து, ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றார்கள் (7:54,57,58).

அ. வசனம் 54. ஸ்தேவானின் பிரசங்கமும், கடிந்துகொள்ளுதலும் பிரதான ஆசாரியனையும், ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினர்களையும் மூர்க்கமடையச் செய்தது. அவர்கள் யாரை மேசியா அல்லர் எனப் புறக்கணித்தார்களோ, அவரைப் பரலோகத்தில் "தேவனுடைய வலதுபாரிசத்தில்" நிற்பதாகக் கண்டபடியால், இயேசுவானவர் தேவனுக்குச் சமமானவர் என ஸ்தேவான் வலியுறுத்துகிறார். இதனை தேவனுக்கு விரோதமாகப் பேசப்பட்டத் தூஷண வார்த்தையாக அவர்கள் கருதினார்கள். எனவே, அவர்கள் மூர்க்கமடைந்து, "அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்"

ஸ்தேவானைக் கல்லெறிதல்
(அப்போஸ்தலர் 7:54-8:1)

ஆ. ஸ்தேவானின் வார்த்தைகளைக் கேட்டவர்கள் தொடர்ந்து கோபத்தில் ஆர்த்தெழுந்தனர். அவர்கள்

1. நாங்கள் கேட்கக்கூடாதபடிக்குத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டார்கள்.

2. அவனுடைய வார்த்தைகளை மற்றவர்கள் கேட்காதபடிக்கு, உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டார்கள்.

3. எல்லாரும் அவன் மேல் பாய்ந்தார்கள்.

4. தீட்டானது எனக் கருதப்படும் எல்லாவற்றையும் எடுத்துச் செல்லும் நகரத்துக்குப் புறம்பே அவரை இழுத்துக் கொண்டு போனார்கள் (எண்ணாகமம் 15:35).

5. கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறவர்களுக்கு விதிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி அவரைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

இ. வசனம் 58. "சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்" யூதருடைய பிரமாணத்தின்படி, எப்பொழுதும் சாட்சிக்காரர் முதலாவது கல்லை எறிய வேண்டும் (உபாகமம் 17:7). இந்த சாட்சிக்காரர் தங்களுடைய மேல் வஸ்திரத்தைக் கழற்றினார்கள், இதனால் ஸ்தேவானைக் கல்லெறிவதற்கு அவர்களுக்கு மிகவும் இலகுவாயிருக்கும்.

தன் வாழ்க்கையின் அரும்பு நிலையிலிருந்த சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபன் ஸ்தேவானுடைய பிரசங்கத்திற்கும், அவன் கல்லெறியப்பட்டதற்கும் சாட்சியாக இருந்தான். ஐயமின்றி, அந்நாட்களில் எருசலேம் சபைக்கு விரோதமாக எழுந்த மிகுந்த துன்பத்துக்குக் காரண கர்த்தாக்களாயிருந்த முக்கியமானவர்களுள் இவனும் ஒருவனாக இருந்தான்.

ஈ. ஸ்தேவானின் மரணம் ஆதிச்சபையில் தனித்த ஓர் சம்பவமல்ல. யோவான் ஸ்நானன், யாக்கோபு, அந்திப்பா ஆகியோர் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தம் இரத்த சாட்சிகளானார்கள் (மத்தேயு 14:9,10; அப்போஸ்தலருடைய நடபடிகள் 12:1,2; வெளிப்படுத்தின விசேஷம் 2:13). முதல் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் பலரும், அப்போஸ்தலனாகிய பவுலும் உட்பட எண்ணிறந்த மற்றவர்கள் கொடுங்கோலாளர்களினால் இரத்த சாட்சிகளானார்கள் என்பதை பாரம்பரிய வரலாறுகள் நமக்குக் கூறுகின்றன. (2 தீமோத்தேயு 4:6-8, 16-18). சமீபகால வரலாற்றின்படி சீனா, ஐரோப்பா, தென் அமெரிக்கா, மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கிறிஸ்துவுக்காக அநேகர் இரத்த சாட்சிகளாக மரித்திருக்கிறார்கள்.

3. ஸ்தேவான் தன்னைக் கல்லெறிந்தவர்களை மன்னித்தான் (7:59-8:1).

அ. வசனம் 59. "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்." அவர்கள் ஸ்தேவானைக் கல்லெறிந்த வேளையில், தன்னுடைய ஆவியை இயேசு ஏற்றுக்கொள்ளுமாறு ஜெபித்துக் கொண்டிருந்தான். விரைவில் அவனுடைய ஆவி மரித்த சரீரத்தை விட்டுப் பிரிந்து, "பரலோகப் பரதீஸில்" இயேசுவோடு கூட இருக்கும்படி சென்றடையும் என்பதை அவன் அறிந்திருந்தான் (2கொரிந்தியர் 5:8; பிலிப்பியர் 1:21-23).

ஸ்தேவானைக் கல்லெறிதல் (அப்போஸ்தலர் 7:54-8:1)

ஆ. வசனம் 60. "ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்." ஸ்தேவானின் இந்த இறுதி வார்த்தைகள், பொல்லாத மனுஷரின் கரத்தினால் சிலுவையிலறையப்பட்டு, மரித்த இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒத்ததாகும். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" (லூக்கா 23:34). தன்னைத் தூக்கினவர்களுக்கு ஸ்தேவான் செய்ததும், சொன்னதும் ஆதிச் சபையில் நிலவிவந்த இயேசுவின் இந்தப் போதனைகளுக்கு இசைந்திருந்தது. "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; ... உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத்தேயு 5:43,44).

இ. வசனம் 60. அவனோ, "நித்திரையடைந்தான்." தன்னைத் தூக்கினவர்களின் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என இயேசுவை நோக்கி ஜெபித்துவிட்டு ஸ்தேவான் மரித்தான். ஒருவர் மரித்தார் என அர்த்தங்கொள்ளும் விதத்தில், "நித்திரையடைந்தான்" என்னும் பதம் வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளது. லாசரு மரித்துப் போனான் என்பதை அறிந்த பிற்பாடு, இயேசு தமது சீஷர்களை நோக்கி "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்றார் (யோவான் 11:11). பவுல் அந்தியோகியாவிலுள்ள ஜனங்களோடு பேசியபொழுது, "தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ் செய்த பின்பு நித்திரையடைந்தான்" என்றார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:36).

ஈ. வசனம் 8:1. "அவனைக் கொலை செய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான்." அப்போஸ்தலர் நடபடிகளின் ஆக்கியோனான லூக்கா, பரிசுத்தவான்கள் அனைவராலும் வெகுவிரைவில் "அப்போஸ்தலனாகிய பவுல்" என அறியப்படப்போகிறசவுலைஅறிமுகப்படுத்துவதற்கு ஸ்தேவான்மரித்தசம்பவத்தைப் பயன்படுத்துகிறார். சவுல், ஸ்தேவானின் பிரசங்கத்தைக் கேட்டு; அவருடைய சாட்சியினிமித்தம் கல்லெறியுண்டு மரித்ததைக் கண்டு; இயேசு ஜீவிக்கிறார், அவர் பரலோகத்தில்பிதாவின்வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என உரிமை பாராட்டியததையும் கேட்டதினால், ஐயமின்றி, தமக்கு வீதியில் கர்த்தராகியஇயேசுவைத்திடீரென சந்திப்பதற்கான ஆயத்தங்கள்நடந்துவிட்டன. (அப்போஸ்தலருடைய நடபடிகள் 9:1-6).

உ. தேவன் தமது ஜனங்களை நேசிக்கிறார். அவர்கள் எங்கு சென்றாலும் அவர்களைக்கண்காணிக்கிறார் இருப்பினும், அநேகந்தடவைகளில்தம்முடையபரிசுத்தவான்களை எப்பாடுகளுக்கும்,பொல்லாதமனுஷரால் கொல்லப்படுவதற்கும்அனுமதிப்பதின்மூலம் தம்முடை நித்திய நோக்கத்தை கிறிஸ்துவில் நிறைவேற்றுகிறார்.

1. யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு இழைத்த தீமையைத் தேவன், முழு இஸ்ரவேல் ஜாதிக்கும் இரட்சிப்பாக முடியப்பண்ணினார் (ஆதியாகமம் 50:19,20; மேலும் காண்க ஆதியாகமம் 37:17-28).

2. ஸ்தேவானின் மரணத்தைத் தொடர்ந்து வந்த துன்பத்தினிமித்தம் விசுவாசிகள் அனைவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறுண்டுபோய், இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். கேட்டவர்கள் கர்த்தரிடம் திரும்பினார்கள் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:1,4).

ஸ்தேவானைக் கல்லெறிதல்
(அப்போஸ்தலர் 7:54-81)

3. மூர்க்க மனுஷரால் கல்வாரியில் கிறிஸ்து மரித்திருக்காவிட்டால், நம்மில் ஒருவரும் நம்முடைய ஆத்துமாவில் இரட்சிப்பையும்; பொல்லாங்களின் வல்லமையிலும், ஆளுகையிலுமிருந்து விடுதலை யைபும் கண்டடைந்திருக்க முடியாது அன்றோ!

முடிவுரை

அ. ஸ்தேவானுடைய பிரசங்கத்தையும்; இயேசுவானவரே கிறிஸ்து என்றும், அவர் பிதாவாகிய தேவனுக்குச் சமமானவர் என்றும் அவர் உரிமை பாராட்டியதையும் கேட்ட எருசலேமின் ஜனத்திரள் அவரைக் கல்லெறிந்து கொன்றார்கள். அவர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை, அவருடைய பின்னடியார்களின் சாட்சியையும் விசுவாசிக்கவில்லை. இவ்விதம் சம்பவிக்கும் என இயேசு கூறியிருக்கிறார்: "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல .. அவர்கள் என்னைத் துன்பப்படுத்தின துண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" (யோவான் 15:20). தேவனுடைய அநாதி நோக்கம் கிறிஸ்துவில் நிறைவேறும்படியாக, அநேகந்தரம் நாம் துன்பப்படவும், ஏன், கொல்லப்படவுங் கூட நாம் அனுமதிக்கப்படுகிறோம்.

ஆ. ஸ்தேவானைப் போல நாமும் துன்பம் எதிர்ப்படும் வேளையிலும் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:19,20,29) தொடர்ந்து சுவிஷேத்தைப் பிரஸ்தாபிக்க வேண்டும். நம்முடைய இயேசுவே தேவன்; அவரே கிறிஸ்து, "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" (மத்தேயு 16:16) எனத் தைரியமாகவும், வெளியரங்கமாகவும் அறிவிப்பதின் நிமித்தம் நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களையும் நாம் தொடர்ந்து மன்னித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

பிலிப்பும், மாயவித்தைக்காரனாகிய சீமோனும்

(அப்போஸ்தலர் 8:9-23)

முன்னுரை

அ. மந்திரசக்தியைக் காட்டிலும் இயேசுவின் வல்லமை மிகப் பெரிது.

ஆ. ஸ்தேவான் கல்லெறியுண்டு, கொல்லப்பட்ட நாளில், எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற சீஷர்கள் யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டு போனார்கள். சிதறிப் போனவர்கள் எங்குந் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். எருசலேம் சபையில் உதவியாளராக இருந்த பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். அவருடைய ஊழியத்தில் அற்புத அடையாளங்கள் நடந்தன. அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். இங்குதான் மாயக்காரனாகிய சீமோனின் சரிதம் நிகழ்ந்தது.

1. மந்திர சக்தியைப் பார்க்கிலும் இயேசுவின் வல்லமை மிகப்பெரிது (8:9-13).

அ. வசனம் 9. "மாயவித்தை" செய்தான். சீமோன் ஜனங்களை ஏமாற்றும்படியாக மந்திரக் கலைகளையும், மாயவித்தைகளையும் செய்து கொண்டிருந்தான். அவன் தன்னைப் பெரியவனென்று சொல்லி, ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணினான்.

ஜனங்கள் அவனை மனுஷப்பிறவிக்கு மேம்பட்டவனாகக் கருதினார்கள். இருப்பினும், அவன் மற்ற அநேகப் புறஜாதி மந்திரவாதிகளைப் போல தீய ஆவிகளுடனும், பிசாசின் வல்லமைகளோடும் தொடர்பு வைத்திருக்கவில்லை.

ஆ. வசனம் 10. மந்திரக்கலைகளையும், மாயவித்தைகளையும் கண்டதினிமித்தம் சீமோனைப் பின்பற்றின ஜனங்கள் இவ்விதம் வியந்து கூறினார்கள்: "தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான்" அவர்கள் உண்மையிலேயே சீமோன் ஓர் கடவுள் என எண்ணினார்கள். ரோம ஏகாதிபத்தியத்தில் சக்கரவர்த்திகள் தங்களுடைய அரசவையில் எண்ணிறந்த மந்திரவாதிகளை ஆலோசகர்களாக வைத்திருந்தனர். மேலும், மந்திரவாதிகளுக்கு தெய்வீக சக்தி இருப்பதாக எண்ணினார்கள்.

இ. இருப்பினும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பழங்கால ஆலயங்களிலும், அரண்மனைகளிலும், புண்ணியஸ்தலங்களிலும் மந்திரவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த பேசும் குழல்கள், சுரங்கவாயில்கள், மற்றும் இதரக் கருவிகளைக் கண்டெடுத்துள்ளனர். மேலும், மக்களைச் கண்டிபிழுக்கும் விதத்தில் உபயோகப்படுத்தப்பட்ட அறிதுயில் கலை (ஹிப்நாட்டிஸம்), மயக்க மருந்து போன்றவைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சீமோனின் பெரிதான சக்திக்கான உண்மை உறைவிடம் இவைகளே. இன்றைய பலத்த மந்திரசக்தியின் உறைவிடமும் இவைகளே.

ஈ. மந்திரக் கலைகளும், மாய விந்தைகளும் அநேக ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணி, ஆச்சரியத்துக்குள்ளாக்கிற்று. இக்காரணத்தினாலேயே அநேகர் சீமோனைப் போன்ற மந்திரவாதிகளைப் பின்பற்றுவதைத் தெரிந்தெடுத்து, அவர்களுடைய சேவைக்கு ஊதியமும் அளிக்கின்றனர். இருப்பினும், வேதாகமம் மாயவித்தையைக் கண்டிக்கிறது. "சூனியக்காரர் .... அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் *21:8*).

பிலிப்பும், மாயவித்தைக்காரனாகிய சீமோனும் (அப்போஸ்தலர் 8:9-23)

உ. வசனம் 12. தேவனுடைய ராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்த பொழுது, ஜனங்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். அவர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்துக்குத் தங்களை அர்ப்பணித்தது, தங்களுடையவிசுவாசத்தை மாயவித்தைக்காரனான சீமோனிலிருந்து, இயேசுவுக்குநேரே மாற்றியதைக் காண்பிக்கிறது.

ஊ. வசனம் 13. இவற்றைக் காட்டிலும் முக்கியம் வாய்ந்தது யாதெனில், மாயவித்தைக்காரனான சீமோன் பிலிப்புவினால் இயேசுவின் நாமத்தில் (அதிகாரம்) நடந்த அடையாளங்களையும், பெரிய அற்புதங்களையும் கண்டபொழுது அவனும் இயேசுவை விசுவாசித்தான். சீமோனும், அவனைப் பின்பற்றின ஜனங்கள் அனைவரும், மந்திர சக்தியைக் காட்டிலும் இயேசுவின் வல்லமைதான் மிகப்பெரிதுஎன்பதைக்கண்டுகொண்டார்கள். இது தந்திரங்கள், கற்பனைகளின் சக்தியோ, அல்லது, அறிதுயில் மயக்க நிலையோ, வெறியூட்டும் மருந்துகளினால் உண்டாகும் மயக்கமோ அல்ல, உண்மையான வல்லமை இயேசுவின் வல்லமையே.

எகிப்திலிருந்து தமது ஜனங்களை விடுதலையாக்கும்படி கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் அனுப்பியபொழுது, பார்வோனின் மந்திரவாதிகளின் வல்லமைக்கு மேலாகத் தமது வல்லமையை விளங்கப்பண்ணினார். ஆரோன் தன்னுடையகோலை தரையின்மேல் போட்டவுடன், அது பாம்பாக மாறிற்று.

பார்வோனுடைய மந்திரவாதிகளும் மந்திரசக்தியினால் அதேமாதிரி செய்துகாட்டினர். இருப்பினும், அந்த மந்திரவாதிகளின் கோல்களை ஆரோனின் கோல் விழுங்கிற்று (யாத்திராகமம் 7:8-13). இவ்வண்ணமாகவே, மந்திர சக்தியைக் காட்டிலும் இயேசுவின் வல்லமை மிகப் பெரியதாகும்.

2. இயேசுவின் வல்லமை ஒவ்வொரு விசுவாசிக்குமுரியது (8:14-17).

அ. வசனம் 14. "பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்." எருசலேம் சபை பேதுருவையும், யோவானையும் பிரதிநிதிகளாக அனுப்பினார்கள். புதிய விசுவாசிகளை ஊக்குவிக்கும்படியாகவும், அவர்களுடைய விசுவாசத்தையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவையும் கட்டியெழுப்புவதில் உதவி செய்யும்படிக்கும் அவர்கள் அனுப்பப்பட்டார்கள் சீரியாவில் அந்தியோகியாவிலுள்ளவர்கள் இயேசுவில் விசுவாசம் வைக்கத் துவங்கியபொழுது எருசலேம் சபை இவ்விதமே செய்தது. விசுவாசிகளை ஊக்குவிக்கவும், இயேசுவைக் குறித்தும், அவர்கள் கண்டறிந்த புதிய விசுவாசத்தைக் குறித்தும் கூடுதலாக அவர்களுக்குப் போதிக்கவும் அவர்கள் பர்னபாவை அனுப்பினார்கள் (அப்போஸ்தலர்கள் 11:22).

ஆ. வசனம் 15. யோவானும், பேதுருவும் வந்த பொழுது, அவர்கள் பரிசுத்த ஆவி (ஞானஸ்நானம்) பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்கள். இரட்சிக்கப்பட்ட பிறகு உடனே பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெறுவது ஆதிச் சபையில் முக்கியமான விஷயமாயிருந்தது.

1. சவுல் மனந்திரும்பிய பிறகு உடனே, "பார்வையடையும்படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் (பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படும்படிக்கும்)" இயேசுவானவர் அனனியாவை அனுப்பினார். (அப்போஸ்தலர் 9:17).

பிலிப்பும், மாயவித்தைக்காரனாகிய சீமோனும்

(அப்போஸ்தலர் 8:9-23)

2. கொர்நேலியுவின் வீட்டார் இயேசுவை விசுவாசித்த உடனே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 10:44-46).

3. பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளைக் கண்டு வந்தனஞ் சொன்னபின் அவர்களைக் கேட்ட முதல் கேள்வி இதுவே: "நீங்கள் (இயேசுவில்) விசுவாசிகளான போது, பரிசுத்த ஆவியைப் (ஸ்நானத்தை) பெற்றீர்களா?" (அப்போஸ்தலர் 19:2).

இ. ஆதிச் சபையில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் முக்கியத்துவம் பெற்றிருந்ததின் காரணம், அசதாரணமான ஆவியின் பெலத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாகவேயாம். "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்" (அப்போஸ்தலர் 1:8). இந்தப் பெலன்தான் விசுவாசிகள் அற்புத, அடையாளங்களுடன் சுவிசேஷத்தை அறிவித்து இயேசுவுக்கு சாட்சியாக இருக்கும்படிச் செய்கிறது (மாற்கு 16:20).

ஈ. "பெலன்" என்பதின் அர்த்தம், அற்புதபெலன், வல்லமை, ஆற்றல், பலம், அற்புதசக்தி, இயற்கைக்குமேம்பட்டது, தேவனுடைய பேராற்றல் எனப் பலவாறாகும். அப்போஸ்தலர்களை சமாரியாவுக்கு அனுப்பிய எருசலேம் சபை "இயேசுவின் வல்லமை" ஒவ்வொருவிசுவாசிக்கும் உரியது என்பதை அறிந்திருந்தது.ஆதிச்சபையில் உள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த வல்லமை உரியதாயிருந்தது.

இன்றைய சபையின் ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த வல்லமை உரித்தானதே!

உ. வசனம் 15. "அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல்" இருந்தார்கள். இதன் அர்த்தம் யாதெனில், அவர்கள் கற்றறிந்திராத அந்நிய பாஷையில் பேசும் ஆரம்ப அடையாளத்துடன் அருளப்படும் பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தை அவர்களில் ஒருவரும் பெற்றிருக்கவில்லை. அவர்கள் இயேசுவை விசுவாசித்து, தண்ணீர் ஞானஸ்நானத்துக்குக் கீழ்ப்படிந் திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவது அவசியமாயிருந்தது. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு எதைச் சொன்னாரோ அதற்கு இது ஒத்திருந்தது: "நீங்கள் மனந்திரும்பி.... (தண்ணீரில்) ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் 2:38).

ஊ. வசனம் 17. "அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்." தங்கள் கைகளை விசுவாசிகள் மேல் வைத்து, பரிசுத்த ஆவியினால் அவர்களுக்கு ஸ்நானம் கொடுக்க அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் இருந்திருக்கிறது என்பது இதன் அர்த்தமல்ல. அபிஷேகிக்கிறவர் இயேசுவே (அப்போஸ்தலர் 2:33). பெந்தெகொஸ்தே நாளில் (அப்போஸ்தலர் 2:1-4) அல்லது கொர்நேலியுவின் வீட்டில் (அப்போஸ்தலர் 10:44-46) விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு யாரும் அவர்கள் மேல் கைகளை வைக்கவில்லை. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு விசுவாசம் உண்டாகும்படி விசுவாசிகளை ஊக்குவிப்பதற்கு இது ஒரு வழியாக இருந்தது. இந்நாட்களில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நாடுவோருக்கு சபைத் தலைவர்களும், இதர விசுவாசிகளும் இவ்விதமே செய்ய வேண்டும். இன்னும் அவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் ஜெபம் பண்ணும் மொழியிலேயே சத்தமாக ஜெபிக்க வேண்டும்.

பிலிப்பும், மாயவித்தைக்காரனாகிய சீமோனும்

(அப்போஸ்தலர் 8:9-23)

3. இயேசுவின் வல்லமை பணத்தினால் வாங்க முடியாததோர் ஈவாகும் (8:18-23).

அ. வசனம் 18. "பரிசுத்த ஆவி தந்தருளப் படுகிறதைச் சீமோன் கண்டான்." சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதை சரியான விதத்தில் சீமோன் காணவில்லை. அநேகந் தடவைகளில் சிலர் சற்று உணர்ச்சிவசப் படுவதுண்டு. தாங்கள் கற்றறிந்திராத மொழியில் பேசக் கூடிய ஆவியை அவர்கள் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதுதான் அவன் அறிந்து கொண்டிருந்த விஷயமாயிருந்தது.

ஆ. பவுல் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது அந்நிய பாஷையில் பேசினார் என்று லூக்கா எழுதவில்லை. இருப்பினும், பரிசுத்த ஆவியினால் அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பொழுது அந்நிய பாஷையில் பேசினார் என்பதை நாமறிவோம், ஏனெனில் பின் நாட்களில் அவர் இவ்விதம் கூறுகிறார்: "உங்களெல்லாரிலும் (கொரிந்தியர்கள்) நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்" (1கொரிந்தியர் 14:18). அவர் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பொழுது அந்நிய பாஷையில் பேசியிருந்தாலொழிய அந்நிய பாஷையில் ஜெபித்திருக்க முடியாது.

இ. வசனம் 19. "நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் (ஞானஸ்நானம்) பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான்." என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைக் குறித்து சீமோனுக்கு சரியான அபிப்பிராயம் இல்லை. பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டு அவன் இயேசுவில் விசுவாசம் வைத்திருக்கக் கூடும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அவனுக்கு சரியான விளக்கம் இருக்கவில்லை.

ஈ. வசனம் 20. "உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது." இதன் உண்மையான அர்த்தம், உன்னுடைய பணம் (வெள்ளி) உன்னோடேகூட (அக்கினி) கடலில் அழிந்துபோகக்கடவது என்பதேயாம். பூலோக ஐசுவரியங்கள் பரலோக ஆசீர்வாதங்களை வாங்க முடியாது. இவை தேவனிடமிருந்து இலவசமாகப் பெறப்படும் ஈவுகளாகும். தேவ ஆசீர்வாதங்களைப் பணத்தினால் வாங்க முடியும் என எண்ணுகிறவர்கள், நித்திய அக்கினி எரியும் நரகத்தில் தங்களுடைய பணத்தோடு கூட முடிவடைவார்கள். ஏனெனில், அவர்களுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையானதாக இருப்பதில்லை, அவர்கள் தேவனை மதிப்பதுமில்லை, தேவனுடைய வழிகளை அறிந்து கொள்வதுமில்லை.

உ. வசனம் 20,21. "தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் ... இந்த விஷயத்திலே (ஊழியத்திலே) உனக்குப் பங்குமில்லை, பாகமுமில்லை" பேதுருவின் இந்தக் கடிந்து கொள்ளுதல், நமக்கு இரண்டு காரியங்களைக் குறிப்பாய்த் தெரிவிக்கிறது: 1. எது சரியானதோ அதை மாயவித்தைக்காரனான சீமோன் செய்திருப்பானேயாகில், மற்ற விசுவாசிகளைப் போல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கக் கூடும். மேலும், 2. மற்ற விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்களுக்குச் செய்யும் ஊழியத்தில் அவனுக்குப் பங்கும் பாகமும் இருந்திருக்கக் கூடும்.

பிலிப்பும்,
மாயவித்தைக்காரனாகிய
சீமோனும்

(அப்போஸ்தலர் 8:9-23)

ஊ. இந்தக் காரணத்தினால் விளங்கிக் கொள்ள வேண்டியது யாதெனில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிற விசுவாசிகள், ஆவியின் ஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய மற்றவர்களுக்காக ஜெபிக்கக் கூடும். விசுவாசிகளுக்கு, விசுவாசிகள் ஊழியஞ் செய்யலாம். அவர்களுக்காக அப்போஸ்தலர், போதகர், தீர்க்கதரிசி, அல்லது சுவிசேஷகர் வரும்படி இவர்கள் காத்திருக்க வேண்டியதில்லை!

எ. வசனம் 23. "நீ கசப்பான பிச்சிலும், பாவகட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்." இங்கே கசப்பு என்பது, கசப்பின் ஆழமான வேரைக் குறிக்கிறது. அவனுடைய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்திருப்பவர்களை அழிக்கும் படியான வழிகளை சீமோன் சிந்தித்துக் கொண்டிருந்திருக்கலாம். சமாரியாவின் ஜனங்கள் அவனைப் பின்தொடர்ந்ததை நிறுத்தியிருந்ததினால் அவன் இருதயத்தின் ஆழத்தில் சினமடைந்திருக்கலாம். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை இயேசுவுக்கும், அவருடைய அப்போஸ்தலர்களுக்கும் நேராகத் திருப்பியிருந்தார்கள். இப்பொழுது அவன் தெய்வீக சக்தியாகக் கருதப்படவில்லை. சீமோனுடைய மந்திர சக்தியைக் காட்டிலும், இயேசுவின் வல்லமை மகா பெரிது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

முடிவுரை

அ. இயேசுவின் வல்லமை மந்திர சக்தியை விடப் பெரியது. இயேசுவின் வல்லமையை அவருடைய பின்னடியார்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது பெற்றுக் கொள்ளுகிறார்கள். இருப்பினும், தங்களுடைய பணத்தினால், அந்தஸ்தினால் அல்லது செல்வாக்கினால் ஆவிக்குரிய வரங்களையும், தேவ ஆசீர்வாதங்களையும் வாங்கக் கூடும் என அவர்கள் சிந்திக்கக் கூடாது. இவைகள் இலவசமாகப் பெறும் ஈவுகள், வாங்க முடியாதவைகள்.

ஆ. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் மற்றவர்கள் இந்த ஈவைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு அவர்களுக்காக ஜெபிக்கக் கூடும். இதற்காக, போதகர், தீர்க்கதரி, சுவிசேஷகர் அல்லது அப்போஸ்தலர் வர வேண்டிய அவசியமில்லை.

பிலிப்பும் எத்தியோப்பிய அண்ணகனும்

(அப்போஸ்தலர் 8:26-36)

முன்னுரை

அ. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அறிந்து கொள்ளும்படியான தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும்படி இயற்கைக்கு மேம்பட்ட விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியத்தின் மூலம் விசுவாசிகள் அனுப்பப்படுகிறார்கள்.

ஆ. ஸ்தேவானின் மரணத்திற்குப் பிற்பாடு, எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பமுண்டாயிற்று. சவுல் வீடுகள்தோறும் நுழைந்தான். அவன் விசுவாசிகளைக் கண்டுபிடித்து, அவர்களை இழுத்துக்கொண்டு போய் காவலில் போட்டான். இதனிமித்தம் அப்போஸ்தலர் தவிர, விசுவாசிகள் யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். இருப்பினும், இதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். அவருடைய ஊழியம் சமாரியாவில் முடிந்த உடனே, கர்த்தருடைய தூதன் அவருக்குத் தரிசனமாகி, எத்தியோப்பிய அண்ணகனுக்கு ஊழியஞ் செய்யும்படியாக அவரை அனுப்பினான்.

1. விசுவாசிகள், ஊழியத்தில் இயல்நிலை மேம்பட்ட விதத்தில் வழிநடத்தப்படுகின்றனர் (8:26-29).

அ. வசனம் 26. கர்த்தருடைய தூதன் பிலிப்பை சந்தித்துப் பேசினார். அவர் அப்பொழுதுதான் சமாரியாவில் சுவிசேஷப் படையெடுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றியிருந்தார். இருப்பினும், தெற்கு நோக்கி, சரியான சாலையில்லாத வனாந்தர மார்க்கமாகப் போகும்படி தூதனால் பணிக்கப்பட்டதும், உடனடியாக அவர் புறப்பட்டார்.

ஆ. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு தூதர்கள் "பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" (எபிரெயர் 1:14). இந்த விஷயத்தில், சுவிசேஷ ஊழியத்தில் அவரை அசாதாரண விதத்தில் வழிநடத்தியதின் மூலம் தேவதூதன் பிலிப்புக்கு பணிவிடை செய்தான். பிலிப்பு காசாவுக்குப் போகும் வனாந்தர மார்க்கத்தை அடைந்த உடனே, இரதத்தில் வந்து கொண்டிருந்த எத்தியோப்பிய அண்ணகனைக் கண்டு ஆச்சரியப்பட்டார். தூதனின் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்த பிலிப்பு சரியான சமயத்தில் காசா செல்லும் சாலையை அடைந்தார்.

இ. வசனம் 27. முக்கியமானதோர் அலுவலன். இந்த அண்ணகன் எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியாயிருந்தான். இவன் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனும்; அதைப் பாதுகாக்கவும், வரவு செலவுகளைக் கவனிக்கவும் பொறுப்புடையவனுமாக இருந்தான்.

ஈ. வசனம் 27. இவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்குப் போயிருந்தான். இந்த அண்ணகன் தேவனுக்குப் பயந்திருந்த புறஜாதியானாயிருந்திருக்கலாம்.

பிலிப்பும் எத்தியோப்பிய அண்ணகனும்

(அப்போஸ்தலர் 8:26-36)

(யூத மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு, யூதரின் பிரமாணத்தை நிறைவேற்ற முயற்சிக்காத புறஜாதியான்). இதனிமித்தம், எருசலேம் தேவாலயத்தில் பணிந்து கொள்ளும்படி அவன் போயிருந்தான்.

உ. தேவதூதர்கள் விசுவாசிகளுக்குப் பணிவிடை செய்த இதர சம்பவங்கள் அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ளன:

1. சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அப்போஸ்தலர் இராத்திரியில் வெளியே கொண்டு வரப்பட்டார்கள் (5:19).

2. சிறைச்சாலையிலிருந்து பேதுரு வெளியே கொண்டு வரப்பட்டார் (12:7,11-15).

3. கப்பற்சேதத்திற்கு முன் பவுல் தைரியப்படுத்தப் பட்டார் (27:23,24).

ஊ. வசனம் 29. "ஆவியானவர்: பிலிப்புடனே சொன்னார்" இயல்நிலை மேம்பட்ட விதத்தில் விசுவாசிகளை வழிநடத்தும் ஊழியத்திற்காகத் தூதர்களைத் தேவன் அனுப்புவதோடு, வேறு சில முறைகளையும் பயன்படுத்துகிறார். அவை: தரிசனங்கள், சொப்பனங்கள், தீர்க்கதரிசனங்கள், நேரிடை சம்பாஷணைகள் போன்றவைகளாகும் (அப்போஸ்தலர் 9:10; 2:17; 13:1,2; 8:29). இந்தச் சம்பவத்தில், தூதன் மூலம் பேசிய பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவிடம், "நீ போய் அந்த இரத்துடனே சேர்ந்துகொள்" என்றார்.

2. இயல்நிலை மேம்பட்ட விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியம் ஆர்வத்துடன் பெற்றுக்கொள்ளப்படும் (8:30-34).

அ. வசனம் 30,31. மறுபடியும், தான் பெற்றுக்கொண்ட அசாதாரண நடப்புக்கு பிலிப்பு உடனே கீழ்ப்படிந்தார். இம்முறை பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவிடம் நேரிடையாகப் பேசினார். "அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டான்."

ஆ. வசனம்32-34. அண்ணகன் ஒருவேளை எருசலேமிலிருந்து புஸ்தகச் சுருளை வாங்கியிருக்கக்கூடும். இதிலிருந்து ஏசாயா 53:7,8 வசனங்களை வாசித்துக் கொண்டிருந்தான். பிலிப்பு ஆண்டவரால் நியமிக்கப்பட்டிருந்தபடியால், அவருடைய ஊழியத்தைப் பெற்றுக்கொள்ள அண்ணகன் ஆர்வமுடையவராயிருந்தார். "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?" என்று பிலிப்பு கேட்டபொழுது, அந்த வேத பகுதியைத் தனக்கு விளக்குமாறு அண்ணகன் கேட்டதுமன்றி, தன்னோடே இரதத்தில் உட்காரும்படி வேண்டிக் கொண்டான்.

இ. பிலிப்பு இரதத்துக்குள் பிரவேசித்ததும் அண்ணகன் ஆர்வத்துடன், "தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்?" என்றான். சொல்லப்பட்டவர் இவ்விதமாக இருந்தார்!

1. அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார்.

2. அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

3. அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது.

4. அவருடைய ஜீவன் எடுபட்டுப்போயிற்று, அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும்.

பிலிப்பும் எத்தியோப்பிய அண்ணகனும்

(அப்போஸ்தலர் 8:26-36)

ஈ. மக்கெதோனியாவுக்கு வரும்படி இராத்தரிசனத்தில் பவுல் இயல்நிலை மேம்பட்ட அழைப்பைப் பெற்றபிறகு, பிலிப்பு பட்டணத்தில் லீதியாளும், அவளுடைய வீட்டாரும் பவுலின் பிரசங்கத்தை ஆவலோடே பெற்றுக் கொண்டார்கள் (அப்போஸ்தலர் 16:9; 11-15). லீதியாள் சுவிசேஷச் செய்தியை ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, பவுலின் சுவிசேஷ குழுவுக்காகவும், சுற்றிலுமுள்ள இடங்களில் ஊழியஞ் செய்வதற்காகவும் தன்னுடைய வீட்டையே கொடுத்தாள்.

உ. பேதுருவின் தூதை கொர்நேலியுவின் வீட்டார் விருப்பத்தோடு பெற்றுக் கொண்டார்கள், ஏனெனில், அவரும் இயல்நிலை மேம்பட்ட விதத்தில் ஊழியத்தில் வழிநடத்தப்பட்டார் (அப்போஸ்தலர் 10:9-22). தன் உறவின் முறையாரையும், விசேஷித்த சிநேகிதரையும் கூடிவரப்பண்ணியிருந்த கொர்நேலியு பேதுரு வந்தவுடனே, "தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமுகத்தில் கூடியிருக்கிறோம்" என்றான் (10:24,33).

ஊ. தங்களுடைய அன்றாட அலுவல்களின் நிமித்தம் இடம் விட்டு இடம் செல்லும் விசுவாசிகள் இவ்விதக் கேள்விகளுக்குப் பதில் தேடும் அநேகரை நேருக்கு நேர் சந்திப்பதுண்டு: "வாழ்க்கையின் அர்த்தம் என்ன? வாழ்க்கைப் புயலை நான் எவ்விதம் மேற்கொள்ள முடியும்?"

அவர்கள் உங்களைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்து, ஆர்வமிக்க எதிர்பார்ப்புடன் உங்களுடைய பதிலுக்காகக் காத்திருப்பார்கள். அசாதாரண விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியங்களின் மூலம் உங்களை அனுப்பும்படி கர்த்தர் வாஞ்சிக்கிறார். பாழானதும், தனித்ததுமான வாழ்க்கைப் பாதையில் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும் உங்களுடைய அநேக நண்பர்கள், அயலகத்தார்கள், உறவினர்கள் ஆகியோரிடத்துக்கு உங்களை அனுப்பும்படி அவர் வாஞ்சிக்கிறார்.

3. இயல்நிலை மேம்பட்ட விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியாயிருக்கும் (8:35,36).

அ. தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அண்ணகன் கேட்டதிலிருந்து, இயேசுவை ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளும்படியான தீர்மானஞ்செய்யும்படி பிலிப்பு அண்ணகனை வழிநடத்தியிருக்கிறார் என நாம் ஊகிக்கக்கூடும். தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் அண்ணகனுடைய அறிக்கை இதுவாக இருந்திருக்கக் கூடும்:

1. கிறிஸ்துவில் அவர் பாவத்திற்காக நியாயந் தீர்க்கப்பட்டபொழுது அவருடைய பாவ சுபாவம் சிலுவையில் அறையப்பட்டு, வல்லமையற்றதாயிற்று.

2. கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்டார், தன்னை பாவத்துக்கும், பாவசுபாவத்துக்கும் மரித்தவராக எண்ணிக்கொள்கிறார்.

3. கிறிஸ்துவோடு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். இப்பொழுது இயேசு கிறிஸ்து மூலம் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார் (ரோமர் 6:3-13).

பிலிப்பும் எத்தியோப்பிய அண்ணகனும்

(அப்போஸ்தலர் 8:26-36)

இ. பேதுருவின் பிரசங்கத்தினால் இருதயத்தில் குத்தப்பட்ட எருசலேம் மக்கள், "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப்போஸ்தலர் 2:37) எனக்கேட்டார்கள். "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார். (அப்போஸ்தலர்2:38) ஐயமின்றி பிலிப்புஇதே தூதுடன் அண்ணகனுக்கு அறைகூவல் விடுத்திருக்கலாம்.

ஈ. விசுவாசி ஒருவர் அசாதாரண விதத்தில் ஊழியத்தில்வழிநடத்தப்படும்பொழுது, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை யாராவது ஒருவருக்கு அறிவிக்கப்போகிறார் என்பதை அறிந்திருக்கிறார். இயேசுவின் பிறப்பைப் பற்றி தேவதூதனால் உரைக்கப்பட்டதைப் போன்று இவரும், "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்நற்செய்தியைஉங்களுக்கு அறிவிக்கிறேன்... கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்"(லூக்கா 2:10,11) என அறிவிப்பார். ஒருவர் இயேசுவில் விசுவாசம் வைத்த பின்னர், உடனடியாகதண்ணீர்ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தல்பரிசுத்த ஆவியின்அபிஷேகத்தை ப்பெற்றுக்கொள்ளுதல்ஆகியவற்றின் அவசியம் பற்றி போதிக்கப்பட வேண்டும்.

உ. இரட்சிப்பு, தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின்ஸ்நானம்ஆகியவை ஆதிச்சபையில்விசுவாசிகள் அனைவரின் ஆவிக்குரியஆரம்ப அனுபவங்களின் மாதிரியாயிருந்தது.

இன்று நம்முடைய மாதிரியும் இதுவாகவே இருக்க வேண்டும் (காண்க அப்போஸ்தலர் நடபடிகள் 8:12-17; 9:17,18; 10:44-48; 19:1-7).

முடிவுரை

அ. நான் மருந்தகங்களிலும், மருத்துவமனைகளிலும் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, நான் சாட்சி கொடுத்திருந்த யாரேனும் ஓர் நோயாளி மரணத்தைச் சந்திப்பதற்கு சில நாட்களுக்கு, ஏன், சில நிமிடங்களுக்கு முன்னர் கூட ஆவியானவரால் அனுப்பப்பட்டதுண்டு. அசாதாரண விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியங்களில் அநேகந்தரம் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

ஆ. நாங்கள் ஊழியஞ்செய்து கொண்டிருந்த சபையிலுள்ள ஒருவர், ஓர் விசுவாசியின் கணவரும், இளம் வயதில் எதிர்பாராத விதத்தில் மரிக்கவிருந்தவருமான ஒருவருக்கு சாட்சி பகரும்படி அனுப்பப்பட்டதை நினைவு கூருகிறேன். அவர் ஜெபத்தில் தேவனோடு நேரத்தைச் செலவழித்து, ஆவியின் சத்தத்தைக் கேட்பதற்குக் கற்றறிந்திருந்தார். அவர் உடனடியாகத் தன்னுடைய ஊழியத்திற்காகச் சென்றார். அவர் போய்ச் சேர்ந்த பொழுது, அச்சகோதரன் இவருக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்.

இ. நமக்கு அறிமுகமானவர்கள், நண்பர்கள், அயலகத்தார், அல்லது உறவினர்களிடத்திற்கு, அசாதாரணமான விதத்தில் வழிநடத்தப்படும் ஊழியத்தின் மூலம் நம்மையுங்கூட தேவன் அனுப்புமாறு, அவரை நோக்கி வேண்டிக்கொள்வதற்கு நம்மெல்லாருக்கும் இதுவே நல்ல நேரமாகும். அசாதரணமான ஊழியத்தில் உங்களை வழிநடத்தும்படிக்கு, தூதன், தரிசனம், சொப்பனம், தீர்க்கதரிசன வார்த்தை, அல்லது நேரிடையான சம்பாஷணை போன்றதொரு முறையைக் கர்த்தர் பயன்படுத்தலாம்.

சவுலின் குணப்படுதலும், ஊழியத்திற்காக ஆயத்தப்படுதலும் (அப்போஸ்தலர் 9:1-19)

முன்னுரை

அ. இயேசுவானவர் சபையைத் துன்பப்படுத்தினவர்களுக்கு அறைகூவல் விடுத்து, அவர்களில் சிலரை ஊழியத்திற்கு அழைக்கிறார்.

ஆ. ஸ்தேவானைக் கல்லெறிவதற்கும், கொலைசெய்கிறதற்கும் சவுல் சம்மதித்திருந்தான். அதன் பின் அவன் வீடுகள் தோறும் நுழைந்து, கிறிஸ்துவை கர்த்தரும், இரட்சகருமாக அறிக்கை செய்த புருஷரையும், ஸ்திரீகளையும் காவலில் போடுவித்தான். இதினிமித்தமாக, அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். பின்பு சவுல் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர்களைக் கூட்டிக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் அவன் யாரையாகிலும் கண்டுபிடித்தால் அவர்களைக் கைதியாக எருசலேமுக்குக் கொண்டு வருவான். சவுல் தமஸ்குசாலையில் பிரயாணம் செய்த பொழுது, உயிர்த்தெழுந்து மகிமையடைந்த கிறிஸ்துவால் அறைகூவலிடப்பட்டார்.

1. சபையைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு இயேசு அறைகூவல் விடுக்கிறார் (9:3-9).

அ. வசனம் 3. “சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது.” சவுல் தமஸ்கு சாலையில் பிரயாணமாய்ச் சென்றபோது மத்தியான வேளையில், சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது.

இந்த ஒளி கர்த்தராகிய இயேசுவின் சமுகத்தோடும், மகிமையோடும் சம்பந்தப்பட்டதாகும் (1கொரிந்தியர் 9:1; 15:8). இயேசுவானவர் மறுரூபமானபோது உண்டான தேவமகிமையோடும் (மத்தேயு 17:5), இயேசுவின் பிறப்பை அறிவித்த பரமசேனையின் சமுகத்தோடும் இந்த மகிமை சம்பந்தப்பட்டதாகும் (லூக்கா 2:9).

ஆ. வசனம் 4. “அவன் தரையிலே விழுந்தான்” பவுலின் இந்த பிரதிகிரியை, தேவனுடைய மகிமையை நேருக்கு நேர் சந்தித்தவர்கள் எதைச் செய்தார்களோ அதற்கு ஒத்ததாயிருந்தது. அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் மகிமையைத் தரிசித்தபோது, செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:17). இயேசு மறுரூபமானபோது தேவமகிமையைக் கண்ட சீஷர்கள், “முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்” (மத்தேயு 17:6).

இ. வசனம் 4, 5. “நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்.” இயேசுவின் இந்தக் கேள்வி, சவுல் ஏற்கெனவே எருசலேமில் எதைச் செய்தாரோ, தமஸ்குவில் எதைச் செய்யவிருந்தாரோ அதோடு சம்பந்தப்பட்டதாயிருந்தது. அவர் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைப் பின்தொடர்ந்து, விரட்டியடித்துக் கொண்டிருந்தார். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள், உண்மையில் இயேசுவையே துன்பப்படுத்துகிறார்கள் (லூக்கா 10:16). ஆகவேதான் இயேசு இவ்விதம் கேட்கிறார்: “சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்.”

சவுலின் குணப்படுதலும், ஊழியத்திற்காக ஆயத்தப்படுதலும் (அப்போஸ்தலர் 9:1-19)

ஈ. வசனம் 5, 6. "ஆண்டவரே நீர் யார்?" தெய்வீக நபர் ஒருவரால்தான் அழைக்கப்படுவதை சவுல் அறிந்திருந்தார். பிரகாசமான வெளிச்சத்தினிமித்தம் தான் தேவசத்தத்தைக் கேட்பதாக அவர் எண்ணியிருந்திருக்கலாம். இக்கேள்விக்கு உடனடியான பதில் கொடுக்கப்பட்டது: "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே," அப்போஸ்தலர் 22:10-இல் பவுல் பகர்ந்த சாட்சியைப் பார்ப்போமானால், அவர் கொடுத்த மாறுத்தரவைக் கவனிக்கலாம்: "ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும்?" இக்கேள்விக்கு இயேசுவானவரின் மறுமொழியாவது: "நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்."

உ. வசனம் 7-9. "அவனுடனே கூடப் பிரயாணம் பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்." உண்மையில் சவுல் இயேசுவைக் கண்டான், அவர் என்ன சொன்னார் என்பதை விளங்கிக் கொண்டான். இருப்பினும் அவரோடிருந்தவர்கள் இயேசுவின் சத்தத்தை மாத்திரமே கேட்டார்கள். இயேசுவைக் காணவுமில்லை, அவர் என்ன சொன்னார் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளவுமில்லை (அப்போஸ்தலர் 22:9). சவுல் பார்வையற்றவன் ஆனதினிமித்தம், அவனோடு கூட இருந்தவர்கள் அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். அங்கே அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.

ஊ. தன்னுடைய மூன்று நாட்கள் தனிமையில், சவுல் சிந்திக்கவும், ஜெபிக்கவும் வேண்டியது அதிகமாயிருந்தது. உயிர்தெழுந்து, உயர்த்தப்பட்ட கிறிஸ்துவால் அவர் சவாலிடப்பட்டார். இப்பொழுது அவர் சிந்திப்பதில் முழுமையான திருப்பம் உண்டாயிற்று:

1. சவுலுக்கு இயேசுவையும், அவரைப் பின்பற்றுகிறவர்களையும் பற்றி தவறான எண்ணமிருந்தது - இயேசுவே தேவனுடைய உண்மையான கிறிஸ்து, அவரைப் பின்பற்றுகிறவர்கள் இஸ்ரவேலின் உண்மையான புத்திரர்கள்.

2. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசினங்களைப் பற்றி அவருக்குத் தவறான எண்ணமிருந்தது. அவரால் துன்புறுத்தப்பட்ட இயேசு தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவராவார்.

3. அவருக்கு தேவனைப் பற்றிய வைராக்கியம் இருந்தது, ஆனால் அது தவறான வழிநடத்துதலாயிருந்தது - நீதியை அடைந்து கொள்வதற்கான தங்களுடைய முயற்சியில் சட்டதிட்டங்களை சார்ந்து கொள்வோரின் மத்தியில் சாதாரணமாகக் காணப்படுவது இதுவே.

4. கிறிஸ்துவுக்கும், அவரைப் பின்செல்கிறவர்களுக்கும் விரோதமாக அவர் செய்து கொண்டிருந்தது தேவதூஷணமாகும். அவர் தேவகுமாரனோடு யுத்தஞ் செய்து கொண்டிருந்தும், அவரைச் சபித்துக் கொண்டுமிருந்தார்.

எ. இயேசுவையும், அவரைப் பின்பற்றுகிறவர்களையும்துன்பப்படுத்துகிறவர்கள், உயிர்த்து உயர்த்தப்பட்ட கிறிஸ்துவினால் சவாலிடப்படுவதை எதிர்பார்க்கக் கூடும். அவ்விதம் நிகழும் போது, அவர்கள் கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து, அவரை ஆராதிப்பார்கள்.

சவுலின் குணப்படுதலும், ஊழியத்திற்காக ஆயத்தப்படுதலும் (அப்போஸ்தலர் 9:1-19)

இதுவரை அவர்கள் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரோடு யுத்தஞ் செய்து, அவரை சபித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை உணருவார்கள். இந்த வேளையில் கிறிஸ்துவால் சவாலிடப்படும் சிலர் இந்தக் கூட்டத்தில் இருக்கலாம்!

2. தமது சபையை துன்புறுத்திக் கொண்டிருந்த சிலரை இயேசு ஊழியத்திற்கு அழைக்கிறார் (9:10-16).

அ. வசனம் 10. ஆதிச் சபையிலிருந்த அநேகக் கிறிஸ்தவர்களைப் போன்று அனனியாவும் கர்த்தருடைய சத்தத்தை அறிவதற்குக் கற்றிருந்தான். (யோவான் 10:4). அசாதாரணமான ஊழியத்திற்கென்று அழைக்கப்படுவதற்கு அவர்கள் பழக்கப்பட்டிருந்தனர். எனவேதான், இயேசு அனனியாவின் தரிசனத்தில் தோன்றி, பெயரைக் கூப்பிட்டதும், உடனடியாக "ஆண்டவரே, இதோ அடியேன்" என்றான்.

ஆ. வசனம் 11, 12. நேர்த்தெரு என்னப்பட்ட தெருவிலுள்ள யூதாவின் வீடு. இந்நாள் வரைக்கும் தமஸ்குவில், நகரத்தின் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் வரைக்கும் செல்லுகின்ற நேர்தெரு உள்ளது. இத்தெருவில் யூதாவின் வீடு அமைந்திருந்தது. இங்குதான் தர்சு பட்டணத்தானாகிய சவுல் கடந்த மூன்று நாட்களாக இருந்தான். அனனியா அங்கு சென்று, அவனுக்கு ஊழியஞ் செய்ய வேண்டியதிருந்தது.

இ. சவுலுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு கட்டளை கொடுத்த ஆண்டவரின் தரிசனத்தை அனனியா கண்டு கொண்டிருந்த அதே வேளையில், அனனியா தன்னிடத்தில் வருவதாகவும், தான் பார்வை அடைவதாகவும் சவுல் தரிசனங் கண்டு கொண்டிருந்தான். இது, கொர்நேலியுவுக்கும், அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கும் என்ன நேரிட்டதோ அதற்கு ஒப்பான சம்பவமாகும் (அப்போஸ்தலர் 10:1-23). ஊழியஞ் செய்வதற்கு மட்டுமல்ல, ஊழியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஜனங்களை ஆயத்தப்படுத்த கர்த்தர் உண்மை உள்ளவராயிருக்கிறார்.

ஈ. வசனம் 13-15. தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு, தான் ஊழியஞ் செய்ய வேண்டுமென்பதை அனனியா கேட்டதும், அதற்கு மறுப்புத் தெரிவித்தான். எருசலேமிலுள்ள சபையைத் துன்பப்படுத்தினவனும், அதே காரியத்தை தமஸ்குவிலும் செய்யும்படிக்கு வந்தவனும் சவுல்தான் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆதலால், "நீ போ" என இரண்டாம் தரம் கர்த்தர் கட்டளை கொடுக்க வேண்டியதும், வேறுசில விளக்கங்களைக் கொடுக்க வேண்டியதும் அவசியமாயிருந்தது.

உ. வசனம் 15. "அவன் நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்." புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுவதற்கு சவுல் மிகப் பொருத்தமாயும், சிறந்த தெரிந்தெடுப்பாயுமிருந்தான். அவனுடைய பரிசேயப் பயிற்சியும், பழைய ஏற்பாட்டு வேதாகமங்களின் அறிவும், ரோமப் பிரஜையும், அவனுடைய பலமும், வைராக்கியமும் அவன் அழைக்கப்பட்டிருக்கும் வேலைக்கு மிகவும் பயன் உள்ளதாயிருக்கும்.

சவுலின் குணப்படுதலும், ஊழியத்திற்காக ஆயத்தப்படுதலும் (அப்போஸ்தலர் 9:1-19)

ஊ. வசனம் 16. "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் பாடுபட வேண்டும்" தமக்காக சவுல் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டும் என்பதை இயேசு நேரிடையாகச் சுட்டிக் காட்டப் போகிறார். இருப்பினும், அவன் சபையைத் துன்புறுத்தியதற்காகப் பாடுபடப் போவதில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களைப் போல, இயேசுவின் மேலுள்ள அவனுடைய விசுவாசத்தினிமித்தமாகவே பாடுபடப்போகிறான்.

எ. சபையைத் துன்புறுத்தியவர்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு, சில வேளைகளில் விசுவாசிகள் இயேசுவால் அழைக்கப்படுகின்றனர். அவரே இதைச் செய்கிறார். ஏனெனில், இயேசுவில் விசுவாசம் வைத்த பிறகு ஒவ்வொரு விசுவாசியும் ஊழியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவர்களில் சிலர், சுவிசேஷ ஊழியக்காரர்களாக இருப்பதற்கு மிகப் பொருத்தமானவர்களும், ஏதாவது குறிப்பிட்ட விதத்தில்ஆயத்தமாக்கப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்.

3. சபையைத்துன்புறுத்திறவர்களாயிருந்து,புதிதாகக் குணப்பட்டவர்களுக்குஊழியஞ் செய்யும்படி, இயேசு விசுவாசிகளை அனுப்புகிறார் (9:17-19).

அ. வசனம் 17. "அவன் (சவுல்) மேல் கையை வைத்து." அனனியா செய்த முதல் காரியம் என்னவெனில், தன்னை இன்னாரென்று அடையாளங் காட்டுகிறான். தமஸ்கு சாலையில் அவனுக்குத் தரிசனமான இயேசுவால் அவன் அனுப்பப்பட்டான் என்பதை சவுல் அறியும்படிச் செய்கிறான். பவுலும், கர்த்தரால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தின்படி அனனியா என்னும் பேருள்ள மனிதனுக்காகக் காத்திருந்தான் (9:12).

ஆ. வசனம் 17. "சகோதரனாகிய சவுலே." ஆதிச்சபையில் மற்றொரு விசுவாசியை அழைக்கும்பொழுது, சகோதரன், சகோதரி என்னும் பதங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டன. இது, கிறிஸ்துவோடுள்ள அந்நியோந்நியத்தை வெளிப்படுத்துகின்ற, உளங்கனிந்த, விலைபேறப் பெற்ற வாழ்த்துதல் ஆகும். இயேசுவே மேசியா, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று விசுவாசிப்பதற்கும்; அவரை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்வதற்கும் சவுல் வந்திருக்கிறார் என்பதை அனனியா அறிந்திருந்தான். எனவேதான், அவன் "சகோதரனாகிய சவுலே" என அழைக்கிறார்.

இ. வசனம் 17. இயேசு அவனை இரண்டு காரணங்களுக்காக அனுப்பினார் என்பதை அனனியா தெளிவுபடுத்துகிறார்.

1. சவுல் பார்வைபடையும்படிக்கும்,

2. பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பதின் அர்த்தம், பெந்தெகொஸ்தே நாளில் முதல் சீஷர்களும், அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும் மற்றவர்களும் பெற்றதைப் போன்று பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுதல் என்பதாகும் (அப்போஸ்தலர் 2:1-4; 8:17; 10;44-46; 19:6).

ஈ. வசனம் 18. "உடனே" அசாதரணமான ஊழியத்தைப் பற்றி ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசியோடு இயேசு பேசும்பொழுது, அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அந்த விசுவாசிக்கு அசாதரணமான விசுவாசத்தையும் அவர் அளிக்கிறார்.

சவுலின் குணப்படுதலும், ஊழியத்திற்காக ஆயத்தப்படுதலும்
(அப்போஸ்தலர் 9:1-19)

இந்தச் சம்பவத்தில், அசாதாரணமான விசுவாசத்தின் வரம், குணமாக்கும் வரத்தோடு ஒன்றாக சேர்ந்திருந்தது (1கொரிந்தியர் 12:9). எனவேதான், பவுல் உடனே குணமாவதையும், பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படுவதையும் பற்றி அனனியாவின் மனதில் எள்ளளவும் ஐயம் இருக்கவில்லை. அனனியா அனுப்பப்பட்டதும் இந்த இரண்டு காரணங்களுக்காகவே! தேவாலயத்தில் "அலங்கார வாசலண்டையில்" சப்பாணியான பிச்சைக்காரனை பேதுரு குணமாக்கியதற்கு இது ஒப்பானது ஆகும். (அப்போஸ்தலர் 3:1-8).

உ. வசனம் 18 "அவன் ஞானஸ்நானம் பெற்றான்." பவுல் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டார். அதன்பின் தண்ணீரில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். ஆதிச் சபைத் தலைவர்கள், புதிதாகக் குணப்பட்டவர்கள் யாவரும், இரட்சிப்புக்குப் பிறகு ஜலத்தினாலும், ஆவியினாலும் ஸ்நானம் பண்ணப்பட வேண்டுமென எதிர்பார்த்தார்கள் (அப்போஸ்தலர் 8:12-17; 9:17,18; 10:44-48; 19:1-7).

ஊ. வசனம் 19. "பின்பு அவன் போஜனம் பண்ணிப் பலப்பட்டான்." பவுல் மூன்று நாட்கள் புசியாமலும், குடியாமலும் இருந்தபடியால், அவருடைய பெலத்தை இழந்திருந்தார். "பின்பு சவுல் தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்தார்." பவுலைக் குணமாக்கி, ஜலத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் ஸ்நானம் பண்ணப்படுவதற்கு வழிநடத்தியதின் மூலம் அனனியா அவருக்கு ஊழியஞ் செய்திருந்தார்.

அவர் தமஸ்குவில் தங்கியிருந்த நாட்களில், இயேசுவின் போதனைகளையும், கட்டளைகளையும், (மத்தேயு 28:20) அவருக்குச் சொல்லிக் கொடுத்ததின் மூலம் இதர சீஷர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள்.

முடிவுரை

அ. தமது சபையைத் துன்புறுத்தினவர்களுக்கு இயேசு அறைகூவல் விடுத்து, அவர்களில் சிலரை ஊழியத்துக்கு அழைக்கிறார். இப்படிப்பட்டவர்களை விசுவாசத்தில் பலப்படுத்தி, அவர்களை ஊழியத்துக்கு ஆயத்தப்படுத்துவது மற்ற விசுவாசிகளின் உத்தரவாதமாயிருக்கிறது.

ஆ. அப்போஸ்தலனாகிய பவுல் தமஸ்கு சாலையில் இயேசுவானவரால் அறைகூவி அழைக்கப்பட்ட பின்னர், அவர் ஊழியத்தின் தேவையிலிருந்தார். அவரால் நிறுவப்பட்ட சபைகளுக்கு எழுதிய அவரது கடிதங்களில், விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்ய வேண்டுமென்று மிகவும் வலியுறுத்துவதின் காரணங்களில் இதுவும் ஒன்றாயிருக்கலாம். எபேசியருக்கு எழுதிய கடிதத்தில் அவர் இவ்விதம் கூறுகிறார்: "அவரால் சரீரம் முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் கூட்டி இணைக்கப்பட்டு, ... அன்பினாலே... சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது" (4:16).

இ. இயேசுவானவர் பேதுருவை மறுபடியும் ஊழியத்தில் அமர்த்தியபொழுது, அவரிடம் இவ்விதம் கூறினார்: "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக... என் ஆடுகளை மேய்ப்பாயாக" (யோவான் 21:15-17). இந்நாளிலும், இரட்சிக்கப் படாதவர்களுக்கும், சபையில் புதிதாகக் குணப்பட்டவர்களுக்கும் செய்யும் தங்களுடைய ஊழியத்தில் உலக வேலை தலையிட அனுமதித்திருக்கிறவர்கள் இங்கிருந்தால், அவர்களை மறுபடியும் ஊழியத்தில் ஈடுபடுத்தும்படி இயேசு விரும்புகிறார்.

வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டி பற்றிய பேதுருவின் தரிசனம்

(அப்போஸ்தலர் 10:9-24)

முன்னுரை

அ. திரளான ஊழியத்தை செயல்படுத்துவதற்கு முன் தப்பெண்ணங்கள் அகற்றப்படவேண்டும்.

ஆ. வடக்கு யோப்பாவிலிருந்து 35 கல் தொலைவிலிருந்த செசரியா பட்டணத்தில் கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். அவன் ரோமர் பட்டாளத்தில் நூறுபேர் அடங்கிய பிரிவுக்கு அதிபதியாக இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். ஒரு நாள் தேவதூதன் அவனுக்குத் தரிசனமாகி, "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி" என்றான். சீமோன் பேதுருவை அழைக்கும்படி, கொர்நேலியு தன்னுடைய இரண்டு வேலைக்காரரையும், நம்பிக்கைக்குரிய ஓர் போர்ச் சேவகனையும் அனுப்பினான். கொர்நேலியுவின் வீட்டாருக்கு ஊழியஞ் செய்யும்படி பேதுருவை அனுப்புவதற்கு முன், புறஜாதிகளுக்கு விரோதமாக அவருக்குள்ளிருந்த தப்பெண்ணத்தைத் தேவன் அகற்ற வேண்டியது அவசியமாயிருந்தது.

1. அன்றாட வாழ்க்கையில் நேரிடையாகச் சம்பந்தப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி நம்முடைய தப்பெண்ணங்களைத் தேவன் உணர்த்துகிறார்.

அ. வசனம் 9. "மறுநாளிலே ஆறாம் மணி நேரத்திலே" (நடுப்பகல் 12 மணி வேளையில்) பொதுவாக யூதர்கள் ஒரு நாளில் மூன்று வேளை ஜெபித்து வந்தனர். சங்கீதக்காரர் சொல்லுகிறார்: "அந்தி, சந்தி, மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்" (சங்கீதம் 55:17). தானியேல் தினமும் மூன்று வேளை ஜெபித்தான். (தானியேல் 6:10). கிறிஸ்தவர்களான பிறகும் யூதர்களில் அநேகர் இந்தப் பழக்கத்தைத் தொடர்ந்தனர் என்பதை நாமறிவோம். ஆதலால், பேதுரு வழக்கத்தின்படி நடுப்பகலில் ஜெபிக்கும்படி அமைதியான இடத்துக்குச் சென்றார்.

ஆ. வசனம் 9. "அவர்கள், அந்தப் பட்டணத்துக்குச் சமீபித்து வருகையில்" என்பது, சீமோன் பேதுருவைக் கூட்டி வரும்படி கொர்நேலியுவினால் யோப்பாவுக்கு அனுப்பப்பட்ட இரண்டு வேலைக்காரர்களையும், ஒரு போர்ச்சேவகனையும் காட்டுகிறது. செசரியாவுக்கும், யோப்பாவுக்கும் இடையிலிருந்த 35 கல் தூரத்தைப் பிரயாணஞ்செய்ய இம் மூவருக்கும் இரண்டு நாட்களாயின. ஆதலால், இரண்டாம் நாளில், நடுப்பகலில், மேல்வீட்டில் சீமோன் பேதுரு ஜெபித்துக்கொண்டிருந்த அதே வேளையில் அவர்கள் அந்தப் பட்டணத்தை வந்தடைந்தனர்.

வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டி பற்றிய பேதுருவின் தரிசனம்

(அப்போஸ்தலர் 10:9-24)

இ. வசனம் 10. பேதுரு ஜெபவேளையில் "ஞானதிருஷ்டி" அடைந்தார். இச்சமயத்தில், புறஜாதி ஜனங்களுக்கு விரோதமாகப் பேதுருவுக்கிருந்த தப்பெண்ணத்தைக் கர்த்தர் உணர்த்துகிறார். அவரது தப்பெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு, அவரது தனிப்பட்ட ஜீவியத்தோடு நேரிடையாக சம்பந்தப்பட்ட இரண்டு விஷயங்களைக் கர்த்தர் பயன்படுத்துகிறார்: 1. ஏதாவது புசிக்கும்படியான அவருடைய அவா, 2. அவர் கண்டிப்புடன் கைக்கொண்டு வந்த யூதருடைய பழைய ஏற்பாட்டு ஆகாரப் பிரமாணங்கள்.

ஈ. வசனம் 11-14. பேதுரு ஞானதிருஷ்டி அடைந்த வேளையில் இயேசு அவரோடு பேசி, கூறியதாவது: "அடித்துப் புசி." கர்த்தரின் இந்தக் கட்டளையின் உண்மைப் பொருள், 'பலி செலுத்திப் புசி' என்பதே. பேதுருவின் தரிசனத்தில், நாலுகால் ஜீவன்கள், காட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகளோடு வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டியைக் கண்டான். இவற்றில் பல யூதருக்குத் தீட்டானவைகள். ஆதலால், அவை புசிக்கலாகாது என ஒதுக்கப்பட்டவைகளாகும் (லேவியராகமம் அதிகாரம் 11; உபாகமம் 14:3-21). இக்காரணத்தினிமித்தமே பேதுரு இவ்வாறு கூறினார்: "ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை."

உ. சுவிசேஷம் சகல மனுஷருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டுமென தேவன் விரும்புகிறார். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமெனவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆதலால், தவறான அபிப்பிராயங்கள் உடைய விசுவாசிகள் கர்த்தரால் சந்திக்கப்பட வேண்டும். தேவன் அசாதாரணமான விதத்தில், குறிப்பிட்ட பிரச்சினை பற்றி அவர்களுடைய மனக்கண்களைப் பிரகாசிப்பிக்கலாம், அல்லது, பேதுரு கண்டதைப் போன்ற தரிசனம், அல்லது சொப்பனம், பரிசுத்த ஆவியின் வரம், மற்றும் இதர இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்படையான காரியங்கள் மூலம் சந்திக்கலாம். நம்முடைய இருதயத்தின் தப்பெண்ணங்கள் அகற்றப்பட்டு நாம் பிரகாசிக்கப்படும்படியாக, பேதுருவின் தப்பெண்ணம் பற்றி எழுதப்பட்டத் திருஷ்டாந்தம் தேவனால் நமக்கு அருளப் பட்டுள்ளது (எபிரெயர் 4:12, 13).

ஊ. ஒருவருடைய தப்பெண்ணங்களைப் பற்றி நாம் அவரிடம் எடுத்துரைக்கும் பொழுது, அவர் அதை ஒத்துக் கொள்ளக்கூடும், ஆனால் சூழ்நிலையை சரிப்படுத்துவதில் சிறிய அளவிலேயே பலனிருக்கும். இதற்கு மாறாக தப்பெண்ணங்கள் விசுவாசிகளின் ஜீவியத்திலிருந்து முற்றும் வேரறுக்கப்பட வேண்டுமானால், நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரால் ஆவிக்குரிய பிரச்சினைகள் போன்ற சகலத் தப்பெண்ணங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வெளிப்படுத்தப்பட்டு, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சந்திக்கப்பட வேண்டும்.

2. நமது கவனம் தேவன் பக்கமாய் ஈர்க்கப்படும் வரை நமது தப்பெண்ணங்களை உணர்த்துகிறார். (10:15-20).

அ. வசனம் 15, 16. "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே." புறஜாதிகளுக்கு எதிராகத் தப்பெண்ணங் கொண்டிருந்த பேதுருவின் இருதயத்தை மாற்றும்படி தேவன் முயற்சித்துக் கொண்டிருந்தார்.

வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டி பற்றிய பேதுருவின் தரிசனம்

(அப்போஸ்தலர் 10:9-24)

அவர்கள் இரட்சிக்கப் படுவதற்கும், தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாவதற்கும் பாத்திரவான்களாயிருந்தார்கள் என பேதுரு நினைக்கவில்லை. இந்த வசனத்தில் "சுத்தமாக்கினவைகளை" என்பதின் யதார்த்தம், "சுத்தமாக்கினவர்களை" என்பதே. ஆதலால், சிலுவையின் மேல் அடைந்த இயேசுவின் இரத்த பலியினால் தேவன் சுத்தமாக்கினவர்களைத் தீட்டாக எண்ணலாகாது. அவர்களுக்கு எதிரான தப்பெண்ணமும் இருக்கக்கூடாது.

ஆ. "அடித்து புசி" என்ற கட்டளை மூன்று முறை கர்த்தரால் கொடுக்கப்பட்டது. மும்முறையும் கட்டளையைப் பேதுரு நிராகரித்து விட்டார். புறஜாதிகளுக்கு விரோதமாகப் பேதுரு கொண்டிருந்த தப்பெண்ணம் மார்க்கத்தின் மீதும், கலாச்சாரத்தின் மீதும் அடித்தளமிடப்பட்டக் கடுமையான பிரச்சினையாயிருந்தது. இது, அவருடைய பெற்றோர்கள், உறவினர்கள், அவரது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க இதரப் பெரியவர்கள் மூலம் அவருக்குள் வந்ததாகும். நமது கவனம் தேவன்பால் ஈர்க்கப்படும் வரைக்கும் நமது தப்பெண்ணங்களை மீண்டும் மீண்டும் அவர் உணர்த்துவார்.

இ. அவர்கள் அந்தியோகியாவில் இருந்தபொழுது, புறஜாதிகளுக்கு விரோதமாக பேதுருவுக்கிருந்த தப்பெண்ணத்தினால் அப்போஸ்தலனாகிய பவுல் அவரை முகமுகமாய் எதிர்த்தார்.

புறஜாதி விசுவாசிகளுடன் பேதுரு மாத்திரம் இருந்த பொழுது அவர் புறஜாதியாரைப் போல சாப்பிட்டார் என்றும், ஆனால் அவர்களுடன் யூத விசுவாசிகள் சேர்ந்ததும் அவர் யூதர்களின் ஆகாரப் பிரமாணத்தைக் கண்டிப்புடன் கடைப்பிடித்தார் என்றும் பவுல் சரியாய்க் கூறினார். (கலாத்தியர் 2:11-13). பேதுருவின் தப்பெண்ணங்களை அவருக்கு உணர்த்துவதற்குக் கர்த்தர் வெவ்வேறு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தினார்.

ஈ. இந்நாட்களில், தனிப்பட்டவர்களுக்கும், ஜனக்கூட்டங் களுக்கும் எதிரான தப்பெண்ணங்கள் விசுவாசிகளுக்கு உள்ளன. காரணமென்னவெனில், அவர்கள்

1. போர்க் கொடுமைகளை இழைத்து, இராணுவ, அரசியல், பொருளாதார பலத்தினால் இவர்களுடைய நாட்டையும், மக்களையும் வென்றனர்.

2. இவர்களுடைய செல்வம், உலகப் பொருட்கள், சமுதாய அந்தஸ்து, அல்லது கல்வி குறைவாக உள்ளது.

3. இவர்களுடைய நண்பர்களுக்கோ அல்லது குடும்ப அங்கத்தினர்களுக்கோ வன்முறை குற்றங்கள் புரிந்தார்கள், அல்லது தீங்கிழைத்தார்கள்.

4. இவர்களை அடிமைகளாக்கி, மனிதாபிமானமின்றி நடத்தினார்கள்.

5. வித்தியாசமான உணவைப் புசித்து, வித்தியாசமான உடையை உடுத்து, வித்தியாசமான நாட்டில் வாழ்கின்றனர். வித்தியாசமான தோல் நிறம், உடல் உயரம், உடல் தோற்றம் அல்லது உடல் நலஇயல் உடையவர்களாக உள்ளனர்.

6. வித்தியாசமான மொழி பேசுகின்றனர். வித்தியாசமான பழக்கங்கள், சட்டங்கள் உடையவர்களாக உள்ளனர்.

வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டி பற்றிய பேதுருவின் தரிசனம்

(அப்போஸ்தலர் 10:9-24)

உ. வசனம் 17-20. "அப்பொழுது பேதுரு, தான் கண்ட தரிசனத்தைக் குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில்." தான் கண்ட தரிசனத்தின் பொருளை ஊகிப்பது பேதுருவுக்கு அரிதாயிருந்தது. ஆதலால், பரிசுத்த ஆவியானவர் பேதுருவோடு நேரிடையாகப் பேசி, கூடுதலான அறிவுரைகளைக் கொடுக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அவ்வேளையில், செசரியாவிலிருந்து வந்த மூவரும் வாசற்படியிலே வந்து நின்று, யாராவது ஒருவரின் கவனத்தை ஈர்க்கும்படி முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

ஊ. மூன்று மனுஷரும் வந்து சேர்ந்த பின்னர் அவருடைய தரிசனத்தின் விசேஷத்தை அவர் உணர்ந்து கொண்டார். ஏனெனில், பிற்பாடு கொர்நேலியுவின் வீட்டில் அவர் இவ்விதம் கூறுகிறார்: "எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும், அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார். ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்த போது நான் எதிர்பேசாமல் வந்தேன்." (அப்போஸ்தலர் 10:28,29, 34, 35). நாம் பொறுமையாக இருப்போமானால், இயற்கைக்கு அப்பாற்பட்ட சம்பவங்களின் மூலம் நம்மை வழிநடத்தும்பொழுது கர்த்தர் நம்மோடு பேச முயற்சிப்பதை வாழ்க்கை சூழ்நிலைகள் நமக்கு வெளிப்படுத்தும்.

எ. நமது கவனத்தைத் தம் பக்கம் ஈர்க்கும் வரைக்கும், தேவன் நமது தப்பெண்ணங்களை உணர்த்திக் கொண்டேயிருப்பார்.

ஆதலால், தனிப்பட்டவர்கள் மீதோ அன்றி ஜனக் கூட்டத்தினர் மீதோ உங்களுக்கிருக்கும் தப்பெண்ணங்களைக் குறித்து ஆண்டவர் பேசிக்கொண்டிருப்பாரானால், உங்களுடைய இருதயத்தைத் திறவுங்கள், அவர் உங்களுக்குள் புதிய ஆவியை சிருஷ்டிப்பாராக. காரணமென்னவெனில், தனிப்பட்டவர்கள் அநேகருக்கும், ஜனக்கூட்டங்களுக்கும் ஊழியத்தில் உங்களைப் பயன்படுத்தும் அவருடைய ஆற்றல் இதில்தான் சார்ந்துள்ளது!

3. தேவனால் நமது தப்பெண்ணங்கள் உணர்த்தப்பட்ட பிறகு, நாம் தப்பெண்ணங்கொண்டிருந்த ஜனக்கூட்டங்களுக்கு நம்மால் ஊழியஞ்செய்யக் கூடும் (10:21-24).

அ. வசனம் 21. கொர்நேலியுவின் வீட்டிலிருந்து வந்த மூன்று மனுஷரோடு சம்பாஷித்தது முதல், புறஜாதிகளுக்கு விரோதமாகப் பேதுருவுக்கிருந்த தப்பெண்ணத்தை மேற்கொள்ளுவதற்கு ஆண்டவர் அவருக்கு உதவிசெய்து கொண்டிருந்ததை பேதுரு வெளிப்படுத்துகிறார். இது மிகவும் விசேஷித்த காரியம், ஏனெனில், சாதாரணமாகப் புறஜாதிகளோடு யூதர்கள் கலப்பதில்லை.

ஆ. வசனம் 22. "உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும் படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளை பெற்றார்." பேதுருவிடம் வந்தவர்கள் மூன்று முக்கிய காரியங்களை அவரது கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

1. அவர்களை அனுப்பி வைத்த கொர்நேலியு நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவருமாயிருந்தார்.

வானத்திலிருந்து இறங்கிய ஒரு பெரிய துப்பட்டி பற்றிய பேதுருவின் தரிசனம்

(அப்போஸ்தலர் 10:9-24)

2. கொர்நேலியு (செசரியாவிலுள்ள) யூத ஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றிருந்தார்.

3. கொர்நேலியுவுக்குப் பரிசுத்த தூதன் தரிசனமாகி பேதுருவை அழைக்கும்படி கட்டளை பெற்றிருந்தார்.

இம்மூவரின் சாட்சியும்; தான் கண்ட தரிசனமும், பரிசுத்த ஆவியானவரின் உந்துதலும்; இச்சூழ்நிலைகள் அனைத்தும் கர்த்தரின் ஆதிக்கத்தின் கீழ் நிகழ்கின்றன எனப் பேதுரு அறிந்து கொள்வதற்குப் போதுமானதாயிருந்தன.

இ. வசனம் 23. பேதுரு அவர்களை உள்ளே அழைத்து, அவர்களுக்கு உபசாரஞ் செய்தான். இது, புறஜாதிகளுக்கு எதிராகப் பேதுரு கொண்டிருந்த தப்பெண்ணத்தை மேற்கொள்ளத் தேவன் உதவி செய்ததைக் காட்டும் மற்றொரு விசேஷித்த காரியமாகும்.

யூத விசுவாசிகளுக்கும் (அப்போஸ்தலர் 11:1-18), எருசலேமிலுள்ள சபைச் சங்கத்துக்கும் (அப்போஸ்தலர் 15:6-11), இச்சம்பவத்தை விவரித்துக் கூறும்பொழுது, பேதுரு இதைப் பற்றிய கூடுதலான காரியங்களை எடுத்துரைக்கிறார். அவர் மாற்றம் அடைந்த மனிதனாக இருந்தார். தேவனுடைய இரட்சிப்பு யூதருக்கும், புறஜாதிகளுக்கும் ஒன்றுபோல் உரியது என்பதை விளக்கியிருந்தார். புறஜாதிகளைக் குறித்துத் தொடர்ந்து தப்பெண்ணங்கொண்டிருந்த யூதர்களுக்கு முன்பாக இந்தச் சத்தியத்தைப் பகிரங்கமாக ஆதரித்தார்.

ஈ.வசனம்23. "மறுநாளிலே அவர்களுடனே கூடப் புறப்பட்டான்" கடைசியாக, பேதுரு தனது தெய்வீகப் பணியைத் துவக்கினார். கொர்நேலியு வீட்டார் அனைவரையும் இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியின்ஸ்நானத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளும்படிச் செய்யவும் தேவன் தீர்மானித்திருந்தார் (10:44-46).பேதுருவின்தப்பெண்ணங்கள் உணர்த்தப்பட்டபின்னர்,புறஜாதிகளுக்கு ஊழியஞ் செய்வதில் தேவன் அவரைப் பயன்படுத்தக் கூடியவராயிருந்தார். இன்றைக்கு இங்கிருக்கும் ஒவ்வொருவருக்கும் இது சாலப் பொருந்தும். உங்களுடைய தப்பெண்ணங்கள் உணர்த்தப்பட்டு, உங்களுடைய இருதயம் மாற்றப்பட்டதும் நீங்கள் யாருக்குஎதிராகத்தப்பெண்ணங்கொண்டிருக்கிறீர்களோ, அவர்களுக்கு ஊழியஞ் செய்வதில் கர்த்தர் உங்களைப் பயன்படுத்துவார்.

முடிவுரை

அ. மிகுந்த பலன் உள்ள ஊழியம் ஆற்றப்படுவதற்குமுன்னர்,தப்பெண்ணம் நீக்கப்படவேண்டும். இதினிமித்தமாகவே, தேவன் நமதுதப்பெண்ணங்களை உணர்த்துகிறார். இன்று நாம்செய்யும்படியாகஅவர் விரும்புவது யாதெனில், நம்முடைய இருதயங்களை நாம் அவருக்குத் திறந்துகொடுத்து,நம்முடைய தப்பெண்ணங்களை அடையாளங் காணும்படி அவரை அனுமதிக்க வேண்டும்.அதன் பின்னர், தெய்வீகப் பணிக்காக, இரட்சிப்பின்சுவிசேஷத்துடன் நாம் தப்பெண்ணங் கொண்டிருந்தவர்களிடத்துக்கு நம்மை அவர் அனுப்புகிறார்.

ஆ. உன்னையே நீ கர்த்தருக்கென்று திறந்துகொடுப்பாயா?உன்னுடையதப்பெண்ணங்களை அடையாளங் காணும்படி அவரை நீ அனுமதிப்பாயா? அவற்றைஉன்னுடைய ஜீவியத்திலிருந்து நீக்கும்படி அனுமதிப்பாயா? அதன் பின்னர், நீ தப்பெண்ணங்கொண்டு இருந்தவர்களிடத்துக்குசுவிசேஷ ஊழியத்துக்காக அவர்உன்னை அனுப்பும்படி திறந்து கொடுப்பாயா?

பரிசுத்த ஆவியானவராலும், அந்தியோகியாவிலுள்ள சபையாலும் பர்னபாவும், சவுலும் ஊழியர்களாக அனுப்பப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 13:1-4)

முன்னுரை

அ. உள்ளூர்ச் சபைகளிலிருந்து குறிப்பிட்ட வேலைக்காக பரிசுத்த ஆவியானவரால் இறைபருள் ஊழியர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஆ. ஸ்தேவான் கல்லெறியுண்ட பிற்பாடு, எருசலேமிலுள்ள சபைக்கு எதிராக மிகுந்த துன்பம் உண்டாயிற்று. ஏராளமான விசுவாசிகள் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். வடக்குத் தொலைவில் சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்கும் விசுவாசிகளில் சிலர் சிதறிப் போனார்கள். அங்கே அவர்கள் கிறிஸ்துவின் தூதைப் பிரசங்கித்த பொழுது, யூதரிலும் கிரேக்கரிலும் அநேகர் விசுவாசித்து, கர்த்தரின் பக்கமாய்த் திரும்பினார்கள். எருசலேமில் உள்ள சபையார் இந்த உயிர்மீட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு, அந்தியோகியா விலுள்ள சபையை நடத்தும்படிக்கு பர்னபாவை அனுப்பினார்கள். இங்குள்ள வேலை மிக அதிகமாக இருந்ததால், சவுலைக் (பவுல்) கண்டுபிடிக்கும்படி பானபா தர்சு பட்டணம் சென்று, அங்கிருந்து இருவரும் அந்தியோகியா திரும்பி, ஒரு வருடத்திற்கு மேலாக சபையில் போதித்து வந்தார்கள். எனவேதான், அந்தியோகியாவிலுள்ள சபையில் இருந்த தீர்க்கதரிசிகள், போதகர்களுடன் பர்னபாவும், சவுலும் இருந்தார்கள் என வேதம் கூறுகிறது.

1. உள்ளூர்சபைகளிலிருந்து மிஷனரிகள் வருகின்றனர் (13:1).

அ. அந்தியோகியாவிலுள்ள சபையில் இருந்த தீர்க்கதரிசிகள் போதகர்களுடன் பர்னபாவும்,சவுலும்தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயுமிருந்தார்கள். இவர்கள் இருவரும் உள்ளூர் சபையில் அங்கத்தினர்களாயிருந்து, ஆராதனையில்பங்குபெற்று,சுவிசேஷக் களப்பணிகள் ஆற்றி,போதனையாலும் தீர்க்கதரிசனத்தாலும்மற்றப் பரிசுத்தவான்களைக் கட்டியெழுப்புகிறவர் களாயிருந்தார்கள்.

ஆ. பர்னபாவும், சவுலும் தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள் என வேதம் கூறுவதின் அர்த்தம், இயற்கைக்கு அப்பாற்பட்ட வரத்தின் மூலம் மற்ற விசுவாசிகள்பக்திவிருத்தி அடையவும், அவர்களுக்குப் புத்தி சொல்லவும், ஆறுதல் சொல்லவும்,உற்சாகமூட்டவும்பரிசுத்த ஆவியினால் அவர்கள் பயன்படுத்தப் பட்டார்கள் என்பதாகும் (1கொரிந்தியர்12:10).அவர்கள்போதகர்களாயிருந்த ார்கள்என வேதம்கூறுவதின் அர்த்தம்,போதிக்கும்படி அவர்கள் இயேசுவினால்தெரிந்தெடுக்கப்பட்டு, இப்பணியைநிறைவேற்றும்பொருட்டு இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் பயன்படுத்தப்பட்டு, சபைக்கு ஈவாக அருளப்பட்டார்கள் என்பதாகும் (எபேசியர் 4:7,8; 11-13).

இ. அந்தியோகியாவிலுள்ள சபை வளர்ந்து கொண்டிருந்தபடியால்,உள்ளூர்சபையில் போதிக்கவும், தீர்க்கதரிசனம் சொல்லவும் அநேக விசுவாசிகளைக் கர்த்தர் எழுப்ப வேண்டியது அவசியமாயிருந்தது. வளர்ந்து வரும் பெரிய சபைக்குஅநேகத்தலைவர்கள்தேவையாயிருக்கிறது. சபை சிறிய அளவில் இருக்கும் போது, போதிப்பதையும்,நிருவாகத்தையும்போதகரே செய்யக்கூடும்.ஆனால்,சபைவளர ஆரம்பிக்கும்பொழுது,போதிக்கவும்,நிருவாகத்தைக் கவனிக்கவும், உதவி செய்யவும் மற்றும் பெருகி வரும்பரிசுத்தவான்களின் ஆவிக்குரியபக்திவிருத்தி யைஉண்டாக்குவதற்கும் இதரத் தலைவர்கள் அவசியமாகஉள்ளனர்.இதேகாரணத்தினிமித்தமாக வேஆதிச்சபையில்பந்திவிசாரிக்கவும், விதவைகளுக்குப்பணம்வழங்கவும் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் 6:1-6).

பரிசுத்த ஆவியானவராலும், அந்தியோகியாவிலுள்ள சபையாலும் பர்னபாவும், சவுலும் ஊழியர்களாக அனுப்பப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 13:1-4)

ஈ. மிஷனரிகள் தோன்றுமிடம் உள்ளூர் சபைகளேயாகும். அழைக்கப்படுகிறவர்கள் பர்னபாவையும், சவுலையும் போல போதகர்களாயும், தீர்க்கதரிசிகளாயும் இல்லாமலிருக்கலாம். ஆனால், அவர்கள் பொதுவாக ஆராதனைகளில் கலந்து கொண்டு, உள்ளூர் சபைப் பணிகளில் பங்கு பெறுவார்கள். ஒவ்வொரு உள்ளூர் சபைகளிலுமிருந்தும் மிஷனரிமார்களைக்கர்த்தர் அழைத்து, அவர்களை உலக அளவில் ஆத்தும அறுவடையில் ஈடுபடுத்துமாறு விரும்புகிறார்.

உ. அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் (மத்தேயு 9:37). சுவிசேஷத்தைக் கேட்கும்படியான தேவையிலிருக்கும் கோடிகணக்கான ஜனங்கள் ஹாங்காங்கிலும், சீனாவிலும் இருக்கின்றனர். தேவகுமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் போதிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டிய தேவையிலிருக்கும்கோடிக்கணக்கான விசுவாசிகள் இருக்கின்றனர். இதனிமித்தமாக இந்தத் தூதைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள் மிஷனரிகளாக இயேசுவால் அழைக்கப்பட்டு, சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கும்படி அனுப்பப்படுவார்கள். இதனிமித்தமாக உங்களில் சிலர் தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும்,போதகராகவும்,அழைக்கப்படுவீர்கள். இயேசுவானவர், "அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்குவேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" எனக் கூறியிருப்பதால், இவ்விதம்சம்பவிக்கும்படி சபைஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும் (மத்தேயு 9:38).

2. பரிசுத்த ஆவியானவரால் குறிப்பிட்ட வேலைக்காக மிஷனரிகள் அழைக்கப்படுகிறார்கள் (13:2).

அ. "அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருந்தார்கள்." யூதர்கள் மத்தியிலும், ஆதிசபையிலும் உபவாசம், ஆராதனையோடும், ஜெபத்தோடும் நெருங்கிப் பிணைந்ததாயிருந்தது. இயேசு பாலகனைக் காணும் பேறு பெற்றிருந்த அன்னாள் என்றும் தீர்க்கதரிசினி, "தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்" என வேதம் கூறுகிறது. (லூக்கா 2:37). பவுலும், பர்னபாவும் அந்தந்தச் சபைகளில் மூப்பர்களை ஏற்படுத்திய பொழுது, உபவாசித்து ஜெபம் பண்ணினார்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் 14:23), இப்பொழுது அந்தியோகியாவிலுள்ள சபையின் விசுவாசிகள், "கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருந்தார்கள்."

ஆ. அப்பொழுது "பர்னபாவையும் சவுலையும் பிரித்து விடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். "திருவுளம் பற்றினார்" எனக் கூறுவதைச் சரியாய்ச் சொல்லுவோமானால் "கட்டளையிட்டார்" என்பதேயாகும்.

ஆதலால், பர்னபாவும், சவுலும் குறிப்பிட்ட இறையருள் பணிக்காக உள்ளூர் சபையால் பிரிக்கப்பட வேண்டுமெனப் பரிசுத்த ஆவியனாவரால் கட்டளையிடப்பட்டார்கள். இந்தக் கட்டளையானது, ஆராதிக்கும்படி கூடிவந்திருந்த தீர்க்கதரிசிகளில் ஒருவர் மூலம் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கலாம் (1 கொரிந்தியர் 12:10; 14:26).

இ. "நான் அவர்களை அழைத்த ஊழியத்துக்காக." பர்னபாவும், சவுலும் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் விரும்பிய குறிப்பிட்ட சுவிசேஷப் பணியைக் குறித்து ஏற்கெனவே அவர்களுக்கு அவர் உணர்த்தியிருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவராலும், அந்தியோகியாவிலுள்ள சபையாலும் பர்னபாவும், சவுலும் ஊழியர்களாக அனுப்பப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 13:1-4)

குறிப்பிட்ட ஊழியங்களைப் பற்றி தனிப்பட்ட விசுவாசிகளுடன் பரிசுத்த ஆவியானவர் நேரிடையாகவே இடைபடுகிறார். பர்னபாவும், சவுலும் அங்கத்தினர்களாயிருந்த உள்ளூர் சபையில், இவர்கள் முக்கியமான தலைமைப் பொறுப்பை வகித்து வந்தார்கள். உலகின் பிற இடங்களில் நடைபெறும் கர்த்தரின் சேவைக்காக, தனிச்சிறப்பு வாய்ந்த போதகரும், தீர்க்கதரிசியுமாயிருந்த இருவரின் சேவையைச் சபையார் மனப்பூர்வமாக விட்டுக் கொடுக்க வேண்டியதிருந்தது. அதுமாத்திரமன்றி, பர்னபா, சவுல் இருவரும் செய்யவிருந்த சுவிசேஷ ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும், பணத்தாலும் இவர்கள் மனப்பூர்வமாகத் தாங்க வேண்டியதும் அவசியமாயிருந்தது.

ஈ. இந்த உள்ளூர் சபையில் எத்தனை பேர் மிஷனரியாகவும், சுவிசேஷகராகவும், தீர்க்கதரிசியாகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஊழியஞ்செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்? உள்ளூர் சபைகளில் நீங்கள் தலைவராக இருக்கலாம், அல்லது இல்லாமலிருக்கலாம்; ஆனால் நான் ஒன்று அறிவேன், எங்கேயாகிலுமிருக்கும் அவருடைய அறுவடை களத்தில் பணிபுரிய இயேசுவுக்கு நீங்கள் தேவையாயிருக்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவரால் எந்த விசேஷித்த ஊழியத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிய, வாலிபர், நடுத்தர வயதினரின் கண்களை நான் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறேன். நான் உங்களை வினவுவது யாதெனில், சீனாவுக்கும், ஹாங்காங்கிற்கும் இறையருள் பணியாளர், சுவிசேஷகர், மேய்ப்பர்களை அனுப்புவதற்கு ஏன் மேல்நாட்டினரும், இதர ஆசிய நாட்டினரும் அழைக்கப்பட வேண்டும்? இப்பணித் தளங்களில் பணியாற்ற சீன மக்களையே அழைக்கும்படி இயேசு விரும்புகிறார்.

உ. இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது" என்று கூறும் ஆவியானவரின் சத்தத்தை நான் கேட்டுக் கொண்டேயிருக்கிறேன். ஹாங்காங்கின் எல்லைகளுக்கு அப்பால் சுமார் 12 பில்லியன் சீன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஹாங்காங்கிலும், சீனாவிலும் 70மில்லியன் முதல் 120 மில்லியன் வரை விசுவாசிகள் உள்ளனர். ஆகையால்தான், உங்களில் சிலர் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். இந்த உள்ளூர் சபை தங்களுடைய ஜெபத்தினாலும், பொருள்களினாலும், பணத்தினாலும் உங்களைத் தாங்குவார்கள் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். இந்த நாளிலும் இந்த சபையாருக்குப் பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாகக் கட்டளை கொடுப்பார். "சீனாவிலும், ஹாங்காங்கிலும் ஊழியஞ் செய்யும்படி நான் அழைத்திருக்கிறவர்களைப் பிரித்து விடுங்கள்."

3. மிஷனரிகள் இறைபணியில் பணியாற்றும்படி, சபையாலும், பரிசுத்த ஆவியானவராலும் விடுவிக்கப் படுகிறார்கள் (13:3,4).

அ. வசனம் 3. "அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்." அவர்களுடைய ஊழியத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்காக உள்ளூர் சபை அங்கத்தினர்கள் பர்னபா, சவுல் ஆகியோர் மீது தங்களுடைய கரங்களை வைத்தார்கள். ஆதிச்சபையில் கைகளை வைத்தல் சாதாரண பழக்கமாயிருந்தது. தங்களுடைய ஒப்புதலை அளிக்கவும், அனுப்பப்படுகிறவர்களை ஊக்குவிக்கவும் இவ்விதம் செய்யப்பட்டது. இக்காரணத்தினாலேயே, எருசலேம் சபையில் விசுவாசக் கூட்டத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் உதவியாளர்கள் மேல் அப்போஸ்தலர் ஜெபம்பண்ணி, கைகளை வைத்தார்கள் (அப்போஸ்தலர் நடபடிகள் *6:3,6*).

பரிசுத்த ஆவியானவராலும், அந்தியோகியாவிலுள்ள சபையாலும் பர்னபாவும், சவுலும் ஊழியர்களாக அனுப்பப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 13:1-4)

ஆ. வசனம் 3. அதன் பின் உள்ளூர் சபையார் "அவர்களை அனுப்பினார்கள்" உள்ளூர் சபை விசுவாசக் கூட்டத்தார் பர்னபாவுக்கும், சவுலுக்கும் அந்தியோகியாவில் அவர்களுக்கிருந்த கடமைகளிலும், உத்தரவாதங்களிலிருந்தும் அவர்களை விடுவித்தார்கள். உலகில் வேறு எங்கேயாவது ஊழியம் செய்யும்படி அவர்களை விடுவித்தார்கள். பரிசுத்த ஆவியானவர் எதைச் செய்யும்படி அவர்களை அழைத்தாரோ அதைச் செய்யும்படி அவர்கள் இருவரும் இப்பொழுது சுயாதீனமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சார்ந்திருக்கும்படி, அவர்களைத் தாங்குகிறவர்கள் அவர்களுக்கு இருந்தார்கள்.

இ. வசனம் 4அ. "அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினாலே அனுப்பப்பட்டார்கள்." பர்னபா, சவுல் ஆகியோரின் இறையியல் ஊழியத்திற்கு முழு சபையாரும் தங்களது ஆதரவை அளித்திருந்தனர். முதன் முதலாகத் தங்களுடைய இறையியல் ஊழியர்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்தியோகியா சபையில் இந்நாள் ஓர் முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். தங்களுடைய ஜெபத்தினால், பொருட்களினால், பணத்தினால் அவர்களைத் தாங்கியதுடன், வெற்றிகரமான அவர்களுடைய ஊழியத்தின் முதல் அறிக்கைக்காகவும் காத்துக் கொண்டிருந்தார்கள். இருப்பினும், வேதம் நமக்கு நினைவூட்டுவது யாதெனில், இறையியல் ஊழியர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகராக ஊழியஞ் செய்யும்படி தனிப்பட்டவர்களை பரிசுத்த ஆவியானவர் முதலாவது அழைக்கிறார். அதன்பின, அவர் எதைச் செய்கிறாரோ அதோடு கூட உள்ளூர் சபை இசைந்து போகும்படி விரும்புகிறார்.

ஈ. உலகில் வேறெங்கேயாவது ஊழியஞ் செய்யும்படிக்குக் குறிப்பிட்டவர்களைப் பிரித்து விடும்படி பரிசுத்த ஆவியானவர் கட்டளையிடும்பொழுது, உள்ளூர் சபை அதற்கு ஒப்புதலையும், ஆதரவையும் அளிக்க வேண்டியது முக்கியமாகும். ஆவிக்குரிய தலைவர்களும், மற்ற வாலிபர், நடுத்தர வயதினர் ஆகிய ஆண்களும், பெண்களும் உள்ளூர் சபையிலிருந்து வேறுபிரிக்கப் பட்டு, உலகில் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவது, நன்றாக இராததுபோலத் தோன்றலாம். இருப்பினும் சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலும் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 5:9,10). ஆதலால், எங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். சுவிசேஷத்தை விசுவாசிக்கிறவர்கள், இயேசுவைப்பற்றிய விசுவாசத்திலும், அறிவிலும், வேதத்திலும் போதிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டும்.

உ. விதைப்பும், அறுப்பும் பற்றிய நமது கோட்பாட்டில் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார் (கலாத்தியர் 6:7; 2 கொரிந்தியர் 9:6). ஆண்டவருடைய அறுவடைக் களத்துக்குப் போகும்படியான பரிசுத்த ஆவியானவரின் அழைப்பை ஏற்கும் ஆண்களும், பெண்களும் ஆத்துமாக்களை அறுவடை செய்வார்கள். இவர்களை அனுப்பி, தொடர்ந்து தாங்குகின்ற சபையும் கர்த்தருக்காக ஆத்துமாக்களை அறுவடை செய்வார்கள்.

பரிசுத்த ஆவியானவராலும், அந்தியோகியாவிலுள்ள சபையாலும் பர்னபாவும், சவுலும் ஊழியர்களாக அனுப்பப்படுகிறார்கள்

(அப்போஸ்தலர் 13:1-4)

முடிவுரை

அ. இறையியல் அருட்பணியாளர்கள், மற்றும் இதர சபைத் தலைவர்கள் குறிப்பிட்ட வேலைக்காக பரிசுத்த ஆவியானவரால் உள்ளூர் சபைகளிலிருந்து அழைக்கப் படுகிறார்கள். அவர்களுடைய குறிப்பிட்ட ஊழியத்தைப் பற்றி தனிப்பட்டவர்களுடன் பரிசுத்த ஆவியானவர் பேசும்பொழுது, அந்த விசுவாசிகள் இருக்கும் உள்ளூர் சபையுடனும் பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார். இந்த ஊழியங்களை உள்ளூர் சபைகள் அங்கீகரித்து, தங்களுடைய ஜெபங்களினாலும், தேவையான பொருட்களினாலும், பணத்தினாலும் தாங்கும்படிக்கும் ஆவியானவர் விரும்புகிறார்.

ஆ. பரிசுத்த ஆவியானவரால் இவ்விதம் அழைக்கப்பட்டவர்கள் இதுவரை தங்களை அர்ப்பணிக்காமலிருந்தால், அந்த அழைப்புக்குத் தங்களைப் பகிரங்கமாக ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. முழுச்சபையும் உங்களை இன்னாரென்று அறிந்து, இந்த விஷயத்தில் உங்களோடுகூட ஜெபிக்கும்படியாக நீங்கள் முன்வர வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

ஆதிச்சபையின் ஆலோசனைச் சங்கம் எருசலேமில் கூடுதல்

(அப்போஸ்தலர் 15:1-21)

முன்னுரை

அ. இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தினால் மாத்திரமே யூதர்கள், புறஜாதிகளின் இருதயங்களைத் தேவன் சுத்திகரிக்கிறார்.

ஆ. அந்தியோகியாவிலுள்ள சபையில் பவுலும், பர்னபாவும் நடத்திப்புக்காரராய் இருந்தார்கள். அப்பொழுது, எருசலேமிலுள்ள (தாய்) சபையிலிருந்து சிலர் வந்து, புறஜாதிகள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையா விட்டால், இரட்சிக்கப்பட மாட்டார்கள் எனப் போதகம் பண்ணினார்கள். அதினாலே அவர்களுக்கும் பவுல், பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும், தர்க்கமும் உண்டாயிற்று. அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற சபைக்குப் போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும், அப்போஸ்தலராலும், மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இப்பொழுது இந்தச் சந்திப்பு, பெரும்பான்மையான விசுவாசிகளால் "ஆலோசனைச் சங்கத்தின் கூட்டம்" என அறியப்படுகிறது.

1. ஆலோசனைச்சங்கக் கூட்டத்திற்கான காரணம் (15:5,6).

அ. வசனம் 5. "பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர்" (பழையஏற்பாட்டு பிரமாணத்தைக் கண்டிப்புடன் கடைப்பிடித்த) பரிசேயர்களில்சிலர்குணப்பட்டு கிறிஸ்தவர்களாகி எருசலேம் சபையில் இருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தார் "பரிசேயக் கூட்டத்தார்" என அழைக்கப்பட்டார்கள். இவர்களில் சிலர்தான் அந்தியோகியாவுக்குச் சென்று, பவுலின் போதனைகள் தவறு என விவாதித்தனர். இவர்கள் போதித்ததாவது: "இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் மாத்திரம் போதாது. அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம்." ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்ட வாக்குவாதம் இதுவே.

ஆ. வசனம் 6. "அப்போஸ்தலரும், மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள்." அப்போஸ்தலரும், மூப்பரும் இந்தக் காரியத்தை முழு சபைக்கும் முன்பாகத் தர்க்கித்தார்கள். குணப்பட்டிருந்த பரிசேயர்களின் போதனையானது, கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்புண்டாகும் (ரோமர் 1:17; கலாத்தியர் 5:6; எபேசியர் 2:8,9) என புறஜாதிகளுக்குப் பவுல் போதித்து வந்த இந்த சுவிசேஷச் செய்திக்கு நேர் எதிராயிருந்தது.

இ. இந்நாட்களில் விசுவாசிகளிடையே உபதேச பேதங்கள் காணப்படும்பொழுது, அவை வேதத்தின் அடிப்படையில் மெய்ப்பிக்கப்படும்படிக்கு அவர்கள் இவ்விஷயங்களை உள்ளூர் சபையிலுள்ள மேய்ப்பர்கள், தலைவர்களிடம் கொண்டுவர வேண்டும். இதினிமித்தமாகவே, விசுவாசிகள் எல்லாரும் ஆராதனைக்காகக் கூடும்பொழுதும், ஜெபத்திற்காகவும், வேத பாடத்திற்காகவும் சிறிய அளவில் கூடும்பொழுதும் மேய்ப்பர்களும், சபைத் தலைவர்களும் உபதேசங்களைப் போதிக்கின்றனர்.

ஆதிச்சபையின் ஆலோசனைச் சங்கம் எருசலேமில் கூடுதல்

(அப்போஸ்தலர் 15:1-21)

ஈ.ஆதிச் சபையில் இருந்தவர்களைப்போல, இக்காலத்திலுள்ள அங்கத்தினர்களும் இந்த உபதேசங்களின் மேல் பற்றுதலாயிருக்க வேண்டும் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42). அப்படியானால் மனுஷர் தங்களுடைய சொந்த ஆதாயத்துக்காகவும்,புகழுக்காகவும் தொலைக்காட்சி,வானொலி, அல்லது கூட்டங்கள், கருத்தரங்குகள் மூலமாகப் பிரபல்யப்படுத்தும் மனுஷருடைய போதனை, மற்றும் உபதேசமாகிய ஒவ்வொரு காற்றினாலும் அடிபட்டு அலைபடும் ஆவிக்குரியகுழந்தைகளாகஅவர்கள் இருக்கமாட்டார்கள். (எபேசியர் 4:14).

உ. ஹாங்காங் சபையிலுள்ள அநேகர் சபையின் உபதேசம் பற்றிய இவ்விதக் கேள்விகளைக்கேட்பதை நான் கேட்டிருக்கிறேன்:

1.இயேசுவானவர் உண்மையிலேயே மாம்சத்தில் வந்த தேவனா? (ஆம். யோவான் 1:14;கலாத்தியர்4:4; பிலிப்பியர் 2:7,8; 1யோவான் 1:1,2).

2.வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களும் ஒழிந்து போக முடியாதபடி தேவனால் அருளப்பட்ட அவருடைய வார்த்தைகளா?(ஆம்2 தீமோத்தேயு3:16,17; 2பேதுரு1:20,21;3:15,16;மத்தேயு 5:17,18; யோவான் 10:35).

3. இன்றைய வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களில் அடங்கியுள்ள சத்தியங்களுக்கு எதிரான அல்லது மாற்றக்கூடிய தெய்வீக வெளிப்படுத்தல்கள் மனுஷருக்கு இந்நாட்கள் அளிக்கப்படுகிறதா? (இல்லை, 2தீமோத்தேயு 3:16,17; 2பேதுரு 1:20,21; 3:15,16; மத்தேயு 5:17,18; யோவான் 10:35).

4. மறுபிறப்பில் ஆவியைப் பெறுவதற்கும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கும் இடையே வித்தியாசம் உண்டா? (ஆம். ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13; யோவான் 20:22; அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:1-4).

5. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும் ஒவ்வொரு விசுவாசிக்கும் கற்றறிந்திராத அந்நிய பாஷையில் பேசுவதுதான் வெளிப்படையான ஆரம்ப அடையாளமா? (ஆம். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:4; 10:46; 19:6; மாற்கு 16:17).

6. தம்முடைய சத்துருக்கள் அனைவரையும் அழித்து, பூமியின் மேல் தம்முடைய ராஜ்யபாரத்தை ஏற்படுத்தும்படி இயேசுவானவர் வருகிறாரா, அல்லது, இயேசுவானவர் வந்து, அவருக்காக ஆயத்தமாக்கப்பட்ட ராஜ்யத்தில் அரசாளும் விதத்தில் எல்லாக் காரியங்களையும் நன்றாக அமைக்கும்படி கிறிஸ்தவர்கள் பணியாற்றக்கூடுமா? (அவர்தாமே வந்து, சத்துருக்களை அழித்து, பூமியில் ராஜ்யபாரத்தை ஸ்தாபிப்பார், தானியேல் 2:44,45; வெளிப்படுத்தின விசேஷம் 11:15; 19:11-21; 20:4-6).

7. தேவனிடத்திலிருந்து கேட்பது போல ஓர் விசுவாசி தனது மனதில் கருத்துக்களை உருவாக்குவது வேதத்திற்கு ஒத்ததா, அல்லது சொல்ல வேண்டியவற்றைத் தேவனே துவக்க வேண்டுமா? (சொல்ல வேண்டியவற்றைத் தேவனே துவக்க வேண்டும், 1கொரிந்தியர் 12:11; எபிரெயர் 2:4).

எருசலேம் ஆலோசனைச் சங்கத்தில் கேட்கப்பட்ட கேள்வியாவது: "ஒருவர் இரட்சிக்கப்படும்படிக்கு பழைய ஏற்பாட்டிலுள்ள மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொண்டு, இயேசுவில் விசுவாசம் வைக்க வேண்டுமா?"

ஆதிச்சபையின் ஆலோசனைச் சங்கம் எருசலேமில் கூடுதல்

(அப்போஸ்தலர் 15:1-21)

2. "விசுவாசத்தினால் மாத்திரமே இரட்சிப்பு உண்டு" என்பதைப் பேதுரு நிலைநாட்டுகிறார் (15:7-11).

அ. வசனம் 7-9. "அநேக நாட்களுக்கு முன்னே" ரோமப் பட்டாளத்து அதிபதியும், புறஜாதியானுமான (அப்போஸ்தலருடைய நடபடிகள் 10) கொர்நேலியுவின் வீட்டில் ஏற்பட்டத் தன்னுடைய அனுபவங்களை ஆலோசனைச் சங்கத்தாருக்கு நினைப்பூட்டுவதின் மூலம் தனது காப்புரையைப் பேதுரு துவக்குகிறார். பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின்படியும், வழிநடத்துதலின்படியும் பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்றார். அவர் புறப்படுவதற்கு முன்னர், பேதுருவின் தரிசனத்தின் மூலம், தம்முடைய ராஜ்யத்தில் யூதர்களையும், புறஜாதிகளையும் தாம் ஏற்றுக்கொள்வதாகத் தேவன் அவருக்கு வெளிப்படுத்தினார் (10:9-16; 34,35). பேதுரு சுவிசேஷத்தின் செய்தியைப் பிரசங்கித்த போது கொர்நேலியுவும்,அவனுடையவீட்டார் அனைவரும் இயேசுவை விசுவாசித்து, உடனடியாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் (10:36-46);மேலும் காண்க (அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:1-18). எருசலேம் ஆலோசனைச் சங்கத்தில்,"விசுவாசத்தினால்மாத்திரம் உண்டாகும்இரட்சிப்பின்"சுவிசேஷத்தை நிலைநாட்டும்படிபேதுருஇச்சம்பவத்தை நினைப்பூட்டுகிறார்.

ஆ.வசனம்9."விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி" கிறிஸ்துவில் இருந்த விசுவாசத்தின் நிமித்தமாக கொர்நேலியுவின்வீட்டில்புறஜாதிகளின் இருதயங்களை தேவன் சுத்தமாக்கினார். பெந்தெகொஸ்தே நாளில் யூத விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டது போல (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:1-4), கொர்நேலியுவின் வீட்டார் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இதிலிருந்து தேவன் பட்சபாத முள்ளவரல்லர் என்பது தெளிவு. யூதராயினும், புறஜாதிகளாயினும், கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே "இருதிறத்தாரும்" தேவனோடு கூட ஒப்புரவாக்கப்படுகிறார்கள் (எபேசியர் 2:16). ஒப்புரவாக்கப்படுவது, விருத்தசேதனத்தையோ அல்லது மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதையோ சார்ந்தது அல்ல.

இ. வசனம் 10. "நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?" பேதுரு தனது விவாதத்தைத் தொடர்ந்து கூறும்பொழுது, "பரிசேயக் கூட்டத்தார்" தேவனை அவமதித்து, நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாக அவரைக் கோபப்படுத்துகின்றனர் எனச் சொல்லுகிறார். புறஜாதிகள் விருத்தசேதனம் பண்ணப்பட்டு, மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும் என அவர்கள் போதித்தது, தவறான உபதேசமாயிருந்தது. இந்நாளிலும், "இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால்" இரட்சிக்கப்படும் விசுவாசிகளின் பாதையில் இடறல்களைப் போடுகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தேவனைச் சோதித்து, நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாக அவரை கோபமூட்டுகிறார்கள் (கலாத்தியர் 5:4-6).

ஈ. வசனம் 10. "நம்முடைய பிதாக்களாலும், நம்மாலும் சுமக்கக் கூடாதிருந்த நுகத்தடி," ஆதாமிலிருந்து வழிவந்த பாவசுபாவத்தின் நிமித்தம், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டவைகளை யூதர்கள் நிறைவேற்றக்கூடாமலிருந்தார்கள். கிறிஸ்து இல்லாமல் தேவனுடைய சன்மார்க்கப் பிரமாணங்களை எந்த மனிதனும் கைக்கொள்ளவே இயலாது.

ஆதிச்சபையின் ஆலோசனைச் சங்கம் எருசலேமில் கூடுதல்

(அப்போஸ்தலர் 15:1-21)

எனவேதான், அவற்றை நிறைவேற்றக்கூடிய பலம் அவர்களுக்கு இல்லாதபடி, பிரமாணம் பாரமாயிற்று (ரோமர் 8:3; மேலும் காண்க மத்தேயு 23:1-4).

உ. இக்காரணத்தினாலேயே இயேசுவானவர் இவ்விதம் கூறினார்: "வருத்தப்பட்டு (பிரமாணத்தின் கீழ்) பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; .. என் நுகம் மெதுவாயும், என் சுமை (பாரம்) இலகுவாயும் இருக்கிறது" (மத்தேயு 11:28-30). கலாத்தியரைப் பவுல் எச்சரிப்பதின் காரணம் இதுவேயாகும்: "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்குட்படாதிருங்கள்" (இயேசுவை விசுவாசித்த பிறகு, பிரமாணத்தின் கீழ், கலாத்தியர் 5:1).

ஊ. சுவிசேஷத்தின் காப்புரையை பேதுரு முடித்த பிற்பாடு, பர்னபாவும், பவுலும் விசுவாசக் கூட்டத்தாருக்கு உரையாற்றினார்கள். அவர்களைக் கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள், அற்புதங்கள் யாவையும் கேட்ட விசுவாசிகள் அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இந்த அடையாளங்கள், அற்புதங்கள் யாவும், "கிறிஸ்துவின் பேரில் வைக்கும் விசுவாசத்தினால் மாத்திரம் இரட்சிப்பு உண்டாகிறது" எனப் போதித்த அவர்களுடைய தூதைத் தேவன் உறுதிப்படுத்துவதாயிருந்தன.

3. ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானம் (15:13-21).

அ. வசனம் 13-18. பர்னபாவும், பவுலும் உரையாற்றிய பின்னர், எருசலேம் சபையின் தலைமைப் பொறுப்பு வகித்து வந்த யாக்கோபு ஆலோசனைச் சங்கத்தாருக்கும், அங்கிருந்த இதர விசுவாசிகளுக்கும் உரையாற்றினார். "கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே யூதருக்கும், புறஜாதிகளுக்கும் இரட்சிப்பு உண்டு" என்று அவர்களுடைய சுவிசேஷச் செய்திக்கு வேதவாக்கியங்கள் ஒத்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியதின் மூலம், பேதுரு, பர்னபா, பவுல் ஆகியோரின் விவாதங்களை யாக்கோபு ஆதரித்துப் பேசினார். "சகலஜாதிகளையும் வசமாக்கிக் கொள்வதாக" சுமார் 750 வருடங்களுக்கு முன்னரே ஆமோஸ் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார் (ஆமோஸ் 9:11,12). பழைய ஏற்பாட்டு யூதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படியாக வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து, வேதாகமத்தை அருளிச் செய்தப் பரிசுத்த ஆவியானவரும் இத்தீர்மானத்தோடு ஒத்திருந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

ஆ. இன்று நாம் எதைச் செய்யவேண்டுமோ அதை யாக்கோபு செய்திருக்கிறார். விசுவாசிகளின் சாட்சிகள் எழுத்து வாயிலாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது உறுதிப்படுத்தப்படாவிடில், கள்ளத்தீர்க்கதரிசிகள், போதகர்கள் எவனும் மற்றும் மனதின் கற்பனைகளாலும் அநேகர் வழி தவறுவது சாத்தியமே!

இ. வசனம் 19:21. "புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது" விருத்தசேதனம் பண்ணப்பட்டு, மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வது அவசியமானது எனக் கூறி, புறஜாதிகள் இரட்சிக்கப்படுவதைக் கடினமாக்குவது ஆலோசனைச் சங்கத்தாரின் விருப்பமாயிருக்க வில்லை.

ஆதிச்சபையின் ஆலோசனைச் சங்கம் எருசலேமில் கூடுதல்

(அப்போஸ்தலர் 15:1-21)

இருப்பினும், பூர்வகாலந் தொடங்கி யூதர்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டதும், ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறதுமான நான்கு விஷயங்கள் உண்டு (வசனம் 21) அதன்படி செய்யக்கூடாதவையாவன:

1. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகள் என அறிந்த மாம்சத்தைப் புசிக்கக்கூடாது.

2. விவாகத்துக்கு முன்னும், பின்னும் தகாத விதத்தில் பாலுறவு கொள்ளக்கூடாது.

3. நெருக்குண்டு செத்த மிருகத்தின் மாம்சத்தைப் புசிக்கக்கூடாது.

4. மாம்சத்தை அதன் இரத்தத்தோடும் புசிக்கலாகாது, மிருகத்தின் இரத்தம் குடிக்கவுங் கூடாது (ஆதியாகமம் 9:4; லேவியராகமம் 17:10-12).

ஈ. வசனம் 29. யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளிடையே அந்நியோந்நியமும், ஐக்கியமும் இருக்க வேண்டுமானால் மேற்கூறப்பட்ட நான்கு காரியங்களும் புறஜாதி விசுவாசிகளால் தவிர்க்கப்பட வேண்டும். பவுலும், அவரோடிருந்தவர்களும் ஆலோசனைச் சங்கத்துடன் இசைந்திருந்தார்கள். தாங்கள் நிறுவிய சபைகளில் இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்வதினால் உண்டாகும் தீமையைக் குறித்து அவர்கள் ஏற்கெனவே போதித்துக் கொண்டிருந்தார்கள் (1கொரிந்தியர் 8:1-13; 10:14-22; 6:12-20).

முடிவுரை

அ. பேதுருவின் சாட்சியும், எருசலேம் ஆலோசனைச் சங்கத்தின் தீர்மானமும் இதை மிகத்தெளிவுபடுத்துகிறது:- விருத்தசேதனமும், மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்வதும் இரட்சிக்கப்படுவதற்குத் தேவையில்லை. இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே யூதருக்கும், புறஜாதிகளுக்கும் இரட்சிப்புண்டாகிறது!

ஆ. மேலே நாம் கண்ட அடிப்படைக் கேள்விக்கு ஆதிச்சபை பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. இன்றைய சபையின் இரட்சிப்பின் உபதேசத்திற்கு, ஆலோசனைச் சங்கத்தின் இத்தீர்மானம் ஏற்றதாயுள்ளது.

இ. இயேசு கிறிஸ்துவின் மேல் இதுவரை விசுவாசம் வைத்திராத சிலர் இந்நாளில் இங்கு வந்திருக்கலாம். உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அவசியத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் உங்களோடு பேசிக்கொண்டிருந்திருப்பாரேயாகில், அதற்கேற்ப நீங்கள் செயல்பட வேண்டிய நேரம் இதுவே. நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டால், ஆதிச்சபையின் காலத்தில் இயேசுவானவர் செய்ததைப்போல், "உங்கள் பாவங்களை மன்னித்து, விசுவாசத்தினால் உங்கள் இருதயங்களை சுத்திகரிப்பார்."

மக்கெதோனியா மனுஷனைப் பற்றிய பவுலின் தரிசனம் (அப்போஸ்தலர் 16:6-15)

முன்னுரை

அ. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சீஷர்களை ஊழியத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்துகிறார்.

ஆ. நமது வேதப் பகுதியில் பவுலும், அவனோடிருந்தவர்களும் பிரிகியா, கலாத்தியா பகுதிகளில் ஊழியஞ் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆசியாவின் தென்பகுதிக்குப் போகும்படி முயற்சித்தார்கள். ஆனால், பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அதன்பின் அவர்கள் வடக்கே போகும்படி முயற்சித்தார்கள், ஆனால் மறுபடியும் பரிசுத்த ஆவியால் தடைபண்ணப்பட்டார்கள். ஆதலால் அவர்கள் துரோவாவுக்கு வந்தார்கள். அங்கே இராத்திரியிலே பவுலுக்குத் தரிசனம் உண்டாயிற்று. அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து, எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று பவுலை வேண்டிக்கொண்டதாக இருந்தது. உடனே அவர்கள் கப்பலேறி, மறுநாளிலே நெயாப்போலி சென்று, அங்கேயிருந்து மறுகரையான பிலிப்பு பட்டணம் சென்றனர்.

1. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஊழியத்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நடத்துவார் (16:9,10).

பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நம்மை ஊழியத்தில் வழிநடத்தும் அநேக வழிகளில் தரிசனங்களும் ஒன்றாகும். அப்போஸ்தலர் நடபடிகளில்:

1. பவுலுக்கு ஊழியஞ் செய்யும்படி அனனியா அழைக்கப்பட்ட பொழுது, தரிசனத்தில் இயேசு அவனுக்குத் தோன்றினார் (அப்போஸ்தலர் *9:10*).

2. கொர்நேலியு வீட்டாருக்கு ஊழியஞ் செய்யும்படி பேதுரு அழைக்கப்பட்ட பொழுது, அவருக்குத் தரிசனம் அருளப்பட்டது. (அப்போஸ்தலர் *10:9*).

3. கொரிந்துவில் தங்கி, அங்கே அவருடைய ஊழியத்தைத் தொடரும்படிக்குப் பவுலுக்குச் சொல்லப்பட்டபொழுது இயேசு அவருக்குத் தரிசனத்தில் தோன்றினார் (அப்போஸ்தலர் *18:9*).

இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்

1. சொல்லப்பட வேண்டியவற்றைப் பரிசுத்த ஆவியானவரே துவக்கினார்.

2. அதைத் தொடர்ந்து செய்யப்பட வேண்டியது சப்தத்தின் மூலம் அருளப்பட்டது.

ஆ. மிக நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் முறைகளின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார்:

1. பரிசுத்த ஆவியின் வரங்களின் மூலம், பவுலும் பர்னபாவும் ஊழியத்துக்காக அழைக்கப்பட்ட பொழுது தீர்க்கதரிசனம் உண்டாயிற்று (அப்போஸ்தலர் *13:1,2*).

2. நேரிடையான கட்டளைகள் மூலம். இரதத்தில் வந்து கொண்டிருந்த எத்தியோப்பிய அண்ணகனுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு பிலிப்புவுக்குச் சொல்லப்பட்டபொழுது அவனுக்குள்ளிருந்து பரிசுத்த ஆவியானவர் அவனோடு தெளிவாகப் பேசினார் (அப்போஸ்தலர் *8:29*).

மக்கெதோனியா மனுஷனைப் பற்றிய பவுலின் தரிசனம் (அப்போஸ்தலர் 16:6-15)

3. தேவதூதன் மூலம் ரோமப் பயணத்தில் ஏற்பட விருந்த கப்பற்சேதம் பற்றி பவுல் எச்சரிக்கப்பட்ட பொழுது, தேவனுடைய தூதனானவன் இராத்திரியில் பவுலினிடத்தில் வந்து நின்று அவரோடு பேசினான் (அப்போஸ்தலர் 27:23).

4. சொப்பனங்களின் மூலம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப் பட்டதை பேதுரு எடுத்துக்காட்டி இவ்விதம் கூறுகிறார்: "கடைசி நாட்களில் ..... உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்" (அப்போஸ்தலர் 2:17).

இ. வசனம் 9. மக்கெதோனியா தேசத்தான் தங்களுக்கு உதவி செய்யும்படி தரிசனத்தில் பவுலை வேண்டிக் கொண்டான். "வேண்டிக்கொள்ளுதல்" என்பதற்கு, அழைத்தல், கூப்பிடுதல், இரத்தல் என அர்த்தமாகும். மக்கெதோனியா மக்கள் பவுலினால் கொண்டு வரப்படும் செய்தியைப் பெற்றுக் கொள்ளும்படியான நிர்நிர்பந்தமானத் தேவையிலி ருந்தார்கள். யாரேனும் வந்து தங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென மன்றாடும் அநேக மக்களும், நாடுகளும் இப்பாரில் உண்டு. சீன மக்கள் உதவிக்காக மன்றாடிக் கொண்டிருக்கின்றனர். இந்தியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மக்கள் உதவிக்காக மன்றாடிக் கொண்டிருக்கின்றனர்.

ஈ. வசனம் 10. பவுல் ஆவியானவரின் சத்தத்தை அறிந்திருந்தார். இதினிமித்தமாகவே மக்கெதோனியாவுக்குச் செல்லும்படியான உடனடி ஆயத்தங்களைச் செய்தார்.

ஆவியானவரின் சத்தத்துக்கும், அந்நியரின் சத்தத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அவர் கற்றறிந்திருந்தார் (யோவான் 10:3-5). நாமுங் கூட ஆவியின் சத்தத்தை அறிந்து கொள்ளுகிறவர்களாயிருக்க வேண்டும். அப்பொழுது மாத்திரமே தரிசனங்கள், பரிசுத்த ஆவியின் வரங்கள், பரிசுத்த ஆவியானவரின் நேரிடை கட்டளைகள், தூதர்கள் மற்றும் சொப்பனங்கள் மூலம் நாம் வழிநடத்தப்படும் பொழுது, அதற்கேற்ப செயல்படுகிறவர்களாயிருப்போம். இவ்வித வழிநடத்துதலை வேதத்தின் போதனைகளுடன் சரிபார்க்கவும் நாம் மறக்கக் கூடாது. எழுதப்பட்ட வார்த்தைக்கு எதிரிடையான விதத்தில் பரிசுத்த ஆவியானவர் ஒருக்காலும் வழிநடத்தமாட்டார்.

உ. அப்போஸ்தல நடபடிகளில் விசுவாசிகள் இப்படிப்பட்ட சமயங்களில் ஆவியின் சத்தத்தைக் கேட்டார்கள்:

1. ஜெபித்தபோது (பேதுரு, அப்போஸ்தலர் 10).

2. கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்த போது (பவுலும், பர்னபாவும், அப்போஸ்தலர் 13).

3. நித்திரை செய்தபோது (பவுல் அப்போஸ்தலர் 18, 27).

4. சாலையில் நடந்து சென்றபோது (பிலிப்பு அப்போஸ்தலர் 8).

பரிசுத்த ஆவியானவர் உங்களோடு பேசுவதை நீங்கள் விளங்கிக் கொள்ளுவீர்களானால், எந்த இடத்திலும், சூழ்நிலையிலும் அவர் உங்களோடு பேசுவார். நான் ஊழியஞ்செய்யும் போது அநேகந் தடவைகளில் ஆவியானவர் என்னோடு பேசுகிறார்.

மக்கெதோனியா மனுஷனைப் பற்றிய பவுலின் தரிசனம் (அப்போஸ்தலர் 16:6-15)

ஊ. இயேசு இவ்விதம் கூறினார்: "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்." (யோவான் 16:13). இவ்விதம் சம்பவிக்கும்படி நீங்கள் எதிர்பாருங்கள். ஆதிச் சபையிலுள்ள சீஷர்களோடு அவர் பேசியது போல உங்களோடும் பேசும்படி பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள். உங்களுடைய ஊழியத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உங்களை வழிநடத்தும்படி வேண்டிக்கொள்ளுங்கள். ஊழியத்திற்காக உங்களை ஆயத்தப்படுத்துவதற்கு வழிநடத்தும்படி அவரிடம் விண்ணப்பஞ் செய்யுங்கள்.

1. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஊழியத்தில் "இல்லை" எனக் கூறி அடிக்கடி வழிநடத்துகிறார் (16:6-8).

அ. வசனம் 6,7. புதிய ஆங்கில மொழி பெயர்ப்பில் "பரிசுத்த ஆவி" என்னுமிடத்தில் "இயேசுவின் ஆவி" என எழுதப்பட்டுள்ளது. இவ்விரண்டு பதங்களும் ஒன்றுக்கொன்று மாற்றம் செய்யக் கூடியவையே ஆகும். அப்போஸ்தலர் 5:3-இல் "நீ தேவனிடத்தில்" பொய் சொன்னாய் எனக் கூறுமிடத்தில் "பரிசுத்த ஆவியினிடத்தில்" பொய் சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, வேதாகமத்தில் திருத்துவத்தின் மூன்று ஆள்தத்துவங்களின் பெயர்களை ஒன்றுக்கொன்று மாற்றி எழுதுவது சாதாரண விஷயமாகும்.

ஆ. பவுல் தெற்கு நோக்கிச் சென்றார், பரிசுத்த ஆவியால் ஊழியம் அங்கே தடை பண்ணப்பட்டது. அவர் வடக்கு நோக்கிச் சென்றார். அங்கே ஊழியம் மறுக்கப்பட்டது. பின்னர் மேற்கு நோக்கிச் சென்றார். பரிசுத்த ஆவியால் ஊழியம் மறுக்கப்படுவதைக் குறித்து பவுல் குழப்பமடையவில்லை. இச்சூழ்நிலைகளில் நாம் எதைச் செய்ய வேண்டுமோ, அதையே அவர் செய்தார். ஊழியத்தின் ஒரு வாசல் அடைக்கப்படும் பொழுது, நாம் மற்றதைத் தொடர வேண்டும். பரிசுத்த ஆவியானவர் "ஆம்" எனக் கூறும் வரைக்கும், வெவ்வேறு வழிகளில், நம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பின்தொடர வேண்டும்.

இ. பரிசுத்த ஆவியானவர் பவுலுக்கு எந்த விதத்தில் "இல்லை" எனக் கூறினார் என்று பதிவு செய்யப்படவில்லை. ஒருவேளை தரிசனங்கள், சொப்பனங்கள், தீர்க்கதரிசன வரம், அல்லது சூழ்நிலைகளின் மூலம் வெளிப்படுத்தலாக இவ்விதம் கூறியிருக்கலாம். குறிப்பிட்ட இடத்தில் ஊழியம் இல்லை என்றால் "இல்லை" என்பதே ஆவியானவரின் பதில் ஆகும்.

ஈ. என்னுடைய ஊழியத்தில், பாதுகாப்பை அல்லது குடும்பத்தைக் கருதி, குறிப்பிட்ட இடத்தில் தங்கும்படியாக நான் சோதிக்கப்பட்ட சமயங்கள் உண்டு. ஆனால் அவ்வேளைகளில், "இல்லை, நீ இப்பொழுதே போக வேண்டும், உனக்கு இங்கே ஊழியம் இல்லை" எனப் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசியதை நான் அறிந்திருக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் "இல்லை" எனக் கூறிய பின்னரும் அங்கேயே தங்கியிருக்கும் மற்றவர்களை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய், குழப்பமடைந்தவர்களாய் அல்லது அவர்களுடைய ஊழியத்தில் ஆவியின் அபிஷேகம் அற்றவர்களாய் இருந்ததுண்டு.

மக்கெதோனியா மனுஷனைப் பற்றிய பவுலின் தரிசனம்

(அப்போஸ்தலர் 16:6-15)

பரிசுத்த ஆவியானவர் "இல்லை" எனக் கூறும்பொழுது, வேறு ஊழியத்தை அல்லது ஊழியஞ் செய்வதற்கான வேறொரு இடத்தை முயற்சியுங்கள்; பொறுமையாயிருங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், "ஆம், ஊழியம் இதுவே, இடம் இதுவே, வழி இதுவே" என்பார்.

2. நம்முடைய ஊழியத்தைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தும் பொழுது பலன்கள் உண்டாகும் (16:13-15).

அ. வசனம் 13. "ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து... உபதேசித்தோம்". பிலிப்புவில் மிகச் சொற்பமான யூதர்கள் இருந்தார்கள். அங்கே ஜெப ஆலயமில்லை. ஆகையால், யூதர்கள் ஜெபிக்கும்படி ஆற்றினருகே கூடினார்கள். ஓடும் தண்ணீரின் அருகில் ஜெபிப்பதற்கான இடங்களை அமைப்பது வழக்கமாயிருந்தது, ஏனெனில், அவர்களுக்கு அநேக சுத்திகரிப்பு சடங்குகளிருந்தன. பவுல் சுவிசேஷ ஊழியஞ் செய்த இடங்களில் எப்பொழுதும் முதலில் அப்பட்டணத்திலுள்ள ஜெப ஆலயத்துக்குச் செல்வதுண்டு. பிலிப்புவில் அவர் இவ்விதம் செய்ய முடியாமலிருந்ததின் காரணம் அங்கு ஜெப ஆலயம் இல்லாமல் இருந்ததேயாகும்.

ஆ. வசனம் 14. லீதியாள் "தேவனை வணங்குகிறவளாய்" இருந்தாள். அதென்னவெனில், இவள் தேவனை விசுவாசித்து, வேதத்தின் சன்மார்க்கப் போதனைகளைப் பின்பற்றுகிறவளுமா யிருந்தாள். இருப்பினும், அவள் யூத மார்க்கத்துக்கு முழுவதும் மாறாதவளாயிருந்தாள். மேலும் அவள் இரத்தாம்பரம் விற்கிற வளுமாயிருந்தாள். இது ஓர் ஆடம்பரமான வியாபாரமாகும். எனவே, ஒருவேளை லீதியாள் செல்வச் சீமாட்டியாய் இருந்திருப்பாள். பின்னாட்களில் பிலிப்பியர் சபையிலிருந்து பவுல் பெற்றுக்கொண்ட அநேக உபகாரங்களுக்கு இவள் பொறுப்புடையவளாயிருந்திருப்பாள் (பிலிப்பியர் 4:14-16; 2கொரிந்தியர் 11:9).

இ. வசனம் 14, 15. பவுல் சொல்லி யவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினது மாத்திரமல்ல, பவுலின் சுவிசேஷக் குழுவினர் தங்கியிருக்கும் படிக்கு அவளுடைய வீட்டையும் கொடுக்கும்படி அவள் இருதயத்தையும் கர்த்தர் ஏவினார். இது, சீரியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்த கிளைச்சபையைப் போன்றிருந்தது. பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட ஊழியத்தினால் கிடைத்த பலன்கள் யாதெனில்;

1. லீதியாளும், அவள் வீட்டாரும் கர்த்தரில் விசுவாசம் வைத்தார்கள்.

2. ஒரு சபையை ஆரம்பிப்பதற்கான ஒரு கூட்டம் விசுவாசிகள் சேர்ந்தனர்.

3. சுவிசேஷக் கிளைச்சபை நிறுவப்பட்டது.

ஈ. எட்டு வருடங்களுக்கு முன் இயேசு என் அருகில் நின்றார். அவர் என்னிடம், "முழு உலகத்துக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கி" என்றார். இதே காரியத்தைக் குறித்து சொப்பனங்களின் மூலம் என் மனைவியோடும் அவர் பேசினார்! சீனாவில் ஊழியஞ் செய்யும்படி நாங்கள் முதலாவது ஹாங்காங் வந்து, சீனா வானொலிக்கான நிகழ்ச்சிகளையும்; தொடர் செய்திகளையும் எழுதிக் கொண்டிருந்தோம்.

மக்கெதோனியா மனுஷனைப் பற்றிய பவுலின் தரிசனம் (அப்போஸ்தலர் 16:6-15)

இப்பொழுது சீன மத்திய நாடு முழுவதும் வழங்கக் கூடிய பெந்தெகொஸ்தே, சுவிசேஷப் பணி, சீஷத்துவப் பயிற்சி, மற்றும் உபதேச விஷயங்களை எழுதுகிறோம். இந்த ஊழியங்களுக்காக கீ (kY) ஒஹ் (oH) பா (pa) போன்ற சபைகளின் மூலம் கிடைக்கப் பெற்ற பல்லாயிரக்கணக்கான டாலர்களை கடந்த சில வருடங்களில் நாங்கள் செலவு செய்திருக்கிறோம். சீனாவுக்கு சுவிசேஷச் செய்தியை எடுத்துச் செல்பவர்களால் நமது இலக்கியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஊழியத்தில் பரிசுத்த ஆவியால் நீங்கள் வழிநடத்தப்படும் பொழுது, கிறிஸ்துவின் சபை முன்னேறக் கூடியதான பலாபலன்கள் உண்டாகும்.

முடிவுரை

அ. நமது வேதப் பகுதியில் அடங்கிய சத்தியங்கள் யாவை?

1. தரிசனங்கள், பரிசுத்த ஆவியின் வரங்கள், நேரிடை கட்டளைகள், தூதர்கள், சொப்பனங்கள் மூலம் பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு மேற்ப்பட்ட விதத்தில் ஊழியத்தில் நம்மை வழிநடத்துவார்.

2. சில வேளைகளில் "இல்லை" எனக் கூறுவதின் மூலம் நம்மை வழிநடத்துகிறார்.

3. நம்முடைய ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் நம்மை வழிநடத்தும் போது பலன்கள் உண்டாகும்.

ஆ. நான் எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேனோ அந்த விஷயத்தில் உங்களையும், உங்களுடைய ஊழியச் சூழ்நிலைகளையும் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய ஊழியங்களில் விசேஷித்த வழிநடத்துதல் நமக்குத் தேவையான அநேக வேளைகள் உண்டென்பதை நான் அறிந்திருக்கிறேன். நாம் ஊழியத்திற்கென ஆயத்தமாகும் பொழுதும், விசேஷித்த வழிநடத்துதல் தேவையான வேளைகள் உண்டு. அப்படிப்பட்ட விசேஷித்த வழிநடத்துதல் தேவையான வேளைகளில் ஒன்றாக இந்நேரம் உங்களுக்கிருக்கலாம்!

இ. உங்களுடைய ஊழியத்தைக் குறித்து, பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த நடத்திப்பு உங்களுக்குத் தேவையாக இருக்குமானால், இப்பொழுதே நீங்கள் எழும்பி காலூன்றி நில்லுங்கள். "என்னுடைய ஊழியம்' என்ன? நான் என்ன ஊழியஞ் செய்ய வேண்டும்? ஊழியத்திற்காக என்னை ஆயத்தப்படுத்தும்படி நான் செய்ய வேண்டிய முதல்படி எது?" என நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பீர்களானால், நான் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன்! பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துவார் என இயேசு கூறினார். அவர் அதைச் செய்யும்படிக்கு இப்பொழுது எதிர்பாருங்கள்!

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

முன்னுரை

அ. இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அசுத்த ஆவிகளை அடையாளங் கண்டு, விரட்ட முடியும்.

ஆ. மக்கெதோனியா தேசத்தானின் அழைப்புக்கு இணங்கி பவுல் மக்கெதோனியாவிலும், பிலிப்புவிலும் ஊழியஞ் செய்தார் (அப்போஸ்தலர் 16:9). அவருடைய ஊழியத்தில் தெய்வீக வழிநடத்துதலின்படி மக்கெதோனியா சென்றார். பிலிப்புவுக்கு வெளியே ஆற்றினருகே "ஜெபிக்கும் இடம்" இருந்தது. பிலிப்புவில் வெகுசில யூதர்கள் மாத்திரம் இருந்ததால், அங்கே அவர்களுக்கு ஜெபஆலயம் இல்லை. ஆகையால், அவர்கள் ஜெபிக்கும்படியாகவும், அவர்களுடைய மதசம்பந்தமான பணிகளை ஆற்றும்படியாகவும் ஆற்றினருகே கூடினார்கள். பிலிப்புவில் இந்த இடத்தில்தான் பவுலின் மூலம் முதல் முதலில் கிறிஸ்தவத்துக்கு மாறினார்கள். (லீதியாளும், அவள் வீட்டாரும்). வருங்காலத்தை முன்னறிவிக்கும் குறிசொல்லும் ஆவியைக் கொண்டிருந்த அடிமைப் பெண்ணை அப்போஸ்தலர் சந்தித்தபொழுது, அவர்கள் ஜெபப்பண்ணனும் இடத்துக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

1. அசுத்த ஆவிகளுக்கு இருக்கும் வரம்புக்குட்பட்ட அசாதரண வல்லமைகளினால் அவைகளை அடையாளம் காண இயலும் (16:16).

அ. அடிமைப் பெண்ணைப் பிடித்திருந்த அசுத்த ஆவியின் மூலம், வருங்காலத்தைப் பற்றி அவள் குறிசொன்னாள். அசுத்த ஆவி அடிமைப் பெண்ணின் மூலம் பேசி, ஜனங்களுடைய அதிர்ஷ்டத்தைப் பற்றி கூறிற்று. இப்பெண்ணால் அசுத்த ஆவியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தான் விரும்பிய போதெல்லாம் அது பேசிற்று. இதைச் செய்வதற்கு அசுத்த ஆவிகளுக்கு வரம்புக்குட்பட்ட வல்லமையுண்டு.

ஆ. இப்பெண் பைத்தன் (பாம்பு) என அழைக்கப்பட்டாள். பைத்தன் கிரேக்க தெய்வமாகிய அப்பொல்லோவின் அடையாளமாகும். அவள் வருங்காலம் பற்றிச் சொல்லுவது அப்பொல்லோவின் சப்தம் என அவளுடைய எஜமான்கள் ஜனங்களிடம் சொல்லியிருந்தார்கள். ஆதலால், இந்த அடிமைப் பெண்ணின் மூலம் தங்கள் வருங்காலத்தை அறிந்து கொள்ளும்படி ஜனங்கள் ஏராளமான பணம் கொடுத்தார்கள்.

இ. பிலிப்புவில் வருங்காலத்தைச் சொல்லுபவர்களை நாடிய ஜனங்கள், இதர மாயவித்தைகளிலும் (அசுத்த ஆவியின் அசாதரண செயல்) ஈடுபடும்படி வசீகரிக்கப்பட்டனர். இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்யும் ஜனங்களின் வழி இதுவே. மாயவித்தை, மூட நம்பிக்கை, பில்லி சூனியம், ஆவிகளின் தொடர்பு, மரித்தவர்களின் வணக்கம், அசுத்த ஆவிகள் போன்றவற்றுக்கு விக்கிரக ஆராதனை வழிவகுக்கும். "இருட்டறையும், வலுசர்ப்பமும்" விளையாடுதலும், சாத்தான் வணக்கத்திற்கு அல்லது அசுத்த ஆவியால் பீடிக்கப்படுதலுக்கு வழிகோலக் கூடும்.

ஈ. வாக்குத்தத்த தேசத்திலிருந்து இஸ்ரவேலர் துரத்திவிட்ட ஜனங்களின் பழக்க வழக்கங்களில் ஒன்று குறிசொல்லுதலாயிருந்தது. இயேசுவை பின்பற்றுகிறவர்கள் இதனை அப்பியாசப்படுத்தக்கூடாது. இவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்.

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

இஸ்ரவேலர் மற்ற ஜனங்களோடு வாழ்ந்த பின்னர், தீயவல்லமையினால் செய்யப்படும்

குறிசொல்லுதலை அப்பியாசப்படுத்த ஆரம்பித்தார்கள் (2 இராஜாக்கள் 17:17). ஆதலால் குறிசொல்லுதலில் ஈடுபட்டவர்களின் மத்தியில் வாழும், அல்லது அவர்களோடு சம்பந்தப்பட்ட கிறிஸ்தவர்கள், அவைகளில் தாங்களும் ஈடுபடாவண்ணம் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

உ. ஹராங்காங்கில், விசேஷமாக, கோவில் தெருவில் குறிசொல்லுவதை நீங்கள் பார்க்கக்கூடும். கைரேகை சாஸ்திரம், இராசி மண்டல அடையாளங்கள், படிகக்கல் உருளை, வானத்தில் கிரகணங்களின் இருப்பிடம் பற்றிய சாஸ்திரம், மந்திர அட்டை போன்றவைகள் குறிசொல்லப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தீயப் பழக்கங்களுக்குப் பின்னால் அசுத்த ஆவிகளின் இயற்கைக்கு மேம்பட்ட வல்லமை உள்ளது. இவைகள் வருங்காலத்தை முன்னுரைக்கக் கூடியவை. அசுத்த வல்லமையை அடையாளங்காண இதுவும் ஒரு வழியாகும்.

ஊ. அசுத்த வல்லமையை அடையாளங்காண இதர வழிகளுமுண்டு. அப்போஸ்தலர் நடபடிகளிலும், சுவிசேஷங்களிலும் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டவர்களின் நடத்தையைப் புனராய்வு செய்வோமானால் கீழ்க்கண்ட தன்மைகள் அவர்களில் இருப்பதை நாம் கவனிக்கலாம்.

1. பேசக்கூடாததும், பார்க்க முடியாததுமான அனுபவம் (மத்தேயு 9:32,33; 12:22).

2. மிகுந்த வல்லமை உண்டு; தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளுதல்; வேதனையில் அலறுதல் (மாற்கு 5:4,5; அப்போஸ்தலர் 19:16).

3. அலைக்கழிந்து, தரையிலே விழுந்து, வாயில் நுரைதள்ளிப் புரளுவதுண்டு. அடிக்கடி தீயிலும், தண்ணீரிலும் தள்ளப்படுவதுண்டு. பேச்சற்று, பற்களை கடித்துக் கொண்டு, விறைப்பாக இருப்பதுண்டு (மாற்கு 9:17-27).

4. கட்டுக்கடங்காமல் கீழே விழத் தள்ளுவதுமுண்டு (மாற்கு 9:18; லூக்கா 4:35).

5. அவர்கள் வாதிக்கப்பட்டு, தீமைத் தூண்டுதலால் அலறுவதுண்டு (அப்போஸ்தலர் 5:16; லூக்கா 9:39).

6. அவர்கள் தொலைவான இடங்களில் வாழ்ந்து, வஸ்திரமில்லாமல் ஓடுவதுண்டு (லூக்கா 8:27).

7. இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவுடைய மனம் அவர்களுக்குண்டு (மாற்கு 1:24; 5:7). இவர் இன்னாரென்று சொல்லப்படாமலேயே அசுத்த ஆவிகள் இயேசுவை அறிந்திருந்தன. பவுலும் அவரோடிருந்தவர்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை அறிந்திருந்த அடிமைப் பெண்ணிலும் (இந்த வேதப்பகுதியில்) இது தெளிவு.

8. அவர்களுக்கு மாறுபட்ட சத்தம் உண்டு (மாற்கு 1:24-25; 5:12). இயேசுவானவர் அசுத்த ஆவிகள் பேசினதை விளங்கிக் கொண்டார். ஏனெனில் சத்தத்தில் மாற்றமிருந்தது. இந்த வேதபகுதியில் சொல்லப்பட்டுள்ள குறிசொல்லுகிற பெண்ணின் சத்தமும், ஒருவேளை அசுத்த ஆவியின் சத்தமாய் இருந்திருக்கும்.

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

9. அசுத்த ஆவி பிடித்தவர்கள் மிருகங்களைப் போல உறுமுதல், குரைத்தல் மற்றும் மிக இழிவான வார்த்தைகளை உபயோகித்தல் ஆகியவை பற்றிய ஏராளமான அறிக்கைகள் கிடைத்திருக்கின்றன. வரம்புக்குட்பட்ட தங்களுடைய அசாதரண வல்லமையினால், அசுத்த ஆவிகள் யாரைப் பிடித்திருக்கிறதோ அவர்களைக் கொண்டு இக்காரியங்களைச் செய்ய வைக்கின்றன. பிசாசு பிடித்தவர்கள் இதைத் தவிர்க்க கூடாதவர்களாக உள்ளனர். இருப்பினும், அசுத்த ஆவிகள் இவற்றைச் செய்யும்படி கொண்டுள்ள அசாதரண வல்லமை வரம்புக்குட்பட்டதே!

2. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கும், சுவிசேஷச் செய்திக்கும், அவப்பெயர் உண்டாக்கும் படியான அவைகளுடைய முயற்சிகளினால் அசுத்த ஆவிகளை அடையாளம் காண இயலும் (16:17).

அ. "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று வீரிட்டு உச்சஸ்தானியில் மீண்டும் மீண்டும் சத்தமிட்டுக் கொண்டு அசுத்த ஆவி பிடித்திருந்த பெண் அப்போஸ்தலர்களைப் பின்தொடர்ந்தாள். இவை அனைத்தும் அநேகருடைய கவனத்தைக் கவர்ந்திருக்கக் கூடும். ஹாங்காங்கில் இவ்வித சம்பவம் நிகழ்ந்திருந்தால் ஆயிரக்கணக்கானோர் குழுமியிருந்திருப்பார்கள்.

ஆ. நம்முடைய ஆராதனைகளில் ஏற்படும் குழப்பங்களில் பல, அசுத்த ஆவிகளினால் உண்டாகின்றன எனத் தனிப்பட்ட விதத்தில் நான் உணருகிறேன். சுவிசேஷச் செய்தியை ஏற்க மறுக்கும் ஜனங்களிலும் அசுத்த ஆவியின் செயல் உண்டு. நமது மேய்ப்பர்கள், சபைத் தலைவர்கள், இதர அங்கத்தினர்கள் ஆகியோர் பாவத்தில் விழுவதற்கும் அசுத்த ஆவியின் செயலே காரணமாகும். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கும், சுவிசேஷச் செய்திக்கும் அவப்பெயர் உண்டாக்கும்படி சாத்தான் முயற்சிக்கிறான்.

இ. இது சந்தேகத்துக்கு இடமின்றி திட்டவட்டமான உண்மையாகும். நீங்கள் பத்திரிக்கைகளை கவனியுங்கள், மாவட்டக் கண்காணிப்பாளருடனும், சமயத் தலைவர்களுடனும் பேசுங்கள்; அமெரிக்காவில் (மற்றும் இதர நாடுகளிலும்) உள்ள மேய்ப்பர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் (மிஷனரிகள்) ஆகியோரை அழிக்கும்படி சாத்தான் தீவிரமான, திட்டமிடப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். இது உண்மை என்பதற்கான சான்று சபைத் தலைவர்களிடையே நாம் கண்டு வரும் அசுத்த ஆவியின் செயல் ஆகும்!

1. மத்திய மேற்கு நாட்டிலுள்ள சபையில் ஊழியம் செய்த மூத்தப் போதகரும், பிள்ளைகளின் போதகரும் மிகத் தீவிரமாகத் தொல்லைப்படுத்தப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. (வீட்டிலிருக்கையில், சபை அலுவலகத்தில் இருக்கையில், தொலை பேசியில் பேசுகையில், பிரசங்க பீடத்தில் நிற்கையில் மிகுந்த தொல்லையுண்டு)

2. ஐரோப்பா சென்ற மிஷனரி ஒருவர் விமானத்தில் சூனியக்காரியோடு (வெளிச்சத்தோடு பிரகாசித் தவர்) உரையாடினார். அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு போதகரின் விழுகைக்காகவும் சூனியக்காரர் குழாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

ஈ. அசுத்த ஆவி பெண்ணின் மூலம் பவுலைப் பற்றி கூறியவைகள் மெய்யே. இருப்பினும், அவனுடைய நோக்கம் அப்போஸ்தலர்களின் தூதுக்கு அவப்பெயர் உண்டாக்க வேண்டுமென்பதே. அசுத்த ஆவி பிடித்த பெண்ணோடு கூட சேர்ந்து அப்போஸ்தலர்கள் வேலை செய்வதாக ஜனங்கள் நினைக்கும்படி அசுத்த ஆவி முயற்சித்துக் கொண்டிருந்தது. பிசாசின் வல்லமையைக் கொண்டு அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்து கொண்டிருந்தார்கள் என ஜனங்கள் எண்ணக்கூடும். அப்படியானால், அப்போஸ்தலர்களுக்கும், சுவிசேஷச் செய்திக்கும் அவப்பெயர் உண்டாகும்.

உ. தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு எதிரிடையானவற்றையே எப்பொழுதும் சாத்தான் செய்கிறான்.

1. கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் *(மத்தேயு 24:24).*

2. அந்திகிறிஸ்து (பிரமாணமில்லாதவன்) பொய்யான அடையாளங்களோடும், அற்புதங்களோடும், சகல வல்லமையோடும் தோன்றுவான் எனப் பவுல் கூறுகிறார். அசாதாரண விதத்தில் வெளிப்பட்டு, இயேசுவைப் பின்பற்றுகிறவர்களையும், சுவிசேஷச் செய்தியையும் இழிவுபடுத்த சாத்தான் எத்தனிக்கிறான்.

ஊ. ஒருவர் பேசுவதும், இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை வெளிப்படுத்துவதும் தேவனுடைய ஆவியினாலேயா அன்றி, அசுத்த ஆவியினாலேயா என்பதை நாம் எவ்விதம் கண்டுபிடிக்கக் கூடும்? நாம் ஆவிகளை சோதித்தறியும்படி வேதம் போதிக்கிறது *(1யோவான் 4:1; 1கொரிந்தியர் 14:29; 1தெசலோனிக்கேயர் 5:21).* இதனைக் கண்டறிய அநேகவழிகள் உள்ளன.

1. "ஆவிகளைப் பகுத்தறியும்" வரம் பரிசுத்த ஆவியினால் அளிக்கப்படுகிறது *(1கொரிந்தியர் 12:10).* இந்த ஆவியின் வரங்களினால் மனுஷீக ஆவி, தீய ஆவி மற்றும் நல்ல ஆவி போன்றவைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் விசுவாசிகள் விளங்கிக் கொள்ளுதல் சாத்தியமாகிறது.

2. இயற்கைக்கு மேற்பட்டவற்றை வெளிப்படுத்தும் தனிப்பட்ட நபரின் சன்மார்க்கக் குணாசீலங்களைக் கவனிக்க வேண்டும். "நீங்கள் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" *(மத்தேயு 7:15,16,20).*

3. இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் வெளியாக்கப்படும் காரியங்கள், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய தெய்வீகம், மனுஷீகம், மேசியாத்துவம், மனுஷனுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள மத்தியஸ்துவம், கல்வாரியின் தியாகக் கிரியை *(லூக்கா 24:27).* ஆகியவற்றுடன் சம்பந்தமுடையவைகளாய் இருக்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்து பாருங்கள்.

4. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விஷயத்தில் இயற்கைக்கு மேற்பட்டவற்றை வெளிப்படுத்துபவரின் மனப்பான்மையைச் சோதித்துப் பாருங்கள் *(1கொரிந்தியர் 12:3; 1யோவான் 4:2,3; மாற்கு 9:39).* தனது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசுவோடு தனக்குள்ள தனிப்பட்ட உறவை அவர் அறிக்கை செய்கிறாரா?

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

3. விசுவாசிகள் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை விரட்ட முடியும் (16:18).

அ. ஏதோ சில காரணத்தினால் இந்த அடிமைப்பெண் அநேக நாள் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கும்படி பவுலும், அவரைச் சார்ந்தவர்களும் விட்டு வைத்திருந்தார்கள். "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறார்கள்'' என்ற வாசகத்தை வீறிடும் உரத்தத்தொனியில் இந்தப் பெண்ணுக்குள்ளிருந்து அசுத்த ஆவி மீண்டும் மீண்டும் சத்தமிட்டுக் கூறிற்று.

ஆ. விரும்பத்தகாத விதத்தில் வீறிட்டலறிய பெண்ணின் சத்தத்தைக் கேட்ட பவுல் சினங்கொண்டார். முழு சூழ்நிலையினால் அவர் பாரமடைந்தவரானார். இது தேவனுடைய வேலையைத் தடை செய்கிறது என அவர் உணர்ந்தார். இது ஓர் அசுத்த ஆவி என்பதையும், இது என்ன செய்ய முயற்சிக்கிறது என்பதையும் அவர் விளங்கிக் கொண்டார். ஆகையால், அவர் திரும்பிப் பார்த்து, "நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே (அதிகாரத்தினாலே) உனக்குக் கட்டளையிடுகிறேன்'' என்று அந்தப் பெண்ணுடன் அல்ல, அந்த ஆவியுடனே சொன்னார்!!! "அந்நேரமே" (உடனே) அசுத்த ஆவி அப்பெண்ணை விட்டு வெளியேறிற்று.

இ. அசுத்த ஆவி பிடித்திருந்த ஜனங்களுடன் இயேசுவும் கூட நேரிடையாகப் பேசினதுண்டு:

1. தொலைவானதோர் பகுதியில் பிசாசு பிடித்திருந்த இரண்டு பேர் இயேசுவுக்கு எதிராக வந்த போது, அவர் அவர்களோடு சம்பாஷித்தார். முடிவில், அவர் அவைகளைப் பார்த்து "பன்றிகளுக்குள் போங்கள்!" என்றார் (மத்தேயு 8:28-32).

2. சீமோன் பேதுருவின் வீட்டில், ஜனங்களுக்குள் இருந்த அசுத்த ஆவிகளுடன் இயேசு பேசினார். அவர் இன்னாரென்று அவைகள் அறிவிக்க அவர் அனுமதிக்கவில்லை. அவர் அசுத்த ஆவிகளுடன் உடன்பாடு உள்ளவரென்றும்; அவர் சாத்தானின் வல்லமையினால் அற்புதங்களை நடப்பிக்கிறாரென்றும் ஜனங்கள் தப்பெண்ணங்கொள்வதை அவர் விரும்பவில்லை (மாற்கு 1:34).

ஈ. அசுத்த ஆவியை விரட்டுவதில் தொந்தரவு ஏற்பட்டால் யாது செய்வது? சிறு வயது முதற்கொண்டே பேய்ப் பிடியிலிருந்த ஓர் பையனிருந்தான். அந்த அசுத்த ஆவியைத் துரத்த சீஷர்களால் கூடாமற் போயிற்று. இயேசு அவர்களிடம், "இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்" (மாற்கு 9:29). ஆதலால், இவ்விதத் தொந்தரவுகள் ஏற்படும்பொழுது ஜெபத்தில் விடாப்பிடியாயிருங்கள். "இயேசுவின் நாமத்திலுள்ள" அதிகாரத்தைப் பிரயோகிக்கும் பொழுது அசுத்த ஆவி புறப்பட்டுப் போயாகவே வேண்டும்.

உ. பாதிப்புக்குள்ளானவர்களிடமிருந்து அசுத்த ஆவிகள் துரத்தப்படும் பொழுது, அவர்களுடைய செயலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

1. அசுத்த ஆவி சரீரத்தில் தொந்தரவுகளை ஏற்படுத்தியிருந்தால், அசுத்த ஆவி துரத்தப்படும் பொழுது இத்தொந்தரவுகளும் அவர்களை விட்டு நீங்கும் (குருடர் காண்பார்கள், ஊமையர் பேசுவார்கள் மத்தேயு 12:22).

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

2. வஸ்திரமில்லாதவர்களாய் ஓடி, புத்தி பேதலித்திருக்கிறவர்கள் வஸ்திரந்தரிப்பார்கள், புத்தி தெளிவடைவார்கள் (மாற்கு 5:15).

3. அசுத்த ஆவி புறப்பட்டுப் போகும்பொழுது மிகச் சத்தமாகக் கூக்குரலிட்டு, பலாத்காரமாக அலைக்கழித்து, செத்தவனைப் போலாக்குகிறது (மாற்கு 9:26).

4. அசுத்த ஆவி போகும் பொழுது அந்த ஆளைக் கீழே விழப்பண்ணுகிறது (லூக்கா 4:35).

ஊ. விசுவாசிகள் அசுத்த ஆவிகளை அடையாளங் கண்ட பிறகு, அவர்கள் இவ்வுலகில் யாருடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்களோ அந்த இயேசுவின் மீதுள்ள அதிகாரத்தினால் அசுத்த ஆவிகளைத் துரத்தக்கூடும். இயேசு, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்" (மாற்கு 16:17) என்றார். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அசுத்த ஆவிகளை அடையாளங் கண்ட பிற்பாடு, அவை குடியிருக்கும் ஆட்களையும், இடங்களையும் விட்டு அவைகளைத் துரத்துவதற்கு இயேசுவின் நாமத்தில் அதிகாரமுண்டு.

முடிவுரை

அ. விசுவாசிகள் அசுத்த ஆவிகளை இவற்றால் அடையாளங் காணக்கூடும்.

1. அவைகள் வெளிப்படுத்தும் வரம்புக்குட்பட்டு அசாதாரணமான வல்லமையினால்

2. அவை ஆட்கொண்டுள்ள ஆட்களின் நடத்தையினால்

3. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களையும், சுவிசேஷச் செய்தியையும் இழிவுபடுத்த எத்தனிக்கும் அவற்றின் முயற்சிகளினால்.

இயேசுவின் நாமத்தினால் (அதிகாரம்) நீங்கள் அசுத்த ஆவிகளுடன் பேசி, அவை குடிகொண்டுள்ள ஆட்களையும், இடங்களையும் விட்டு அவற்றைத் துரத்த (வெளியேற்ற, அறவே அகற்ற, அனுப்பிவிட) உங்களால் கூடும். அசுத்த ஆவிகள் உடனே அகலும்!

ஆ. அசுத்த ஆவிகளின் அசாதரண செயலையும், இச்செயலை வெளிப்படுத்துகிறவர்களையும் அடையாளங்காணும் படியான வழிகளை நான் உங்களுக்குத் தெரியப்படுத்தி யிருக்கிறேன். அசுத்த ஆவிகள் துரத்தப்படும்பொழுது, அந்த ஆளில் உண்டாகும் பெரும் மாறுதலையும், அவருடைய வாழ்வில் மறுபடியும் சமாதானமும், அமைதியும் குடிகொள்வதையும் நீங்கள் காண்பீர்கள். அசுத்த ஆவி வெளியேறும் பொழுது, வீறிட்டு அலறுவதையும், அத்துமீறி அலைக்கழிப்பதையும், அல்லது அந்த ஆள் தரையில் தள்ளப்படுவதையும் நீங்கள் நேரிடையாகக் காணலாம். அந்த ஆள் பார்ப்பதற்கு செத்தவனைப் போலவும் தோற்றமளிக்கக் கூடும்.

இ. நமது சபைகளிலுள்ள மேய்ப்பர்கள், போதகர்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்களிடையே அசுத்த ஆவியின் செயலின் முடிவை நாம் காணும்பொழுது, அசுத்த ஆவிகள் துரத்தப்பட்டு விட்டன என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

அசுத்த ஆவியைக் கொண்டிருந்த அடிமைப்பெண்ணை பவுல் எதிர்த்தல் (அப்போஸ்தலர் 16:16-18)

இதற்காக மேய்ப்பர்கள், போதகர்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், மற்றும் மாவட்ட, தேசிய, அகில உலக சபைத் தலைவர்கள், விசுவாசிகள் ஆகியோரில் யாரேனும் சிலர் இருக்கையில் அமர்ந்து கொண்டு, உபவாசித்து ஜெபிக்க வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. ஒரு சிலர் ஆவியில் நிறைந்து ஜெபிப்பதற்கு கொஞ்சம் நேரத்தை செலவழிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. பரலோக ராஜ்யத்தின் ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்யும்படிக்கு பரம சேனையை அனுப்பும்படிக்கு வேறு சிலர் தேவனை நோக்கி வேண்டிக் கொள்ள வேண்டியதும் இன்றியமைதலாகும். சாத்தானையும், அவனுடைய சேனையையும் எதிர்த்து நின்று, அவருடைய நாமத்தில் அவைகளைத் துரத்தும்படிக்கு மற்றும் சிலர் அவசியமாயிருக்கிறது!

அத்தேனேயின் அறியப்படாத தேவன் (அப்போஸ்தலர் 17:24-31)

முன்னுரை

அ. பூலோகத்தை நியாயந்தீர்க்கவிருக்கும் தேவனானவர் மனிதனுடைய வடிவமைப்பினால் உண்டாக்கப்பட்ட உருவமுமல்ல, மனுஷரால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறவருமல்லர்.

ஆ. பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் அவர் ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டார். ஏனெனில், அவர் மக்கெதோனியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அவர் மக்கெதோனியா ஊழியத்தைப் பிலிப்புவில் துவக்கினார், அங்கே அவர் லீதியாளைச் சந்தித்தார். அங்கிருந்து, தெசலோனிக்கேயாவுக்கும், பெரோயாவுக்கும் புறப்பட்டுச் சென்றார். பின்னர், அவருக்கு நேரிட்ட உபத்திரவங்கள், அச்சுறுத்தல்கள் நிமித்தமாக அவர் பெரோயாவிலிருந்து அத்தேனே பட்டணத்திற்குப் பிரயாணமானார். பிலிப்பு, தெசலோனிக்கேயா, பெரோயா பட்டணங்களில் நிறுவப்பட்ட சபைகளின் அறிக்கைக்காக, சீலாவும் தீமோத்தேயும் வரும்படி பவுல் காத்துக் கொண்டிருக்கையில், அத்தேனே பட்டணத்தைச் சுற்றிவந்து, அந்தப் பட்டணம் விக்கிரங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டார். "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதியிருந்த ஒரு பலிபீடத்தையும் அவர் கண்டார்.

இ. அத்தேனேயில் ஜெப ஆலயங்களிலும், சந்தைவெளியிலும் பிரசங்கித்த பொழுது, ஞானிகளில் சிலர் பவுலின் தூரதைக் கேட்டார்கள். அவர் போதித்த புதிய மார்க்கப் போதனையானது ஏதேனும் விலைமதிப்புயடைதா என்பதைத் தீர்மானிக்கும்படி, அவர்கள் அவரை மாரிஸ் மேடைக்கு (பட்டணத்தின் ஆலோசனைக் குழு கூடுமிடம்) வரும்படி அழைத்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து, அத்தேனரின் "அறியப்படாத தேவன்" யார் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகக் கூறினார்.

1. தேவன் மனுஷருடைய கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதுமில்லை, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை (17:24-28).

அ. பவுல் அத்தேனரை ஆதரிக்கும் பாணியில் தனது செய்தியை ஆரம்பித்தார்: "எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று நான் காண்கிறேன்" என அவர்களை அழைத்துச் சொன்னார். அவர், அவர்களுடைய ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதியிருந்த ஒரு பலிபீடத்தைக் கண்டார். உண்மையான ஒரே தேவனைப் பற்றிப் பேசும்படியாக இச்சம்பவத்தை ஓர் ஏதுவாகப் பவுல் பயன்படுத்தினார்.

ஆ. இந்த ஒரே உண்மையான தேவன் சிருஷ்டிகரும், வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவருமாயிருக்கிறார். ஆதலால், மனுஷருடைய கரங்களினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசமாயிருக்க முடியாத அளவில் தேவன் மிகவும் பெரியவராயிருக்கிறார்.

1. தேவாலயப் பிரதிஷ்டை ஜெபத்தில் சாலொமோன் இராஜா இவ்விதம் கூறினார்: "இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே, நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" (1 இராஜாக்கள் 8:27).

அத்தேனேயின் அறியப்படாத தேவன் (அப்போஸ்தலர் 17:24-31)

2. ஏசாயா தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் சொன்னதாவது: "வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது?" (ஏசாயா 66:1).

இ. வசனம் 25. "மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை." ஓர் வைத்தியன் பிணியாளியைக் கவனிப்பது போல, மனுஷன் தேவனைக் கவனிக்க வேண்டிய அவசியமேயில்லை. எவ்விதம் அவர் எதையாவது தேவைப்படக் கூடும்; சகலவற்றின் உறைவிடமும், ஜீவனைக் கொடுப்பவரும், ஜீவனும் அவரே. ஆதலால், அத்தேனேயர் விக்கிரகங்களுக்குச் செய்து கொண்டிருப்பதைப் போல, அவற்றைக் கழுவி, ஆகாரம் ஊட்ட வேண்டியத் தேவையில்லை. அதற்கு மாறாக, "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக்கோபு 1:17).

ஈ. வசனம் 26. "மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார்." தேவன் முதலாவது ஆதாமை சிருஷ்டித்தார். அதன்பின்பு அவனுக்குத் துணையாயிருக்கும்படி ஏவாளைக் கொடுத்தார். இந்த ஒரே மனுஷனுடைய, ஒரே இரத்தத்திலிருந்தே பூமியிலுள்ள ஒவ்வொரு ஜாதியும் உண்டாயிற்று.

உ. வசனம் 26. அவர்களைப் "பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்டக் காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" ஜாதிகள் எப்பொழுது தோன்ற வேண்டும், எப்பொழுது நலிவுற வேண்டும் என்பதற்கான சரியான காலங்களை அவர் திட்டமிட்டிருந்தார். அவர்கள் எந்த இடங்களில் குடிபெறவேண்டும் என்பதையும் அவர் தீர்மானித்திருந்தார். அவர் ஜலத்திலிருந்து வெட்டாந்தரையைப் பிரித்தார். வெட்டாந்தரை ஜாதிகளுக்கான இடமாயிற்று. ஜாதிகள், மற்றும் மனுக்குலத்தின் ஏற்றத் தாழ்வுகள் இடப்பெயர்ச்சி ஆகியவற்றின் மூலம் மனுஷர் தேவனைத் தேடி, நாடி, கண்டடையும்படிக்கு வாய்ப்புகளையும், தருணங்களையும் தேவன் அறிந்திருக்கிறார்.

ஊ. வசனம் 28. "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்." இது அத்தேனேயிலுள்ள புலவர்களில் ஒருவரது மேற்கோளாகும். அத்தேனே மக்களை கிறிஸ்துவிடம் இழுப்பதற்கு நடப்பிலுள்ள தொரு வாசகத்தைப் பவுல் பயன்படுத்துகிறார். கிறிஸ்து அற்றவர்கள் அவரைக் கண்டுபிடிப்பது கடினமானது அல்ல. ஏனெனில், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. உண்மையில், அவர் உங்களுக்குச் சமீபமாயிருக்கிறார். இப்பொழுதுதானே அவர் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார்.

2. தேவன் மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் அமைக்கப்பட்ட உருவமல்ல. (17:29,30).

அ. வசனம் 29. அத்தேனேயின் புலவரின் மற்றொரு மேற்கோளைப் பவுல் பயன்படுத்துகிறார்: "நாம் அவருடைய (தேவனுடைய) சந்ததியார்." நாம் தேவனுடைய ரூபத்தின்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் தேவனுடைய தெய்வீகத்துவம் இவ்விதமாயிருக்குமென எண்ணுவது, அதாவது,

1. பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பானவர்,

அத்தேனேயின் அறியப்படாத தேவன் (அப்போஸ்தலர் 17:24-31)

2. மனுஷரின் மனதில் உருவானதும், அவனுடைய படைப்பாற்றலினால் உண்டாக்கப்பட்டதோர் உருவமே தெய்வம் என எண்ணுவது முற்றிலும் நியாயமற்றதாகும்.

ஆ. சங்கீதக்காரன் இவ்விதம் கேட்கிறார்: "அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்? அவர்களுடைய விக்கிரங்கள்.... மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது" (சங்கீதம் 115:2,4; 135:15; மேலும் காண்க ஏசாயா 44:9-17).

இ. யோவான் 4:24-இல் "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்று இயேசு கூறுகிறார். ஆதலால் அவரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியில் ஆராதிக்க வேண்டும். அவரைத் தொடவும், பார்க்கவும் கூடிய பொருளோ, சிலையோ அல்லர் அவர். மனுஷனுடைய வடிவமைப்பாலும், கைத்திறமையாலும் வடிக்கப்படும் உருவமும் அல்லர் அவர்!

ஈ. தேவனுக்கு இயல்பான, சன்மார்க்கக் குணாசீலங்களுண்டு, அவர் சர்வமும் அறிந்தவர், சர்வவியாபி, சர்வ வல்லவர், நித்தியர், மாறாதவர். சிருஷ்டி கர்த்தாவும், சகலவற்றையும் தாங்குபவரும் அவர். மேலுமவர், பரிசுத்தரும், நீதிபரரும், நீதியும், நல்லவரும், உண்மையுள்ளவருமாயிருக்கிறார். சகலவற்றையும் சிருஷ்டித்த நித்திய தேவனை, அவரால் சிருஷ்டிக்கப்பட்ட மரம், கல், உலோகம் ஆகியவற்றால் உண்டாக்கப்பட்ட விக்கிரகத்தின் நிலைக்குக் குறைப்பது, நியாயமற்ற, பகுத்தறிவற்ற மனதுடையவர்களின் செயலேயாம்.

உ. வசனம் 30. மனுஷனுடைய சிலை வணக்கம், தேவன் உண்மையில் எவ்விதமிருக்கிறார் என்பதை அவன் அறியாமலிருப்பதையே காண்பிக்கிறது. தேவன் தம்முடைய இரக்கத்தினாலும், மன உருக்கத்தினாலும் சென்றுபோன காலங்களில் இந்த அறியாமையைக் காணாதவர் போலிருந்தார். ஆனால், இப்பொழுதோ, தவறான தெய்வங்களுக்கும், சிலைகளுக்கும் ஆராதனை செய்து அவற்றுக்குப் பலி செலுத்தும் ஜனங்கள் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். அவர்கள் தங்களுடைய விக்கிரகங்களையும், பொய்யான தெய்வங்களையும் விட்டுக் கிறிஸ்துவினிடத்திற்குத் திரும்ப வேண்டும்.

ஊ. இந்த தூதைக் கவனித்துக் கொண்டிருக்கும்: "நீங்கள் ஒவ்வொருவரும் விக்கிரகங்களையும், தவறான தெய்வங் களையும் சார்ந்துகொண்டிருப்பீர்களேயாகில், நீங்கள் விக்கிரகங் களுக்கும், தவறான தெய்வங்களுக்கும் ஆராதனை செய்து கொண்டிருப்பீர்களேயாகில், நீங்கள் விக்கிரகங்களுக்கும், தவறான தெய்வங்களுக்கும் பலி செலுத்திக்கொண்டிருப்பீர்களே யாகில், நீங்கள் விக்கிரகங்களுக்கும், தவறான தெய்வங்களுக்கும் தூபவர்க்கம் காட்டிக் கொண்டிருப்பீர்களே யாகில், நீங்கள் விக்கிரகங்களிடமும், தவறான தெய்வங்களிடமிருந்து ஆலோசனையையும், வழிநடத்துதலையும் தேடிக்கொண்டி ருப்பீர்களேயாகில், இன்றே இப்படிப்பட்டப் பழக்கங்களிலிருந்து திரும்பி, கிறிஸ்துவினிடம் திரும்பும்படி தேவன் கட்டளையிடுகிறார்!"

எ. நான் ஹாங்காங், சீனா வீதிகளில் நடக்கும் பொழுது, எங்கு நோக்கினும், அதாவது, வீடுகள், வியாபார ஸ்தலங்கள், உணவகங்கள், சந்துகள்,

அத்தேனேயின் அறியப்படாத தேவன் (அப்போஸ்தலர் 17:24-31)

தெருக்கள், மலை உச்சிகள், மலைச் சரிவுகள், வீடு மற்றும் வியாபார ஸ்தலங்களுக்கு முன் பகுதியில், கோவில்கள், சிறிய கட்டடங்கள் போன்ற இடங்களில் விக்கிரகங்களையும், தவறான தெய்வங்களையும் நான் பார்க்கிறேன். ஹாங்காங், சீனா மக்கள் இத்தகைய பழக்கங்களை இன்றைக்கே விட்டு, கிறிஸ்துவினிடமாகத் திரும்ப வேண்டும்!

3. தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நியாயந்தீர்க்க தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் (17:31).

அ. ஒவ்வொருவரும் விக்கிரகங்களுக்கும், தவறான தெய்வங்களுக்கும் ஆராதனை செய்து, பலிகள் செலுத்துவதிலிருந்து திரும்பும்படி தேவன் கட்டளையிடுவது ஏன்? ஏனெனில், இத்தகைய தீய பழக்கங்களில் தொடர்ந்து ஈடுபடும் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கும்படி நாள் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆ. விக்கிரக ஆராதனையில் தொடர்ந்திருக்கும் ஒவ்வொருவரையும் தேவன் "தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு" நியாயந்தீர்ப்பார். இதற்காக சர்வலோக நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறவர் இயேசு கிறிஸ்து!

1. "பிதாவானவர்.... நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்.... அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்பு செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்கு கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:22,27).

2. "அன்றியும் அவரே (இயேசுவே) உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் (அப்போஸ்தலர்களுக்குக்) கட்டளையிட்டார்" (அப்போஸ்தலர் 10:42).

இ. குறிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் நாள் வந்து கொண்டிருக்கிறது. உலகம் இதை நிச்சயப்படுத்தக் கூடும். தேவன் "அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" கிரேக்கர்களில் அநேகர் பவுலின் தூதை ஏற்றுக்கொள்ளவில்லை, ஏனெனில், அவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கவில்லை. சரீரத்தின் சாவாமையை அல்ல, ஆவியின் சாவாமையை மட்டும் அவர்கள் விசுவாசித்தார்கள். இருப்பினும், துன்மார்க்கராயினும், விசுவாசியாயினும் ஒவ்வொருவருக்கும் சரீர உயிர்த்தெழுதல் உண்டென்பதை வேதாகமம் போதிக்கிறது.

ஈ. மனந்திரும்ப மனமற்றவர்கள் நியாயந்தீர்க்கப் படுவார்கள். அவர்கள் கிறிஸ்துவினிடம் திரும்பாமலும்; அவர்களுடைய பாவத்திலிருந்தும், விக்கிரக ஆராதனையிலிருந்தும் இரட்சிக்கப்படாமலும் இருந்தால், அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, நரகத்தில் பங்கடைவார்கள். அங்கே அவர்கள் புழு சாகாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:13-15; மாற்கு 9:44).

உ. உலகிலுள்ள சகல ஜாதிகளிலுமிருந்தும் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் தேவனண்டை சென்று, அவரைக் கண்டுகொள்ளும்படி தேவனானவர் வாய்ப்புகளையும், தருணங்களையும் தந்திருக்கிறார்.

அத்தேனேயின் அறியப்படாத தேவன் (அப்போஸ்தலர் 17:24-31)

இன்றைக்கு உங்களுக்கோர் தருணம், சர்வலோக நியாயாதிபதியாகிய கிறிஸ்து இயேசுவைக் கண்டு பிடிக்கும்படியானதோர் வாய்ப்பு, விக்கிரகங்களிலும், தவறான தெய்வங்களிலும் இருந்து திரும்பி, கிறிஸ்துவைக் கண்டு கொள்ளுவது உங்களுடைய வேளையாயிருக்கிறது.

முடிவுரை

அ. நியமிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசுவுக்கு முன்பாக மனுஷர் நிற்கும்போது, போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமிராது. ஏனெனில், அவர்கள் சத்தியத்தை அறிவார்கள் அவர்கள் அறிந்திருப்பது யாதெனில்:

1. தேவன் மனுஷருடைய கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறதில்லை.

2. தேவன் மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை.

3. தேவனானவர் மனுஷருடைய வடிவமைப்பினாலும், கைத்திறமையாலும் செதுக்கப்பட்ட சிலையல்ல.

4. தேவன் நியமித்திருக்கிற நாளில் விக்கிரங்களுக்கும் தவறான தெய்வங்களுக்கும் ஆராதனை செய்து, பலி செலுத்துகிறவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

5. தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து சர்வலோக நியாயாதிபதியாயிருக்கிறார்.

ஆ. கடந்து போன காலங்களில் ஜனங்களுடைய அறியாமையைத் தேவன் காணாதவர் போலிருந்தார். ஆனால் இப்பொழுது, விக்கிரகங்களையும், தவறான தெய்வங்களையும் ஆராதிப்பதிலிருந்து மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் தேவன் கட்டளையிடுகிறார். உன்னைக் குறித்து என்ன? விக்கிரகங்களுக்கும், போலி தெய்வங்களுக்கும் நீ ஆராதனை செய்து, பலிசெலுத்துவதிலிருந்து மனந்திரும்புவது உனக்கு அவசியமாயிருக்கிறதா? நீ இயேசுவினிடம் திரும்பி, அவருக்கு விரோதமாகச் செய்த பாவங்களுக்காக மன்னிப்பைப் பெற்றுக்கொள்வது உனக்கு அவசியமாயிருக்கிறதா? நான் உங்கள் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்கிறேன். மனந்திரும்பி, கிறிஸ்துவினிடம் திரும்புங்கள். உங்களுக்காகவே தேவன் அளித்திருக்கும் நல்லதோர் தருணமிதுவே!

இ. எரேமியா 26:13 இவ்விதம் கூறுகிறது: "இப்பொழுதும் நீங்கள் உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்தி, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளுங்கள்; அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன தீங்குக்கு மனஸ்தாபப்படுவார்"

எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களைப் பவுல் கேள்வி கேட்குதல் (அப்போஸ்தலர் 19:1-6)

முன்னுரை

அ. பவுல் ஏறக்குறைய இரண்டு வருடங்கள் கொரிந்து சபையில் உபதேசித்து வந்தார். அதன் பின்பு, தெற்கு கலாத்தியாவில் அவர் நிறுவியிருந்த அநேக சபைகளைச் சந்திக்கும்படி புறப்பட்டுச் சென்று சீஷர்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். இவ்விதம் பவுல் பிரயாணத்தில் இருக்கும்போது, அப்பொல்லோ என்பவர் எபேசு சபையை சந்தித்து விட்டு, கொரிந்துவுக்குச் சென்று, பவுல் அங்கிருக்கையில் ஆண்டவருக்கென்று ஆதாயப்படுத்தியிருந்த விசுவாசிகளைத் திடப்படுத்தும்படி தீர்மானித்தார் (1கொரிந்தியர் 3:6).

ஆ. அப்பொல்லோ எபேசுவை விட்டு கொரிந்துவுக்குப் போன பிற்பாடு, பவுல் எபேசுவுக்கு வந்தார். அங்கே கர்த்தரில் முழுமையாகப் போதிக்கப்படாமலிருந்த பன்னிரண்டு சீஷர்களைக் கண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்தார். பவுலின் போதனை புதிதாகக் குணப்பட்டிருந்தவர்களிடம் அவர் கேட்ட இரண்டு கேள்விகளுக்கும் தொடர்புடையதாயிருந்தது.

1. பவுல் எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களிடம் தண்ணீர் ஞானஸ்நானம் பற்றிக் கேள்வி கேட்கிறார் (19:3-5).

அ. வசனம் 3. எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்கள் யோவான் ஸ்நானனால் உபதேசிக்கப்பட்டதும், நடைமுறைப் படுத்தப்பட்டதுமான தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி மாத்திரம் அறிந்திருந்தார்கள். இருப்பினும், அவர்கள் யோவான் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்ததின் காரணத்தை அறியாதிருந்தார்கள். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுவதைப் பற்றியும் அவர்களுக்கு உபதேசிக்கப்படவில்லை. பவுலின் கேள்விக்கு அவர்கள் மொழிந்த மாறுத்தரத்திலிருந்து இது உண்மை என்பதை நாம் அறிகிறோம்; "நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்?" அவர்களின் மாறுத்தரம், "யோவான் கொடுத்த ஞானஸ்நானம்."

ஆ. வசனம் 4. "யோவான்.... மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே." யோவானால் நடைமுறைப் படுத்தப்பட்ட தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து விளங்கப் படுத்த வேண்டியதின் அவசியத்தைப் பவுல் காண்கிறார். ஏனெனில், புதிதாகக் குணப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்படுவதுடன் ஞானஸ்நானம் நேரிடைத் தொடர்புடையதாயிருந்தது. தமது கடைசி கட்டளையை இயேசுவானவர் சீஷர்களுக்குக் கொடுத்தபொழுது, இதே விளக்கத்தைக் கொடுக்க வேண்டியதின் அவசியத்தை அவர் அறிந்திருந்தார். (அப்போஸ்தலர் 1:5). எருசலேம் சபையில் உபதேசத்தை ஆதரித்துப் பேசிய வேளையில் இதை வலியுறுத்தினார் (அப்போஸ்தலர் 11:16).

இ. தங்களுடைய பாவங்களுக்காக ஏற்கெனவே மனந்திரும்பியவர்களுக்கு மாத்திரமே யோவான் ஞானஸ்நானங் கொடுத்தார். மனந்திரும்பாதவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அவர் மறுத்துவிட்டார். தண்ணீர் ஞானஸ்நானத்துக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தவர்களிடம், "மனந்திரும்புதற்குக்கு ஏற்றக் கனிகளைக் கொடுங்கள்" எனக் கூறி, அவர்களை அவர் உற்சாகப்படுத்தினார் (மத்தேயு 3:7,8).

எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களைப் பவுல் கேள்வி கேட்குதல் (அப்போஸ்தலர் 19:1-6)

ஈ. வசனம் 4. தனக்குப் பின்வருகிற இயேசுவை விசுவாசிக்கும்படி யோவான் ஜனங்களுக்குச் சொல்லியிருந்தான். இயேசுவானவர் வெளிப்பட வேண்டும் என்பதே யோவான் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்ததின் முதற்கண் நோக்கமாயிருந்தது (யோவான் 1:33). ஆதலால், இயேசுவை மேசியாவும், இரட்சகருமாக விசுவாசித்து, அவரைப் பின்பற்றும்படி அவன் ஜனங்களுக்குப் போதித்தான். இயேசுவானவர் எப்போது அவர்களுக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றும் எதிர்நோக்கியிருந்தார்கள் (யோவான் 1:33).

உ. வசனம் 5. "அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்" இதன் அர்த்தம் யாதெனில், புதிதாகக் குணப்பட்டவர்கள் நாங்கள் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அங்கத்தினர்கள் என்றும்; கிறிஸ்து தங்கள் வாழ்க்கையின் ஆண்டவரும், எஜமானுமாயிருக்கிறார் என்றும் அவர்கள் வெளியரங்கமாக அறிக்கையிட்டார்கள். மேலும், அவர்கள் கிறிஸ்துவின் மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் அவரோடுகூட பங்குள்ளவர்கள் என்பதும் இதின் அர்த்தமாகும். அவர்கள்:

1. கிறிஸ்து பாவத்திற்காக நியாயத்தீர்ப்படைந்த பொழுது கிறிஸ்துவில் இருந்தார்கள் அவர்களுடைய பாவசுபாவம் சிலுவையிலறையப்பட்டு, பலமற்றதாயிற்று.

2. கிறிஸ்துவோடு கூட அடக்கம்பண்ணப்பட்டார்கள். அவர்கள் பாவத்துக்கும், பாவசுபாவத்துக்கும் மரித்தவர்களாக எண்ணிக்கொள்கிறார்கள்.

3. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டபொழுது, கிறிஸ்துவோடு இருந்தார்கள் இப்பொழுது அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்கள் (ரோமர் 6:3-13).

ஊ. இதற்குப் பிற்பாடு உடனடியாகப் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாயிருந்தது! அவர்கள் கற்றறிந்திராத மொழியின் சப்தத்தையும், வார்த்தையையும் பரிசுத்த ஆவியினால் அவர்கள் பேசக் கூடியவர்களாயிருக்கவேண்டும் எனப் பவுல் அவர்களுக்குப் போதித்திருந்தார்! இதினிமித்தமாகவே, பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, உடனடியாக அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்று, தாங்கள் கற்றிராத மொழியில் பேசினார்கள் என்பதை நமது அடுத்தக் குறிப்பில் நீங்கள் காண்பீர்கள்!

2. பவுல் எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களிடம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றிக் கேள்வி கேட்கிறார் (19:1,2,6).

அ. வசனம் 1,2. "சீஷன்" என்பதின் பொருள், இயேசுவின் சீஷர், இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் என்பதாகும். சந்தேகமின்றி பன்னிரெண்டு சீஷர்களும், இயேசுவின் ஜீவியம், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் ஆகியவைபற்றி அறிந்திருந்தார்கள். அவர்கள் இயேசுவைத் தங்களின் ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றிருந்தார்கள்.

எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களைப் பவுல் கேள்வி கேட்குதல் (அப்போஸ்தலர் 19:1-6)

இருப்பினும், யோவானின் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கான காரணங்கள் அவர்களுக்கு உபதேசிக்கப்படாமலிருந்தது போல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றியும் அவர்களுக்கு உபதேசிக்கப்படவில்லை.

ஆ. வசனம் 2. "நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" இதன் உண்மைப் பொருள், "விசுவாசித்து, நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" என்பதே. இது, இயேசுவை விசுவாசித்த பிற்பாடு உண்டாகும் அனுபவமாதலால், இக்குறிப்பு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றியது என நாம் ஊகிக்கலாம். ஆதலால், புதிதாகக் குணப்பட்டவர்களிடம் பவுல் வினவும் கேள்வி இதுவே: "நீங்கள் விசுவாசித்த பிறகு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றீர்களா?"

இ. வசனம் 2. சீஷர்களின் மாறுத்தரமாவது: "பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை." "திருத்துவத்தின் மூன்றாம் நபரான பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அவர்கள் நிச்சயமாகவே அறிந்திருப்பார்கள்." இருப்பினும், இயேசுவை விசுவாசித்த பிறகு பெற்றுக்கொள்ளும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. உண்மையில் அவர்கள், "இல்லை, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றி நாங்கள் கேள்விப்படவேயில்லை" எனச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈ. வசனம் 6. பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இவ்விதம் நிகழ்ந்ததை நாமறிகிறோம். ஏனெனில், தாங்கள் கற்றிராத அந்நிய பாஷையில் அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசிகள் அனைவருக்கும் நேரிட்டதும் (அப்போஸ்தலர் 2:4-6); கொர்நேலியுவின் வீட்டாரில் இயேசுவை விசுவாசித்தவர்கள் அனைவருக்கும் நேரிட்டதுமாகிய (அப்போஸ்தலர் 10:46) அதே காரியமே இப்போதும் நிகழ்ந்தது.

உ. விசுவாசிகளில் அநேகர் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றிக் கேள்விப்படவேயில்லை. இதன் காரணமென்னவெனில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பற்றிய மிகச் சொற்ப அறிவுடையவர்களால், அல்லது, பெந்தெகொஸ்தே அனுபவத்தை முற்றிலும் புறக்கணிப்பவரால் அவர்கள் போதிக்கப்பட்டிருப்பதேயாகும்.

ஊ. பவுல் எபேசுவுக்கு வந்து சேர்வதற்கு முன்னர், அங்கு போதகம் பண்ணிக்கொண்டிருந்த அப்பொல்லோவைப்போல இன்று போதகர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவன் மிகுந்த அனலுள்ளவனும், சாதுரியவானுமாக தான் அறிந்ததின்படி இயேசுவையும், இரட்சிப்பையும் பற்றி திட்டமாய்ப் போதித்தான். இருப்பினும், இதர ஊழியர்கள் (ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும்) அவனைச் சேர்த்துக்கொண்டு, "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பிக்க" வேண்டியது அவசியமாயிருந்தது (அப்போஸ்தலர் 18:24-26). பெந்தெகொஸ்தே சத்தியத்தை விளங்கிக் கொண்டவுடன் பெரும்பான்மையான விசுவாசிகள், பவுலையும், எபேசுவிலுள்ள இதர விசுவாசிகளைப் போலவும்:

1. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வார்கள் (அப்போஸ்தலர் 9:17).

எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களைப் பவுல் கேள்வி கேட்குதல் (அப்போஸ்தலர் 19:1-6)

2. மேலும், புதிதாகக் குணப்பட்டவர்களைப் பார்த்து, "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" எனக் கேட்க ஆரம்பிப்பார்கள்.

முடிவுரை

அ. எபேசுவில் புதிதாகக் குணப்பட்டவர்களிடம் பவுல் கேட்ட இரண்டு கேள்விகளையும், இன்றைக்கும் குணப்படுகிறவர்களிடம் நாம் தொடர்ந்து கேட்க வேண்டிய கேள்விகளாகும். பெந்தெகொஸ்தே அனுபவம் பற்றிய மிகச் சொற்ப அறிவுடையவர்களும், இதனை முற்றிலும் புறக்கணிக்கிறவர்களுமாகிய அநேகர் வேதத்தைப் போதிக்கிறார்கள். ஆதலால், நான் சந்திக்கும்படி சிலாக்கியம் பெற்றிருக்கும் ஒவ்வொரு கூட்டத்தாரிடமும் இவ்விதம் கேட்பது அத்தியாவசியம் என நான் கண்டுணர்ந்திருக்கிறேன்.

1. "யோவானின் ஞானஸ்நானத்திற்கும், இயேசுவின் நாமத்தினாலே கொடுக்கப்படும் ஞானஸ் நானத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிகளான போது தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றீர்களா?"

2. "நீங்கள் விசுவாசிகளான பிறகு பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டீர்களா?"

ஆ. உங்கள் ஒவ்வொருவரிடமும் இதே இரண்டு கேள்விகளையும் நான் கேட்கிறேன்! உங்கள் பதில் என்ன?

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும் (அப்போஸ்தலர் 19:11-20)

முன்னுரை

அ. விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தையும், தங்கள்மேல் அதிகாரமுடையவர்கள் யார் என்பதையும் பொல்லாத ஆவிகள் அறியும்.

ஆ. சீரியாவிலுள்ள அந்தியோகியாவிலிருந்து புறப்பட்ட தன்னுடைய மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்தில் பவுல் இருந்தார். மேடான தேசங்கள் வழியாய்த் தரை மார்க்கமாகப் பிரயாணஞ் செய்து அவர் எபேசுவை வந்தடைந்தார். எபேசுவில் 2 வருடங்களும், 3 மாதங்களும் தங்கினார். அவர் தங்கியிருந்த பொழுது, எபேசுவிலுள்ள அனைவருக்கும் மாத்திரமன்றி, சுற்றிலுமுள்ள பட்டணத்தாரனைவருக்கும் சுவிசேஷ ஊழியஞ் செய்தார். அவர் எபேசுவிலிருந்த நாட்களில்தான், ஸ்கேவாவின் ஏழு குமாரருக்கும், பொல்லாத ஆவி பிடித்த மனிதனுக்கும் இடையே ஓர் சம்பவம் நிகழ்ந்தது.

1. அவிசுவாசிகளுக்குத் தங்கள்மேல் அதிகாரம் இல்லையென்பதை பொல்லாத ஆவிகள் அறிந்திருக்கின்றன (19:13,14,16).

அ. "தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர்" என்பதின் உண்மைப் பொருள், "பொல்லாத ஆவிகளை விரட்டக்கூடும் என உரிமை பாராட்டும் யூதர்கள்" என்பதாகும்.

பொல்லாத ஆவிகளை விரட்டக்கூடியவர்கள் என உரிமை பாராட்டிக்கொண்டிருந்த யூதர்களின் மாதிரியை ஸ்கேவாவின் குமாரர் பின்பற்றினார்கள். அவர்கள் எபேசுவை வந்தடைந்தபொழுது, பவுலின் ஊழியத்தையும், அவர் "இயேசுவின் நாமத்தில் (அதிகாரத்தில்)" எவ்விதம் பொல்லாத ஆவிகளைத் துரத்தினார்கள் என்பதையும் பற்றிக் கேள்விப்பட்டார்கள்.

ஆ. பவுல் பொல்லாத ஆவிகளைத் துரத்திபொழுது உபயோகித்த வார்த்தைகளை அவர்கள் திரும்பச் சொல்லும்படி முயற்சித்தார்கள். அவர்கள் இந்த வார்த்தைகளை மந்திர சூத்திரம் போல உபயோகித்தார்கள். எவர் வேண்டுமானாலும் இந்த மந்திர சூத்திரத்தைப் பயன்படுத்தி, பொல்லாத ஆவிகளைத் துரத்தி விடலாம் என மனக்கோட்டை கட்டினார்கள். "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் (பொல்லாத ஆவிகளுக்குக்) கட்டளையிடுகிறோம்" என்ற வார்த்தைகள் அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டன. நாங்கள் அமெரிக்காவில் ஊழியஞ்செய்து கொண்டிருந்தபோது, ஓர் குடிகாரப் பெண்ணை அவளுடைய பிள்ளைகளின் வீட்டிற்கு எடுத்துச் சென்றோம். அவளுடைய வார்த்தைகள் இதற்கோர் எடுத்துக்காட்டு ஆகும்.

இ. பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதன் ஸ்கேவாவின் ஏழு குமாரர்கள் மீதும் பாய்ந்து, தன்னுடைய அசாதரண வல்லமையினால் பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொண்டு, வஸ்திரங்களைக் கிழித்து, இரத்தக் காயத்துடன் அவர்களை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். இந்த ஏழு அவிசுவாசிகளும் இயேசுவை உண்மையில் அறியாதிருந்த படியால், பொல்லாத ஆவிகளின் மேல் அவர்களுக்கு அதிகாரமில்லாதிருந்தது. இவர்கள் இயேசுவைப் பின்பற்றாதவர்கள். பொல்லாத ஆவி இதை அறிந்திருந்தது!

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும் (அப்போஸ்தலர் 19:11-20)

ஈ. ஹாங்காங்கில் அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என அழைத்த போதிலும், ஆவிகளை அப்பியாசப்படுத்தி, விக்கிரகங்களை வணங்கி, மரித்தவர்களுக்கு ஆராதனை செய்து, பொல்லாத ஆவிகளுக்குப் பலி செலுத்தி வருகின்றனர். அவர்கள் பொல்லாத ஆவியுடன் பேசவேண்டுமானால், "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நாமத்தில் நீ வெளியேறும்படி நான் உனக்குக் (பொல்லாத ஆவிக்குக்) கட்டளையிடுகிறேன்" என்று தான் சொல்ல வேண்டும். அவர்களுக்கு இயேசுவின் பேரில் துணிவும், நம்பிக்கையும் இல்லை. அவர்கள் விக்கிரகங்களுக்குப் பலி செலுத்துதல், மரித்தோருக்கு ஆராதனை செய்தல், ஆவிகளை அப்பியாசப்படுத்துதல், பழக்கங்களில் நம்பிக்கை வைத்தல் ஆகியவற்றில் தொடர்ந்திருக்கவும், அதேவேளையில் கிறிஸ்தவர்களாயிருக்கவும் விரும்புகின்றனர்.

உ. ஹாங்காங்கில் உள்ள ஓர் விக்கிரகக் கோவிலில் துண்டுப் பிரதிகள் விநியோகித்துக் கொண்டிருந்த ஓர் உடன் மிஷனரியுடன் நான் பேசினேன். அசுத்த ஆவிக்குத் (விக்கிரகத்துக்குத்) தூபங்காட்டிக் கொண்டிருந்த ஓர் வாலிபனுக்கு அவர் கைப்பிரதி கொடுத்தார். அவ்வாலிபன் கைப்பிரதி கொடுத்தவரிடம், "வேண்டாம், நன்றி, நான் ஏற்கெனவே கிறிஸ்தவன் தான்" என்றான். அப்படியானால் அவன் அங்கே செய்து கொண்டிருந்தது என்ன? யாரை அவன் ஆராதிக்கிறான்? யாரை அவன் விசுவாசிக்கிறான்? இந்த மனிதனுக்குத் தங்கள்மேல் அதிகாரமில்லை என்பதை அசுத்த ஆவிகள் அறிந்திருக்கின்றன!

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. நீங்கள் ஒருவனைப் பகைத்து மற்றவனை நேசிப்பீர்கள், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை செய்வீர்கள் (மத்தேயு 6:24). அசுத்த ஆவிகள் அவிசுவாசிகளை அறிந்திருக்கின்றன. அவிசுவாசிகளுக்குத் தங்கள்மேல் அதிகாரமில்லை என்பதையும் அவைகள் அறிந்திருக்கின்றன.

2. இயேசுவுக்கும், அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் தங்கள்மேல் அதிகாரம் உண்டென்பதை அசுத்த ஆவிகள் அறிந்திருக்கின்றன (19:15).

அ. பொல்லாத ஆவி ஸ்கேவாவின் ஏழு குமாரர்களையும் நோக்கி, "இயேசுவை அறிவேன், (நான் அவரைப் பற்றி அறிந்திருக்கிறேன்), பவுலையும் அறிவேன் (அவர் இன்னாரென்பதை விளங்கியிருக்கிறேன்)" எனக் கூறிற்று. அசுத்த ஆவிகள் இயேசுவையும், அவரைப் பின்பற்றுகிறவர்களை யும் அறிந்திருக்கின்றன. இவர்களுக்குத் தங்கள்மேல் அதிகாரம் உண்டென்பதையும் அசுத்த ஆவிகள் அறிந்திருக்கின்றன!

ஆ. இயேசுவை எதிர்ப்பட்ட அசுத்த ஆவிகள் அவர் யாரென அறிந்திருந்தன. அவருக்கு அவைகள்மேல் அதிகாரம் இருந்தது என்பதையும் அவைகள் அறிந்திருந்தன:

1. இயேசு கெர்கெசேனர் நாட்டிலிருந்த பிசாசு பிடித்திருந்த இரண்டு பேரை நெருங்கியபோது அசுத்த ஆவிகள் கூறியதாவது: "தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன?" அசுத்த ஆவிகள் இயேசுவிடம் வேண்டிக்கொண்டதாவது: "நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும்" (மத்தேயு 8:28-34).

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும் (அப்போஸ்தலர் 19:11-20)

2. இயேசுவானவர் ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனை நெருங்கியபொழுது, அவன் கூறியதாவது. "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும், உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" (மாற்கு 1:23,24). அசுத்த ஆவிகள் இயேசுவையும், அவருக்கு அவைகள் மீது அதிகாரம் உண்டு என்பதையும் அறிந்திருக்கின்றன.

இ. பவுலுக்கும், அவரோடிருந்தவர்களுக்கும் எதிர்ப்பட்ட அசுத்த ஆவியும், அவர்களையும், தங்கள்மேல் அவர்களுக்கிருந்த அதிகாரத்தையும் அறிந்திருந்தன.

1. பிலிப்பியில் அடிமைப் பெண்ணுக்குள்ளிருந்த அசுத்த ஆவி பவுலையும், அவரோடிருந்தவர்களையும் பின்தொடர்ந்து, உயர்ந்த தொனியில் சத்தமிட்டுச் சொன்னதாவது: "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர். இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" (அப்போஸ்தலர் 16:16-18).

2. பவுலின் உறுமால்களையும், கச்சைகளையும் வியாதியஸ்தர்மேல் போட்டபோது அசுத்த ஆவிகள் நீங்கின, மிருகங்களின் தோலைப் பதனிடும் தொழிலைப் பவுல் செய்து வந்தபடியால், அவர் தன் புருவத்தைத் துடைக்கும்படி வைத்திருந்த உறுமால்களையும் அசுத்த ஆவிகள் அறிந்திருந்தன (அப்போஸ்தலர் 19:11,12).

இயேசுவையும், அவர் அவைகள்மேல் அதிகாரம் உடையவர் என்பதையும் அசுத்த ஆவிகள் அறிந்திருந்தன. பவுலையும், அவரோடிருந்தவர்களையும், தங்கள்மேல் அவர்களுக்கிருந்த அதிகாரத்தையும் அவைகள் அறிந்திருந்தன. இன்றைக்கும் இயேசுவின் ஒவ்வொரு சீஷனையும், தங்கள்மேல் அவனுக்கிருக்கும் அதிகாரத்தையும் அவைகள் அறிந்திருக்கின்றன.

ஈ. "விசுவாசிகள் எதை சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அசுத்த ஆவிகள் அறியுமா" எனப் பலரும் கேட்டிருக்கின்றனர். அசுத்த ஆவிகளுக்கு உங்களுடைய எண்ணங்கள் தெரியாது, ஆனால், புறக்கணிக்கப்பட வேண்டிய எண்ணங்களையும், பாவஞ்செய்வதற்கோ அல்லது தேவனுடைய கரிசனையையும், பாதுகாப்பையும் சந்தேகிக்கும் விதத்தில் நம்மைச் சோதிக்கும்படியான எண்ணங்களையும் அவைகள் நம் மனதில் உருவாக்குகின்றன (1கொரிந்தியர் 2:11).

உ. இயேசுவுக்கும், அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் பிசாசுகளைத் துரத்தும்படியான அதிகாரமும், வல்லமையும் உண்டென்பதை மாற்கு 16:17; யோவான் 14:12 வசனங்கள் கூறுகின்றன. இயேசு செய்த அதே அற்புதங்களை அவரைப் பின்பற்றுகிறவர்களும் செய்வார்கள். அசுத்த ஆவிகளைத் துரத்த இயேசுவிடமிருந்து உங்களுக்கு அதிகாரமுண்டு. அசுத்த ஆவி உங்களை எதிர்ப்படும்பொழுது, இயேசுவின் நாமத்தில் (அதிகாரத்தில்) அவனை விரட்டுங்கள். இது உங்களால் கூடும்! நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அசுத்த ஆவிகள் இல்லாத இடத்தில் அசுத்த ஆவிகளைத் துரத்திக்கொண்டு திரியாதிருங்கள். அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்கு சரியான சமயம் யாதெனில்:

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும் (அப்போஸ்தலர் 19:11-20)

1. அசுத்த ஆவி பிடித்திருக்கும் ஒருவர் உங்களிடம் கொண்டு வரப்படும்பொழுது.

2. அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுபடும்படி யாராவது ஒருவர் உங்களிடம் வரும்பொழுது.

3. அசுத்த ஆவிகள் குடிகொண்டுள்ள ஓர் இடத்திலிருந்து அவைகளை விரட்டும்படி நீங்கள் அழைக்கப்படும்பொழுது.

4. சுவிசேஷச் செய்தியை அறிவித்துக் கொண்டிருக்கும் போது உங்களுக்கும், மற்றவர்களுக்கும் அசுத்த ஆவிகள் தொல்லை கொடுக்கும்பொழுது.

5. ஆராதனை அல்லது சுவிசேஷக் கூட்டத்தில் அசுத்த ஆவி பிடித்த மனிதன் இருந்து, இடையூறு விளைவிக்கும் பொழுது.

3. இயேசுவுக்கும், அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் மாத்திரமே அசுத்த ஆவிகளைத் துரத்த அதிகாரமுண்டு என ஜனங்கள் விளங்கிக் கொள்ளும்பொழுது நன்மைகள் உண்டாகின்றன (19:17-20).

அ. "இது... யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்." இயேசுவின் நாமத்திலுள்ள அசாதரண வல்லமை வெளிப்பட்டதினால், இயேசுவின் நாமத்திற்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தும்படி அவர்கள் உணர்ச்சிவசப்பட்டனர்.

இயேசுவின் நாமத்தில் பலத்த செய்கைகளும், அற்புத சுகங்களும் நடைபெற்று, அசுத்த ஆவிகள் விரட்டப்படுவதின் விளைவாக இயேசுவின் நாமம் பெரிதும் கனப்படுத்தப்படுகிறது.

ஆ. "அநேகர் வந்து, தங்கள் (தீய) செய்கைகளை வெளிப்படுத்தி, அறிக்கையிட்டார்கள்." இயேசுவுக்கென்று அவர்கள் முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டவர்களானார்கள். இயேசுவுக்காக அவர்கள் "அனைவரும் வெளியே" வந்தார்கள். கிறிஸ்தவர்களாக, பரிசுத்தமாய், நீதியாய் வாழ வேண்டியதின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய அஞ்ஞான பழக்கங்களிலிருந்து முற்றிலும் திரும்பி, இயேசுவையே முழுமையாகச் சார்ந்து கொண்டார்கள்.

இ. "மாயவித்தைக்காரயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்" கிறிஸ்தவர்களில் அநேகர் இன்னமும், மரித்துப்போன முன்னோர்களின் ஆவிகளுக்கு ஆராதனை செய்தல்; மந்திரக்கலை மூலம் வருங்காலத்தை முன்னுரைத்தல், தீய ஆவிகளுடன் போராட தாயத்து, ஆபரணங்களை உபயோகித்தல்; வானத்திலுள்ள கிரகங்களின் மூலம் வருங்காலத்தை முன்னறிவித்தல்; மாயவித்தையினால் பிறக்கப் போகும் குழந்தைகள் ஆணா, பெண்ணா என்று கூறுதல்; மந்திர அட்டைகள், சுருள்களைப் பயன்படுத்தி சொப்பனங்களுக்கு அர்த்தஞ்சொல்லுதல்; வீட்டிலும், தொழிலிலும் போலித் தெய்வங்களிடமிருந்து ஆலோசனை கேட்குதல்; ஆவியைப் பயன்படுத்தி அவர்களுடைய வாழ்க்கையில் காரியங்களை ஒழுங்குசெய்தல், விக்கிரகங்களுக்குப் பலி செலுத்துதல்;

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும்

(அப்போஸ்தலர் 19:11-20)

விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுதல்; விக்கிரகக் கோவில்களில் சுகத்தை நாடுதல்; விக்கிரகக் கோவில்களில் சாபங்கள், ஆசீர்வாதங்களுக்காகப் பிரார்த்தித்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

ஈ. மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்களுடைய மாயவித்தைகளுக்குப் பயன்படுத்திய எல்லாவற்றையும், அவர்களுடைய நண்பர்கள், அயலகத்தார், தொழில் சம்பந்தப்பட்டவர்கள், உறவினர்கள் எல்லாரும் காணும்படி அவர்களுக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள். தீயவல்லமைகளின் மேல் உண்மையான வல்லமை இயேசுவில் மாத்திரம் காணப்படுகிறது என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

உ. பில்லிசூனியம், மந்திரவித்தை, ஆவிகளின் தொடர்பு, மற்றும் இதுபோன்ற மாயவித்தைகள் அனைத்தும் சாத்தானின் செய்கையும், அசுத்த ஆவியால் செயற்படுத்தப்படுவதுமாகும். இவை கிறிஸ்தவ விசுவாசத்துக்கு முற்றிலும் முரண்பாடானது (எதிர்மாறானதும், ஒவ்வாததும்) ஆகும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் உண்மை விசுவாசியாக இருந்துகொண்டு, அதே வேளையில், தீய ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுவது அல்லது மரித்தவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிப்பது போன்றவற்றைச் செய்யவே முடியாது. இத்தகையச் செயல்கள் எல்லாம் கர்த்தருக்கு அருவருப்பானவை என்று கர்த்தர் கண்டித்திருக்கிறார். (உபாகமம் 18:9-13).

மந்திரங்கள், ஆவிகள் ஆகியவற்றில் ஈடுபடுகிறவர்கள் பலம் வாய்ந்த சாத்தானின் ஆதிக்கத்துக்குள்ளும், சாத்தானின் பிடிக்குள்ளும் சிக்கித் தவிப்பார்கள்.

ஊ. "இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" எபேசுவைச் சுற்றிலுமிருந்த கிராமங்களிலும், பட்டணங்களிலுமுள்ள ஜனங்களில் அநேகர் கர்த்தரிடத்திற்குத் திரும்பினார்கள் புதிய சபைகள் அமைக்கப்பட்டன. ஓர் எழுப்புதல் கொழுந்து விட்டது! உலகின் அப்பகுதிகளில் கிறிஸ்தவர்களின் செல்வாக்கு வல்லமையில் வளர்ந்தது.

எ. இந்தச் சபையிலும், இந்தச் சமுதாயத்திலும், இந்தத் தேசத்திலும், உலகிலுள்ள இதர அனைத்துத் தேசங்களிலும் அனுப்பும்படி தேவன் வாஞ்சிக்கும் உண்மையான, பெரும் எழுப்புதலானது, கிறிஸ்தவர்கள் இவ்விதம் செய்யும் வரைக்கும் வருதல் அரிது:

1. தங்களுடைய கடந்த கால மாயாஜாலங்கள், ஆவியின் தொடர்புகள், போலித் தெய்வங்களை (விக்கிரகங்களை) ஆராதித்தல் ஆகியவற்றிலிருந்தும் அறவே விடுபட வேண்டியதின் தேவையை உணர வேண்டும்.

2. அவர்கள் ஜெபித்து உபவாசிப்பதைப் போல, அசுத்த ஆவிகளின் மேலுள்ள தங்களுடைய அதிகாரத்தை உணர்ந்து, இந்த அதிகாரத்தைத் தங்களுடைய அயலகத்தார், உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அப்பியாசப்படுத்தவேண்டும்.

முடிவுரை

அ. இந்த வேதபாடத்திலிருந்து இரண்டு ஆவிக்குரிய சத்தியங்களைக் காணக்கூடும்:

ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும், பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனும் (அப்போஸ்தலர் 19:11-20)

1. விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அசுத்த ஆவிகள் அறிந்திருக்கின்றன,

2. விசுவாசிகளுக்குத் தங்கள்மேல் அதிகாரம் உண்டென்பதையும், அவிசுவாசிகளுக்குத் தங்கள்மேல் அதிகாரம் இல்லையென்பதையும் அசுத்த ஆவிகள் அறிந்திருக்கின்றன.

ஆ. ஆதலால், கீழ்க்கண்டவற்றிலிருந்து உங்களை முற்றிலும் விடுவித்துக்கொள்ளும்படிக்கு கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்ளுகிறேன்:

1. மூடநம்பிக்கைகள், பில்லி சூனியம், மந்திரக்கலை.

2. மந்திர சூத்திரங்கள், அட்டைகள், கூற்றுகள் ஆகியவற்றைச் சார்ந்திருத்தல்.

3. தாயத்து, அணிகலன், ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்கள் எழுதப்பட்ட விக்கிரகக் கோவில் ஆகியவற்றைச் சார்ந்திருத்தல்.

4. இறந்த ஆவிகளுடன் தொடர்பு கொண்டு, அவற்றை ஆராதித்தல்.

5. வேறு தெய்வம், ஆவி, விக்கிரகம் ஆகியவற்றை ஆராதித்தல்.

6. ஆவித் தெய்வங்களுக்குத் தன்னை அல்லது பிள்ளைகளை அர்ப்பணித்தல்.

7. தீய வல்லமைகளின் மூலம் தனக்கோ, அல்லது பிள்ளைகளுக்கோ சுகம் பெறுதல்.

8. குறிகேட்டல், அல்லது மற்றவர்களுக்குக் குறி சொல்லுதல்.

9. இரகசிய சங்கங்கள், குழுக்கள், கும்பங்கள், குற்றவாளிகள் ஆகியோருடன் தொடர்புடைய இரகசிய வார்த்தைகள், பெயர்கள் போன்றவைகள்.

10. புருஷனுக்குரிய பலத்தை ஆவிகளிடமிருந்து கேட்டல், அல்லது உங்களுடைய உடல் வலிமையை அதிகரிப்பதற்காக காற்று அல்லது ஆவிகள் உங்கள் உடலுக்குள் புகும்படி கேட்டல் ஆகியவைகள்,

இ. இந்தச் சபையிலுள்ள ஒவ்வொருவரும் கடந்த காலத்தின் இவ்விதத் தீயப் பழக்கங்களிலிருந்து முழுமையாக விடுவித்துக்கொண்டால், எபேசுவில் நேரிட்ட இதே காரியங்கள் நடைபெறும்:

1. இயேசுவின் நாமத்திற்கு மதிப்பும், மரியாதையும் செலுத்தப்பட்டு, மிகவும் மேன்மைப்படுத்தப்படும்.

2. ஒவ்வொரு கிராமத்துக்கும், சமுதாயத்துக்கும் கர்த்தரின் வார்த்தை பரம்பும், தீய வல்லமையிலிருந்து விடுதலை பெறும்படியான அவசியத்திலிருக்கும் திரளானோர் இயேசுவின் நாமத்திலிருக்கும் வல்லமையை அனுபவிப்பார்கள்.

3. அநேகர் கர்த்தரில் ஆவிக்கேற்றபடி வளர ஆரம்பிப்பார்கள்.

4. விசுவாசிகள் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடுவதற்கு இது மற்றொரு வழியாகும்.

எபேசுவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றிய பெரும் கலகம்

(அப்போஸ்தலர் 19:23-31)

முன்னுரை

அ. கைகளினால் செய்யப்பட்டத் தேவர்களைப் பற்றிய உண்மை வெளிப்படுத்தப்படும்பொழுது, அத்தெய்வங்களுடன் சம்பந்தப்பட்ட தொழிலும், ஆராதனையும் அதன் மேன்மையை இழந்துவிடுகிறது.

ஆ. பவுல் எபேசுவுக்குத் திரும்பிவந்து, அங்கே இரண்டு வருஷத்திற்கு மேலாகத் தங்கியிருந்தார். ஆசியாவில் குடியிருந்த யூதரும், கிரேக்கருமாகிய எல்லாருக்கும் மத்தியில் சுவிசேஷச் செய்தியைப் பரப்பினார். இந்தத் தடவை பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும் பவுலைப் போல, "இயேசுவின் நாமத்தில்" அசுத்த ஆவிகளை விரட்டத் துணிந்தனர். இருப்பினும், அசுத்த ஆவி அவர்களை மேற்கொண்டு, அவர்கள் ஏழுபேரும் ஓடிப் போகும்படிச் செய்தது. அவர்களடைந்த அவமானம் சீஷர்களுக்கும், "இயேசுவின் நாமத்திற்கும்" பெரும் கனத்தைக் கொண்டு வந்தது. ஜனங்கள் தங்களுடைய மந்திரச் சுருள்களையும், தாயத்துக்களையும் சுட்டெரித்தார்கள். கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதமாகப் பெரிய கலகம் உண்டானதால், அவர்கள் தங்களுடைய வெள்ளிக் கோவில்களையும், சொரூபங்களையும் கூட அழித்துப் போட்டார்கள். இதனால் தொழில் அற்றுப் போனதை, தியானாளின் கோவிலுள்ள தட்டானாகிய தெமேத்திரியு கண்டு மிகுந்த கோபமடைந்தான்.

1. கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் பற்றிய சத்தியம் வெளிப்படுத்தப்பட வேண்டும் (19:26).

அ. அநேக ஸ்தலங்களை உடைய மகா தேவியாகிய தியானாளின் சிலை வானத்திலிருந்து விழுந்ததாகக் கருதப்பட்டது (வசனம் 35 பார்க்கவும்). அது வைக்கப்பட்டிருந்த கோவிலின் நீளம் 425 அடி, அகலம் 220 அடி, உயரம் 62 அடி, அதைச் சுற்றிலும் 127 வெள்ளை பளிங்கு தூண்கள் இருந்தன.

ஆ. சிறிய ஆசியாவில் செழிப்பின் தாய் தெய்வம் என வணங்கப்பட்டு வந்த சிபெலிக்கு, அநேக வேசிப் பெண் ஆசாரியர்கள் ஊழியஞ் செய்தனர். இவளைப் போலத் தியானாள் மாறியிருந்தாள். ஜனங்கள் தியானாளை வணங்கிய பொழுது, "எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று தொடர்ந்து சத்தமிடுவதுண்டு (வசனம் 34).

இ. இப்படிப்பட்ட ஜனங்களுக்குப் பவுல் சொன்னதாவது: "கைகளினால் செய்யப்பட்டத் தேவர்கள் உண்மையானத் தேவர்கள் அல்லர். தியானாளும் மனுஷருடைய கைகளினால் உருவாக்கப்பட்டத் தெய்வமே. கைகளினால் உருவாக்கப்பட்ட இவள் உண்மையான தெய்வமே அல்ல. வெள்ளியினால் தட்டான் உருவாக்கும் தியானாளின் சொரூபங்களும் உண்மையானத் தெய்வமே அல்ல."

ஈ. பெண் தெய்வமாகிய தியானாளின் வணக்கத்தை எதிர்ப்பதற்கு, ஐயமின்றி பவுல் வேதாகமம் கூறும் உண்மைகளைப் பயன்படுத்தினார்:

1. "தச்சன்.... (மரங்கள்) அடுப்புக்காகும் போது அவன் அவைகளில் எடுத்துக் குளிர் காய்கிறான், நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான்;

எபேசுவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றிய பெரும் கலகம் (அப்போஸ்தலர் 19:23-31)

ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான் ... அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி, நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான்" (ஏசாயா 44:13-17).

2. "பையிலிருக்கிற பொன்னைக் கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக் கொள்ளுகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை வணங்கிப் பணிந்து கொள்ளுகிறார்கள். அதைத் தோளின் மேல் எடுத்து, அதைச் சுமந்து, அதை அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்; அங்கே அது நிற்கும், தன் இடத்தை விட்டு அசையாது; ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறு உத்தரவு கொடுக்கிறதுமில்லை; அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை" (ஏசா 46:6,7; மேலும் காண்க அப்போஸ்தலர் 17:29).

உ. லான்டா (Lantau) தீவிலிருக்கும் புத்தர் சிலையைப் பற்றிய யதார்த்தம் என்ன? ஷாடின் (Shatin) கோவிலில் இருக்கும் 10,000 புத்தர்களைப் பற்றி என்ன? அத்தெய்வங்கள் எல்லாம் மனுஷருடைய கைகளினால் உண்டாக்கப்பட்டவைகளே. அவைகள் மனுஷருடைய கைகளினால் காக்கப்படுகின்றன.

ஆதலால், அவைகள் தெய்வங்களே அல்ல. ஹாங்காங்கிலும், சீனாவிலும் வணங்கப்படும் குரங்கு தெய்வம்; புத்தர்; அழிவற்ற எண்மர் (xian); வாசல் தெய்வங்கள்; மின்னல் தெய்வங்கள்; காற்று, மழை, கடல், இடி, பூமி போன்ற தெய்வங்கள் அடுக்கறைத் தெய்வங்கள், நகரத் தெபங்கள். மனிதன், மோ போன்ற அனைத்துத் தெய்வங்களைப் பற்றிய உண்மையும் இதுவே.

ஊ. ஹாங்காங்கிலும், சீனாவிலும் இருக்கும் ஜனங்களுக்கு மனுஷரால் உண்டாக்கப்பட்டத் தெய்வங்களைப் பற்றிய உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்தப் பொய்யானது தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினாலே அறைகூவப்படாவிட்டால், ஜனங்கள் தொடர்ந்து இப்பொய்யை நம்பி, பாதாளம், நரகம் ஆகியவற்றில் உள்ள நித்திய அக்கினியின் வேதனை நிறைந்த நித்தியத்தைச் சென்றடைவர்.

2. சத்தியம் வெளிப்படுத்தப்படும் பொழுது, மனுஷனால் உண்டாக்கப்பட்டத் தெய்வங்களுடன் சம்பந்தப்பட்டத் தொழிலும், வணக்கமும் மேன்மை இழந்துவிடும் (19:24,25,27).

அ. எபேசுவிலுள்ள தியானாளின் கோவில் பூர்வ உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாயிருந்தது. இதைக் காணும்படி அநேகப் பட்டணங்களிலும், நாடுகளிலுமிருந்து ஜனங்கள் வருவதுண்டு. அவர்கள் வரும்பொழுது வெள்ளி கோவில்களையும், சுரூபங்களையும் வாங்குவார்கள். ஆதலால், இத்தெய்வத்தின் நகல்கள் ஆசியா முழுவதிலுமுள்ளப் பட்டணங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வணங்கப்பட்டு வந்தது. இவ்விதம் இது மிகுந்த ஆதாயமுள்ளத் தொழிலாயிருந்தது.

எபேசுவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றிய பெரும் கலகம்
(அப்போஸ்தலர் 19:23-31)

ஆ. வெள்ளி வேலை செய்யும் தட்டானாகிய நெமேத்திரியு, வெள்ளி வேலையும் அது சம்பந்தப்பட்ட தொழில்களையும் செய்து வேலையாட்களிடம் இவ்விதம் கூறினான்:

1. மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள்.

2. நம்முடைய இந்தத் தொழிலின் நற்பெயர் அற்றுப் போகும்படியான ஆபத்து நேரிட்டிருக்கிறது.

3. மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகும்.

4. மகாதேவியாகிய தியானாளுடைய தெய்வீக மகத்துவம் அழிந்துபோகும்.

இ. தெமேத்திரியுவின் முதல் இரண்டு வாதங்களும் தட்டான் வேலையும், அது சம்பந்தப்பட்டத் தொழில்களையும் செய்து வந்த வேலையாட்களைப் பற்றிய கரிசனையாகும். கடைசி இரண்டு வாதங்களும் தங்களுடைய தெய்வ வழிபாட்டையும், அவளுடைய மகத்துவத்தையும் பற்றிய அவர்களுடைய கரிசனையைக் காண்பிக்கிறது. இங்குள்ள வேலையாட்கள் தியானாளின் கோவிலுடன் இணைந்ததோர் மத சம்பந்தப்பட்ட சங்கமாக இருந்தனர். இவர்கள் தெய்வ வணக்கத்துடன் நேரிடையாகத் தொடர்புடைய கோவில் வெள்ளித் தட்டாராயிருந்தார்கள். கிறிஸ்தவம் பரவியதால், விக்கிரக வணக்கத்தைப் பற்றிய சத்தியம் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது. வியாபாரிகள், தொழிலாளிகள், மற்றும் மகாதேவியாகிய தியானாள் ஆகியோரைப் பற்றிய உண்மையைப் பவுல் வெளிப்படுத்திக் கொண்டிருந்ததின் நிமித்தமாக, அவர்களுடைய மேன்மைக்கு இழுக்குண்டாயிற்று.

ஈ. விக்கிரக ஆராதனையையும், விக்கிரகங்களையும் பற்றிய உண்மையை ஹாங்காங்கிலும், சீனாவிலும் உள்ள விசுவாசிகள் தெளிவுபடுத்தியிருந்தால் அங்கே என்ன சம்பவித்திருக்கும்? அநேகர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வதின் மூலம், புத்தர் சிலைகள், கோவில்கள், மற்றும் போலித் தெய்வங்களின் ஆராதனையுடன் சம்பந்தப்பட்ட இதரப் பொருள்களின் உற்பத்தியும், விற்பனையும் அற்றும் போகும் படியாக அச்சுறுத்தப்பட்டிருந்தால் என்ன சம்பவித்திருக்கும்? பெரும் அமளி உண்டாயிருந்திருக்கும்! தொழிலாளர்கள் அரசாங்கத்திற்குப் புகார் மனு கொடுத்திருப்பார்கள். பொது மக்களிடமிருந்து ஆதரவு திரட்டும்படி ஹாங்காங்கிலும், சீனாவிலும் உள்ள பட்டணங்களின் வழியே ஊர்வலம் சென்றிருப்பார்கள்! எபேசுவிலுள்ள வேலையாட்கள் செய்தது போல, தொழிலுக்காகவும், பணத்திற்காகவும் இவ்விதம் செய்திருப்பார்கள்! புத்தரின் கோவில்களும், சிலைகளும் மற்றும் இதரப் போலித் தெய்வங்களும் மேன்மையை இழந்து விட்டன என அவர்கள் கூறியிருப்பார்கள்.

உ. தொடர்ந்து விக்கிரகங்களை வணங்கி, கிறிஸ்தவத்தைப் புறக்கணிக்கிறவர்கள், கிறிஸ்தவர்களுக்கும், போதகர்களுக்கும், அவர்களுடைய ஆலயக் கட்டடங்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் எதிராகக் கோபமும், மூர்க்கமும் அடைந்திருப்பார்கள். மேலும், மனுஷரால் உருவாக்கப்பட்டத் தெய்வங்களுடன் சம்பந்தப்பட்டத் தொழிலும், வணக்கங்களும் வீழ்ச்சியடைந்திருக்கும்.

எபேசுவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றிய பெரும் கலகம்
(அப்போஸ்தலர் 19:23-31)

3. சத்தியம் வெளிப்படுத்தப்படும் பொழுது மனுஷரால் உண்டாக்கப்படும் தெய்வங்களைச் செய்கிறவர்கள் கோபத்தினால் கொதித்தெழுவார்கள் (19:28-3).

அ. தொழிலாளிகள் கோபத்தினால் கொதித்தெழுந்தனர். ஏனெனில், ஜனங்கள்: (1) தங்கள் வீடுகளிலும், சமுதாயத்திலும் இருந்த கோவில்களையும், சிலைகளையும் அழித்துக் கொண்டிருந்தார்கள், மேலும், (2) மனுஷரால் உண்டாக்கப்பட்டத் தெய்வங்களை வணங்கும்படி தங்களுடைய பிள்ளைகளுக்கோ, குடும்பத்தினருக்கோ போதிக்கவே இல்லை. இதன் விளைவாக, கோவிலிலிருந்த இத்தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் பொருள்களை வாங்கவில்லை.

ஆ. "கோபத்தினால் நிறைந்து" (வசனம் 28) என்பதின் அர்த்தம், கொன்று போடும் அளவுக்கு வைத்தியமாதல்; பயங்கரமான காட்டு மிருகம் போலிருத்தல், பெரும் ஆவலின் பொருட்டு கடினமாகவும், வேகமாகவும் மூச்சுவிடுதல் போன்றவையாகும். கோபத்தினால் நிறைந்த இம்மனிதர்கள் சீஷர்களைப் பிடித்து, அழித்து, அவர்களை நெருப்பில் தூக்கி எறியும்படி துடித்தனர்.

இ. பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. அவர்கள் பவுலுக்கு வழித்துணையாய் வந்தவர்களில் ஒருவனை இழுத்துக் கொண்டு, அரங்க சாலைக்குப் பாய்ந்தோடினார்கள். பவுல் கூட்டத்துக்குள்ளே சென்று, அவனை மீட்கும்படி முயற்சித்தார்.

மற்ற சீஷர்கள் அவரைப் பின்னுக்கு இருக்கும்படி எத்தனித்தனர். ஆனால், அவரோ முன்னேறிச் சென்றார்.

ஈ. முடிவில், அந்நாட்டிலுள்ள செல்வமும், செல்வாக்கும் உடைய குறிப்பிட்ட மனுஷர்களும், பவுலுக்கு சிநேகிதராயிருந்தவர்களும், ஒருவேளை, சுவிசேஷத்தினிமித்தம் சிநேகிராயிருந்திருக்கலாம், கூட்டம் நடைபெறவிருந்த அரங்கசாலைக்குள் போகவேண்டாமென்று பவுலை எச்சரித்தார்கள். பட்டணத்துச் சம்பிரதியானவன் கூட்டத்தை அமைதிப்படுத்தக் கூடும் என்றும், பவுல் அங்கு செல்வது பிரச்சினையை அதிகரிக்கப்பண்ணும் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

உ. யாவ் மா டா (yau Ma Da) தெருக்களின் வழியாக நான் பிரயாணஞ் செய்யும் பொழுது, கோவில்களும், மனுஷரால் உண்டாக்கப்பட்ட தெய்வங்களும் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருப்பதைக் காண்பதுண்டு. கொஞ்சம் பணம் வைத்திருக்கிறவர்கள் சிறிய அளவில் உள்ளதை வாங்குகிறார்கள். அதிகம் பணம் உள்ளவர்கள் மிகுந்த உன்னிப்பாக, நல்ல நிறத்துடன் செய்யப்பட்டப் பெரிய அளவில் உள்ளவற்றை வாங்குகிறார்கள். அவற்றைத் தங்களுடைய இல்லங்களுக்கு எடுத்துச் செல்லுகின்றனர். அவற்றை சந்துகளில், நடைபாதைகளில், தொழில் ஸ்தலங்களில், கிராமங்களின் நுழைவு வாயிலில் வைக்கின்றனர். அவர்கள் அவற்றுக்கு முன் பணிந்து கொண்டு, பலிகளைச் செலுத்தி, அவற்றின் ஆலோசனையை நாடுகின்றனர்.

ஊ. ஹாங்காங்கிலும், சீனாவிலும் உள்ள அநேக ஜனங்கள் தங்களுடைய வீடுகளில் உள்ள சிலைகளை அழித்து, இவற்றைக் குறித்த சத்தியத்தைத் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் துவங்கியிருப்பார்களேயாகில், கோவில்களையும், தெய்வங்களையும் உண்டாக்குகிறவர்களும், விற்பனை செய்கிறவர்களும் கோபத்தினால் நிறைந்திருப்பார்கள்!

எபேசுவில் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றிய பெரும் கலகம் (அப்போஸ்தலர் 19:23-31)

இந்த நாட்டில் அடுத்தத் தலைமுறையினர் சிலைகளையும், கோவில்களையும் வாங்காமலிருப்பார்களேயாகில், இந்த வியாபாரம் நலிந்து போகத் துவங்கும். பவுல் சுவிசேஷத்திற்கென்று தன்னை அர்ப்பணித்தது போல, சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களை அர்ப்பணித்திருப்பார்களே யாகில், இக்காரியம் நிகழ்ந்திருக்கக் கூடியதேயாகும். சுவிசேஷத்தின் சத்தியத்தினிமித்தம், பவுல் கோபத்தினால் நிறைந்து கூட்டத்துக்குள்ளே புகுந்து செல்ல ஆயத்தமாயிருந்தார். எபேசுவிலுள்ள ஜனங்கள் ஆராதித்துக் கொண்டிருந்த விக்கிரகங்களையும், சொரூபங்களையும் பற்றிய சத்தியத்தை வெளிப்படுத்த அவர் தீர்மானித்திருந்தார். வியாபாரிகளும், மற்றவர்களும் தன்னுடன் மிகுந்த கோபத்தோடு இருப்பதற்கான சாத்தியக்கூற்றை அவர் நன்கறிந்திருந்தார்.

முடிவுரை

அ. சத்தியம் வெளிப்படுத்தப்படும் பொழுது, மனுஷரால் உருவாக்கப்பட்டத் தெய்வங்களுடன் சம்பந்தப்பட்டத் தொழிலும், ஆராதனையும் மேன்மையை இழந்து விடுகின்றன. அவைகள் உண்மையில் தெய்வங்கள் அல்லவே!

ஆ. நான் உங்களில் ஒவ்வொருவருக்கும் ஓர் வேண்டுகோள் விடுக்கிறேன். நம்முடைய பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், அயலகத்தாருக்கும், மற்றும் அறிமுகமானவர்களுக்கும் மனுஷரால் உருவாக்கப்படும் தெய்வங்களைப் பற்றிய உண்மையை நாம் ஒவ்வொருவரும் வெளிப்படுத்துவோமாக. நாம் இவ்விதம் செய்தால், மனுஷரால் உருவாக்கப்படும் தெய்வங்கள் மேன்மையை இழக்கும். அநேகர் அவற்றை விட்டுத் திரும்புவார்கள். தொழிலாளர்கள், வியாபாரிகள், அறங்காவலர் ஆகியோர் தங்களுடைய தொழில் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறதென வெகுண்டெழுந்தால், சுவிசேஷப் பணி சற்று முன்னேறும்படி நாம் செய்திருக்கிறோம் என நாம் அறிகிறோம்!

இ. மனுஷரால் உருவாக்கப்பட்டத் தெய்வங்களைப் பற்றிய உண்மை உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட வேண்டுமென வேதங்கள் நமக்குப் போதிக்கின்றன! இதனைச் செயல்படுத்துவதற்கான விசுவாசத்தையும், தைரியத்தையும் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றிருக்கிறீர்களா? இவற்றை நீங்கள் பெற்றிருக்க வேண்டும்! இல்லையெனில், இதற்காக நீங்கள் ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது (எபேசியர் 6:19,20).

மேய்ப்பரின் உத்தரவாதங்கள்

(அப்போஸ்தலர் 20:28-31)

முன்னுரை

அ. பவுல் தன்னுடைய மூன்றாவது சுவிசேஷப் பிரயாணத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தார். அவர் எருசலேமுக்குப் போக வேண்டுமென்றும், அங்கே கட்டுகளும், உபத்திரவங்களும் அவருக்கு வைக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆவியானவர் தெரிவித்திருந்தார். பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமில் இருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டு புறப்பட்டார். இதினிமித்தமாக, எபேசுவில் தங்க வேண்டுமென்று அவர் தீர்மானிக்கவில்லை. ஆதலால், அவர் மிலேத்துவில் தங்கியிருக்கையில் அங்கிருந்து எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தார். எபேசுவிலிருந்து வந்த மேய்ப்பர்களுடன் அவர் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், மேய்ப்பர்களின் உத்தரவாதங்களில் சிலவற்றை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

1. மேய்ப்பன் உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு வழிகாட்ட வேண்டும் (20:28).

அ. மூப்பர், நடத்துகிறவர், கண்காணி, மேய்ப்பர் போன்ற பதங்கள் அனைத்தும் போதகரின் நிலையைக் குறிப்பிடுகின்றன (அப்போஸ்தலர் 20:17,28; தீத்து 1:5-7; 1பேதுரு 5:1,2).

ஆ. வசனம் 28. உள்ளூர் சபைகளின் அலுவல்களை மேய்ப்பர்கள் கண்காணிக்க வேண்டுமென பவுல் எதிர்பார்த்தார் என்பதை இந்த வேதப் பகுதியிலிருந்து நாம் காணக்கூடும் (மேலும் காண்க 1தீமோத்தேயு 3:5; 5:17). பரிசுத்த ஆவி அவர்களைக் கண்காணிகளாக வைத்திருக்கிறார். ஆதலால் அவர்கள்,

1. சபைக்கு ஞானமுள்ள ஆலோசனை கொடுக்க வேண்டும்.

2. சபையின் அலுவல்களைக் கண்காணிக்க வேண்டும்.

3. ஆவிக்குரிய தலைமையேற்று நடத்த வேண்டும்.

இ. ஆதி மிஷனரி சபைகளில் போதகர்கள்

1. இயேசுவால் அழைக்கப்பட்டு, சபைக்கு ஈவாகக் கொடுக்கப்பட்டிருந்தார்கள் (எபேசியர் 4:11).

2. ஆவியினால் நிரப்பப்பட்ட ஊழியர்களால், ஆவியின் நடத்துதலின்படி அவர்களுடைய உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 14:23).

ஈ. போதகரின் தகுதிகளை வேதம் வரையறுத்துள்ளது (1தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:6-9).

குற்றஞ்சாட்டப்படாதவன்

ஒரே மனைவியையுடைய புருஷன்

யோக்கியதையுள்ளவன்

போதகசமர்த்தன்

அடிக்கிறவனாயிராமல் பொறுமையுள்ளவன்

பண ஆசையில்லாதவன்

மேய்ப்பரின் உத்தரவாதங்கள்

(அப்போஸ்தலர் 20:28-31)

தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவன்

குற்றமற்றவன்

துன்மார்க்கரென்று பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவன் தெளிந்த புத்தியுள்ளவன்

அடங்காதவர்களென்று பேரெடுக்காத பிள்ளைகளை உடையவன்

இழிவான ஆதாயத்தை இச்சியாதவன் நேர்மையானவன், பரிசுத்தவான்

இச்சையடக்கமுள்ளவன்

தன் இஷ்டப்படி செய்யாதவன்

அந்நியரை உபசரிக்கிறவன்

மதுபானப் பிரியமில்லாதவன்

சண்டைபண்ணாதவன்

தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்

நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்

முற்கோபமில்லாதவன்

நல்லோர்மேல் பிரியமுள்ளவன்

உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவன்

கிறிஸ்துவுக்குள் நல்லொழுக்கமுள்ளவன்

உ. எள்ளளவும் ஐயமின்றி, ஆதிச் சபையின் போதகர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டார்கள். தலைமைப் பொறுப்பேற்றிருந்த அப்போஸ்தலர்கள், மற்றும் போதகர், நிர்வாகி, சுவிசேஷகர், மேய்ப்பர், சபை ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர் ஆகிய அனைவரும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட்டார்கள். ஆதலால், இன்று தலைமைப் பொறுப்பு வகிக்கும் நாமனைவரும் பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணப்பட வேண்டும் (அப்போஸ்தலர் *2:42; 5:42; 15:2*).

ஊ. உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகள் போதகரை மதிக்க வேண்டும். அவர்களை மிகவும் உயர்வாக எண்ணி, அவர்களுடன் சமாதானமாயிருந்து, அவர்களுடைய புத்திமதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் (1தெசலோனிக்கேயர் *5:12,13*).

எ. உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகள், அங்குள்ள அங்கத்தினர்களால் அளிக்கப்படும் தசமபாகத்திலிருந்து போதகரின் தேவைகளைச் சந்திக்க வேண்டும். "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக.... நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?" (1கொரிந்தியர் *9:7-14;* மேலும் காண்க கலாத்தியர் *6:6;* லேவியராகமம் *7:28-36;* எண்ணாகமம் *18:8-20*).

மேய்ப்பரின் உத்தரவாதங்கள்

(அப்போஸ்தலர் 20:28-31)

ஏ. வசனம் 28. "ஆகையால் உங்களைக் குறித்தும், ... உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்." மூல உபதேசங்களையும், வேதத்தின் போதனைகளையும், உங்களுடைய விசுவாசத்தையும் நீங்கள் விட்டு விலகாதபடிக்கு ஜாக்கிரதையாயிருங்கள். மந்தை எதனால் போஷிக்கப்படுகிறது என்பதைப் பற்றிக் கவனமாயிருங்கள். தேவனால் அருளப்பட்ட வேதாகமத்தைப் பற்றிய மனப்பான்மையை கவனிக்கப்பட வேண்டியது பிரதானமான விஷயமாகும். கள்ளப் போதகர்கள் தங்களுடைய மாறுபாடான போதனைகளினாலும், வேதத்துக்கு ஒவ்வாத கோட்பாடுகளினாலும் வேதத்தின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்த முயற்சிப்பார்கள்.

ஐ. "கண்காணிகளாக வைத்த" என்பதின் அர்த்தம், இதனை உங்கள் மனதில் வையுங்கள், மிக நெருக்கமாகக் கவனம் செலுத்துங்கள், உங்கள் மனதைச் செலுத்துங்கள், வேதத்தையும், விசுவாசத்தையும் பற்றிய சத்தியங்கள், உபதேசங்களை விட்டு விசுவாசிகளை வழிவிலகச் செய்யும்படி முயற்சிக்கும் கள்ளப் போதகர்களைப் பற்றி எச்சரிக்கை யாயிருங்கள் என்பதாகும்.

ஒ. போதகர்கள் மந்தைக்கு வழிகாட்டும்படி பவுல் எதிர்பார்த்தார். மேய்ப்பனின் கோல் ஆடுகளுக்கு வழி காட்டுவதற்கு ஆகும் (அப்போஸ்தலர் 6:4; 1தீமோத்தேயு 3:2; 4:13; 5:17). மேய்ப்பனின் முக்கிய வேலை ஆடுகளை மேய்ச்சலுக்கும், தண்ணீருக்கும் வழிநடத்துவதாகும்.

ஆதலால், போதகர்கள் மேய்ப்பர்களைப் போல சபையின் விசுவாசிகளை தேவனுடைய வார்த்தையினால் போஷிக்கும்படி, உபதேசிப்பதற்கும், போதிப்பதற்குமான ஆவியின் வரங்களுள்ள ஊழியங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

ஓ. வேதாகமம் தேவனுடைய வார்த்தை (தேவ ஆவியினால் அருளப்பட்டது) என்பதைப் பவுல் தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டுகிறார். அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், தேவஜனங்களை வழிநடத்துதலுக்கும் உபயோகப்படுத்தப்பட வேண்டும். தேவஜனங்கள் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாக்கப்படும்படியாகப் போதகர்கள் வேதாகமத்தைப் பயன்படுத்த வேண்டும். (2தீமோத்தேயு 3:16).

2. போதகர் விசுவாசிகளை அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் (அப்போஸ்தலர் 20:29-31).

அ. ஆடுகளை சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பது மேய்ப்பனின் மற்றொரு உத்தரவாதமாகும். ஆடுகளைக் கொன்று, அழிக்கும்படி எதிர்ப்படும் ஓநாய்களின் எலும்புகளை மேய்ப்பனின் தடி உடைக்கிறது. மேய்ப்பனின் கோல் ஆடுகளை வழிநடத்துவது போல, மேய்ப்பனின் தடி ஆடுகளைப் பாதுகாக்கிறது.

ஆ. "உமது கோலும், உமது தடியும் என்னைத்தேற்றும்" என்று சங்கீதக்காரன் தனது மேய்ப்பனாகியக் கர்த்தரிடம் கூறுகிறான் (சங்கீதம் 23:4). மேய்ப்பனின் தடி அவைகளைப் பாதுகாத்து, கோல் அவர்களை வழிநடத்தும் என ஆடுகள் அறிந்திருப்பதால், அவைகள் தேற்றப்படுகின்றன. ஆடுகளைப் பாதுகாப்பது போதகரின் மற்றொரு உத்தரவாதம் என்பதைப் பவுல் தெளிவுபடுத்துகிறார்.

மேய்ப்பரின் உத்தரவாதங்கள்

(அப்போஸ்தலர் 20:28-31)

இ. வசனம் 29. தான் போன பின்பு கொடிதான ஓநாய்கள் அவர்களுக்குள்ளே வரும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். கொடிதான ஓநாய்கள் என்பதின் அர்த்தம் சமாளிப்பதற்கு மிகக் கடினமான பலமுள்ள ஓநாய்கள் என்பதாகும்.

ஈ. வசனம் 30. இந்த ஓநாய்கள் என்பவர்கள், உள்ளூர் சபையிலுள்ள மற்ற விசுவாசிகள், ஏன் தலைவர்களாகக் கூட இருந்திருப்பார்கள். அவர்கள் அரைகுறையான சத்தியங்களைப் பேசியும், சத்தியத்தைத் திருத்திப் பேசியும் தங்களுக்காகச் சிலரை இழுத்துக்கொள்ளப் பார்ப்பார்கள். அவர்கள் விசுவாசிகளுக்காக அக்கறைப்படுவதைக் காட்டிலும், தங்களைத் தாங்களே கட்டியெழுப்புவதில் மிகுந்த நாட்டம் உடையவர்களாக இருப்பதால் சபையின் உபதேசங்களைத் திருத்திப் பேசுவார்கள். இப்படிப்பட்டவர்களின் எலும்புகள் போதகர்களால் முறிக்கப்பட வேண்டும். இவர்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அவசியமானால், அந்நியோந்நியத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

உ. பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்விதம் கூறுகிறார்: "உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, (எதிர்ப்புகள் வந்தாலும்) இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்" (1தீமோத்தேயு 4:16). வேதத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள அடிப்படைப் போதனைகள் பாதுகாக்கப்பட்டு, ஜனங்கள் அதில் போஷிக்கப்பட வேண்டும். அப்படியானால் அவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்று, விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள்.

ஊ. சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை எச்சரிக்கும்படி எசேக்கியேல் தீர்க்கதரிசி நியமிக்கப்பட்டிருந்ததுபோல, அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையிலுள்ள போதகர்களை எச்சரித்துக் கொண்டிருந்தார் (எசேக்கியேல் 3:18, 20;33:6,8). போதகர்கள் ஜனங்களை எச்சரித்தார்கள்

எ. போதகரின் பணிகள் அனைத்தும் மனப்பூர்வமாகச் செய்யப்பட வேண்டும். அவர் மந்தையின்மீது ஆளுகைஉள்ள ஆண்டவனைப்போல செயல்பட வேண்டியதில்லை. அதற்குமாறாக, மனப்பூர்வமுள்ள ஊழியனாயிருந்து, மந்தைக்குமாதிரியாக இருக்கவேண்டும் (1பேதுரு 5:1-3).

ஏ. மிகுதியான ஜெபமின்றி, போதகர் பணியாற்றுவது அசாத்தியமே. போதகருக்கான உத்தரவாதங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்படுத்தல்களும், தாங்குகின்ற தேவ வல்லமையும் ஜெபத்தினாலும், பரிசுத்த ஆவியின் நடத்துதலுக்கு கீழ்ப்படிவதினாலேயே பெற்றுக் கொள்ள முடியும். ஆதிச்சபையில் அப்போஸ்தலர் உதவியாளர்களை நியமித்ததின் முக்கிய காரணம் அவர்கள் ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுவதற்கேயாகும்.

முடிவுரை

அ. இப்போதனையிலிருந்து நாம் காணக் கூடியதுயாதெனில், போதகரின் உத்தரவாதங்கள் பயங்கரமானது! உள்ளூர் சபையிலுள்ள விசுவாசிகளை வழிநடத்தி, பாதுகாக்கின்ற மேய்ப்பரின் பணி இலகுவானது அல்ல. ஆதிச் சபையிலும் இது இலகுவாயிருக்கவில்லை, இக்காலத்திலும் இலகுவானது அல்ல. எனவேதான், போதகர்கள் மிக அதிகமான நேரத்தை வேதவாசிப்பிலும், ஜெபத்திலும் செலவழிக்க வேண்டியது அத்யாவசியம்.

மேய்ப்பரின் உத்தரவாதங்கள்

(அப்போஸ்தலர் 20:28-31)

ஆ. ஆகவேதான், சபை அங்கத்தினர்கள் போதகருக்கு உரிய மரியாதை செலுத்துவதுடன், அவருடைய ஒவ்வொரு தேவையையும் சந்திக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய வார்த்தையை அவர் பிரசங்கித்து, போதிப்பதின்படி நடக்கவும் வேண்டும்.

பெருங்காற்றும் பவுலின் கப்பற் சேதமும் (அப்போஸ்தலர் 27:13-44)

முன்னுரை

அ. தேவ ஜனங்களுக்கு எல்லாம் இழப்பைப் போலத் தோன்றும்பொழுது, தேவன் அவர்களுடன் பேசி, அவர்களைத் தப்புவிக்கிறார்.

ஆ. பவுல் எபேசுவில் மூன்று வருடங்கள் தங்கி விட்டு, மக்கெதோனியா, கிரேக்க சபைகளைச் சில காலம் சந்தித்த பிற்பாடு எருசலேமுக்குச் செல்லும்படி பரிசுத்த ஆவியானவரால் பலவந்தம்பண்ணப்பட்டார். என்றாலும், அவர் கடந்து வந்த ஒவ்வொரு பட்டணங்களிலும் ஒரு சிலர் அவரிடம், எருசலேமில் அவருக்கு அநேக உபத்திரவங்கள் உண்டென்றும் அவர் காவலில் போடப்படுவார் என்றும் கூறி அவரை எச்சரித்தனர். ஆதலால், அவர் எபேசுவிலுள்ள மூப்பர்களிடம் விடைபெற்றுக்கொண்ட பொழுது அவர்களிடம், "நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்க மாட்டீர்களென்று" கூறினார். உண்மையில், பவுல் தெய்வீக நியமனத்திலிருந்தார்.

அவர் எருசலேமுக்கு வந்தடைந்த பின்னர் ஓர் இரவில் கர்த்தர் அவர் அருகே நின்று "பவுலே திடன்கொள், நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்தது போல, ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும் என்றார்" (அப்போஸ்தலர் 23:11). ஆகையால், பற்பல சூழ்நிலைகளுக்கு ஊடாகக் கடந்து வந்த பவுல் இப்பொழுது ரோமாபுரி நோக்கி கப்பல் பயணஞ்செய்தார்.

1. எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றுகையில் தேவவேளை வரும் (27:13-20).

அ. வசனம் 13. "தென்றல் மெதுவாய்ப்படித்தது." காற்று ஏற்கெனவே கப்பலைத் தடுத்தபடியினால் அதிலிருந்து தப்பும்படியாக கிரேத்தாதீவுக்குத் தெற்குக் கடலோரத்திலிருந்த "நல்ல துறைமுகம்" என்னப்பட்ட ஓர் துறைமுகத்துக்கு வந்தனர் *(27:7,8)*. அங்கே தென்றல் மெதுவாயடித்தபொழுது, கப்பல் எஜமானர் மாலுமியிடம், மலை காலத்திற்காகத் தங்குவதற்கு முன்னர் இன்னும் சில மைல் தூரம் செல்லும்படியாகக் கூறினார்கள். ஏனெனில் அவர்கள் போக வேண்டிய தூரத்தில் பின்தங்கியிருந்தார்கள்.

ஆ. வசனம் 14. "யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று அதில் மோதிற்று" அக்காலம் செப்டம்பர் மாதக் கடைசியாயிருந்தது. அந்தச் சமயத்தில் மத்தியதரைக் கடலில் பயணஞ்செய்வது பாதுகாப்பற்றதாகும். இதினிமித்தமாக, "நல்ல துறைமுகம்" எனப்பட்டத் துறைமுகத்தில் தங்கும்படி நூற்றுக்கு அதிபதியைத் தைரியப்படுத்தினான். இருப்பினும், அத்தீவின் கடற்கரையோரத்தில் சில கல் தொலைவிலிருந்த பேனிக்ஸ் துறைமுகம் பாதுகாப்பாக இருக்குமென அங்கு போகும்படி தீர்மானிக்கப்பட்டது *(27:12)*. ஆனால் கொஞ்ச நேரத்துக்குள்ளே "வடகிழக்கு" காற்றாகிய யூரோக்கிலி தோன் என்னும் கடுங்காற்று வீசி, கடலுக்குள் அலைசடிப்பட ஆரம்பித்தனர்.

பெருங்காற்றும் பவுலின் கப்பற் சேதமும் (அப்போஸ்தலர் 27:13-44)

இ. வசனம் 17. "கப்பலைச் சுற்றிக் கட்டி, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டு போகப்பட்டார்கள்" அவர்கள் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டபோது, உயிர்மீட்புப் படகைப் பாதுகாக்கும்படி தளத்தின் மேல் கொண்டு வந்தார்கள். அதன்பின் அது உடைந்து விடாமலிருக்கும்படி கயிறுகளால் சுற்றிக் கட்டினார்கள்.

ஈ. வசனம் 17. "சொரிமணலிலே விழுவோமென்று பயந்து" கப்பலை மெதுவாகக் கொண்டு செல்லும்படி நங்கூரத்தையும் தாழ இறக்கினார்கள். (350 கல் தொலைவில் உள்ள) வட ஆப்பிரிக்காவின் கடலோரத்தின் (சிரிட்ஸ் என அறியப்படும்) பகுதியில் உள்ள சொரிமணலில் விழுவோமென்று பயப்படத்தக்கதாக பெருங்காற்று அவ்வளவு பயங்கரமாயிருந்தது. பூர்வகாலங்களில் சொரிமணல் பகுதிகள் மாலுமிகளுக்குப் பயங்கரமாயிருந்தன.

உ. வசனம் 18,19. "மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்" மறுநாளிலும் பெருங்காற்று தொடர்ந்து வீசிற்று. பெருங்காற்று மழையில் மிகவும் அடிபட்டு, அலைகளினால் கப்பல் மூழ்கக்கூடிய ஆபத்தில் இருக்கையில், அவர்கள் சரக்குகளையும், தளத்தின் மேல் பொருட்களை ஏற்றவும், இறக்கவும் பயன்படுத்திய இழுவைகள், கயிறுகள் ஆகியவற்றையும் கடலில் எறிந்தார்கள்.

ஊ. வசனம் 20. "அநேக நாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படவில்லை." பதினொரு நாட்களுக்குப் பிறகு, தப்புவதற்கான நம்பிக்கை அனைத்தும் மறைந்தது.

அவர்களைச் சுற்றிலும் பெருங்காற்று தொடர்ந்து வீசிற்று. அநேக நாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல் இருந்ததால், கப்பலைச் செலுத்துவதும், அவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை அறிவதும் கூடாததாயிருந்தது. கடைசியாக, "இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுவதும் அற்றுப்போயிற்று."

எ. பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் ஆண்டவரோடு நெருக்கமாக நடக்கிறவர்களாக இருந்த போதிலும், "எல்லாம் இழக்கப்பட்டதைப்" போலத் தோன்றும் வேளைகளும் அவர்களுக்குண்டு, கப்பலின் மீது மோதியடித்து, அதை கடலுக்குள் இழுத்துச் சென்றதைப் போல, நாட்கணக்கில், வாரக்கணக்கில் ஏன் மாதக்கணக்கில் வீசும் வாழ்க்கைப் புயல் உண்டு. தங்களையோ, அல்லது அன்பிற்குரியவரையோ அல்லது நண்பரையோ தப்புவிக்கும்படிக்கு தங்களால் இயன்ற மனுஷீகமான எல்லாவற்றையும் அவர்கள் செய்கின்றனர். ஆனால், அவைகளனைத்தும் தோல்வி அடைந்ததைப் போலத் தோன்றும். முடிவில், அவர்கள் ஆண்டவருக்கு முன் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து, இரக்கத்திற்காகக் கெஞ்சுகின்றனர். ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதம் கூறுகிறார்: "உங்களில் எவன் ... தனக்கு வெளிச்சமில்லாததினால், இருட்டிலே (கலக்கத்திலும், குழப்பத்திலும்) நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்து கொள்ளக்கடவன்" (ஏசாயா 50:10).

ஏ. ஆப்பிரிக்காவின் கடலோரத்தில் சொரிமணலில் விழுவோம் என மரணத்துக்குப் பயந்த மாலுமிகளைப் போல, கிறிஸ்துவை அறியாதவர்கள் இருக்கின்றனர். கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டக் கப்பலைப் போல அவர்கள் உணருகின்றனர். அவர்கள் ஏன் வாழ்கின்றனர், எங்கு போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாமல் உள்ளனர். அல்லது அவர்கள் தங்களுடைய வழியைத் தவற விட்டு, எல்லாவற்றையும் இழந்தவர்களைப் போல உணருகின்றனர்.

பெருங்காற்றும் பவுலின் கப்பற் சேதமும் (அப்போஸ்தலர் 27:13-44)

இவ்விதமாக உணருகின்ற சிலர் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கலாம்!

2. எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றுகையில் தேவன் தமது ஜனத்தோடு பேசுகிறார் (27:21-26).

அ. வசனம் 21. "அநேக நாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தார்கள்." கப்பல் பணியாட்கள் பதினாறு நாளாய் ஒன்றுஞ் சாப்பிடாமல் பட்டினியாய் இருந்தார்கள் (வசனம் 33). கப்பலில் மிகுதியான உணவு இருந்தது (வசனம் 36-38). இருப்பினும் அவர்கள் புசிக்கவும் மனதின்றி, கப்பலையும் தங்களுடைய ஜீவனையும் பாதுகாக்கும் முயற்சியில் இரவு பகலாக ஈடுபட்டிருந்தனர்.

ஆ. வசனம் 22-26. "உங்களில் ஒருவனுக்கும் பிராணச் சேதம் வராது." எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றிய வேளையில், பவுல் தேவனிடமிருந்து தெய்வீக வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டார். தேவனுடைய தூதனானவன் இராத்திரியிலே பவுலினிடத்தில் வந்து நின்று இவ்விதம் கூறினான்:

1. "பவுலே, நீ பயப்படாதே,

2. நீ இராயனுக்கு (ரோமில்) முன்பாக நிற்கவேண்டும்.

3. இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார்"

இ. 276 கப்பல் பயணிகள் மற்றும் பணியாட்களின் தலைவிதி அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழிய அழைப்புடன் இணைந்திருந்தது. ரோமாபுரியிலிருந்த புறஜாதிகளுக்கு சுவிசேஷச் செய்தியைப் பவுல் எடுத்துச் செல்ல வேண்டுமென்றுஇயேசுவானவர் தீர்மானித்திருந்தார்(அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:17-21). பவுல் எருசலேமில் கைது செய்யப்பட்டப் பிற்பாடு, இயேசுவானவர் அவரிடம், "பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலேசாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும்சாட்சி கொடுக்கவேண்டும் என்றார்" (ரோமர் 23:11).

ஈ. எல்லாம் இழக்கப்பட்டதைப் போல ஜனங்கள்உணர்ந்தபொழுது,கர்த்தர் அவர்களோடு இவ்விதம் பேசிய இதர சந்தர்ப்பங்கள் வேதத்தில் உண்டு:

1. எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தபொழுது, அவனுடைய ஜீவியத்தில் பதினைந்து வருஷங்கள் கூட்டப்பட்டது என்று அறிவிக்கும்படிஏசாயாதீர்க்கதரிசி அனுப்பப்பட்டார் (2 இராஜாக்கள் 20:1-6).

2. பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டபொழுது அவர் அவளைப் பார்த்து, "மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்" (மத்தேயு 9:20-22).

3. பிசாசு பிடித்திருந்த தனது மகளைக் குணமாக்கும்படி கானானிய ஸ்திரீ இயேசுவைக் கேட்டபொழுது,இயேசு அவளுக்குப்பிரதியுத்தரமாக, "ஸ்திரீயே,உன்விசுவாசம்பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவதுஎன்றார்"(மத்தேயு 15:21-28).

4. தனது இரண்டு குமாரர்களையும் கடன் கொடுத்தவனுக்கு அடிமைகளாக இழக்கப்பட விருந்தபொழுது, எலிசா தீர்க்கதரிசி அவளோடு பேசிச் சொன்னதாவது,

பெருங்காற்றும் பவுலின் கப்பற் சேதமும் (அப்போஸ்தலர் 27:13-44)

"நீ போய் உன் அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, ... அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் எண்ணெய் வார்த்து... அந்த எண்ணெயை விற்று உன் கடனைத் தீர் ... என்றான்" (2இராஜாக்கள் 4:1-6).

5. பேதுரு சிறைச்சாலையில் வைக்கப்பட்டு, நான்கு சேவகரால் காக்கப்பட்டபொழுது, தேவதூதன் தோன்றி, "உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான்" (அப்போஸ்தலர் 12:1-12).

உ. எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றும்பொழுது தேவன் தமது ஜனத்தோடு பேசுகிறார். எசேக்கியா ராஜா, பெரும்பாடுள்ள ஸ்திரீ, பிசாசு பிடித்திருந்த மகளோடிருந்த ஸ்திரீ, கடலுக்குள்ளிருந்த தீர்க்கதரிசியின் விதவை, சிறைச்சாலையிலிருந்த சீமோன் பேதுரு ஆகியோருடன் தேவன் பேசினார். அவர் உங்களோடும் பேசுவார். நீங்கள் சந்தித்திருக்கும் சோதனை, கஷ்டம் எதுவாக இருப்பினும், அல்லது உங்களுடைய சூழ்நிலை மோசமாக இருப்பினும் அவர் அதைப் பொருட்படுத்த மாட்டார்.

ஊ. கிறிஸ்து அற்றவர்களோடும் அவர் பேசுவார். அவரை உங்களுடைய ஆண்டவரும், இரட்சகருமாக நீங்கள் ஏற்றுக்கொண்டால் உங்களுடைய தேவை நேரத்தில் அவர் உங்களிடம் வருவார். நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, உங்களுடைய வாழ்க்கையில் அவர் உங்களுக்குத் தேவை என்று ஏற்றுக் கொள்வீர்களானால் இந்த நேரத்திலேயே அவர் உங்களுக்குள் வருவார்.

3. எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றுகையில் தேவன் தமது ஜனங்களைத் தப்புவிக்கிறார் (27:39-44).

அ. வசனம் 39. பதினான்கு நாட்களுக்குப் பிறகு, அவர்கள் கரைக்கு சமீபமாக வருவதைப் போலத் தென்பட்டது. அவர்கள் பாதுகாக்கப்பட்டு, நீந்தி கரைசேர வேண்டியதிருந்ததால், ஏதாகிலும் சாப்பிடும்படி பவுல் அனைவரையும் வேண்டிக் கொண்டான். தேவதூதன் சொல்லியிருந்தபடி எல்லாரும் தப்பிப் பிழைப்பார்கள் என்பதை மறுபடியும் அவர்களுக்கு உறுதிப்படுத்தினார். பொழுது விடிந்த பின்பு, சமமான கரையுள்ள ஒரு துறைமுகத்தை அவர்கள் கண்டு அதற்குள் கப்பலைபோட்ட யோசனையாயிருந்தார்கள்.

ஆ. வசனம் 40. "சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டனர்." அவர்கள் சுக்கான்களைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்று முகமாக விரித்து, மண் நிறைந்த கரைக்கு நேராய்ச் செலுத்தினார்கள்.

இ. வசனம் 41. "முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது" கரையை அடைவதற்கு மாறாக, இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்ட வைத்தார்கள். கப்பலின் முன்னணி மணலில் ஊன்றியிருந்தது. கப்பலின் பின்னணி காற்றினாலும், அலைகளினாலும் பக்கவாட்டில் அலசடிப்பட்டது.

ஈ. வசனம் 41. "பின்னணியம் அலைகளின் பலத்தினால் உடைந்து போயிற்று." விசுவாசிகள் பலவிதமான எதிர்பாராத உபத்திரவங்கள், சோதனைகளில் அகப்படுவதுண்டு என யாக்கோபு நிருபத்தில் வாசிக்கிறோம். (யாக்கோபு 1:2). உபத்திரவம், துக்க அனுபவம் போன்ற கடினமான சூழ்நிலைகள் நமக்கு நேரிடுகையில், மணலில் சொருகிய கப்பலைப் போல நாம் உணருவதுண்டு.

பெருங்காற்றும் பவுலின் கப்பற் சேதமும் (அப்போஸ்தலர் 27:13-44)

வாழ்க்கைப் புயலினாலும், அலைகளினாலும் நாம் சுக்கு நூறாக்கப்படுவதைப் போலவும் உணருவதுண்டு.

உ. வசனம் 43,44. "நீந்தத் தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரைபேறவும்" கட்டளையிடப்பட்டது. சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள் மேலும் போய்க் கரைபேறினார்கள். "இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்." தேவன் உண்மையுள்ளவர். எல்லாம் இழக்கப்பட்டது போலவும், நாம் உடைக்கப்பட்டதைப் போலவும் தோன்றும் பொழுது, தேவன் தமது ஜனங்களைத் தப்புவிக்கிறார். வாழ்க்கைப் புயல்களால் நாம் அங்குமிங்கும் அலசடிப்படும் வேளையில், நாமும் பாதுகாப்பான இடத்தை அடைவது நிச்சயம்.

முடிவுரை

அ. பெருங்காற்றும், பவுலின் கப்பற்சேதமும் என்னும் இச்சரிதையில் ஓர் ஆவிக்குரிய சத்தியம் உள்ளது. எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றும் வேளையில், தேவன் தமது ஜனத்துடன் பேசி அவர்களைத் தப்புவிக்கிறார்.

ஆ. பவுலை ரோமாபுரிக்கு ஏற்றிச் சென்ற கப்பலில் இருந்தவர்களைப் போல, இன்றைக்கும் இங்குள்ளவர்களில் சிலர் உணரக்கூடும். உபத்திரவம், துன்ப அனுபவம் போன்ற எதிர்பாராத வாழ்க்கைச் சோதனையின் மத்தியில் நீங்கள் இருக்கக்கூடும். உங்களுடைய குடும்பத்தில் அல்லது உங்கள் நெருங்கிய நண்பர்களின் மத்தியில் யாராவது இடர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கக்கூடும். இதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள், தேவன் உங்களை அறிந்திருக்கிறார், அவர் உங்களோடு பேசி உங்களை உறுதிப்படுத்துவார், அவர் உங்களைத் தப்புவிப்பார்.

இ. ஒரு முறை சுகத்தைப் பெறும்படி வரிசையில் நின்ற ஸ்திரீ ஒருவர், தன்னுடைய தேவையின் சமயத்தில் அவளுக்காகக் கரிசனை கொள்ளவும்; அவளுக்கு உதவி செய்யவும் ஒருவரும் இல்லாத காரணத்தினால், தன்னுடைய முன்னோர்களின் ஆவியை அவள் வணங்கி வந்ததாகக் கூறினாள். முன்னோர்களின் ஆவிகள் மரித்த ஆவிகளுக்கான இடத்திற்குப் போய்விட்டன. ஆதலால், அவைகள் அவளுக்கு உதவி செய்யவே முடியாது. இப்பெண் தன்னுடைய கஷ்டமான, துன்பமான வேளைகளில் இயேசுவை விசுவாசித்து, அவரில் தன் நம்பிக்கையை வைக்கும்படி நான் விரும்புகிறேன். எல்லாம் இழக்கப்பட்டதைப் போலத் தோன்றும்பொழுது, தேவன் தமது ஜனத்தோடு பேசி அவர்களைத் தப்புவிக்கிறார்.